## அலகு- 01- தமிழ் சமுதாய வரலாறு, அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள்

### 1.1. வரலாறும் சான்றுகளும்

♣ சீனர்களும் சிரேக்கர்களும் உரோமானியர்களும் வரலாற்றுப் பயனை உணர்ந்தவர்கள், எனவே, வரலாற்றை உடனுக்குடன் எழுதினர். சீனர்கள் தத்தவத்துக்கு அடுத்து வரலாற்றுக்கு மதிப்பக் கொடுத்தனர்.

♣ நம் நாட்டார் மாயையில் மயங்கிக் கிடந்தனர். எனவே, ஹெரோடாட்டஸையோ, பொலிபீயரையோ இந்நாடு பெற முடியவில்லை. வரலாறும் எழுதப்படவில்லை.

♣ இந்தியர்களுக்கு வரலாற்று மனப்போக்கு இல்லை என்றும், அவர்களுடைய வரலாற்றைக் கேட்டால் நிதானமாகக் கதை கூறுவர் என்றும் இசுலாமிய அறஞரும் மேதையுமாகிய **அல்பெருணி** கூறினார்.

♣ மேல்நாட்டாரின் ஆதிக்கத்துக்குப் பின்னரே இந்தியாவும் தமிழகமும் முறைப்படுத்தப்பட்ட வரலாற்று ஆய்வு நடத்த முற்பட்டது.

♣ **1. தொல்பொருள் சின்னங்கள்:**

♣ சிந்துவெளி நாகரிகத்தின் ஈடுபாட்டின் காரணமாக 1861-ம் ஆண்டு அலெக்ஷாண்டர் கன்னிங்காம் அவர்களால் **இந்திய தொல்லியல் துறை** உருவாக்கப்பட்டது.

♣ அதன் பின், 1863-ம் ஆண்டு **இராபர் புரூஸ் புட்** என்பவர் சென்னையை அடுத்த அத்திரம்பாக்கத்தில் பழங்கால கற்கால கருவிகளை கண்டறிந்தார்.

♣ இதன் ஒரு கட்டமாக 1961-ம் ஆண்டு **தமிழக தொல்லியல் துறை** தோற்றுவிக்கப்பட்டது.

♣ தொல்பழங்காலத்து மக்கள் பயன்படுத்திய கற்கருவிகள், உறைவிடங்கள், அடக்கத்தாழிகள், பிணக்குழித் தோட்டங்கள் முதலியன தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகின்றன.

♣ பெண்ணையாற்று படுகைகளில் இருந்த கூறுகளை 1968-ல் தொல்பொருள் ஆய்வாளர்கள் காட்டினர். சேலம் மாவட்டத்தைச் சார்ந்த காவிரிப்படுகையில் மோகனூர் என்னுமிடத்தில் இரும்பு ஊழியைச் சார்ந்த ஆயுதங்களை வரலாற்றில் கண்களுக்குக் கொண்டுவந்தனர்.

♣ கொற்கையில் தொல்பழங்காலத்துச் சின்னங்கள் பல கிட்டின. இவை போன்ற பல தொல்பழங்காலத்து மக்களின் வாழ்க்கையின் பல பக்கங்களை உணர்த்துகின்றன.

♣ அரிக்கமேட்டிலும், பாலாற்றின் கழிமுகத்தில் வாசுவசமுத்திரத்திலும் கிட்டிய சான்றுகள் யவனர் தொடர்மையும், தென்கிழக்காசியத் தொடர்பையும் விளக்குகின்றன.

♣ பூம்புகாரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி பழைய சின்னங்களை வெளிப்படுத்தியது. படகுத்தளம், புத்தவிகாரத்தின் அடித்தளம், ஏரியில் அக்காலத்தில் அமைந்த மறுகால்கட்டு, கிடைத்த நாணயங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

♣ இராமநாதபுரம் அழகன்குளத்தில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள கீறல் கோட்டோவியம் வணிகக் கப்பலைக் குறிக்கிறது. சங்ககாலத் தமிழர்களின் துறைமுகமாகக் கருதப்படும் அழகன் குளத்திலிருந்து ரோம் நகரத்திற்குக் கடல் பயணம் மேற்கொண்ட கப்பலின் மாதிரியாக இது குறிப்பிடப்படுகிறது.

♣ **2. தொல்லியல் ஆய்வம் பண்பாட்டுப் பொருள்களும்:**

♣ பண்டைய மக்கள் பயன்படுத்திய தொல்பொருள்களையும் அவர்கள் வாழ்ந்த இடங்களையும் ஆராய்வது தொல்லியல் (Archaeology) ஆய்வாகும்.

♣ மக்கள் வாழ்ந்திருந்த கட்டடங்களின் சான்றுகள், அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் போன்றவை குவிந்துகிடக்கும் இத்தகைய பழங்கால வாழ்விடங்களைத் தமிழ்நாட்டில் நத்தம், மேடு, கொட்டை என்று அழைக்கின்றனர்.

AKM IAS & NEET ACADEMY

♣ **தொல்லியல் அகழாய்வுக் களங்கள்:**

♣ தொல்லியல் அகழாய்வுப் பணி என்பது பண்டைக்கால சமூகத்தின் வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்ளும் நோக்கில் முறைப்படி ஓர் இடத்தை அகழந்து, சான்றுகளாகக் கிடைத்த பொருள்களை முறையாகத் திரட்டி ஆராய்வதாகும்.

♣ தமிழ்நாட்டின் அரிக்கமேடு, அழகன்குளம், கீழடி, கொடுமணல், உறையூர், கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவசமுத்திரம் ஆகிய இடங்களிலும், கேரளத்தின் பட்டணம் என்ற இடத்திலும் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளிலிருந்து சங்க கால மக்களின் வாழ்க்கை முறைக்கான பலவகையான தொல்லியல் சான்றுகள் கிட்டியுள்ளன.

♣ புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேடு என்ற இடம் இந்ததியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் அகழாய்வு செய்த சங்க காலத் துறைமுகப்பட்டினம் ஆகும்.

♣ பிரிட்டனைச் சேர்ந்த சர் இராபர்ட் எரிக் மாட்டிமர் வீலர், பிரான்சைச் சேர்ந்த ஜே.எம். கசால், நம் நாட்டின் ஏ.கோஷ், கிருஷ்ண தேவா ஆகிய தொல்லியல் அறிஞர்கள் இங்கே அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

♣ சரக்குக்கிடங்கு, தொட்டிகள், உறைக்கிணறுகள், தெரு ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரம் அங்கே இருந்தமையை அவர்கள் கண்டறிந்து வெளிப்படுத்தினர்.

♣ பழங்கால மக்கள் வாழ்ந்த இடங்களையும் கட்டுமானங்களையும் நினைவுச் சின்னங்களையும் நிர்வாகம் செய்யும் அமைப்பு இந்தியத் தொல்லியல் துறை ஆகும்.

♣ இது மத்திய அரசின் கீழ் இயங்குகிறது.

♣ தமிழக அரசின் கிழ் தமிழ்நாடு தொல்லியல் துறை இயங்குகிறது.

♣ இந்தியாவில் உள்ள தொல்லியல் பொருட்களைப் பாதுகாப்பதற்கு இந்தியக் கருவூலம் மற்றும் புதையல் சட்டம் (1878), பழங்காலப் பொருட்கள் மற்றும் கலைக் கருவூலங்கள் சட்டம் (1972), பழமைவாய்ந்த நினைவுச்சின்னங்கள், தொல்லியல் ஆய்வுக் களங்கள் மற்றும் எஞ்சிய பொருட்கள் சட்டம் (1958) ஆகியவை வகுக்கப்பட்டுள்ளன.

♣ **பண்பாட்டுப் பொருள்கள்:**

♣ செங்கற் கட்டுமானங்கள், மணிகள், சங்கு வளையல்கள், அணி புடைப்பு மணிகள் (Cameo) செதுக்கு வேலைப்பாடுகள் கொண்ட பொருள்கள் போன்றவற்றைத் தொல்லியலாளர்கள், அகழாய்வு மேற்கொண்ட இடங்களில் கண்டறிந்தனர்.

♣ தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட சுடுமண் பாண்ட ஓடுகளும், பல வகை நாணயங்களும் அங்கே கிடைத்துள்ளன.

♣ **அணி புடைப்புமணிகள் (Cameo):**

♣ அணி புடைப்புமணிகள் (**Cameo**) என்பவை, விலையுயர்ந்த நவமணிகளின் மேற்புறத்தில் வேலைப்பாடு மிக்க உருவங்கள் செதுக்கப்பட்டவையாகும்.

♣ **3. நாணயங்கள் :**

♣ கிறித்துவ சக துவக்கக் காலம், சங்கம் மருவிய காலம், பல்லவர் காலத்தின் துவக்கம் முதலிய காலப் பகுதிகளைச் சார்ந்த அயல்நாட்டுக் காசுகள் தமிழகத்தில் பல பாகங்களில் கிட்டின.

♣ கிறத்துவுக்கு முன் உரோமை ஆண்ட அகஸ்தஸ் காலம் முதற்கொண்டு பலவகையான உரோம நாட்டுப் பொற்காசுகளும் வெள்ளிக் காசுகளும் தமிழகத்தில் கிட்டின.

♣ கிட்டிய காசுகளின் துணைகொண்டு யவன நாட்டுடனும், சீனதேசத்துடனும், தென்கிழக்காசிய நாடுகளுடனுமான வாணிபத் தொடர்பையும், வாணிபத் தொடர்பின் விரிவையும் உணர முடிகின்றது.

♣ தொல்காப்பியத்திலும், பட்டினப்பாலையிலும், மதுரைக் காஞ்சியிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றிலும் கூறப்படுகின்ற செய்திகளை இவையும், புறச்சான்றுகளும் உறுதி செய்கின்றன.

♣ கொடுமணல், போடி நாயக்கனூர் ஆகிய ஊர்களில் முத்திரை பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன.

♣ அமராவதி ஆற்றுப்படிகைகளில் சேரர்களின் பல்வேறு நாணயச் சான்றுகள் கிடைத்துள்ளன. இதுமட்டுமல்லாமல் தாய்லாந்தின் பல்வேறு துறைமுகங்களிலும் சோழர்களின் சதுரச் செப்பு நாணயங்கள் கிடைத்ததாக வரலாறு கூறுகிறது.

♣ ரோமானிய நாணயங்கள் தென்னிந்தியாவில் கோயம்புத்தூர் மண்டலத்தில் செறிந்து காணப்படுகின்றன.

♣ அழகன்குளம், கரூர், மதுரை ஆகிய இடங்களிலும் அவை கிடைத்துள்ளன.

♣ கட்டி வடிவிலான (**ingots**) தங்கம், வெள்ளி போன்ற மதிப்புமிக்க உலோகங்கள் புல்லியன் (**Bullion**) என்று அழைக்கப்படுகிறது.

♣ 4. கலைச்சின்னங்கள்:

♣ தென்னகத்தில் கற்காலத்து ஓவியங்களைக் காணமுடிகின்றது. ஆனால், சங்க காலத்தவை கண்ணுக்குக் கிட்டாமல் கிடக்கின்றன.

♣ பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும், சாளுக்கியர் காலத்திலும், போசளர் காலத்திலும் அணிகலன்களையும், பல்வேறு நிலைகளில் உள்ள வாழ்க்கையின் கோணங்களையும் காட்டுகின்றன.

♣ அழகிய கோயிற் கட்டிடங்கள் சமய வாழ்வுக்கு விளக்கமளிப்பதுடன் தமிழகம் வளர்த்த கட்டிடக் கலையின் சிறப்பை விளக்குகின்றன.

♣ **5. சாசனங்களும் பட்டயங்களும்:**

♣ சாசனங்கள் இரு வகைப்படும். அவை, கல்வெட்டுகளும் செப்பேடுகளுமாகும். தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் காலத்தால் பழமையானவை. “தாமிழி” எழுத்துக்களாலான கல்வெட்டுக்களாகும்.

♣ கிறித்துவுக்கு முன் புத்த சமண நமயங்களின் வருகையுடன் தோன்றிய இக்கல்வெட்டுக்கள் மொழி ஆய்வாளர்களிடத்தில் சில வரலாற்றுக் குழப்பங்களை ஏற்படுத்தியதுடன் இந்திய வரலாற்றாய்வாளர்களின் சில தவறுதலான முடிவுகளுக்கும் இடமளித்தன. இடைக்காலத்துக் கல்வெட்டுக்கள் வட்டெழுத்திலும், கிரந்த எழுத்திலுமுள்ளன.

♣ பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த அசேகானின் **கிர்னார் கல்வெட்டு** அன்றைய தமிழகத்து அரசுகளைக் காட்டுகின்றது.

♣ உதராணமாக அசோகரின் இரண்டாம் பாறைக் கல்வெட்டு **சத்திய புத்திரா** என்ற தென்னிந்திய மன்னரைக் குறிப்பிடுகிறது. ஆவர் தென்னிந்தியாவை ஆட்சி செய்த அதியமானாக அறியப்படுகிறார்.

♣ அண்மையில் கிடைத்த **சம்பைக் கல்வெட்டு** அசோகர் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த அதியமானின் சமயப் பொறைக்கு விளக்கமளிக்கின்றது.

♣ களப்பிரர் காலத்து அரசியல் குழப்பங்களை **வேள்விக்குடி சாசனம்** காட்டுகின்றது. இது எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆவணமாக அறியப்படுகிறது. இது முதுகுடிமிப் பெருவழுதி என்ற மன்னரால் கொடையாக அளிக்கப்பட்ட நிலப்பட்டயத்தைக் குறிக்கிறது.

♣ மூன்று மொழிகளிலிருக்கும் பல்லவர் காலத்து சாசனங்கள் அவர்களுடைய வரலாற்றை உணர்த்துகின்றன.

♣ நந்திவர்ம பல்லவ மன்னனுடைய கல்வெட்டொன்று தமிழ் மன்னர்களை “திராவிட மன்னர்கள்” என்று குறிப்பிடுவதால் பல்லவர்களைத் தமிழர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதை உணரலாம்.

- 1905- ம் ஆண்டு 31 செப்புப் பட்டயங்கள் **திருவாலங்காடு** பகுதியில் கண்டறியப்பட்டது. இந்த செப்புப் பட்டயங்கள் முதலாம் இராஜேந்திரச் சோழனால் சமஸ்திருதம் மற்றும் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டது
- மேலும் சுந்திரச்சோழனால் வெளியிடப்பட்ட **அன்பின் செப்பேடுகள்** மற்றும் வீரராஜேந்திரனின் **கன்னியாகுமரி செப்பேடுகள்** போன்றவையும் அடங்கும்
- இவை தற்போது லேடன் (நெதர்லாந்திலுள்ள நகரம்) அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.
- உத்திரமேரூர் சாசனங்களும், கரந்தை, திருவாலங்காடு பட்டயங்களும், சின்னமனூர்ச் செப்பேடுகளும், வேள்விக்குடி சாசனமும் மிக முக்கியமானவைகளாகும்.
- வேள்விக்குடி சாகனத்தில் சங்க காலத்து மன்னன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கங்களின் வரலாற்று மரபை உறுதிசெய்ய இது உதவுகின்றது.
- **6. கல்வேட்டுச் சான்றுகள்:**
- 1886ல் பேராசிரியர் **ஹல்ட்ஸ்ச் என்பவரால்** கல்வெட்டுகள் முறையாக படித்தறியப்பட்டது.
- கல்வெட்டுகளைக் குறித்து படிப்பது **கல்வெட்டியல்** ஆகும்.
- கல்வெட்டுகள் போலவே செப்பேடுகள், நாணயங்கள், மோதிரங்கள் போன்றவற்றிலும் தகவல்கள் பொறிக்கப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்ளலாம்.
- மொழியின் வரிவடிவம் தோன்றிய காலமே வரலாற்றின் தொடக்க காலம் எனலாம்.
- அதற்கு முற்பட்டது வரலாற்றுத் தொடக்கத்துக்கு முந்தைய காலம் எனப்படும்.
- தமிழகத்தில் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்ட மொழியின் வரிவடிவத்திற்குத் **தமிழ் பிராமி** என்று பெயர்.
- தமிழகத்தில் இருண்ட காலம் என்று அறியப்படும் களப்பிரர்களின் காலம் பற்றிய குறிப்பீடகளைக் கொண்ட **பூலாங்குறிச்சி கல்வெட்டு** சிவகங்கை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டது. அது பொ. ஆ. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படுகிறது. இதில் **கூற்றன், சேத்தன்** போன்ற ஆட்சியாளர்கள் பெயர் காணப்படுகிறது.
- பின்னாளில் **ஐராவதம் மகாதேவன்** அவர்களால் கண்டறியப்பட்ட பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனைப் பற்றிய **மாங்குளம் குகைக் கல்வெட்டு** மற்றும் சேரர்களின் புகழைக் கூறும் கரூர் மாவட்டத்தின் **புகளூர் கல்வெட்டு** போன்றவையும் அடங்கும்.
- **தமிழ் பிராமி கல்வெட்டுகள்:**
- தமிழ்நாட்டில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் கற்பாறைகளிலும் குகைவாழிடங்களிலும் காணப்படுகின்றன.
- சமணத் துறவிகள் இக்குகைகளைப் பெரும்பாலும் தமது வாழிடங்களாகக் கொண்டிருந்தனர்.
- மழைநீர் வழிந்து வெளியேறுவதற்காகச் சிறிய பகுதியை வெட்டி கொடுங்கை அல்லது வாரி போன்று செதுக்கியிருந்தனர்.
- தமிழ்நாட்டில் மாங்குளம், முத்துப்பட்டி, புகலூர், அரச்சலூர், கெங்கர்புளியங்குளம், ஜம்பை, மதுரை உள்ளிட்ட பல இடங்களில் உள்ள குகைவாழிடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகளை இன்றும் காணலாம்.
- **நடுகற்கள்:**
- போர்க்களத்திலும் ஆநிரை கவரும் சண்மைகளிலும் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன. முல்லை நில வாழ்க்கையில் மக்களின் சிறப்பான செல்வ வளமாகக் கால்நடைகள் இருந்துன.
- அருகருகே வாழ்ந்த இனக்குழுவினர் மற்று குழுவினரின் கால்நடைகளைக் கவர்ந்து தமதாக்கிக் கொள்வதற்காகச் சண்டையிட்டள்ளனர்.

AKM IAS & NEET ACADEMY

- முல்லைநில மக்களின் தலைவன் எதிரிகளை எதிர்த்துப் போரிட்டுக் கால்நடைகளைக் கவர்ந்து வருவதுண்டு.
- இதை எதிர்த்து போரிடுபவரும் உண்டு. அப்போது இறக்கநேரிடும் வீரர்களைகத் தியாகிகளாகப் போற்றி அவர்களின் நினைவாக நடுகற்களை நிறுவினர்.
- நடுகற்கள் நடப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து **தொல்காப்பியம்** விரிவாக எடுத்துரைக்கிறது.
- தேனிமாவட்டத்தின் புலிமான்கோம்பை, தாதப்பட்டி ஆகிய இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் பொற்பனைக் கோட்டை என்ற இடத்திலும் தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட சங்க கால நடுகற்கள் காணப்படுகின்றது.
- தேனி மாவட்டத்தின் வைகை ஆற்றுப்பள்ளத்தாக்கில் உள்ள ஊர் **புலிமான்கோம்பை** (புள்ளிமான் கோம்பை) ஆகும்
- இது பொ. ஆ. மு மூன்று முதல் நான்காம் நூற்றாண்டைச் சார்ந்ததாக கருதப்படுகிறது.
- 2006 ஆம் ஆண்டில் இந்த ஊரிலிருந்து தமிழ் பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய அரிய நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டன.
- புலிமான் கோம்பையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்றில் கீழ்க்கண்ட செய்தி காணப்படுகிறது.
- **"கூடல் ஊர் ஆகோள் பெடு தியன் அந்தவன் கல்"**
- இதன் பொருள் "கூடலூரில் ஆநிரை கவர்ந்துபோது நடந்த பூசலில் கொல்லப்பட்ட தியன் அந்தவனின் கல்"
- **கல்வெட்டுகள்:**
- வரலாற்றின் தொடக்க காலத்தைச் சேர்ந்த கடுமண் கலங்களில் மக்களின் பெயர்கள் தமிழ் பிராமி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன.
- அரிக்கமேடு, அழகன் குளம், கொடுமணல், கீழடி உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல இடங்களிலும் இத்தகைய சுடுமண் பொறிப்புகள் காணப்படுகின்றன.
- மேலும், எகிப்து நாட்டின் **பெரேனிகே குசேர் அல் காதிம்** ஆகிய இடங்களிலும், ஓமன் நாட்டின் **கோர் ரோரி** என்ற இடத்தில் தமிழ் பிராமி எழுத்துக்களில் மக்களின் பெயர் பொறித்த சுடுமண் கலங்களின் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இதன் மூலம், பண்டைத் தமிழர்கள் மேற்கு ஆசியாவிலும் அதற்கு அப்பாலும் உள்ள ரோமானியப் பேரரசுப் பகுதிகளுக்கும் சென்று வணிகத்தில் ஈடுபட்டிருந்தது குறித்து அறியமுடிகிறது.
- சுடுமண் கலங்களில் காணப்படும் பெரும்பாலான பெயர்கள் தமிழிலும், சில பெயர்கள் பிராகிருத மொனியிலும் உள்ளன.
- பிராகிருதம் மௌரியர் காலத்தில் வட இந்தியாவில் பொதுமக்களால் பேசப்பட்ட மொழிகள்.
- **7. கோயில் ஒழுகுகளும் தல புராணங்களும்:**
- தமிழகத்து முக்கியக் கோயில்கள் அனைத்துக்கும் தலபுராணங்கள் உள்ளன. இவற்றில் கதைகள் மிகுதியாக இருப்பினும் வரலாற்றுத் துணுக்குகளும் உள்ளன.
- கோயில் ஒழுகுகள் சாசனங்களைப் போன்ற ஆதாரங்களாகும். சீரங்கம் கோயில் ஒழுகு தக்காணத்து அரசர்களின் ஆதிக்கம். விசயநகரவேந்தன் நரச நாயக்கனின் படையெடுப்பு, கோயில் குடியிருப்புச் சீரமைப்புப் பணிகள், சீரங்கத்து வைணவர்களுக்கும் திருவானைக்காவல் சைவர்களுக்கும் நடந்த சமயப்பூசல்கள் முதலியவற்றை உணர்த்துகின்றது.
- **8. மொழி இயல் ஆய்வுகள்:**



AKM IAS & NEET ACADEMY

♣ தற்காலத்து மொழி இயல் ஆய்வு பல வரலாற்று உண்மைகளை உணர்த்துகின்றது. தமிழகத்து நடைமுறைகள் வழக்காறுகள் முதலியவை தொன்மையான காலத்தில் வடபுலத்திலும் வைதீக சமயத்திலும் புகுந்திருப்பதை மொழி உணர்த்துகிறது.

♣ பூவுடன் செய்கின்ற வழிபாட்டு முறை பூசை: அது வடக்கில் **"பூஜை"** யாக மாறியது. கண்ணின் ஆட்சியைக் காட்டுகின்ற செயல் அங்கே **"காசஷி"** யாக மாறியது. நுகைக்கும் திறனைக் கொண்ட விண்மீன் **'நசஷத்திரம்'** எனப்பட்டது.

♣ கார்த்திகை நட்சத்திரங்களைக் குறிக்கும். **'அறுமீன்'** சித்திர எழுத்தைப் பயன்படுத்திய சிந்துவெளி மக்கள் ஆறுமீன் வடிவத்தில் எழுதினர்.

♣ நடனம் என்ற சொல்லில் 'நட' என்ற தமிழ்ச்சொல் வேராக அமைந்துள்ளது.

♣ தமிழ்ச் சொற்களை உயிரிட மாற்றம் செய்து சமஸ்கிருத மொழியாளர்கள் கடன்பெற்றிருப்பதை மொழி இயல் ஆய்வ காட்டுகின்றது.

♣ மொழியின் தன்மையைக் கொண்டு கால வரைமுறை நிர்ணயிக்க முடிகின்றது. **டாக்டர். இலகோவரி** என்பவர் மொழி ஆய்வின் துணையுடன் நிலநடுக்கடல் பிரதேசங்களில் வாழும் மக்களினங்களுக்கும், திராவிட இனத்துக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றார்.

♣ **9. இலக்கியச் சான்றுகள்:**

♣ இலக்கியச் சான்றுகளைத் தமிழ் இலக்கியச் சான்று, பிற இந்திய இலக்கியச் சான்று, அயல் நாட்டு இலக்கியச் சான்று என்று மூன்று வகைப்படுத்தலாம்.

♣ **தமிழ்** : தமிழ் இலக்கியத்தில் சங்க இலக்கியம் பண்டைக் காலத் தமிழர்களின் வாழ்வின் முழு உருவப்படத்தைக் காட்டுகிறது. ஆவர்களுடைய வாழ்வை எல்லாக் கோணங்களிலிருந்தும் கண்டறியும் அரிய வாய்ப்பை அளிக்கின்றது.

♣ புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, ஆற்றுப் படைகள் முதலியவை குறிப்பிடத்தக்கவை. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் காப்பிய காலத்து வாழ்வுக்குப் போதிய சான்றாகும்.

♣ இருண்ட காலத்து இலக்கியம் தமிழ்ச் சமூகம் அறநெறிகளில் கொண்டிருந்த பற்றுதலுக்கு விளக்கமளிக்கின்றது.

♣ இதைப் போன்று பல்லவர் காலம், சோழர்காலம், நாயக்கர்காலம் ஆகிய காலகட்டங்களின் வாழ்க்கையை இலக்கியம் காட்டுகின்றது.

## செவ்வியல் இலக்கியங்கள்

♣ **தொல்காப்பியம்:**

♣ தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் தமிழின் பழமையான இலக்கண நூலாகும்.

♣ இந்நூலின் முதலிரண்டு பகுதிகள் தமிழ் மொழியின் இலக்கணத்தை வரையறுக்கின்றன.

♣ மூன்றாவது பகுதி மக்களின் சமூக வாழ்க்கைக்கான இலக்கணத்தை வரையறுக்கிறது.

♣ பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் **பதினெண் மேல்கணக்கு நூல்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

♣ தமிழில் தோன்றிய இலக்கியங்களில் காலத்தால் முற்பட்ட இலக்கியங்கள். இவை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காலத்தால் பிந்தியவை.

♣ **எட்டுத்தொகை நூல்கள்:**

♣ 1. நற்றிணை

♣ 2. குறுந்தொகை

AKM IAS & NEET ACADEMY

- 3. பரிபாடல்
- 4. பதிற்றுப்பத்து
- 5. ஐங்குநூறு
- 6. கலித்தொகை
- **7.** அகநானூறு
- 8. புறநானூறு
- **பத்துப்பாட்டு நூல்கள்:**
- 1. திருமுருகாற்றுப்படை
- 2. பொருநராற்றுப்படை
- 3. பெரும்பாணாற்றுப்படை
- 4. சிறுபாணாற்றுப்படை
- 5. முல்லைப்பாட்டு
- 6. நெடுநல்வாடை
- 7. முதுரைக்காஞ்சி
- 8. குறிஞ்சிப்பாட்டு
- 9. பட்டினப்பாலை
- 10. மலைபடுகடாம்
- **பதினெண் கீழ்க்கணக்கு:**
- வாழ்வியல் அறநெறிகளை எடுத்து இயம்புகின்ற பதினெட்டு நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதன்மையானது திருவள்ளுவர் இயற்றிய **திருக்குறள்.** 1330 குறப்பாக்களைக் கொண்ட திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்று மூன்று பால்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.
- **ஐம்பெருங்காப்பியங்கள்:**
- காப்பியங்கள் என்பவை கவிதை நயமுடைய செய்யுள்வடிவிலான நீண்ட இலக்கியப் படைப்புகளாகும்.
- **ஆவை:**
- **1.** சிலப்பதிகாரம்
- 2. மணிமேகலை
- 3. சீவகசிந்தாமணி
- 4. வளையாபதி
- 5. குண்டலகேசி
- **பிறமொழி:** சமஸ்கிருதத்தில் இருக்கும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய காப்பியங்கள் பண்டைத் தென்னகம் பற்றிய செய்திகளைத்தருகின்றன.
- மகேந்திரவர்மனின் மத்தவிலாசம் புத்தத் துறவிகளின் வாழ்க்கையையும், நீதிமன்றங்களிலிருந்து குறைகளையும் காட்டுகின்றது.
- குமரகம்பணனின் மனைவி கங்காதேவி இயற்றிய மதுராவிசயம் முஸ்லிம் படையெடுப்பாளர்கள் எற்படுத்திய கொடுமைகளை விளக்குகின்றது.
- தஞ்சை மராட்டியர் காலத்து சமஸ்திருத இலக்கியங்களில் தலபுராணமும் இடம்பெறும்.
- நவாபுக்களின் ஆட்சியின்போது அரேபியப் புலவர்களும், உருதுப் புலவர்களும் இயற்றிய நூல்கள் அரசர்களின் வாழ்க்கையைக் காட்டுகின்றன.

AKM IAS & NEET ACADEMY

♣ மௌரியர் தலைநகரிலிருந்து கிரேக்கத் தூதனின் 'இண்டிகா' என்ற நூல் தமிழகத்து வரலாற்றுச் செய்தியளிக்கின்றது.

♣ **சில நாட்டு இலக்கியங்கள்:**

♣ இலங்கை வரலாறாகிய மகாவம்சம், பிளினியின் வரலாற்றுக் குறிப்புகளும், இரோதாத்தசின் (**Herodotus**) வரலாற்றுக் குறிப்புகளும், திராபோவின் வரலாற்றுக் குறிப்பபுகளும் தமிழகத்தின் வெளிநாட்டுத் தொடர்புகளைக் காட்டுகின்றன.

♣ தாலிமியின் பூகோளம், பெரிப்புறுஸ் என்ற பயண நூல் ஆகியவை வரலாற்றுக்குப் பயன்படுகின்றன.

♣ பெரிப்புளூஸ் பயணநூல் கி.பி. முதல் நூற்றாண்டின் தென்னிந்தியத் துறைமுகங்களையும், பின்னிலங்களையும், மக்களையும், வணிகத் தலங்களையும் காட்டுகின்றது.

♣ சீனப்பயணி யுவான்சுவாங் காஞ்சிக்கு வருகை தந்திருந்தார். மார்க்கோபோலோ, இபன்பதூதா, வாசப். பேயஸ் அப்துல்ரசாக் முதலிய பயணிகள் தமிழகத்தைக் கண்டனர்.

♣ **தமிழ் அல்லதா பிற மொழிச் சான்றுகளும் வெளிநாட்டினரின் குறிப்புகளும்:**

♣ தமிழ் அல்லாத பிற மொழிச் சான்றுகளும் தொடக்க காலத் தமிழ்ச் சமூகம் குறித்த அரிய தகவல்களைத் தருகின்றன.

♣ மார்க்கோபோலோ தமது பயணக் குறிப்பில் நகர அமைப்புகள், மாட மாளிகைகள் ஆகியன தம்மைக் கவர்ந்ததாக எழுதியுள்ளார். முதல் நூற்றாண்டைச் சேர்ந்த இத்தாலி நாட்டின் பிளினி தம் குறிப்பில் எகிப்து அரிசி கிளியோபாட்ரா கொற்கை முகத்தை அணிந்ததாகப் பதிவு செய்துள்ளார். கொற்கை முத்தின் சிறப்பினை **அர்த்தசாஸ்திரமும்** குறிப்பிடுகிறது.

♣ **ரோமானியக் குறிப்புகள்:**

♣ பொ. ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பல்ஸ் என்னும் பெயர் கொண்ட கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்துக்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம்செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்ததர்.

♣ அது முதல், யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன. அந்தப் பரவக்காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பல்ஸ் என்பதையே சூட்டினார்கள்.

♣ **அர்த்த சாஸ்திரம்**

♣ மௌரியர் காலத்தில் வாழ்ந்த கௌடில்யர் என்ற சாணக்கியர் இயற்றிய அர்த்தசாஸ்திரம் என்ற நூல் பொருளாதாரம் குறித்தும் ஆட்சிமுறைமை குறித்தும் எடுத்துரைக்கிறது.

♣ **பாண்டிய காவாடகா** என்ற அந்நூலின் குறிப்பு பாண்டியந ாட்டில் கிடைத்த முத்துக்கள், கடற்பொருள்களைக் குறிப்பதாக இருக்கலாம்.

♣ **மகாவம்சம்:**

♣ இலங்கையின் புத்த சமய வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்ற நூல் பாலி மொழியில் எழுதப்பட்டது.

♣ ததன்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் இருந்த வணிகர்கள் குறித்தும் குதிரை வணிகர்கள் குறித்தும் இந்நூல் குறிப்பிடுகிறது.

♣ முக்கியமான வரலாற்று நிகழ்வுகளைக் காலவரிசையில் விவரிக்கும் குறிப்பு வரலாற்றுக் குறிப்பு (**Chronicle**) எனப்படும்

♣ **எரித்தீரியன் கடலின் பெரிப்ளஸ் :( Periplus of Erythrean Sea)**

♣ எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் என்பது பண்டைய கிரேக்க நூலாகும்.

♣ இந்நூலின் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை. பெரிப்ளஸ் என்றால் கடல் வழிகாட்டி என்று பொருள்.



AKM IAS & NEET ACADEMY

♣ மாலுமிகள் இவ்வழிகாட்டிகளைக் கடற்பயணத்திற்குப் பயன்படுத்தினர்.

♣ செங்கடலைச் சுற்றியுள்ள கடற்பரப்பே எரித்திரியன் கடல் ஆகும். முசிறி, தொண்டி, குமரி, கொற்கை ஆகிய சங்ககாலத் துறைமுகப்பட்டினங்கள் குறித்தும் சேர, பாண்டிய அரசர்கள் குறித்தும் இந்த நூலில் குறிப்புகள் உள்ளன.

♣ **பிளினியின் 'இயற்கை வரலாறு':**

♣ ரோமானியரான மூத்த பிளினி என்பவர் இயற்கை வரலாறு என்று நூலை எழுதினார்.

♣ லத்தீன் மொழியில் எழுதப்பட்ட இந்நூல், ரோமாணியப் பேரரசின் இயற்கை வளங்கள் குறித்து விவரிக்கிறது.

♣ இந்தியாவுடன் நடைபெற்ற மிளகு வணிகம் குறித்துக் குறிப்பிடும் பிளினி, வடகிழக்கு ஆப்பிரிக்காவில் அருகில் உள்ள **ஓசலிஸ் துறைமுகத்திலிருந்து** பருவக் காற்று (தென்மேற்குப் பருவக்காற்று) சரியாக வீசினால் நாற்பது நாட்களில் இந்தியாவை அடைந்துவிடலாம் என்று கூறியுள்ளார்.

♣ கேரளக் கடற்கரையில் இருந்து பக்காரே துறைமுகத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திதருந்த மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

♣ பக்காரேதுறைமுகத்தின் தற்காலப் பெயர் என்னவென்று தெரியவில்லை. இந்தியாவுடன் நடைபெற்ற மிளகு வணிகத்தினால் ரோமானிய நாட்டுச் செல்வம் கரைந்தது குறித்துப் பிளினி ஆதங்கப்படுகிறார்.

♣ **தாலமியின் புவியியல்:**

♣ இரண்டாம் நூற்றாண்டில் நிலவிய ரோமானியப் பேரரசின் புவியியல் அமைப்பு விவரங்கள், நிலப்படம் ஆகியவற்றைக் கொண்ட ஆவணமே தாலமியின் புவியியல் என்று நூலாகும்.

♣ இதில் காவிரிப்பூம்பட்டினம் (**Khaberis Emporium**), கொற்கை (**Korkoi**), கன்னியாகுமரி (**Komaria**), முசிறி(**Muziris**), ஆகிய துறைமுகப்பட்டினங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

♣ பியூட்டிங்கேரியன் அட்டவணை (**Peutingerian Table**)

♣ பியூட்டிங்கேரியன் அட்டவணை என்பது ரோமானியப் பேரரசின் சாலைகள் குறித்த விளக்கமான நிலப்படம் ஆகும். இதில் பண்டைய தமிழகமும் துறைமுகமும், மேலும் பல இடங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

♣ **குறிப்ப:**

♣ இங்கு இலங்கையை தீவு எனவும், முசிறி துறைமுகம் முசிறிஸ் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

♣ **வியன்னா பாப்பிரஸ் :**

♣ வியன்னா பாப்பிரஸ் என்பது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க ஆவணமாகும்.

♣ இதில் முசிறியில் நடைபெற்ற வணிகம் தொடர்பான குறிப்ப உள்ளது. தற்போது இந்த ஆவணம் ஆஸ்திரியா நாட்டின் தலைநகரான வியன்னாவில், ஆஸ்திரிய தேசிய நூலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பாப்பிரஸ் அருங்காட்சியகத்தில் உள்ளது.

♣ இத வணிகர்களுக்கு இடையேயான எழுத்துப்பூர்வமான ஓர் உடன்படிக்கை ஆகும்.

♣ **ஹெர்மாபோலோன்** என்ற பெயருடைய கப்பல், ரோமானிய நாட்டிற்கு ஏற்றுமதியான மிளகு, தந்தம் போன்ற சரக்குகள் குறித்த பட்டியல் இந்த ஆவணத்தில் காணப்படுகின்றன.

♣ பாப்பிரஸ் என்பது பண்டைய எகிப்தில் பாப்பிரஸ் என்ற நாணலிலிருந்து தயாரிக்கப்பட்ட தாள் ஆகும். அக்காலத்தில் எழுதுவதற்கு இதைத்தான் பயன்படுத்தினர்.

♣ **10. ஐரோப்பியக் கம்னெியரின் ஆவணங்கள்:**

♣ போர்ச்சுக்கல், டச்சு, ஹாலந்து, இங்கிலாந்து, பிரெஞ்சு வணிகத் கம்பெனியர்கள் முதலில் தென்னகத்தில் வந்து வாணிபத் தளங்கள் அமைத்தனர்.



AKM IAS & NEET ACADEMY

♣ இந்தக் கம்பெனியார்கள், தாய்நாட்டுடனும் நாட்டு மன்னர்களுடனும் தொடர்பு கொண்ட கடிதங்களும் கம்பெனி ஆவணங்களும் தற்கால வரலாற்றுச் சான்றாக அமைகின்றன.

♣ அவை 16 ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தின் அரசியல், பொருளாதார, சமூக. சமய நிலைமைகளைக் காட்டுகின்றன.

♣ **11. பாதிரிமார் கடிதங்கள் :**

♣ ஐரோப்பிய வணிகக் கம்பெனியாரின் வருகையுடன் கிறித்துவ சமயப் பணியாற்றும் சமயத் தொண்டர்களும் தமிழகத்தில் முக்கிய இடங்களில் உறைவிடங்கபள் அமைத்துப் பணியாற்றினர்.

♣ இவர்களுள் பெர்னாண்டஸ், நோபிலி, பிரிட்டோ, சுவாட்ஜ், புனித சவேரியார் போன்றவர்கள் முக்கியமானவர்களாவார்கள். மதுரை நாயக்கர்களுடனும், தஞ்சை மராட்டியர்களுடனும், விஜயநகரத்துடனும் துறவிகள் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தனர்.

♣ முக்களுடன் பழகிப் பணியாற்றினர், இத்தகைய பாதிரிகளின் கடிதங்கள் இன்று சேகரித்துத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. அவை சிறந்த வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன.

♣ **கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியாளர்களின் ஆவணங்கள்:**

♣ ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார்கள் 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் தமிழகத்து அரசியல் சூதாட்டங்களில் பங்குகொண்டனர். அந்நூற்றாண்டின் இறுதியில் பாளையக்காரர்களுடன் மோதிக்கொண்டனர்.

♣ 19 ஆம் நூற்றாண்டின் துவக்கம் முதல் தமிழகத்தின் ஆட்சியாளர்கள் ஆனார்கள்.

♣ நாட்டு மன்னர்களுடன் அவர்கள் நடத்திய கடிதப் போக்குவரத்துக்களும். ஒப்பந்தங்களும், அரசு ஆணைகளும் அதிகாரிகளின் அறிக்கைகளும். பிறவும் அக்காலத்து வரலாற்றை உணர்த்தும் சான்றுகளாக அமைகின்றன.

♣ பிரெஞ்சுக் கம்பெனியில் அதிகாரியாகவிருந்த **ஆனந்தரங்கம்** பிள்ளையின் குறிப்பேடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

♣ இவை அனைத்தும் தமிழகத்தின் வரலாற்றினை முழுமையாகப் படைக்க உதவுகின்றன.

♣ **இலாவியல் ஆய்பு :**

♣ இன ஆய்வாளர்கள் மனித இனங்கள் பற்றியும், மனிதவினத் தொடர்புகள் மற்றும் வேறுபாடுகள் பற்றியும் அறிவியல் முறையிலான ஆய்வும் ஒப்பீடும் செய்கின்றனர்.

♣ இவர்கள் இந்திய இனங்களை 7 வகையாகப் பிரித்துள்ளனர்.

♣ 1. இந்தோ- ஆரியர்

♣ 2. திராவிடர்

♣ 3. மங்கோலியர்

♣ 4. ஆரிய- திராவிடர்

♣ 5. மங்கோலிய- திராவிடர்

♣ 6. சைத்தோ- திராவிடர்

♣ 7. துருக்கி- இரானியர்

♣ மக்களின் தலை அமைப்பும், மூக்கு வடிவம், உடல்வாகு, நிறம் ஆகியவற்றை அளவுகோல்களாகக் கொண்டு மேற்கண்ட பாகுபாட்டைச் செய்துள்ளனர்.

♣ **தமிழக மக்களின் இனங்கள் :**

♣ இந்தியாவை **மக்களினத்தின் ஒரு அருங்காட்சிக் கூடம்** என்றனர் மக்கள்.

♣ இக்கூற்று தமிழகத்துக்கும் பொருந்தும். தமிழகத்து மக்களைத் திராவிடர்கள் என்பர். இ்.து அயலார் கூறும் ஒரு பொதுக்கூற்றேயாகும்

♣ குருதி இன அடிப்படையிலும், உடல் அமைப்பு அடிப்படையிலும் ஆராய்ந்த இன ஆய்வாளர்கள். தமிழகத்து மக்களுள் பல மக்களினக் கூறுகளையும்இனக் கலப்புகளையும் கண்டனர்.

♣ தமிழகத்து மக்களின் நிற அமைதி., தலைவடிவம், மயிர் அமைதி, உடல் அமைப்பு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பின்வரும் இனப்பாகுபாட்டை மக்கள் இன ஆய்வாளர்கள் முதலில் காட்டினர்.

♣ **நிரதர்கள் (Negroids)** :

♣ கரிய நிறத்தையும், குட்டையான உடல் உருவத்தையும், அகன்ற தலைவடிவத்தையும், தட்டை மூக்கையும். சுருட்டை முடியையும் உடையவர்களே நிரதர்களாவார்கள்.

♣ தமிழகத்தில் நிரதர்கள் கற்காலம் தொட்டே வாழ்ந்து வருகின்றனர். வேட்டையாடுதல் இவர்களுடைய தொழலாகும்.

♣ இவர்களைவிட வலிமையுடையவர்கள் பிற்காலத்தில் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றவுடன் இவர்கள் மலைப்பகுதிகளில் பதுங்கி வாழவேண்டி வந்தது.

♣ **முதல்நிலை ஆஸ்திரேலியர்கள் (Proto Austroloids) :**

♣ முதல் நிலை ஆஸ்திரேலியர்கள் கருமை நிறத்தையும், நீண்ட தலை வடிவத்தையும் அகன்ற மூக்கையும்,சுருளும் தன்மையுடைய மயிர் அமைதியையுமுடையவர்களாவார்கள். பொதுவாக இவர்கள் நிலநடுக்கடல் இனத்தின் உடல் அமைப்பையும் பண்பாட்டையும் ஒத்தவர்களாவர்.

♣ தமிழகத்தில் தெற்கில் இவ்வினத்தின குடியிருப்புகள் மிகுதியாகும். கற்காலத்தில் இவர்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து தென் கிழக்காசியா வழியாக இந்தியாவில் புகுந்தனர் என்றும், பின்னர் இந்தியாவிலிருந்து தென்கிழக்காசியாவில் பரவினர் என்றும் சில் நம்புகின்றர்.

♣ இந்தியாவிலிருந்து கற்காலத்தில் ஆஸ்திரேலியா வரை பரவியவர்களே முதல் நிலை ஆஸ்திரேலியர்கள் என்பர் வேறுசிலர்

♣ தமிழகத்தில் இவாக்ள உழவுத் தொழிலைத் துவக்கினா்: நெற்பயிரிட்டனர். தென்னை, வாழை, கத்தரி, பூசணி, வெற்றிலை, இலவு போன்ற தோட்டப் பயிர்களையும் வளர்த்தனர்.

♣ மாமன் மகளைத் திருமணம் செய்வது இவர்களுடைய சமூக வழக்கமாகும்.

♣ நடுகல் வழிபாடும், இறந்தவர்களை வழிபடும் வழக்கமும் இவர்களுக்கு இருந்தது. யானையை முதல் முதலில் பழக்கியவர்களும் இவர்களேயாவர்.

♣ **திராவிடகள் (நில நடுக்கடல் இனம்- Mediterranean race):**

♣ நீண்டு ஒடுங்கி உயர்ந்த தலைவடிவமும், குறுகியதும் ஆனால் அகலாததுமான மூக்கும், மாநிறமும் உடையவர்களே நிலநடுக்கடல் இனத்தவர் எனப்பட்டனர்.

♣ வேளாண்மையும், ஆடுமாடு மேய்த்தலும் இவர்களின் முக்கியத் தொழிலாக இருந்தது. நீர்ப்பாசன முறைகளை அறிந்திருந்தனர். அதனைக் கையாண்டு வேளாண்மை செய்தனர்.

♣ ஏறுதழுவுதல் இவர்களின் கேளிக்கைகளில் முக்கியமானதாகும்.

♣ பாட்டன் பெயரைப் பேரனுக்கு இடும் வழக்கைத் துவக்கியவர்கள் இவர்களே. சக்தி, சிவன் வழிபாடும், கிராம தேவதைகளை வழிபடும் வழக்கம் இவர்கள் வழி தோன்றியவையாகும்.

♣ இட அடிப்படையிலான பெயர் திராவிடர்களின் தாயக ஆய்வில் மயக்கம் ஏற்படுத்தியுள்ளது.

♣ **ஆரியர்கள் (Nordic Aryans) :**

♣ உயரமான உடல் அமைப்பும், நீண்ட தலையம், ஒடுங்கி நீண்ட மூக்கும், நீலநிறக் கயல்விழிகளும், கருமை மயங்கிய மயிரும் கவர்ச்சியான பொன்னிறமும் உடையவர்கள் ஆரியர்கள் என்றனர்.

♣ தமிழகத்தில் இவர்கள் பிந்திய காலத்திலேயே குடியேறினர்

♣ ஒரு தலைவனின் கீழ் குதிரைகளும் ஆடுமாடுகளும் மேய்ந்து நாடோடிகளாக வாழ்ந்திருந்தனர் என்பதைச் **சதபத பிரமாணத்தால்** அறியலாம்

♣ இவர்கள் தமிழகத்தில் புகும்போது தங்களைக் குருமார் நிலைக்கு உயர்த்தி இருந்தனர்.

♣ நிகமமுறை வழிபாடுகளையும், இந்திரன் மரபினையும் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்திய இவர்கள், நால்வகைச் சாதிக் கோட்பாட்டினையும் வலியுறுத்தினர்.

♣ **இனக் கலப்பு:**

♣ பல இனத்தைச் சார்ந்த மக்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகாலம் சேர்ந்து, வாழ்நத சமூகத் தொடர்பாலும், இணைந்து வாழ்ந்தமையாலும், போர்க் காலத்து நிகழ்ந்த தெவறியாட்டங்காளலும் மக்களின் கலப்பு ஏற்பட்டது.

♣ எனவே, தமிழகத்து மக்கள் தொகையில் பல இனங்களின் கலப்புக் காணுகின்றது என்று சொல்கினறார். இந்திய மக்களின் கணக்கு ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர். பி.எஸ். குகா.

♣ தமிழகத்தில் மலேனேஷிய, போலினேஷிய கலப்பு இனங்களும் உள்ளன.

♣ தமிழகத்தின் தெற்கிலும் இலங்கையின் வடக்கிலும் வாழும் **வெட்டி** (**Veddid)** இனத்தில் முதல் நிலை ஆஸ்திரேலிய இனச்சாயலைக் காணலாம்.

♣ தோல் வண்ண அடிப்படையில் தமிழகத்து மக்களுள் மலேனோ இந்தியர்களும், வெட்டிகளும், முதல் நிலை ஆஸ்திரேலியர்களும் இருக்கின்றனர் என்றார். பாரிஷ் பல்கலைக் கழகத்தின் மக்களின் ஆய்வாளர் **டாக்டர். ஜார்ஜ் ஆலிவர்** (**Dr. George Oliver**). குடந்கரைப் பகுதிகளில் போலினேஷியக் கலப்பினம் மிகுதி என்கிறார்.

♣ ஜேம்ஸ் ஹார்ன்ஸ் (James Hornell) நிரதர் இனமும், முதல்நிலை ஆஸ்திரேலியர் இனமும் கலந்ததே முதல்நிலை திராவிடர்கள் என்பது **ஹிட்டன்** என்பவருடைய ஆராய்ச்சியின் துணிபாகும்.

♣ **திராவிட இனம்:**

♣ கமில் சுவலபில் (Kamil. V. Zvelebi) என்ற இனவியல் ஆய்வாளர் இந்தியப் பூர்வ குடியினரை மூல திராவிடர்கள் (Proto- Dravidians**)** என்று குறிப்பிட்டார்.

♣ மேலும் சில ஆய்வாளர்கள் ஆரியர்கள் இந்தியாவில் குடியேறுவதற்கு முன்பே இந்தியத் துணைக் கண்டத்தில் திராவிடர்கள் இருந்ததைக் கண்டறிந்து சிந்துவெளி நாகரிகத்தை திராவிட நாகரிகம் என்ற முடிவுக்கு வந்தனர்.

♣ **மண்ணின் மைந்தர் :**

♣ கீரியர்சன், சர் ஜான் ஈவான்ஸ் போன்ற இனவியலாளர்கள் இன்னும் ஒருபடி மேலலே சென்று தென்னிந்தியாவே **மனித இனத்தின் தொட்டில்** என்ற முடிவுக்கு வந்தனர்.

♣ இக்கோட்பாட்டின்படி தென்னாட்டுப் பழங்குடியினரே திராவிடர்கள் என்ற கருத்து வலுப்பெற்றது.

♣ திராவிடர்களுக்குக் கருப்பிந்தியர் என்று பெயர் சூட்டினார் **ஜார்ஜ் ஒவிலியர்.**

♣ திராவிடன் மண்ணின் மைந்தன் என்ற கொள்கையை உறுதிப்படுத்துவற்கும், தமிழனைத் தமிழகத்தின் பழங்குடியினர் எனக் கருதுவதற்கும் வேறு நிரூபணம் ஏதும் தேவையில்லை என்று கூறுகிறார்.

♣ **மொழியியல் ஆய்வு :**

♣ மொழியியல் ஆய்வாளர்கள் பன்மொழி அறிஞர்கள், இவர்கள் மொனியை அளவுகோலாகக் கொண்டு இனத்தை முடிவு செய்வதற்கான முயற்சியை மேற்க்கொண்டனர்.

♣ அதன்படி மொழி ஒற்றுமையின் அடிப்படையில் குடும்ப மொழிகள் வகைப்படுத்தப்பட்டன. இதன்படி உலகில் ஒன்பது மொழிக் குடும்பங்கள் இருப்பதாக் கண்டறியப்பட்டது.

- இவற்றுள் நான்கு இந்தியாவில் உள்ளன:
- 1. இந்தோ- ஆரிய மொழிக் குடும்பம்
- 2. திராவிட மொழிக் குடும்பம்
- **3.** சீன- திபெத்திய மொழிக் குடும்பம்
- 4. ஆஸ்ரிக் மொழிக்குடும்பம்
- இவற்றுள் முதல் இரண்டு மொழிக்குடும்பங்களைப் பற்றிய ஆராய்ச்சி மிகுந்த சர்ச்சைக் குள்ளாயிற்று
- **சர் வில்லியம் ஜோன்ஸ் :**
- சர் வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones) 18 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த மொழிநூல் ஆய்வாளராகத் திகழ்ந்தார்.
- இவர் உச்ச நீதிபதி பொறுப்பேற்று கல்கத்தாவுக்கு வந்தார். சமஸ்கிருத அமாழியில் மனதைப் பறிக்கொடுத்தார்.
- வங்காளத்தில் ஆசியக் கழகத்தைத் (Asiatic Society of Bengal) துவங்கி அதன் தலைவராகப் பணியாற்றினார்.
- மொழி ஆய்வை மேற்கொண்ட ஜோன்ஸ் சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன் ஆகிய மூன்று மொழகளுக்கிடையே இருந்த ஒற்றுமையைக் கண்டறிந்தார்.
- அவர் எழுதிய **"சமஸ்கிருத மொழி"** என்ற நூலில் இம்மூன்று மொழிகளுக்கும் பொதுவான மொழி வேர் இருப்பதை ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தினார்.
- இவர் சமஸ்திருதத்துக்கும், வேதங்களுக்கும், ஆரிய நாகரிகத்துக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.
- இந்தோ- ஆரிய நாகரிகம்தான் இந்திய நாகரிகம் என்ற ஒரு சார்புக் கருத்து பரவ இவர் பெரிதும் காரணமாக இருந்தார்.
- **திராவிடச் சொல்விளக்கம் :**
- தமிழின் சமஸ்கிருத வடிவமே 'திராவிடா' என்ற சொல் என மொழிப் பேரறிஞர் கால்டுவெல் தாம் 1856 இல் வெளியிட்டுள்ள **"திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்"** (Comparative Grammer of Dravidian Languages) என்ற நூலில் விளக்கினார்.
- திராவிடா என்ற சொல்லிருந்து 'தமிழ்' என்னும் சொல் தோன்றியது என்பதை அவர் மறுத்தார்.
- தென்னிந்திய திராவிட மொழிகளைக் குறிப்பிடும் போது திரவிடியன் என்ற ஆங்கிலோ இந்தியச் சொல்வடிவைக் கால்டுவெல் உருவாக்கினார்.
- தமிழகத்தைக் குறிப்பிட்ட யவனர்கள், பண்டைக் காலத்தில் **'திளமிளிகே'** என்றனர். தென்னாட்டையும் தென்மொழியையும் (தமிழ்) குறிப்பிடத் திரமிளா, திரவிடா, திராவிடா என்ற சொற்களை சமஸ்கிருத மொழியாளர்கள் பிந்திய காலம் வரைப் பயன்படுத்தினர்.
- காஞ்சியில் தோன்றி வளர்ந்த சமஸ்கிருத மொழிப் பெரியார்களையும், பிறரையும் குறிப்பிடும் போது திராவிட தேசத்தார், **திராவிட சிசு** என்ற சொற்களைப் பயன்படுத்தினர்.
- பொ. ஆ. 9 ஆம் நூற்றாண்டின் காஞ்சியை ஆண்ட நந்திவர்ம பல்லவனும் தென்னகத்துத் தமிழ் மன்னர்களைக் குறிப்பிடும்போது **திராவிட மன்னர்கள்** என்றே குறிப்பிட்டுள்ளான்.
- பொ. ஆ. 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தங்காதேவி இயற்றிய மதுராவிசயம் என்ற சமஸ்கிருத மொழி தமிழகத்தைத் திராவிட தேசமென்றும், தமிழ் மன்னர்களைத் திரமிள அரசர்கள் என்றும் குறிப்பிட்டிருப்பது நோக்குதற்குரியது.
- தமிழ் என்ற சொல்லை வேற்று மொழியாளர்கள் அவர்களுடைய மொழிக்கேற்பப் பயன்படுத்தியதன் விளைவாகத் திரமிளா, திரவிடா, திராவிடா என்ற சொற்கள் தோன்றின என்பது உண்மை.

AKM IAS & NEET ACADEMY

♣ கங்கை சமவெளியில், தமிழ்ப்பூர், தமிழ்க்குடி, தமிழ்பேடா, தாமுலுக் போன்ற பல ஊர்பெயர்கள் இன்றளவும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

♣ **திராவிட மொழிக்குடும்பம் :**

♣ **பிரான்சிஸ் எல்லிஸ்** என்ற மொழியியல் ஆய்வாளர் 1816ம் ஆண்டு , முதல் முதலாகத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு முதலியவை தென்னிந்தியக் கிளைமொழிகள் என்ற உண்மையைக் கண்டறிந்து கூறினார்.

♣ அதன்பின் 1856 ஆம் ஆண்டில் ராபர்ட் கால்டுவெல் என்பார் இம்மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்பதைத் தக்க சான்றுகளுடன் மெய்ப்பித்தார்.

♣ **கால்டுவெல்:**

♣ ராபர்ட் கால்டுவெல் (Robert Caldwell, 1814-1891) அயர்லாந்தில் பிறந்தார்.

♣ தனது 24 வது வயதில் கால்டுவெல் லண்டன் மிஷனரி சங்கத்தின் சார்பாக சென்னைக்கு வந்தார்.

♣ திருநெல்வேலி கிறித்துவ திருச்சபையின் ஆயராக (Bishop) சமய முறைப்படி பொறுப்பேற்றார் (1877)

♣ மக்களோடு மக்களாகப் பழகிப் பணியாற்றிக் கொண்டிருந்த கால்டுவெல் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமென்றால் அது அவர்கள் பேசும் மொழியால் மட்டுமே முடியும் என்ற உண்மையை உணர்ந்தார்.

♣ தமிழைப் பமுதறப் பயின்றார். அதுமட்டுமல்ல, தமிழைப் பிற தென்னிந்திய மொழிகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்ததர். அதன் விளைவே கால்டுவெல் எழுதி வெளியிட்ட வரலாற்று முக்கியத்துவ மிக்க **திராவிட மொழகளின் ஒப்பிலக்கணம்** ஆகும்.

♣ இந்நூலில் மூன்று முக்கிய முடிவுகளை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

♣ 1. திராவிட மொழிக்குடும்பம் தனித் தன்மை உடையது; தன்னிகரற்றது

♣ 2. இது வடமொழிக் குடும்பத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது; இரண்டும் இரு துருவங்களைப் போன்றவை;

♣ 3. திராவிட மொழிக் குடும்பம் வடடிமாழிக் குடும்பத்தின் துணையின்றி தனித்து இயங்க வல்லது.

♣ இவரது ஒப்பிலக்கணம் தமிழ் தனித்து இயங்கவும். வளரவும், வாழவும் வல்லது என்று உலகுக்கு உணர்த்திய ஒப்பற்ற முதல் வாழ்வியல் நூலாகும்.

♣ திராவிட மொழிகள் எழுபதுக்கும் மேற்பட்டவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை இந்தியாவின் பல பகுதிகளிலும், பாகிஸ்தானிலும், பங்காளதேசத்திலும், இலங்கையிலும், தென்கிழக்கு இரானிலும் பரவி இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது.

♣ **திராவிடத் தந்தை :**

♣ கால்டுவெல் இனம் கண்ட மொழிக்குடும்பத்துக்குத் திராவிடம் என்று பெயரிட்டது பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. குறிப்பாகத் திராவிட மொழிகள் ஒரு இனத்தைச் சார்ந்தவை என்ற எண்ணம் பலத்த எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

♣ ஒரு இனத்தின் தோற்றத்தைக் குறிக்க மொழியை அளவுகோலாகக் கொள்ளக் கூடாது என்று விவாதிக்கப்பட்டது. மொழி ஆய்வுக்கும் (Philology) இன ஆய்வுக்கும் (Ethnology) முடிச்சுப் போடக்கூடாது என்ற எடுத்துரைக்கப்பட்டது.

♣ மொழியைக் கொண்டு இனத்தை முடிவு செய்யக் கூடாது என்ற வாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று கூறுகிறார். **ஆர். சத்தியநாதய்யர்.**

♣ தமிழ்மொழியின் எழுத்து வடிவம், இலக்கிய வளம், இலக்கணத் தனித்துவம், இம்மொழி பேசும் மக்கள், இவர்களது நாகரிக நிலை ஆகியவற்றின் அடிப்படையில் தமிழைப் **பண்பட்ட அல்லது செம்மொழி** (Classical Language ) என்று கூறிய கால்டுவெல்லின் கருத்து மொழியியல் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

♣ ''கால்டுவெல் ஐயரின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் திராவிடயலுக்கு வழிகோலிய பெருமைமிக்க நூலாகும்'' எனக் கருதுகிறார் அமுதன் அடிகள்.

♣ **திராவிட- தமிழ் தொடர்பு :**

♣ **'திராவிட'** என்பது தமிழ்ச்சொல் அல்ல: இது வடமொழிச் சொல். இச்சொல் சங்க இலக்கியம் எதிலும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

♣ எனினும் பண்டைக் காலத்தில் தமிழகம் வந்த யவனர்கள் இந்நாட்டைச் **"திரமிளிகே"** என்று அழைத்தனர்.

♣ திரவிடா, திராவிடா என்ற சொற்களை வடமொழியாளர்கள் பயன்படுத்தி உள்ளனர். ஆதிசங்கரர் தென்னாட்டைக் குறிப்பிடுவதற்கு **திராவி** என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.

♣ காஞ்சியை ஆட்சி செய்த நந்திவர்ம பல்லவரும் தமிழ் மன்னர்களைத் திராவிட மன்னர்கள் என்றே குறிப்பிட்டுள்ளனர்.

♣ பின்னர் குமாரகம்பணரின் மனைவி கங்காதேவி இயற்றிய மதுரவிஜயம் என்ற வடமொழி நூலில் தமிழ்நாட்டைத் திராவிட தேசம் என்றும். தமிழ் மன்னர்களை 'திரமிள அரசர்கள்' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

♣ தொன்மைக்காலம் தொட்டு வழக்கத்தில் இருந்துவரும் தமிழ் என்ற சொல்லை வேற்று மொழியாளர்கள் திரமிளா, திரவிடா, திராவிடா என்ற சொற்களால் குறிப்பிட்டனர். மாறாக, திராவிட என்ற சொல்லிலிருந்துதான் தமிழ் தோன்றியது எனக் கூறுவது வரலாற்றுத் திரிபு ஆகும்.

♣ **கிரியர்சன்** பல் தமிழ்ச்சொற்களை வடமொழி தாராளமாகக் கடன் வாங்கியுள்ளது என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

♣ **திராவிடரின் தாயகம் :**

♣ தமிழரின் இனம், மொழி போன்றே இவர்களது இருப்பிடம் விவாதப் பொருளாயிற்று.

♣ ஆதிகாலத் தமிழர்கள் மண்ணின் மைந்தர்களா? ஆல்லது வெளி நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களா? இவ்வினாக்களுக்கு இன்றுவரை ஒருமித்த விடை கிடைக்கவில்லை.

♣ ஆய்வாளர்கள் இரு பக்கங்களுக்கான ஆதாரங்களைக் கொடுக்கின்றனர். பூர்வீகத் தமிழர்கள் வெளியிடத்திலிருந்து வந்தவர்கள் என்பதற்கு எகிப்து, ஈரான். சுமேரியா, கிரீட் தீவு போன்ற நிலநடுக்கடல் (Mediterranian Region ) பகுதியிலிருந்து வந்திருக்கக்கூடும் என்று கருதுகின்றனர்.

♣ மாறாக, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கக் கண்டங்களை உள்ளடக்கிய லெமூரியா கண்டமே தமிழர்கள் திராவிடர்களின் பிறப்பிடம் என்று மரபுவழிச் சான்றுகளைக் கொண்டு உறுதி செய்வோரும் உண்டு.

♣ இருதரப்பினரும் முன்வைக்கும் ஆதாரங்களைக் கொண்டு பார்க்கையில் திராவிட இனம் தென்னிந்தியாவைப் பொறுத்தவரை பழங்குடியினர் என்பதும், தமிழர்கள் தமிழகத்தின் பழங்குடியினர் எனக் கருதுவதற்கும் இடமுண்டு.

♣ **திராவிடர்களின் தாயகம் :**

♣ தென்னிந்தியத் திராவிடர்கள் நிராதர்களுக்குப் பின்னும் ஆரியர்களுக்கு முன்னும் வெளிநாட்டிலிருந்து இந்தியாவில் குடியேறினார்கள் என்றார் **ஏ.கே. கீன்**.

♣ நாகரிகத்தின் பிறப்பிடம் எகிப்து என்று கருதினார் ஈலியட்ஸ்மித் (Eliot Smith) என்பவர். திராவிடாக்களுக்கு எகிப்தியர்களுக்குமிடையே காணும் சில ஒற்றுமைகளைக் காட்டித் திராவிடர்கள் எகிப்திலிருந்து வந்தவர்கள் என்றார் அவர்.



AKM IAS & NEET ACADEMY

♣ மொழி ஒற்றுமைகளைக் காட்டி, நடு ஆசியாவிலிருந்து வந்தவர்களின் சந்ததியார்களே திராவிடர்கள் என்றார் கால்டுவெல்.

♣ பொ. ஆ. மு. 5 நூற்றாண்டில் திராவிடர்கள் ஈரானிலிருந்து பலூசித்தானம் வழியாகத் தக்காணத்தில் புகுந்தனர் என்றார் பேராசிரியர் எய்மேன்டாப்.

♣ எலாமியர்களுள் ஒரு பிரிவினர் பொ. ஆ. மு. 3000 அளவில் ஈரானிலிருந்து இந்தியாவில் வந்தவாக்ள என்றார் எச். எசு. டேவிட்.

♣ இரோதாத்தசு (Herodotus) என்ற கிரேக்கநாட்டு வரலாற்றாசிரியர் லிசியர்களை திரிமிளி (Trimilli) என்றே அழைத்துள்ளார்.

♣ இவைகளின் அடிப்படையில் திராவிடர்கள் நிலநடுக்கடல் பகுதியின் கிழக்ககிலிருந்து தரைவழியாகவோ கடல் வழியாகவோ இந்தியாவில் புகுந்தனர் என்றார்கள் சுனித்குமார் சாட்டர்ஜி, நீலகண்ட சாத்திரியார் முதலியவர்கள்.

♣ ஐபீரிய தீவக்குறைவாழ் பாஸ்குகள், வடக்கு ஆப்ரிக்க ஹெமெய்ட்டுகள், மேற்கு ஆசிய செமட்டிக்குகள் முதலியவர்களுடைய முன்னோர்களும் திராவிடர்களும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் என்றார் இலஹோவரி.

♣ நிலநடுக்கடல் பகுதி மக்களுக்கும் திராவிடர்களுக்குமிடையே உடலமைதி ஒற்றுமையும் பண்பாட்டு ஒற்றுமையும் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் திராவிடர்கள் நிலநடுக்கடல் பகுதியைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்றார் இலஹோவரி.

♣ **தென்னிந்தியப் பிறப்பிடக் கொள்கைகள் :**

♣ பண்நெடுங்காலத்துக்கு முன் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கக் கண்டங்களை உள்ளடக்கிய நிலநடுக்கோடு (equator) பகுதியில் நிலவிய இலமூரிய கண்டத்தில் ஒரு பகுதியாகத் தென்னிந்தியா விளங்கியது.

♣ இப்பகுதியே மக்களின் பிறப்பிடமாக இருக்கலாம். தென்னிந்தியாவில் தோன்றி வாழ்ந்த பழங்குடி மக்களின் சந்ததியார்களே திராவிடாகள் என்று கூறினர். சீனிவாச அய்யங்கார், இராமச்சந்திர தீட்சிதர் போன்றவர்கள்.

♣ இந்திய தீவக்குறை, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, தென்கிழக்காசியா முதலிய நாடுகளுடன் இணைந்திருந்தால் தமிழக நாகரிகம் கிழக்கில் போலினேசியா, மேற்கில் மேற்காசியா, எகிப்து, நிலநடுக்கடல் நாடுகள் முதலியவற்றில் எளிதில் பரவியது. போலினேசியா, மேற்காசியா, நிலநடுக்கடல் நாடுகள் முதலிய பகுதிகள் திராவிடர்களின் குடியேற்றங்களாயின என்றார். வி. ஆர். கே. இராமச்சந்திர தீட்சிதர்.

♣ திராவிடர்களுக்கும், சுமேரியர்களுக்குமிடையே காணப்பெற்ற உடல் ஒற்றுமையைக் காட்டி சுமேரியர்கள் இந்தியாவிலிருந்து மெசப்பொடோமியவிற்கு சென்று குடியேறியவர்கள் என்று கூறுவார் உள்ர்.

♣ நிலநடுக்கடல் பகுதியின் கிழக்கில் தொன்மையான காலத்தில் வாழ்ந்த மக்களுடைய உடற்கூற்றுக்கும் பண்பாட்டுக்கும் தென்னிந்தியத் திராவிடர் உடற்கூற்றுக்கும் பண்பாட்டுக்கும் நெருக்கமிருந்திருக்கின்றது.

♣ இவ்வொற்றுமைகளைக் காட்டித் தென்னிந்தியத் திராவிடர்களின் தாயகம் நிலநடுக்கடலின் கிழக்குப் பகுதி என்றனர் பல வரலாற்று ஆசிரியர்கள்.

♣ திராவிடர் பிறப்பிடம் பற்றி மிக அண்மையில் ஆய்வு நடத்திய இலகோவரி என்பவரும், சுனித்குமார் சாட்டர்ஜி என்பவரும் திராவிடர்களின் இறுதியான தாயகம் கிழக்கு நிலநடுக்கடல் பகுதியே என்று உறுதி செய்தனர்.

♣ ஆனால் திராவிடர் பண்பாட்டுச் சின்னங்கள் கிழக்கு நில நடுக்கடல் பகுதியில் மட்டுமின்றி ஐபீரியாவிலும், இத்தாலியிலும், மேற்கு ஆசியாவிலும், மத்திய ஆசியாவிலும், கொராசுமியாவிலும், ஆசியாவின் வடகிழக்குக் கோடியில் காமாட்சி கட்கனிலும், ஆரியர்களுக்கு முற்பட்ட இந்தியா முழுவதிலும், தென்கிழுக்காசியப் பகுதிகளிலும், பசிபிக்கடல் தீவுகளில் குறிப்பாகக் கிறித்துமசு தீவுகளிலும் காணக்கிடக்கின்றன.

AKM IAS & NEET ACADEMY

♣ தென்னிந்தியாவில் ஆதிச்சநல்லூரிலும், மலபாரிலூம், மைசூரிலும் கிடைத்த சில குறியீடுகள் மேற்கு ஆசியாவிலும் பசிபிக்கடலில் கிறித்துமசு தீவிலும் கிடைத்த குறியீட்டை ஒத்திருக்கின்றன.

♣ மனு என்ற திராவிட மன்னன் பெரு வெள்ள சேதத்தின் போது தெற்கிலிருந்து வடக்காக மக்களைக் காப்பாற்றி வந்தான் என்பதைப் **பாகவத புராணம்** காட்டகின்றது.

♣ அரபிக்கடல் வழியாகச் சென்றிறங்கிய ஒயன்னசு கூட்டத்தினர் பாரசீக வளைகுடாக்கடல் பகுதியில் எரிடுவில் எரிடுவிலிருந்து சென்றவர்கள் பண்பாடும் கட்டிடக்கலையும் வளரச் செய்தனர் என்றும் காட்டுகின்ற கதைகள் இருக்கின்றன.

♣ சுமேரியர்களின் மூதாதையினர் வெளியிலிருந்து சென்று குடியேறியவர்கள் என்றும், சுமேரியர்களுக்கு எரிடுவிலிருந்து சென்றவர்கள் பண்பாடும் கட்டிடக்கலையும் வளரச் செய்தனர் என்றும் காட்டுகின்ற கதைகள் இருக்கின்றன.

♣ பொனீசியர் இந்தியாவின் தென்குமரிப் பகுதியில் பனைத்தொடர்புடையவர்கள் என்றும் பனைப் பாரம்பரியத்தைப் பல்வேறு குடியேற்றப் பகுதிகளுக்குக் கொண்டு சென்றனர் என்றும் இரோதாத்தசு தனது வரலாற்று நூலில் குறிப்பிட்டார்.

♣ இந்து மாக்கடல் ஓரத்திலிருக்கும் கிழக்கு ஆப்பிரிக்காவிலும், ஜாவாவிலும் மனிதனின் மூதாதையார் வாழ்ந்தனர் என்று ரிச்சேர்டு லீக்கே, யுஜினி தோப் பெயசின் ஆய்வுகள் காட்டுகின்றன.

♣ இந்துமாக்கடல் பகுதிகளைக் கற்கால மனிதனின் வாழ்க்கை மண்டலம் என்கின்றார் **மார்ட்டிமர் வீலர்.**

♣ தமிழ் இலக்கியத்தில் குமரிக்கண்டத்தின் நினைவுகள் தரப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் பழமையான காலம் முதல் பண்பாட்டு வளர்ச்சித் தொடரின் பகுதிகளை விளக்கும் சான்றகள் உள்ளன.

♣ விஷ்ணுபுராணம், கூத்த நூல், பாகவத புராணம், தமிழ் இலக்கியம் ஆகியவை வழங்கும் சான்றுகள் குமரிக்கண்டத்தினைத் **தமிழர்களின் தாயகம்** என உறுதி செய்கின்றன.

♣ **திராவிட- சிந்துச் சமவெளி நாகரிகத் தொடர்புகள் :**

♣ ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழையும்போது வடமேற்கு இந்தியாவிலும், வடஇந்தியாவிலும், திராவிட இனத்து மக்கள் வாழ்ந்து வந்தனர் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

♣ ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த பேராசிரியர் பர்ரோ (Burrow) என்பார் அவர்களுள் ஒருவர். ஆரிய மொழியை நன்கு ஆய்ந்து ரிக் வேதத்தில் இருபது திராவிட மொழிச் சொற்களை ஆளப்பட்டிருப்பதாகக் கூறுகின்றார்.

♣ ஏற்கெனவே சிந்து கங்கை வெளியில் செழித்து வாழ்ந்திருந்த திராவிடரிடமிருந்து பிற்காலத்தில் வந்து குடியேறிய ஆரியர் பல திராவிட மொழிச் சொற்களைத் தம் மொழியில் ஏற்றுக்கொண்டனர் என்பது இவருடைய முடிவாகும்.

♣ லஹோவரி என்றும் ஆராய்ச்சியாளர் வியப்பூட்டும் ஊடகம் ஒன்றை வெளியிட்டுள்ளார். அவர் பல மொழிகளை ஆராய்ந்து ஒப்புநோக்கி முடிவாகத் திராவிட மொழிக்கும் ஸ்பெயின் நாட்டு பாஸ்க் (Basque) மக்களின் மொழிக்கும் இடையே பல ஒற்றுமைகளைக் கண்டார். இவ்விரு மொழிகளும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று ஒரு முடிவுக்கு வந்தார்.

♣ சுமேரிய, எலாமைட், கப்படோசிய மொழிகளும் இக்குடும்பத்தில் பிறந்தவையே என்று அவர் கருதினார்.

♣ சுமேரியா, மெசபடொமியா போன்ற மேற்காசிய நாடுகளுக்கும் திராவிடர்கட்குமிடையே நெருங்கிய நாகரிக, பண்பாட்டுத் தொடர்புகள் அமைந்துள்ளன.

♣ திராவிடர்கள் மேற்காசியாவினின்றும் குடி பெயர்ந்து ஈரான் வழியாக வந்து வடமேற்குக் கணவாய்களின் மூலம் சிந்துசமவெளியில் இறங்கிக் குடியமர்ந்து அங்கொரு மாபெரும் நாகரிகத்தை வளர்த்திருக்கக் கூடும்.

♣ பிறகு அவர்கள் எக்காரணத்தினாலோ சிந்து வெளியைக் கைவிட்டுத் தெற்குப் படர்ந்து தமிழகத்தில் தங்கி இங்கொரு நாகரிகத்தை வளர்த்திருக்கக்கூடும் அல்லது லெமூரியாவிலிருந்து தென்னிந்தியா ஆப்பிரிக்கா

AKM IAS & NEET ACADEMY

முதலிய இடங்களுக்குச் சென்று சிலர் மத்திய தரைக்கடல் நாடுகளில் சில காலம் வாழ்ந்து, வடஇந்தியா வழியாக தெற்கு வந்திருக்கலாம்.

♣ தமிழர் யார்? என்னும் கேள்விக்கு விடைகாணும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வரலாற்றாய்வாளருள் மிகவும் சிறந்தவர் **ஹீராஸ்பாதிரியார்**.

♣ சிந்து வெளி மக்களின் சித்திர எழுத்துகளில் மறைந்துள்ள செய்திகள் யாவை? என்பதை அறிந்து கொள் வரலாற்று ஆய்வாளர்கள் விஞ்ஞானத்ததின் துணையை நாடிவருகின்றனர்.

♣ பல அறிஞர்கள் இந்த எழுத்தகளைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து பல்வேறு கருத்துகளை அவ்வப்போது வெளியிட்டு வந்துள்ளனர்.

♣ ஒருசாரார் சிந்துவெளி மொழியானது பண்டைய தமிழ் வடிவமே என்று கூறிவருகின்றனர். இவர்களுள் முதன்மையானவர் ஹீராஜ் பாதிரியார் ஆவார்.

♣ ஹீராஸ் பாதிரியார் தம் கொள்கைக்குச் சார்பாகப் பல சான்றுகளைக் காட்டியுள்ளார். இவர் இவ்விரு மொழிக்கும் மிடையே பல ஒற்றுமைகளைக் கண்டார். இவருடைய கொள்கையைச் சில ஆய்வாளர் பொருத்தமற்றதெனப் புறம்பே ஒதுக்கினார்.

♣ ரஷியா, பின்லாந்து ஆகிய நாட்டு ஆய்வாளர் சிலர் மொகஞ்சதாரோ மொழியை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து அமமொழி திராவிட மொழியின் தொடக்க உருவமேயாம் என்று முடிவுகட்டியுள்ளனர்.

♣ **ஐ. மகாதேவன் :**

♣ சிந்துவெளி எழுத்துகளை ஆராயும் பணியில் முனைந்துள்ள திரு. ஐ. மகாதேவன் அவர்களும் சிந்துவெளி மொழிக்கும் தமிழ்மொழிக்குமிடையே நெருங்கிய தொடர்பைக் காண்கின்றார்.

♣ தம் கருத்துக்குச் சார்பாகத் திரு. ஐ. மகாதேவன் கீழ்க்காணும் சான்றுகளை எடுத்துக்காட்டுகின்றார்:

♣ 1. மொகஞ்சதாரோ முத்திரைகளின் மேல் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்கும் பொ. ஆ. மு. இரண்டு மூன்றாம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட தமிழ்-பிராமி எழுத்துக்களுக்குமிடையே பல இயைபுகள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துகள் வெளியிடும் செய்திகள் அமைத்துமே கடவுள் மாட்டுக் கொடுத்துக்கொள்ளும் விண்ணப்பங்களாக அமைந்துள்ளன.

♣ 2. தென்னிந்தியாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெருங்கற்புதைவுகளில் கிடைத்துள்ள பானையோடுகளின் மேல்வரையப்பட்டுள்ள கீற்றோவியங்களும் சந்துவெளி ஓடுகளின் மேல் வரையப்பட்டுள்ள கீற்றோவியங்களும் ஒரேவிதமாகக் காணப்படுகின்றன.

♣ 3. சிந்துவெளி முத்திரைகளின்மேல் மக்களின் இடுகுறிப்பெயர்களும். சிறப்புப் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. இப்பெயர்களைத் தமிழ்-பிராமி கல்வெட்டுகளிலும், சங்கச் செய்யுள்களிலும், பதிகங்களிலும் காணலாம்.

♣ 4. சிந்துவெளி அரசியலும், பழந்தமிழர் அரசியலும் ஆகிய இரண்டும் மிகத் திறம்பட நடைபெற்றுவந்தன. இஃதும் சிறப்பானதோர் ஒற்றுமையாகும்.

♣ 5. சிந்துவெளி முத்திரைகளின்மேல் காணப்படும் சில குறிகள் ஒருவருடைய பெயருக்கு முன்பு இணைந்துவரும் அவருடைய ஊரைத் தெரிவிப்பதாக இருக்கலாம். சங்க கால இலக்கியத்திலும், பிற்பட்ட இலக்கியங்களிலும் இணைந்துவருவது உண்மைதான். சிந்துவெளி எழுத்துகளில் நகரம் என்பதைக் குறிப்பிடும் குறியீடுகளானவை நகரம் என்ற பெயரைக் காட்டும் எழுத்துச் சித்திரங்களைப் போலவே தோற்றுகின்றன. தம் பெயர்களுக்கு முன்பு தாம் பிறந்த ஊரின் பெயரை இணைத்துக்கொள்ளும் மரபு சிந்துவெளி மக்களுக்கும் சங்ககாலத் தமிழ் மக்களுக்கும் பொதுவான தொன்றாகத்தான் காணப்படுகின்றது.

♣ 6. பண்டைய சங்க இலக்கியங்களில் கற்பனை செய்யப்பட்டுள்ள புராணக் கதைகளுக்கும், சிந்துவெளி முத்திரைகளின் மேல் பொறிக்கப்பட்டுள்ள சித்திரக் காட்சிகள் சிலவற்றுக்குமிடையே ஓர் ஒற்றுமையைக் காணலாம்.

♣ **எஸ். ஆர். ராவ் கருத்து :**

♣ இந்திய அரசாங்கத்தின் கீழ்ப் புதைபொருள் ஆராய்ச்சியில் பணியாற்றி வரும் திரு. எஸ். ஆர். ராவ் என்பவர் சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டுள்ளவர்.

♣ இவருடைய முயற்சியின் பயனாகக் குஜராத் மாநிலத்தில் புதையுண்டு கிடந்த லோத்தல் என்ற பழந்துறைமுகப்பட்டினம் ஒன்று வெளியாயிற்று.

♣ அந்நகரத்து நாகரிகமும் மொகஞ்சதாரோ நாகரிகமும் நெருங்கிய தொடர்பு உடையன என்று அவர் கருகின்றார்.

♣ சிந்துவெளி நாகரிகம் குஜராத் கடற்கரை வரையில் பரவியிருந்ததென்று அரியதொரு உண்மையை வெளியாக்கிய பெருமை இவரைச் சாரும்.

♣ ஒலிக்குறிப்பு அடிப்படையில் சிந்துவெளி எழுத்துகள் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்துடன் தொடர்பு கொண்டுள்ளனவேயன்றித் திராவிட மொழிக்கும் அவற்றுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்றும் அவர் கருதுகின்றார்.

♣ இதுவரை சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்து அறிஞர்கள் அனைவரும் அந்நாகரிகத்துக்கும் பழந்தமிழர் நாகரிகத்துக்கும் இடையே ஓரளவு இணக்கத்தையே உருவாக்கி வந்துள்ளனர்.

♣ இதற்கு முற்றிலும் மாறுபாடாகக் காணப்படுகின்றது திரு. ராவ் அவர்களின் கொள்கை

♣ சிந்துவெளி நாகரிகத்தை ஆரிய நாகரிகத்துடன் வேறு சிலரும் ஒப்பிட்டுள்ளனர். சிந்துவெளி எழுத்துகள் மிகப் பழங்கால தேவமொழி எழுத்துகளுடன் தொடர்புடையன என்றும், களிமண் முத்திரைகளின்மேல் காணப்படும். விலங்குகளின் வடிவங்கள் ஆரியரின் வேள்விகளையும் அவற்றில் பலியிடப்பட்ட விலங்குகளையும் குறிப்பன என்றும் சிலர் கருதுகின்றனர்.

♣ ஆரியர்கள் வேள்விகளில் பசுக்களையும், ஆடுகளையும் பலியிடுவது வழக்கம். ஆனால், மொகஞ்சதாரோ முத்திரைகளின் மேல் யானையின் உருவங்களும், காண்டாமிருகங்களின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. எக்காலத்திலும் இவ்விலங்குகள் ஆரியரின் வேள்விகளில் பலியானதில்லை. எனவே. மொகஞ்சதாரோ மொழியுடன் ஆரிய மொழி எவ்விதத்திலும் தொடர்புடையதன்று என்று கொள்ளலாம்.

♣ சிந்துவெளி நாகரிகம் மறைவுக்கும் இந்திய நாட்டுக்குள் ஆரியர் நுழைந்ததற்கும் இடையில் பல நூற்றாண்டுகள் கழிந்து போயினவாதலின் சிந்துவெளி நாகரிகத்தை ஆரியரின் நாகரிகமாகக் கொள்ளலாகாது.

♣ மேலும், ஆரிய நாகரிகம் நாட்டுப்புறத்தோடு ஒன்றி வளர்ந்து வந்துள்ளது. ஆனால், சிந்துவெளி மக்கள் பெரிய பெரிய நகரங்களை அமைத்துக் கொண்டுவாழ்நது வந்தவர்கள்; அவர்களுடைய நாகரிகம் நகர்ப்புறத்து நாகரிகமாகும். மொகஞ்சதாரோ முழுவதும் செங்கல்லால் கட்டப்பட்டதொரு நகரமாகக் காட்சியளிக்கின்றது. அதன் அழகிய தெருக்கள்யாவும் திட்டமிட்டு அமைக்கப்பட்டன.

♣ இ∴தன்றி, சிந்துவெளிச் சிதைவுகளில் இலிங்க உருவங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி மக்கள் இலிங்க வழிபாடு உடையவர்கள் என இதனால் விளங்குகின்றது.

♣ ஆனால், ரிக் வேதகால ஆரியர்கள் இலிங்க வழிபாட்டை எள்ளிப் புறக்கணித்தார்கள், இலிங்கத்தை வழிபட்டவர்களும், அமைப் பழித்துப் பாடியவர்களும் ஒரே இனத்தவராவர் என்று கூற முடியாது.

♣ மேலும், சிந்துவெளி மனிதனின் தலையின் வடிவ அமைப்புக்கும் ஆரியனின் தலையின் வடிவ அமைப்புக்கும் எவ்விதமான இயைபும் காணப்படாதது குறிப்பித்தக்கதாகும்.

♣ ஆரிய வடிவத்துக்கும் முற்றிலும் முரணாகச் சிந்துவெளி மனிதனின் நெற்றியின்மேல் புருவம் ஏறியிருக்கின்றது. அவனுடைய உதடுகள் தடுத்துப் பிதுங்கியுள்ளன.

♣ மொகஞ்சதாரோ களிமண் முத்திகைனின்மேல் பசுபதி என்ற உருவில் சிவன் வடிவமும், அம்மன் வடிவமும் மிகச் சிறப்பாக இடம் பெறுகின்றன. ஆனால், ரிக் வேதக் கடவுளருள் ஒருவரான உருத்திரன் முழு முதற்கடவுளராக ஆரியரால் ஏற்கப்படவில்லை. உருத்திரன் ரௌத்திராகாரத்தில் இருப்பதாக ரிக் வேதம்

பேசுகின்றது. ஆனால், சிந்துவெளிப் பசுபதியோ அமைதியாக யோகமுத்திரையுடன் அமர்ந்து காட்சியளிக்கின்றார்.

♣ சிந்துவெளி மக்கள் பின்பற்றி வந்த சமயமானது கொள்கள், விண்மீன்கள் ஆகியன மண்டலங்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. அவர்கள் வானவியலையும் சோதிட நூலையும் பயின்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

♣ இக்கூறுபாடுகள் அனைத்தும் வேதகால ஆரியருக்குப் புறம்பானவையாம். ஆதி ஆரிய நாகரிகத்தில் வானவியலும் சொதிடமும் இடம் பெற்றில. பிற்கால ஆரியர்கள் பிற நாகரிகங்களிலிருந்து பல கருத்துகளையும், சொற்களையும் ஏற்றுக் கொண்டனர்.

♣ பறவைகளையும். விலங்குகளையும் தொடர்புறுத்தும் வழக்கம் சமயத்தில் பிற்காலத்திற்றான் நுழைவுற்றது. விநாயகக் கடவுளின் பெருச்சாளியும், சிவபெருமானின் எருதும், துர்க்கையின் சிங்கமும், முருகக் கடவுளின் மயிலும், திருமாலின் கடருடனும் ஆரியர்கள் தமிழரிடமிருந்து ஏற்றுக்கொண்டவையாம்.

♣ ஆரசமரத்தைக் குறிக்கும் அகவத்தம் என்னும் சொல் சிந்துவெளி மக்களிடமிருந்து ஆரியத்தில் புகுந்ததாகும். பூஜை என்னும் சொல் ஆரியச் சொல் என்றும், பூ-செய் என்னும் தமிழ்ச் சொற்றொடர் ஆரியத்தில் பூஜை என மருவி பூஜா எனவாயிற்றென்றும் சுநீத்குமார் சாட்டர்ஜி கூறுவார்

♣ வேறு பலர் கூட்டங்கூட்டமாகத் தெற்கு நொக்கி வந்து தக்காணத்திலும், தமிழகத்திலும் தங்கிவிட்டிருப்பார்கள்.

♣ வேதங்களில் **பாணிகள்** என்றொரு குலத்தினர் குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் வணிகர்கள் என்றும், வட்டிமேல் வட்டியிட்டு வாங்குபவர்கள் என்றும் வேதங்கள் கூறுகின்றது.

♣ இப்பாணிகட்கு வேள்விகளில் ஈடுபாடு கிடையாது; ஆரியக் கடவுளரையும் இவர்கள் வணங்குவதில்லை. ஆரியருக்கும் பாணிகளுக்குமிடையே அடிக்கடி பூசல்கள் நேர்வதுண்டு

♣ பாணிகளின் குடியிருப்புகள் மேல் ஆரியர்கள் படையெடுத்துச் சென்றாதாகவும், அதற்காகப் பாணிகள் அவர்கள்மேல் பழிதீர்த்துக் கொண்டனர் என்றும் **இருக்கு வேத சுலோகம்** ஒன்று தெரிவிக்கின்றது.

♣ கங்கை வெளியில் வந்து குடியேறிய சிந்துவெளி மக்களே இப்பாணிகள் என ஊகித்தற்கிடமுண்டு

♣ அவர்களுடன் மூண்ட பூசல்களையும், போர்களையும் பாராட்டாமல், அவர்களுடைய சமயக் கோட்பாடுகளை மட்டும் ஆரியர்கள் ஏற்றுக் கொண்டனர் போலும்.

♣ சிந்துவெளிக் கடவுளாகிய பசுபதியை ஆரியர்கள் தம் உருத்திரன் நிலையைவிட மேல்நிலைக்கு ஏற்றினார்கள். யோக முத்திரைகளும், சக்தி வழிபாடும், அரச மரமும் ஆரிய சமயத்திதல் இடம் பெற்றுவிட்டன.

♣ தம் சமயத்திலும் மொழியிலும் தாம் மீனுக்குக் கொடுத்திருந்த சிறப்பைச் சிந்துவெளி மக்கள் தக்காணத்திலும் தமிழகத்திலும் குடியேறிய பிறகும் மறந்துவிடவில்லை

♣ தமிழ் மொழியிலும் மீனுக்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. தென் பாண்டி நாட்டு மன்னரின் தொடி மீன்க்கொடி. விண்ணில் மின்னுவது மீன். தமிழ்ப் பெண்களின் கண்களுக்கு ஒப்பாவது மீன். மதுரையின் கடவுள் பெயர் மீனாட்சி என்பதாகும்.

♣ **முடிவு:**

♣ மத்தியத்தரைக் கடற்பகுதி மக்களும், சிந்துவெளி மக்களைப் போலவே பல தொகுதியாகப் பல காலங்களில் தென்னிந்தியாவுக்கு வந்து குடியேறியவர்கள்தாம்.

♣ அவர்கள் வடமேற்கு இந்தியா, சிந்துவெளி, கங்கைவெளி ஆகியவற்றின் வழியாகத் தான் தமிழகத்துக்கு வந்தார்கள் என்று கொள்முடியாது. சிலர் அவ்விதம் வந்திருக்கலாம்.

♣ அவர்களுள் ஒருசாரார் கடல் கடந்து வந்து தமிழகத்தின் மேலைக்கடற்கரையில் குடியேறினர் எனக் கருதலாம். பொதுவாக சிந்துவெளி நாகரிகத்துக்கும் தமிழருக்கும் தொடர்ப இருந்ததெனவே கருதலாம்.



AKM IAS & NEET ACADEMY

♣ **லெமூரியா என்ற குமரிக் கண்டக்கோட்பாடு:**

♣ லெமூரியா கண்டம் (Lemuria Continent) என்ற சொற்றொடர் பலரது கற்பனையும், கருத்தையும், கவனத்தையும் ஒருங்கே கவர்ந்துள்ளது.

♣ இன்னும் இந்த மறைந்த நிலத்தைப் (Last Land) பற்றி அறிவியலாளர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை

♣ எனினும், தமிழ்நாட்டுக் குமரிமுனைக்குத் தெற்கே ஒரு பெரிய நிலப்பரப்பு கடல்கோளால் அழிந்து போயிற்று என்றும், அழிந்து போன இப்பகுதி தென்னிந்தியா, இலங்கை, மலேயா, ஆப்பரிக்காவின் கீழ்ப்பகுதி ஆகிய நிலப்பகுதிகளை லெமூரியா அல்லது **குமரிக் கண்டம்** என்ற எண்ணம் தமிழர்களிடையே ஆழமாகவும், அழுத்தமாகவும் பதிந்துவிட்டது, இப்பதிவுக்கு இலக்கிய ஆதாரங்களும் மரபு வழிச் சான்றுகளும் கொடுக்கப்படுகின்றன.

♣ **ஸ்லேட்டரின் கண்டுபிடிப்பு:**

♣ 1864 ஆம் ஆண்டு பிலிப் ஸ்லேட்டர் (Philip Sclater ) என்ற உயிரியல் புவியியலாளர் (Bio-Geographer ) **மடகாஸ்கர் பாலூட்டிகள்** என்ற பாலூட்டி விலங்குகளைப் பற்றி ஒரு அறிவியல் ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டார்.

♣ அவர் அக்கட்டுரையில் லெமூர்கள் (Lemurs) என்ற ஒருவகைப் பாலூட்டிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அவரது ஆய்வின் முடிவில் ஆப்பிரிக்காவில் உள்ள மடகாஸ்கருக்கும் இந்தியாவுக்குமிடையே ஒரு காலத்தில் ஒரு பெரிய கண்டம் இருந்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தைக் (Hypothesis) கோடிட்டுக் காட்டினார்.

♣ **லெமூரியா கண்டம்**

♣ ஸ்லேட்டரின் ஊகக் கோட்பாடு வெளியாவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே இந்திய-மடகாஸ்கர் பாலூட்டிகள் பற்றி ஆய்வு செய்த ஜியோபரி செயிண்ட ஹில்லேர் (Etienne Geoffory Saint Hillaire ) என்பவரும் இதே முடிவுக்குத் தான் வந்திருந்தார்.

♣ எனினும், கடலில் மூழ்கிய அக்கண்டத்துக்கு லெமூரியா என்று பெயர் சூட்டிய பெருமை ஸ்லேட்டருக்கு உண்டு.

♣ அவருக்குப்பின் எர்னஸ்ட் ஹெக்கல் (Ernest Haeckel) போன்ற மனிதவியல் ஆய்வாளர்களும் லெமூரியா என்ற சொல்லைப் பயன்படுத்தினர்.

♣ அதன்பின் ஜே. எச். மூர் என்ற ஆய்வாளர் **விலங்குநிலை உயிர் வாழ்ந்தோர்** என்ற வரலாற்று முக்கியத்துவமிக்க ஆய்வு நூலில் லெமூரியா கண்டத்தில் மனிதன் தோன்றியிருக்கக் கூடும் என்ற ஊக்கத்தை உறுதிப்படுத்தினார்.

♣ **கடலாய்வு:**

♣ ஜெர்மனியின் ஸ்பெஷல் என்ற கப்பலும், ரஷ்யாவின் வித்யஸ் என்ற கப்பலும் இந்த ஆய்வை மேற்கொண்டன (1889). அதன் பின் அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் லெமூரியா கண்டத்தைக் கடலாய்வு செய்தன.

♣ இந்த ஆய்வின்பொது கடலுக்குள் மலை இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

♣ **இலக்கியச் சான்றுகள்:**

♣ வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம் பற்றி தொல்காப்பிய சிறப்புப்பாயிரம் கூறுகின்றது.

♣ லெகூரியா அல்லது குமரிக்கண்டம் பறறிய குறிப்புகள் புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய சங்ககால இலக்கியங்களில் காணப்படுகின்றன.



AKM IAS & NEET ACADEMY

♣ "ப.ஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்து குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்று சிலப்பதிகார வரிகள் கூறுகின்றன. குமரியை விழுங்கிய கடல் கொடுங்கடல் என்று நிந்திக்கப்பட்டது.

♣ அதுமட்டுமல்ல, குமரிக்கண்டத்தில் ப.ஃறுளி ஆறு ஓடியதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அழிந்துபோன குமரிக்கண்டத்தில் குமரிக்கோடு என்ற இடமும் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

♣ மக்கள் இனம் தோன்றி இடம் இன்று கடலுக்குள் அழிந்து கிடப்பதாக 1900 இல் வெளியான மனித அறிவியல் கூறுகிறது.

♣ **பண்டைய தமிழகத்தின் பண்பாடுகள் பற்றிய காலவரிசை**

| பண்பாடு | காலம் | பண்பாட்டக் கூறு |
|---|---|---|
| பழங்கற்காலம் | 20, 00, 000 ஆண்டுகள் முன்பு முதல் பொ. ஆ. மு. 8,000வரை | கைக்கோடரி, வெட்டக்கத்தி, வேட்டையாடுதல் உணவுசேகரித்தல் |
| இடைக்கற்காலம் | பொ. ஆ. மு. 8, 000 முதல் பொ. ஆ. மு. 13,000 வரை | நுண்கற்கருவிகள் உலோகம் பற்றி இவர்களுக்குத் தெரியாது. விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடுதல் |
| பதிய கற்காலம் | பொ. ஆ. மு. 2,000 முதல் பொ. ஆ. மு. 1,000 வரை | மெருகேற்றப்பட்ட கற்கோடரிகள், நுண்கற்கருவிகள், விலங்குகளைப் பழக்குதல், பயிரிடுதல், குழுக்களின் பெருக்கம் சமூகத்தினர் என இருவிதமான குழுக்கறும் ஒரே சமயத்தில் வாழ்ந்தன. |
| இரும்புக் காலம் | பொ. ஆ. மு. 1,300 முதல் பொ. ஆ. மு. 500 வரை | பெருங்கற்கால ஈமச்சடங்கு முறை உணவு சேகரிப்போரும் மேய்ச்சல் சமூகத்தினரும் ஒரே சமயத்தில் வாழ்தல் குழுத் தலைவர் உருவாதல் இரும்பின் பயன்பாடு அறிதல் கருப்பு கைவினைத் திறன்களில் சிறப்பு நிபுணர்கள் உருவாகுதல்- குயவர்கள், கொல்லர்கள். |
| பண்டைய வரலாறு மற்றும் சங்ககாலம் | பொ. ஆ. மு. 300 முதல் பொ. ஆ. மு. 300 வரை | இரும்புக் கால மரபுகளோடு சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வளர்ச்சி, வீரர்களை வழிபடுதல், இலக்கிய மரபு, கடல்வழி வணிகம் |

♣ அதிரம்பாக்கத்திலும், குடியம் குகைகளிலும் பழைய மற்றும் இடைக்கற்காலத் தொல்பொருள்கள் கிடைத்துள்ளன.

♣ **கீழ்ப் பழங்கற்காலப் பண்பாடு:**

♣ **ஹோமினின்** என அழைக்கப்படும் மனித மூதாதை இனத்தால் உருவாக்கப்பட்ட கற்காலக் கருவிகளிலேயே காலத்தால் முந்தைய பகுதியைச் சேர்ந்த கற்கருவிகள் தமிழ்நாட்டில்தான் உருவாக்கப்பட்டன.

♣ இப்பழங்கற்காலக் கருவிகள் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பாக அதிரம்பாக்கம், குடியம் உள்ளிட்ட இடங்களில் கிடைத்துள்ளன.

AKM IAS & NEET ACADEMY

- ♣ அங்கு சுமார் 1.5 மில்லியன் அண்டுகளுக்கு மன்பே மனிதர்கள் வாழ்ந்திருப்பதைக் காட்டுகின்றன.
- ♣ **சொசஸ்தலையாறு** உலகில் மனித மூதாதையர்கள் வசித்த மிக முக்கியமான இடங்களில் ஒன்றாகும்.
- ♣ இங்கு வாழ்ந்த மனித மூதாதையர்கள் **ஹோமோ எரக்டஸ்** என்ற வகையைச் சேர்ந்தவர்கள்
- ♣ காஸ்மிக்-கதிர் பாய்ச்சி கணித்தல்- மாதிரிகளின் காலத்தைக் கணிக்க காஸ்மோஜீனிக் கதிர்களை வெளிப்படுத்தி அறியும் முறை.
- ♣ பொ.ஆ.1863இல் சர். இராபர்ட் புரூஸ்.்.ட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் பழங்கற்காலக் கருவிகளை முதன்முறையாகக் கண்டுபிடித்தார்.
- ♣ இந்தியாவில் இப்படிப்பட்ட கருவிகள் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது இங்குதான். எனவே, இங்கு கண்டெடுக்கப்பட்ட கைக்கோடரிகள் **சென்னை கற்கருவித் தொழிலகம்** என்று அழைக்கப்படுகிறது.
- ♣ அவர் கண்டெடுத்த கருவிகள் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளன.
- ♣ கீழ்ப் பழங்கற்காலத்தில் கைக்கோடரிகளும் பிளக்கும் கருவிகளும்தான் முக்கியமான கருவி வகைகள்.
- ♣ இந்தக் கருவிகளை மரத்தாலும் எலும்பாலுமான கைப்பிடியில் செருகி வெட்டுவதற்கும், குத்துவதற்கும், தோண்டவதற்கும் பயன்படுத்தினார்கள்
- ♣ அவை பல்லாவரம், குடியம்குகை, அதிரம்பாக்கம், வடமதுரை, எருமை வெட்டிப்பாளையம், பாரிகுளம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.
- ♣ கீழ்ப் பழங்கற்காலக் கருவிகள் வட ஆற்காடு, தர்மபுரி பகுதிகளிலும் செய்பொருட்களுக்கு பஸால்ட் எனும் எரிமலைப் பாறைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.
- ♣ பாண்டியரசு இடைச்சங்கம் கபாடபுரத்தில் நடைபெற்றதும். அக்கபாடபுரம் குமரிக்கண்டத்தில் இருந்ததும் மரபுக் கருத்தாகும்.
- ♣ **தொல்பழங்காலத் தமிழகம்:**
- ♣ சங்க காலத்தின் பண்பாட்டு வளர்ச்சியைப் புரிந்துகொள்ளும் முன்னர் நாம் தமிழகத்தின் தொல்பழங்காலப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.
- ♣ அதிரம்பாக்கத்தின் கீழ்ப்பழங்கற்காலப் பண்பாடு சுமார் 1.5 மில்லியன் ஆண்டகளுக்கு முந்தையது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டம் இந்தியாவின் மற்ற பகுதிகளில் 3,00,000 ஆண்டுகளுக்கு முன்பு வரை நீடித்தது.
- ♣ **இடைப் பழங்கற்காலப் பண்பாடு- தமிழ்நாடு**
- ♣ இடைப் பழங்கற்காலப் பண்பாடு 3,85,000- 1,72,000 காலகட்டத்தில் உருவானது.
- ♣ இக்காலக்கட்டத்தில் கருவிகளின் வகைகளில் மாறுதல்கள் ஏற்பட்டன. அளவில் சிறிய செய்பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. கருகற்கள், கற்செதில்கள், சுரண்டும் கருவி, கத்தி, துளைப்பான், லெவலாய்சியன் செதில்கள், கைக்கோடாரி, பிளக்கும் கருவி ஆகியன இக்காலக்கட்டத்தின் கருவிகள் ஆகும்.
- ♣ இடைப் பழங்கற்கால பண்பாட்டின் சான்றுகள் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் ாகணப்படுகின்றன.
- ♣ தமிழ்நாட்டின் தென்பகுதியில் தே. புதுப்பட்டி, சீவரக்கோட்டை ஆகிய இடங்களில் மத்திய பழங்கற்காலக் கருவிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.
- ♣ இப்பண்பாட்டுக் காலகட்டம் பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையில் உருவானதால் இது இடைக்கற்காலம் என்று அழைக்கப்படுகிறது.
- ♣ தூத்துக்குடி அருகே உள்ள 'தேரி' பகுதிகளில் இடைக்கற்கால கற்கருவிகள் பல கிடைத்துள்ளன.
- ♣ இப்பகுதியில் உள்ள சிவப்பு மணல் குன்றுகள் உள்ள பகுதி தேரி என்று அழைக்கப்டும்
- ♣ இடைக்கற்கால மக்கள் மீன்பிடித்தலில் ஈடுபட்டிருக்கக் கூடும். தென் தமிழ்நாட்டில் கிடைத்ததைப் போன்ற இடைக்கற்காலக் கருவிகள் இலங்கையின் கடலோரப் பகுதிகளிலும் கிடைத்துள்ளன.



AKM IAS & NEET ACADEMY

♣ கடல் மட்டம் தாழிந்திருந்த பொ.ஆ.மு 5000 வரை இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் நிலத் தொடர்பு இருந்தது என்று நிலவியலாளர்கள் கூறுகின்றனர்.

♣ இக்கால மக்கள் செர்ட் (Chert), குவார்ட்ஸாலான (Quartz,பளிங்கு) சிறிய செதில்களையும் கருவிகளையும் பயன்படுத்தினர்

♣ மக்கள் உயிர் வாழ விலங்குகளை வேட்டையாடினார்கள். பழங்கள், கொட்டைகள் மற்றும் கிழங்குகளைச் சேகரித்தார்கள்.

♣ **சுரண்டும் கருவிகள்:** சுரண்டும் கருவிகள் ஒரு மேற்பரப்பைச் சுரண்டுவதற்குப் பயன்படுகின்றன.

♣ இவை இன்று சமையலறையில் காய்கறிகளின் தோலை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளைப் போன்றவை.

♣ **முக்கோணக் கருவிகள்:** முக்கோண வடிவில் அமைந்திருக்கும் கருவிகள்.

♣ **பிறை வடிவக் கருவிகள்:** பிறைவடிவக் கருவிகள் பிறை வடிவில் அமைந்திருக்கும் கருவிகள்

♣ **புதிய கற்காலப் பண்பாடு- தமிழ்நாடு:**

♣ வுவலங்குகளைப் பழக்கப்படுத்தி, வேளாண்மை செய் பண்பாடு புதிய கற்காலப் பண்பாடு என்று அழைக்கப்படுகிறது.

♣ புதிய கற்கால பண்பாட்டின் மக்கள் செல்டி (Celt) என்று அழைக்கப்பட்ட மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் பயன்படுத்தினர்.

♣ கால்நடை மேய்த்தல் அவர்களது முக்கியமான தொழிலாக இருந்தது.

♣ இவர்கள் சிறு கிராமங்களில் வசித்தார்கள். வீடுகள் கூரை வேயப்பட்டிருந்தன. தட்டிகளின் மீது களிமண் பூசி உருவாக்கப்படும் முறையில் சுவர்கள் கட்டப்பட்டன.

♣ புதியகற்கால ஊர்களுக்கான சான்று வேலூர் மாவட்டத்தின் பையம்பள்ளியிலும் தர்மபுரி பகுதியில் உள்ள சில இடங்களிலும் கிடைத்துள்ளன.

♣ புதிய கற்கால மனிதர்கள்தான் முதலில் மட்பாண்டகளைச் செய்திருக்க வேண்டும். மட்பாண்டங்களை அவர்கள் கையாலோ அல்லது மெதுவாகச் சுற்றும் சக்கரத்தைக் கொண்டோ வனைந்தார்கள்

♣ மண்பாண்டங்களைச் சுடுவதற்கு முன்னால் அவற்றைக் கூழாங்கற்கள் கொண்டு மெருகேற்றினார்கள். இதனைத் **தேய்த்து மெருகிடுதல்** (Burnishing) என்பர்

♣ தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் பையம்பள்ளி என்ற ஊர் உள்ளது.

♣ இங்கு இந்திய அரசின் தொல்லியல் துறை அகழாய்வு செய்துள்ளது.

♣ தமிழகத்தில் முதன்முதலில் மட்பாண்டங்களும் வேளாண்மை செய்ததற்கான சான்றும் இங்கு கிடைத்துள்ளன.

♣ புதிய கற்கால மக்கள் மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் பயன்படுத்தினர்.

♣ இவை மரத்தாலான கைப்பிடிகளில் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

♣ இன்றுகூட சில தமிழ்நாடு கிராமக் கோயில்களில் இத்தகைய மெருகேற்றப்பட்ட கற்கள் வழிபடப்படுகின்றன.

♣ **இரும்புக் காலம் - பெருங்கற்காலம்:**

♣ புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக் காலம் **இரும்புக் காலம்** என்று அழைக்கப்படுகிறது.

♣ அதன் பெயர் குறிப்பிடுவதைப் போல, இக்காலக்கட்ட மக்கள் இரும்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினர்.

♣ அவர்கள் இரும்பு, வெண்கலப் பொருட்களையும், தங்க செம்மணிக்கல் (கார்னீலியன்) மற்றும் பளிங்காலான (குவார்ட்ஸ்) மணிகளையும் பயன்படுத்தினார்கள்.



AKM IAS & NEET ACADEMY

- ♣ திருநெல்வேலி மாவட்டத்தின் ஆதிச்சநல்லூர், மதுராந்தகத்திற்க அருகிலுள்ள சாணூர், புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சித்தன்னவாசல் எனப் பல இடங்களில் இரும்புக் காலத்திற்கான சான்றுக்ள கிடைத்துள்ளன.
- ♣ தமிழகம் முழுவதும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன.
- ♣ **பெருங்கற்கால ஈமச்சின்ன வகைகள்:**
- ♣ மக்கள் இறந்தவர்களைப் புதைப்பதற்கு பெரிய கற்களைப் பயன்படுத்தியதால், இரும்புக் காலம், பெருங்கற்காலம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ♣ இறந்தவர்களின் உடலோடு ஈமப்பொருட்களாக, இரும்புப் பொருட்கள், கார்னீலியன் மணிகள், வெண்கலப் பொருட்கள் ஆகியவையும் புதைக்கப்பட்டன.
- ♣ ஈமப்பொருட்கள் என்பவை இறந்தவரின் எலும்புகளோடு ஈமச்சின்னத்தில் புதைக்கப்படுமஅ் பொருட்கள், மரணத்திதற்குப் பிறகான இறந்தவரின் வாழ்விற்கு அவை உதவக்கூடும் என்று மக்கள் நம்பியிருக்கலாம்
- ♣ பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் **டோல்மென்** எனப்படும். கற்திட்டை, சிஸ்ட் எனப்படும் கல்லறைகள், மென்ஹரிர் எனப்படும் நினைவுச்சின்ன குத்துக்கல், தாழி, பாறையைக் குடைந்து உருவாக்கிய குகைகள், **சார்க்கோபேகஸ்** எனப்படும்.
- ♣ கொடக்கல் அல்லது குடைக்கல் (குடை வகை), தொப்பிக்கல், பத்திக்கல் ஆகிய வகைகள் கேரளாவில் காணப்படுகின்றன.
- ♣ மேசை போன்ற கல்லால் உருவாக்கப்பட்ட **டோல்மென்கள்** ஈமச் சடங்கின் நினைவுச்சின்னமாக நிறுவப்பட்டன.
- ♣ **சிஸ்ட்** என்பது மண்ணில் புதைக்கப்படும் கல்லறை போன்றது இவை நான்கு புறமும் நான்கு கற்பாளங்களை நிறுத்தி, மேலே ஒரு கற்பாளத்தை வைத்து மூடி உருவாக்கப்படும்.
- ♣ **அர்ன்** என்பவை மட்பாண்ட சாடிகள், இவை இறந்தவர்களைப் புதைக்கப் பயன்படுத்தப்பட்டவை.
- ♣ **சார்க்கோபேகஸ்** என்பவை சுட்ட களிமண்ணாலான சவப்பெட்டி போன்றவை.
- ♣ இவற்றிற்குச் சில சமயங்களில் பல கால்களை வைத்துத் தயாரிப்பார்கள், மென்ஹிர் என்பவை புதைத்ததன் நினைவுச் சின்னம் போல நிறுவப்படும் தூண் பொன்ற நடுகற்கள்.
- ♣ கல்லறை (Cist), கற்திட்டைகளில் "போர்ட் ஹோல்" (Porthole) எனப்படும்.
- ♣ இவை அவற்றின் நுழைவாயில் போலப் பயன்பட்டன. இவை ஆனமா வந்து செல்வதற்காக வைக்கப்பட்டவை என்ற கருத்தும் உள்ளது.
- ♣ நடுகற்கள் (மென்ஹிர்கள்) இரும்புக். காலத்தில் வீரர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கலாம்.
- ♣ மூடி உள்ள தாழி, ஆதிச்சநல்லூர்
- ♣ கல்வட்டமும் நெடுங்கல்லும், கொடுமணல்
- ♣ ஈமத் தொட்டி
- ♣ கற்பலகைகள் கொண்டு உரவாக்கப்பட்ட கல்லறை (Cist) கொடுமணல்
- ♣ கொடுமணல்
- ♣ கொடக்கல் குடைக்கல், சேரளா
- ♣ தொப்பிக்கல், கேரளா
- ♣ பத்திக்கல், கேரளா
- ♣ **வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும்**
- ♣ இரும்புக் கால மக்கள் வேணாண்மையும் மேற்கொண்டார்கள். ஆடு, மாடுகளையும் வளர்த்தார்கள்
- ♣ இந்தக் காலகட்டத்தில்தான் பாசன நிர்வாகம் மேம்பட்டது.

♣ பெருங்கற்கால இடங்களான திருநெல்வேலி மாவட்டத்தின் ஆதிச்சநல்லூரிலும், பழனிக்கு அருகே உள்ள பொருந்தலிலும் ஈமச்சின்னங்களுக்குள் நெல்லை வைத்து புதைத்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

♣ **இரும்புக்காலச் சமூகமும் அரசியலும்**

♣ இக்காலகட்டத்தில் கைவினைக் கலைஞர்கள், மட்பாண்டம் செய்பவர்கள். உலோக வேலை செய்பவர்கள் (கம்மியர்) தொழில்முறையாளர்களாக இருந்தார்கள்.

♣ இவற்றில் சில, ஒரு தலைவருக்குக் கிழான சமூகங்களாகத் தம்மை அமைத்துக்கொண்டன.

♣ கால்நடைகளைக் கவர்வது, போர்களுக்கும் அத்துமீறல்களுக்கும் வழிவகுத்தது. இக்காலத்தில்தான் எல்லைகள் விரிவாக்கம் தொடங்கியது.

♣ குடித்தலைமை முறை (Chiefdoms) என்பது ஒரு படிநிலைச் சமூகம் ஆகும். இதில் தலைமைப் பதவி ரத்த உறவுமுறை அடிப்படையில் தேர்வுசெய்யப்படுகிறது.

♣ பொ.ஆ.மு மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகரின் கல்வெட்டுகள் அவரது ஆட்சிப் பகுதிக்கு வெளியே தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள் இருந்ததைக் குறிப்பிடுகின்றன.

♣ மௌரியர் காலத்தில் சேர, சோழ, பாண்டிய, சத்தியபுத்திரர்கள் அரசியல் ரீதியாக சக்தி வாய்ந்தவர்களாக இரந்தார்கள்.

♣ **மட்பாண்டங்கள்:**

♣ தொல்லியல் ஆய்வு நடந்த இடங்களில் கிடைக்கும் முக்கியமான சான்று மட்பாண்டங்களாகும். இரும்புக்கால, சங்ககால மக்கள் கறுப்பு மற்றும் சிவப்பு சிறங்களை மட்பாண்டங்களுக்குப் பயன்படுத்தினார்கள்.

♣ கறுப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் உள்ளே கறுப்பாகவும், வெளியே சிவக்பாகவும் காணப்படும். வெளிப்புறம் பளபளப்பாக இருக்கும்.

♣ **இரும்புத் தொழில்நுட்பமும் உலோகக் கருவிகளும்:**

♣ பெருங்கற்காலக் கல்லறைகளில் ஈமப் பொருட்களாக ஏராளமான இரும்புப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

♣ வாள், குறுவாள் போன்ற கருவிகள், கோடரிகள், உளிகள், விளக்குகள். முக்காலிகள் ஆகியவை கிடைத்துள்ளன. இப்பொருட்களில் நிலவற்றிற்கு எலும்பு அல்லது மரம் அல்லது கொம்பாலான கைப்பிடி பொருத்தப்பட்டிருக்கிறது.

♣ இரும்புக் கருவிகள் வேளாண்மைக்கும், வேட்டையாடுதலுக்கும், உணவு சேகரிப்பதற்கும் போர்களுக்கும் பயன்படுத்தப்பட்டன.

♣ **சுருக்கம்**

♣ மனிதர்களின் வரலாறு புவியின் வரலாற்றோடு நெருக்கமாகப் பிணைந்துள்ளது. புவி சுமார் 4.54 பில்லியன் ஆண்டகளுக்கு முன் தோன்றியது.

♣ மனித மூதாதையர்களான ஹோமினின்கள் சுமார் 5-7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றினார்கள்.

♣ தமிழ்நாட்டில் முதன்முதலில் மனிதர்கள் சுமார் 2-1.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்நதிருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

♣ **தொல்லியல் ஆய்விடங்கள் மற்றும் ஆய்வாளர்கள்**

♣ **ராபர்ட் புரூஸ் புட், (1834-1912)**

♣ ராபர்ட் புரூஸ் புட் இங்கிலாந்து நாட்டுக்காரர். சுகலகலா வல்லவர், தொல்பொருள் ஆய்வில் துறைபோன நிபுணர்.

♣ அவர் இந்திய நிலச் சுற்றாய்வுத் துறை (Geological Survey of India) யின் சென்னைக் கிளைக்கு அலுவலராக நியமிக்கப்ட்டார் (1858)

♣ **அத்திரம்பாக்கம்:**

♣ புருஸ் பட் சென்னைக்கு 60 கி.மீ. தொலைவில் பல்லாவரத்துக அருகே அத்திரம்பாக்க ஆற்றுப்படுகையில் ஏராளமான கற்கசருவிகளைக் கண்டுபிடித்ததா். ஒரே இடத்தில் இவ்வளவு கற்கருவிகளைக் கண்டு அதிசயித்ததா்.

♣ ஆற்றங்கரியல் வாழ்ந்த தமிழா்களின் முன்னோா் விட்டுச் சென்ற எழுதப்படா ஆவணங்கள், அடையாளங்கள் அவை.

♣ இக்கருவிகளில் குறிப்பிடத்தக்கவை கைக்கோடாரிகள் (Handaxes) ஆகும். இவை சுரைக்காய் வடிவத்தில் இருக்கும்.

♣ இவையன்றி சீவல் வடிவக் கருவிகளும், நன்கு செதுக்கப்பட்ட நுண் ஆயுதங்களும், நாற்கருவி வகையைச் சேர்ந்த பொருள்களும் கிடைத்தன.

♣ புருஸ் புட்டின் அத்திரம்பாக்கக் கண்டுபிடிப்புகள் அதிசயமிக்கத்தக்கவை, தனித்தன்மை கொண்டவை. இக்கண்டுபிடிப்புகள் அக்கால மக்களின் இயற்கைச் சூழல், செயல்பாடுகள், வாழ்ந்த காலம், வசித்த முறை போன்ற மா்ம முடிச்சுக்களை அவிழ்க்க உதவின.

♣ இக்கருவிகளுக்குச் சொந்தக்காரா்கள் வேட்டையாடுபவா்களாகவும், உணவு சேகரிப்பவா்களாகவும். கருவிகளை உருவாக்குபவா்களாகவும், இருந்துள்ளனா்.

♣ அத்திரப்பாக்கத்தில் கண்டெடுக்கப்பட்ட கற்கருவிகள்தான் இந்திய துணைக் கண்டத்தில் முதல் கருவிகள் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்யப்பட்டவையாகும். புருஸ் புட்டின் கண்டுபிடிப்பு மனித இனத்தின்தொன்மை பற்றி அதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த கருத்துக்களையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும் மறு பரிசீலனை செய்ய வைத்தது!

♣ புருஸ் புட் கண்டுபிடித்த அத்திரம்பாக்க அகழ்வாய்வு **மதராஸ் பண்பாடு அல்லது மதராஸ் மரபு** அழைக்கப்படுகிறது.

♣ இந்தியாவின் படைய கற்காலம் (Paleolithic Age ) தமிழ்நாட்டில்தான் துவங்கியது என்பதை புட்டின் அத்திரம்பாக்கக் கண்டுபிடிப்புகள் உறுதி செய்தன.

♣ **உலகறியச் செய்தவா்:**

♣ **புருஸ்புட்** அத்திரம்பாக்கம் ஆராய்ச்சிக்குப் பின் **வில்லியம் கிங்** என்பவருடன் சோ்ந்துதென்னிந்தியாவிலும், மேற்கிந்தியாவிலும் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டு மேலும் பல கற்கருவிகளையும், குடியிருப்புகளையும் கண்டுபிடித்தாா்.

♣ திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி கடற்கரையில் பல நூற்றாண்டு காலமாக பூமிக்கடியில் புதைந்து கிடந்து மூன்றக்கு மனிதக் குடியிருப்புகளை உலகறியச் செய்தாா் (1866)

♣ மிகப் பழமையான நன்கு செதுக்கப்பட்ட கருவிகள் வல்லத்தருகே கண்டுபிடிக்கப்பட்டன. இதேபோன்று உடையாா் பாளையத்திலும் காணப்பட்டன.

♣ **நிலையான நன்கொடை:**

♣ புருஸ் புட் பல்கலை வல்லுநா், அவா் ஒரு தோ்ந்த புவியியலாளா், தொல்பொருள் ஆய்வாளா், மனித இயல் மேதை, மனித இனவியலாளா், புதை பொருள் ஆராய்ச்சியாளா்.

♣ இவரது கண்டுபிடிப்புகள் 19 ஆம் நூற்றாண்டின் புதைபொருள் ஆய்வுக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தன.

♣ வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தமிழ் நாட்டு வரலாற்றில் புட்டின் பெயா் கல்வெட்டு எழுத்தாயிற்று

♣ இன்றைக்கும் இவரது நினைவுக் குறிப்புகளை மண்ணியல் மற்றும் தொல்பொருள் ஆய்வாளா்கள் படித்துப் பயன்பெறுகின்றனா். எனவே, புருஸ் புட் **இந்திய வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றின் தந்தை** என்று அழைக்கப்படுவதில் வியப்பில்லை.

♣ **ஆதிச்சநல்லூர்**

♣ ஆதிச்சநல்லூர் திருநெல்வேலியிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது

♣ 1876 ஆம் அண்டு ஜெர்மனியைச் சேர்ந்த இயற்கைவியலாளரும். இன வரைவியலாளருமான ஆண்டிரு ஜாகர் ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வை மேற்கொண்டார்.

♣ அங்கிருந்து சுடப்பட்ட மட்பாண்டங்கள், பல அளவுகளிலும் வடிவங்களிலுமான பாத்திரங்கள் ஆகியவற்றின் மாதிரிகளையும் கணிசமான எண்ணிக்கையில் இரும்புக் கருவிகள், ஆயுதங்கள், பெருமளவிலான எலும்புகள், மண்டையோடுகள் ஆகியவற்றையும் தன்னோடு எடுத்துச் சென்றார். தற்போது இவையனைத்தும் **பெர்லின் அருங்காட்சியகத்தில்** உள்ளன.

♣ இதனைத் தொடர்ந்து, அன்றைய திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ஏ.ஜே. ஸ்டுவர்ட், புகழ்பெற்ற மொழியியல் அறிஞரான ராபர்ட் கால்டுவெல் ஆகிய இருவரும் ஆதிச்சநல்லூர் சென்றனர்.

♣ அப்பகுதியில் **படிகக்கற்கள்** நிறைந்திருப்பதைக் கண்டனர். உடனடியாக, கற்களை வெட்டியெடுப்பது அங்கு தடை செய்யப்பட்டு, அலெக்ஸாண்டர் ரே என்பாரின் மேற்பார்வையில் அகழ்வாய்வுப் பணிகள் தொடங்கின.

♣ தன்னுடைய கண்டுபிடிப்புகள் தொடர்பாக புகைப்படங்களோடு கூடிய விரிவான அறிக்கையைத் தயார் செய்து, அண்டறிக்கையில் வெளியிட்டார்.

♣ **ஆதிச்சநல்லூரிலுள்ள புதை மேட்டிலிருந்து கிடைத்தவை**

♣ அதிக எண்ணிக்கயைில் கிடைக்கும் பல்வகைப்பட்ட தாழிகளும், மட்பாண்டங்களும் ஆணிகள், ஆயுதங்கள், உள்ளிட்ட இரும்புக் கரவிகள். (கத்தி, வாள், ஈட்டி, அம்பு) சில கல்மணிகள் ஒரு சில தங்க நகைகள்

♣ வீட்டு விலங்குகளான எருமை, வெள்ளாடு, செம்மறியாடு, சேவல், காட்டு விலங்குகளான புலி, மிளா, யானை ஆகியவற்றின் வெண்கலப் பொம்மைகள்.

♣ கால்டுவெல் இவ்வடத்திற்கு வந்திருந்தபோது செம்பிலான வளையல் ஒன்றையும் கண்டெடுத்தார்.

♣ நெல் மற்றும் பிற தானியங்களின் உமியும் கண்டெடுக்கப்பட்டது. இத்தானியங்கள் அக்காலத்தில் புழக்கத்திற்கு வந்துவிட்டதை இது குறிக்கின்றது.

♣ போர்களிலும் விலங்குகளை பலி கொடுக்கும்போது பயன்படுத்தப்பட்ட கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன. இது ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த மக்கள் வேத மதங்களைப் பின்பற்றியவர்கள் அல்ல என கால்டுவெல்லை எண்ண வைத்தது.

♣ அகழ்வாராய்ச்சியின் ஆறாவதுக் கட்டம் **"பழங்காலத் தமிழ் நாகரிகத்தின் தொட்டில்"** என்று அழைக்கப்படும் ஆதிச்சநல்லூரில் மே 25, 2020 அன்று தொடங்கப்பட்டது.
♣ அதே நேரத்தில் , அகழ்வாராய்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஏரலுக்கு அருகில் அமைந்திருக்கும் சிவகளையில் முதலாம் கட்ட அகழ்வாராய்ச்சியும் தொடங்கப்பட்டது.
♣ இந்த அகழ்வாராய்ச்சியின் முடிவில் தமிழகத்தின் மிகப் பழமையான **தாமிரபரணி நாகரிகம்** மற்றும் அதன் கூறுகளும் வெளிப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

♣ **ரேயின் கண்டுபிடிப்பு:**

♣ டாக்டர் ஜாகருக்குப் பின்னர் அலெக்சாண்டர் ரே (Alexander Rae) என்பார், 1889லிருந்து 1905 வரை ஆதிச்சநல்லூரில் அகழ்வராய்ச்சியை மேற்கொண்டார்.

♣ ஆயிரக்கணக்கான புதைபொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுள் வீட்டுப் பயன்பாட்டுக்கான பொருட்கள், துணித் துண்டுகள், நெல்லுமிகள், இரும்பாலான கோடாரிகள், ஈட்டிகள், கத்திகள், குறுங்கால்ளுடன்

கூடிய விளக்கேந்திகள், லோட்டாக்கள், தங்கக் காதணிகள், செம்பச் சிலை போன்ற அரிய பொருட்கள் அனைவரது கவனத்தையும் கவர்ந்தனர்

- ♣ இப்பொருட்களை சென்னை அரசாங்க அருங்காட்சியத்திடம் ஒப்படைத்தார்.
- ♣ அச்சரப்பாக்கத்தை இந்தியாவிலலேயே மிகப்பெரிய பரவலான, தொன்மைமிக்க வரலாற்றுக்கு முற்பட்ட ஆய்வுக்களம் என்று வர்ணித்தார்.
- ♣ **நகர நாகரிகம்**
- ♣ ஆதிச்சநல்லூர் அகழாய்வு வரலாற்று சிறப்புடையது. இந்த ஆராய்ச்சியின் மூலம் அந்த இடத்தின் காலம் கணிக்கப்பட்டது.
- ♣ ஆதிச்சநல்லூர் நன்கு பாதுகாக்கப்பட்ட நகரம்:
- ♣ இந்நகருக்குள் குயவர்கள் குடியிருப்புகள் இருந்தன.
- ♣ அதாவது ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்று ஆதிச்சநல்லூரிலும் நகர நாகரிகம் நிலவியது.
- ♣ **தமிழ்- பிரம்மி எழுத்து**
- ♣ ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட தாழி ஓட்டில் ஒரு ஓவியம் காணப்படுகிறது. இந்த ஒப்பனை உருப்படிவத்தில் (Motif) ஒரு உயரமான பெண் கையில் நெல் பயிர்க்கற்றையுடன் நின்று கொண்டிருக்கிறாள். அவளுக்குப் பக்கத்தில் களத்து மேட்டில் ஒரு கொக்கும், மான் ஒன்று நீண்ட கொம்புகளுடனும் நின்று கொண்டிருக்கின்றன.
- ♣ இக்காட்சி அக்கால மக்களின் ஓவியக்கலைக்கான சாட்சியாகும். இங்கு காணப்படும் செம்பு மற்றும் இரும்புப் பொருட்கள் ஆதிச்சநல்லூர் சுறுசுறுப்பான சுரங்கத் தொழில் மற்றும் பல தொழில்களுக்கான கேந்திராமாகத் திகழ்ந்தது என்பதை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.
- ♣ **3. அரிக்கமேடு**
- ♣ **வீலரின் கண்டுபிடிப்புகள்**
- ♣ பாண்டிச்சேரிக்கு அருகே உள்ள அரிக்கமேட்டில் 1940-களில் மார்ட்டிமர் வீலர் (Mortimer Wheeler) நடத்திய அகழாய்வில் மேலும் பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன.
- ♣ அரிக்கமேடு துவக்கத்தில் மீன்பிடி கிராமமாக இருந்து சோழர் காலத்தில் துறைமுக நகரமாயிற்று
- ♣ இதற்கான சான்றுகள் அங்கு கிடைத்த மையத் துளையுடைய **உருள் மணிகள் (Beads)** உறுதிப்படுத்துகின்றன
- ♣ உருள்மணி உற்பத்தி செய்து வாணிபம் செய்ததும் தெரிய வந்தது. பின்னர் அரிக்கமேடு ரோமப் பேரரசுடன் வாணிபத் தொடர்பு கொண்டு செல்வம் கொழிக்கும் வர்த்தக நகரமாயிற்று.
- ♣ அரிக்கமேட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட அரிய பொருட்கள் தமிழ்நாடு ரோமப்பேரரசுடன் வாணிபத்தொடர்பு கொண்டிருந்ததை உறுதிப்படுத்தின.
- ♣ ரோமப் பேரரசர் **அகஸ்டஸ்** காலத்தில் (பொ.ஆ.மு. 30) இருநாட்டு வாணிபம் உச்சக்கட்டத்தை எட்டியது. இந்த வாணிபம் நீடித்தால் ரோமப்பேரரசு திவாலாகிவிடும் என்று அக்கால அரசியல்வாதிகள் அரசரை எச்சரித்தனராம்!.
- ♣ அரிக்கமேட்டில் கிடைத்த ரோம தங்க நாணயங்கள் தோமானியரின் அச்சம் உண்மையாக இருக்கக்கூடும் என்பதற்கான அடையாளங்களாகும்.
- ♣ அதேபோன்று இங்கு ஹண்டிங்டன் (Huntington) மேற்கொண்ட அகழாய்வுகள் (1944, 1949) தமிழ் நாட்டிலிருந்து துணி, குமிழ் மணிகள், விலையுயர் கற்கள், கண்ணாடி மற்றும் கிளிஞ்சல் வளையல்கள் ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கிருந்து ஒயினும், அம்போரா (Amphora) ஜாடிகளும் இறக்குமதி செய்யப்பட்டதை மெய்ப்பித்தன.

♣ இதேபோன்று புதுக்கோட்டை அகழாய்வில் காலிகுலா (Caligula) மற்றும் நீரோ (Nero) காலத்து தங்க நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

♣ மார்ட்டிமர் வீலர் ஸ்காட்லாந்தில் க்ளாஸ்கோ நகரில் பிறந்தார்.

♣ இங்கிலாந்தின் வரலாற்று நினைவுச் சின்னங்களுக்கான ராயல் கழகத்தில் (Royal Commission on Historical Monuments) பணியாற்றினார்.

♣ பின்னர் வேல்ஸ் தேசிய அருங்காட்சியத்தின் தலைவரானார் **(1920-26)**

♣ இரண்டாவது உலகப் போரின் போது இந்தியாவுக்கு வந்ததர் மார்ட்டிமர் வீலர்.

♣ **அரிக்கமேடு ஆய்வு:**

♣ இந்தியாவுக்கு வந்த மார்ட்டிமர் வீலர் சென்னை வந்து இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் சென்னைக் கிளையின் தலைவர் பொறுப்பேற்றார் (1944)

♣ அந்த காலகட்டத்தில் தான் அவர் பாண்டிச்சேரியில் அரியாங்குப்பம் மற்றும் கொம்பூனைச் சேர்ந்த அரிக்கமேட்டில் அகழாய்வை மேற்கொண்டு உலகம் வியக்கும் பொருட்களைக் கண்டுபிடித்தார். கண்டுபிடித்த பொருட்களையெல்லாம் ஆவணப்படுத்தினார்.

♣ 4. **பையம்பள்ளி**

♣ பையம்பள்ளி, வேலூர் மாவட்டம், திருப்பத்தூா தாலுகாவைச் சேர்ந்த கிராமமாகும்.

♣ **1906** இல் இந்தியக் தொல்லியல் துறை பெருங்கற்காலத்தோடு தொடர்புடைய இவ்விடத்தில் அகழ்வாய்வை நடத்தி கருப்பு மற்றும் சிகப்பு நிற மட்பாண்டங்களை வெளிக் கொணர்ந்தது.

♣ மேலும் இப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான ஈமத் தாழிகளும் கண்டறியப்பட்டன. இப்பண்பாட்டின் காலம் ரேடியோ கார்பன் பரிசோதனை மூலம் **பொ.ஆ. மு. 1000** என்று கணக்கப்பட்டுள்ளது.

♣ **5. கொடுமணல்:**

♣ ஈரோட்டிலிருந்து 40 கிலோமீட்டர் தொலைவில், காவிரியாற்றின் கிளை நதியான நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது கொடுமணல்.

♣ 1980களிலும், 1990களிலும் பெருங்கற்காலப் பதை மேடுகளிலும் மண்பாண்டங்கள், ஆயுதங்கள், கருவிகள், அணிகலன்கள், மணிகள் குறிப்பாக மொகஞ்சதாரோ அகழ்வாய்வில் கண்டறியப்பட்டதைப் போன்ற செம்மணிக்கற்கள் ஆகியவை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

♣ செம்மணிக்கற்கள் இப்பகுதியைச் சார்ந்தவை அல்ல என்பதால் தற்போது கொடுமணலில் கண்டெடுக்கப்பட்டுள்ள செம்மணிக்கற்கள் வேறு பகுதிகளிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

♣ சங்க நூலான பதிற்றுப்பத்தில் சேர அரசனுக்குச் சொந்தமாக கொடுமணம் என்ற ஊர் அங்கு கிடைக்கும் விலை மதிப்புமிக்க கற்களுக்காகப் புகழப்படுகிறது.

♣ இங்கு ரோமானிய நாணயக் குவியல்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதால், ரோமப் பேரரசிற்கு விலை மதிப்புமிக்க கற்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் இவை இப்பகுதியை வந்தடைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

♣ கொடுமணல் அகழ்வாய்வில் கிடைத்தவை சங்கத் தொகை நூல்கள் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

♣ பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டு -பொ. ஆ. இரண்டாம் நூற்றாண்டு என எ. சுப்பராயலு கூறுகிறார்.

♣ **தமிழ்நாட்டின் வெருங்கற்காலம்- இடர்கள்:**

♣ பெருங்கற்காலம் ஆங்கிலத்தில் ('Megalithc Age ') என்று அழைக்கப்படுகிறது ' Mega ' என்பது கிரேக்கச் சொல்லாகும். ' Mega ' என்றால் **பெரிய** ' lith' என்றால் **கல்** என்று பொருள். இறந்தவர்களைப் புதைத்த இடங்களைக் கற்பலகைகளைக் கொண்டு மூடியதால் இக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.



AKM IAS & NEET ACADEMY

♣ **6. கீழடி- சிவகங்கை மாவட்டம்**

♣ இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை திருப்பத்தூர் தாலுகாவிலுள்ள கீழடி கிராமத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த பழமையான நகரத்தை அகழ்ந்து ஆய்வு செய்துள்ளது.

♣ செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடங்கள் நன்கு அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு போன்ற சான்றுகள் இந்த ஆய்வில் கிடைத்துள்ளன.

♣ மேலும், தமிழ்-பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள மண்பாண்டங்கள், கண்ணாடியிலான மனிகள், செம்மணிகள், வெண்கல் படிகம், முத்துக்கள், தங்க ஆபரணங்கள், இரும்புப் பொருட்கள், சங்கு வளையல்கள், தந்தத்தால் செய்யப்பட்ட பகடை போன்றவையும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

♣ 2017 ஆம் ஆண்டில் இந்திய தொல்லியல் துறை இரு மாதிரிகளை கதிரியக்க கார்பன் வயதுக்கணிப்பு முறையில் கணிக்க அமெரிக்காவில் புளோரிடா என்னும் இடத்தில் உள்ள **பீட்டா அனால்டிகா** என்ற நிறுவனத்திற்கு அனுப்பியது

♣ ஆச்சோதனையில் இப்பொருள்கள் கி.மு. (பொ.ஆ.மு) 2020ஐச் சார்ந்தது என்பது தெரியவந்துள்ளது. இங்கு ரோம் நாட்டைச் சேர்ந்த பழங்கால தொல் பொருட்கள் கிடைத்துள்ளன.

♣ தீபகற்ப இந்தியாவிலிருந்து எஃகு ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது குறித்தும் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் இவற்றின் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் பெரிப்பிளஸ் குறிப்பிடுகிறார்.

♣ **7. பொருந்தல்- திண்டுக்கல் மாவட்டம்**

♣ கிடைத்துள்ள பொருட்கள் புதைகுழிப் பொருட்கள், கண்ணாடி மணிகள் (வெள்ளை, சிகப்பு, மஞ்சள், நீலம் மற்றும் பச்சை வண்ணங்களில்) இரும்பு வாள்கள், தமிழ்- பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள், அரிசி நிரப்பப்பட்ட மட்பாண்டங்கள், ஓரளவு அரிதான கற்களாலான படிகக்கல், சிவப்பு நிற மணிக்கற்கள், சங்கு மற்றும் கண்ணாடி வளையல்கள்.

♣ இரும்பிலான கதிர் அறுக்கும் அரிவாள், ஈட்டி, கொழுமுனைகள் ஆகியவை தமிழக மக்கள் நெல் விளைவித்ததற்கு சான்றுகளாய் உள்ளன. இங்கு உணவாக அரிசி இருந்தது என்பதை மெய்ப்பிக்கிறது.

♣ **8. கற்திட்டைகள் காணப்படும் இடங்கள்**

♣ இறந்தவர்களைப் பதைத்த இடத்தில் இருபுறம் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின்மீது மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்படும், இக்கற்திட்டைகள் வீரராகவபுரம் (காஞ்சிபுரம் மாவட்டம்), கும்மாளமருதுபட்டி (திண்டுக்கல் மாவட்டம்), நரசிங்கம்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

♣ **9. நினைவு கற்கள் (Menhir) காணப்படும் இடங்கள்**

♣ பிரிட்டானிய (Breton) மொழியில் மென் என்றால் கல். 'கிர்' என்றால் "நீளமான" என்று பொருள். ஒரே கல்லிலான இத்தூண்கள் இறந்தோரின் நினைவாக செங்குத்தாக நடப்படும்.

♣ திருப்பூர் மாவட்டம் சிங்கரிபாளையம், தேனி மாவட்டம் வெம்பூர் ஆகிய இவ்வாறான நினைவுத் தூண்கள் உள்ளன. இவை உப்பாற்றின் இரு கரைகளிலும் பழங்கால வாழ்விடங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன. மதுரை மாவட்டம் நரசிங்கம்பட்டியிலும், ஈரோடு மாவட்டம் குமரிக்கல் பாளையத்திலும், கொடுமணலிலும் இது போன்ற நினைவுத் தூண்கள் உள்ளன.

♣ **10. நடுகற்கள் காணப்படும் இடங்கள்**

♣ இறந்துபோன வீரனின் நினைவைப் போற்றும் வகையில் நடப்படும் கல் நடுகல்லாகும். தனது கிராமத்தை கொடிய விலங்குகளிடமிருந்து அல்லது எதிரிகளிடம் இருந்து காப்பாற்றும் முயற்சியில் மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய வீரர்களின் நினைவாக நடப்படுவது ஆகும்.

AKM IAS & NEET ACADEMY

- திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு அருகேயுள்ள மானூர், தூத்துக்குடி மாவட்டம் வெள்ளாளன் கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் புலிமான் கோம்பை ஆகிய இடங்களில் நடுகற்கள் காணப்படுகின்றன.
- இமயம் முதல் குமரி வரை பரவியுள்ள இந்திய நாட்டைப் போற்றி **"பழம்பெரும்நாடு எங்கள் பாரத தேசமடி பாப்பா!"**என்று பாடுவர்.
- அதில் விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பகுதி, உலகிலேயே மிகமிகத் தொன்மையானது என்று வரலாற்று அறிஞர் கூறுவர்.
- திருப்பதி மலைக்குத் தெற்கில் வாழும் மக்கள் பேசும் மொழி 'தமிழ்' இதனை **"வடவேங்கடம் தென்குமாரி ஆயிடைத்"**
- **"தமிழ் கூறும் நல்லுலகம்"**
- என்று நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் குறிப்பிட்டக் கூறியுள்ளார்.
- இனிய தமிழ் பேசப்படும் தமிழ்நாட்டைப் பாராட்டி
- **"செந்தமிழ் நாடனும் போதினிலே- இன்பத்**
- **தேன்வந்து பாயுது காதினிலே- எங்கள்**
- **தந்தையர் நாடென்ற பேச்சினிலே- ஒரு சக்கதி பிறக்கு மூச்சினிலே"**
- என்ற தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ளார்.
- நமது தமிழ்நாடு, மூவேந்தர் எனப்பட்ட சேர, சோழ, பாண்டியல் மரபுவழியினரான மாமன்னர்களால், பண்டைக் காலம் முதல் ஆளப்பட்டு வந்தது.
- தென்னாட்டின் தென் பகுதியைப் பாண்டியர்களும், மேற்குப் பகுதியைச் சேரர்களும், வடகிழக்குப்பகுதியைச் சோழர்களும் ஆண்டு வந்துள்ளனர்.
- **வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்**
- வரலாற்றுக் காலத்திற்கு முன்னர், குமரி முனைக்குத் தெற்கே உள்ள இந்துமாக்கடல் பகுதி, ஒரு பெருநிலப் பரப்பாக இருந்தது. அதைக் **குமரிக் கண்டம்** என்பர் புலவர்
- தென்னாட்டைப் போன்று எட்டு, பத்து மடங்கு பெரிய அந்நிலப் பரப்பில், ப∴றுளியாறு ஓடியது, பன்மலை அடுக்கம் நீண்டிரந்தது.
- அதுவே பண்டை அரசான பாண்டியர் அரசாக இருத்தல் கூடும்.
- **மூன்று சங்கங்கள்**
- அக்காலத்தில் பாண்டியர் தலைநகர் தென்மதுரை அங்குத் தமிழ் வளர்த்த தலைச் சங்கம் கூடியது என்று கூறப்படுகிறது.
- பின்னர் நிகழ்ந்த கடற்கோளால், தென்மதுரை உள்ளிட்ட நிலப்பரப்பில் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய அரசு நடைபெற்றது.
- அந்நகரில் தமிழ் வளர்த்த புலவர்கள் கூடும் **இடைச்சங்கம்** நடைபெற்றது. அந்தத் தலைநகரும் பின்னர் கடற்கோளுக்கு இரையானது.
- அதன்பின்னர், பாண்டியர் இன்றைங மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தினர்.
- மதுரை மூதூரில் தமிழ் வளர்த்த புலவர்களின் கடைச் சங்கம் நடைபெற்றது. இங்குப் பாண்டிய மன்னர் தலைமையில் புலவர்கள் கூடித்தமிழ் ஆய்வு நடத்திய சிறப்பால், இந்நகரே கூடல் என்றும் பெயர் பெறுவதாயிற்று.
- **முச்சங்கங்கள்**

| முதற்சங்கம் | இடைச்சங்கம் | கடைச்சங்கம் |
|---|---|---|

| தென்மதுரை | கபாடபுரம் | இன்றைய மதுரை |
|---|---|---|
| **வளர்த்தவர்கள்** | | |
| காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை | வேண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை | முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை |

♣ **குமரிக் கண்டம்**

♣ கடற்கோளால் மூழ்கிப்போன குமரிக்கண்டத்தில்தான். பல்லுயிர்களும் பெருகுதற்கேற்ற தட்பவெப்பச் சூழல் நிலவியது.

♣ அதனால் பரிணாம வளர்ச்சி முறையில், அங்குதான் முதல் மனித இனம் தோன்றியிருக்க வேண்டம், அந்த மாந்தர் பெசிய முதல் மொழியே. தமிழின் மூலமொழி ஆகும்.

♣ அந்த இனமே தமிழ் இனமாக உருக்கொண்ட தொன்மக்கள் ஆவர் என ஆய்வாளர் தெரிவிக்கின்றனர்.

♣ குமரிக் கண்டத்திற்கு முன்னதாக அப்பகுதியை உள்ளடக்கிய ஆஸ்திரேலியாவையும் இணைக்குமாறு நிலவியதென்றும், அந்தக் கண்டத்தில் வாழ்ந்த **லெமூர்** என்னும் குரங்கினத்தின் பெயரால் அக்கண்டம் லெமூரியா என்றும் பெயர் பெற்றது என்றுமு், அங்குத் தோன்றிய மனிதக் குரங்கே முதல் மனிதன் பிறக்கக் காரணம் என்றும் கருதுகின்ற ஆய்வாளரும் உள்ளனர்.

♣ எவ்வாறாயினும் முதல் மனித இனம், குமரிக்குத் தெற்கே இருந்து கண்டத்தில்தான் தோன்றியது.

♣ அவ்வின மாந்தர் பேசிய மொழியின் மூலமே தொல்தமிழ், அவர்தம் வழிவழி வந்த மரபினர் வாழும் நிலமே **தமிழ்நாடு** என்று முடிவு செய்யலாம்

♣ **வரலாற்றுக் காலம்**

♣ தமிழ்நாட்டைக் குறித்து அறியக் மூடிய வரலாற்றுக் காலம் சங்க காலத்தில் தொடங்குகிறது.

♣ சங்க காலம் என்பது கடைச்சங்கத்தில் புலவர்கள் அவ்வப்போது கூடித் தமிழ் ஆய்வு செய்த காலமாகும்.

♣ அது தி.மு. ஆண்டு 200 முதல் தி.பி. ஆண்டு 200 வரை 400 ஆண்டுக் காலமாகும். அது தி.மு. 300 முதல் தி.பி. 300 வரை என்று கொள்வோரும் உண்டு.

♣ **குறிப்பு**

♣ தி.மு.- தி.பி என்பது திருவள்ளுவரின் பிறப்பாண்டான பொ. ஆ. மு. 31 ஆம் ஆண்டை மையமாகக் கொண்டு கணக்கிடுவதாகம்.

♣ தமிழறிஞர்களின் முடிவின்படி, கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்னர் திருவள்ளுவர் பிறந்தார் என்று கொண்டு, காலத்தைக் கணக்கிடுவதைத் தமிழக அரசும் ஏற்று அறிவித்துள்ளது.

♣ **தமிழகம்- காலக்கோடு**

| | |
|---|---|
| ஏறத்தாழ பொ.ஆ.மு. 1300 முதல் பொ. ஆ. மு. 300 வரை | இரும்புக்காலம் மற்றும் பெருங்கற்காலம் |
| ஏறத்தாழ பொ.ஆ.மு. 300 முதல் பொ.ஆ.மு. 300 வரை இதற்கு முன்னரும் தொடங்கியிருக்கலாம் | பண்டைய வரலாற்றுக் காலம் மற்றும் சங்க காலம் |
| ஏறத்தாழ பொ.ஆ.மு. 300 முதல் பொ.ஆ. 300 வரை | சங்க இலக்கியங்கள் |
| ஏறத்தாழ பொ.ஆ.மு. 400 முதல் பொ.ஆ.மு. 300 வரை | தமிழ்-பிராமி எழுத்து முறையின் அறிமுகம் |
| பொ.ஆ. முதல் நூற்றாண்டு | எரித்தியக் கடலின் பெரிப்பளஸ் |
| பொ.ஆ. முதல் நூற்றாண்டு | பிளினியின் இயற்கை வரலாறு |
| பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டு | தாலமியின் புவியியல் |
| பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டு | வியன்னா பாப்பிரஸ் |
| ஏறத்தாழ பொ.ஆ. 300 முதல் பொ. ஆ. 500 வரை | சங்கம் மருவிய காலம் |



AKM IAS & NEET ACADEMY

♣ **தமிழகப் பண்பாடு:**

♣ பண்யைட தமிழா், பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினாா்.

♣ **பண்படு** என்னும் வோ்ச்சொல்லிலிருந்து தோன்றியதே பண்பாடு ஆகும், பண்படு என்பதற்குச் சீா்படுத்துதல், செம்மைப்படுத்துதல் என்பது பொருள்.

♣ பண்பாடு என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவா் **டி.கே. சிதம்பரநாதனாா்.**

♣ உழவன், பயிா் செழிக்க நிலத்தைப் பண்படுத்துதல் போல, மனிதவாழ்வு செழிக்க உயா்ந்த எண்ணங்களால் மனத்தைச் செம்மைப்படுத்த வேண்டும்.

♣ **'உலகம் என்பது உயா்ந்தோா் மேற்றே'** என்கிறது தொல்காப்பியம். இங்கு, உயா்ந்தோா் என்பது பண்பாடு உடையவா்களையே குறிக்கிறது.

♣ நல்ல வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்வதே சிறந்தது என்தைப் **'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'** என்று கலித்தொகை குறிப்பிடுகிறது.

♣ **'பண்பு உடையாா்ப் பட்டு உண்டு உலகம்'** என்கிறாா் வள்ளுவா்

♣ தற்கால்தில் சங்க இலக்கியம் எனக் கிடைத்துள்ள நூல்கள் எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் ஆகும்

♣ அவற்றின் மூலம் தமிழ் மக்களின் நாகரிகம், பழக்கவழக்கம், பண்பாடு, ஆட்சிமுறை முதலானவற்றை நாம் அறிந்து கொள்ளலாம்.

♣ கடைச்சங்க காலத்திற்கு முன்னரே தமிழின் பெருமைக்கு அடையாளமாக அரும்பெரும் இலக்கணமான **தொல்காப்பியம்** தோன்றியுள்ளது.

♣ சங்க காலத்திலேயே அனைத்து சமயத்தாரும் வியந்து போற்றும் திருக்குறள் தோன்றி இருக்கிறது என்பது தமிழக்குத் தனிப் பெருமையாகும்.

♣ தேசியகவி பாரதியாா்.

♣ **"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**

♣ **வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

♣ என்று முழங்கியுள்ளாா்.

♣ நமது தாய்மொழி தமிழ் இலக்கண வரம்பு கொண்டு வளா்ந்த தன்மையால் "செந்தமிழ்" என்று வழங்கப்பட்டது.

♣ பிறமொழிகளின் துணை தேவையின்றியே தமிழ் வளரும் திறன் பெற்றிருப்பதால் தமிழை **உயா்தனிச் செம்மொழி** என்று அறிஞா்கள் குறிப்பிடுவா்

♣ அக்காலத்தில் புகாா் என்னும் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி, வஞ்சி, முதலான பல துறைமுகங்கள் இருந்தன.

♣ மேற்கிலும், கிழக்கிலுமிருந்து எகிப்து, யவனம், ரோம், சீனம் முதலான பல நாடுகளுடன் பண்டமாற்று வணிகம் செய்துவந்தது தமிழ்நாடு.

♣ உழவுத் தொழில், உலகோா்க்கும் உணவளிக்கும் உயா்ந்த தொழிலாக மதிக்கப்பட்டது. அதனால்தான்

♣ **"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வாா் மற்றெல்லாம்**

♣ **தொழுதுண்டு பின்செல் பவா்"**

♣ எனறாா் திருவள்ளுவா்

♣ **தமிழா்களின் தோற்றம்**

♣ தமிழா் தோற்றம் பற்றி நான்கு வகையான கருதுகோள்கள் உள்ளன.

♣ தமிழா் குமரிக்கண்டத்தில் வாழ்ந்து வந்தாா்கள் என்பது ஒரு கருதுகோள்.



AKM IAS & NEET ACADEMY

- தேன் இந்தியாவின் பழங்குடிகள் என்படு இரண்டாவது கருதுகோள்.
- ஆதியில் ஆப்பிரிக்காவில் இருந்து அரேபிய கடல் வழியாகத் தென்னிந்தியா வந்தோரின் வழித்தேன்றல்கள் என்கிறது மூன்றாவது கருதுகோள்.
- முத்திய ஆசியா, வட இந்தியா நிலப்பரப்புகளில் இருந்து காலப்போக்கில் தென் இந்தியா வந்தனர் என்பது நான்காவது கருதுகோள்.
- **தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகள்:**
- தமிழர்கள், தொன்றுதொட்டுப் பண்பாட்டில் சிறந்து விளங்கினர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.
- அவற்றை இலக்கியச்சான்றுகள், வெளிநாட்டவரின் குறிப்புகள், தொல்பொருள் சான்றுகள் என வகைப்படுத்தலாம்.
- **சான்றுகள்:**

| | |
|---|---|
| கல்வெட்டுகள் | கலிங்கநாட்டு அரசன் காரவேலனுடைய ஹதிகும்பா கல்வெட்டு, புகளுர் (கரூர்க்கு அருகே) கல்வெட்டு, அசோகருடைய இரண்டு மற்றும் பதிமூன்றாம் பேராணைக் கல்வெட்டுகள், மேலும் மாங்குடம், அழகர் மலை, கீழவளவு ஆகிய ஊர்களிலுள்ள (இவ்வூர்கள் அனைத்தும் மதுரைக்கு அருகேயுள்ளனர்) கல்வெட்டுக்கள். |
| செப்புப் பட்டயங்கள் | வேள்விக்குடி மற்றும் சின்னமனூர் செப்பேடுகள். |
| நாணயங்கள் | சங்க காலத்தைச் சேர்ந்த சேர, சோழ, பாண்டிய அரசர்காலும். குறுநில மன்னர்களாலும் வெளியிடப்பட்ட நாணயங்களும், ரோமானிய நாணயங்களும். |
| பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் | புதைவிடங்கள், நடுகற்கள் |
| அகழ்வாய்விலிருந்து பொருட்கள் கிடைத்த இடங்கள் | ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, கொடுமணல், புகார், கொற்கை, அழகன்குளம், உறையூர் |
| இலக்கியச் சான்றுகள் | தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்கணக்கு, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி ஆகியவை சிலப்பதிகாரம்-மணிமேகலை ஆகிய காப்பியங்கள். |
| அயல்நாட்டவர் குறிப்புகள் | எரித்திரியக்கடலின் பெரிப்ளஸ் (The Periplus of Erythrean Sea ), பிளினியின் இயற்கை வரலாறு (Natural History ), தாலமியின் புவியியல் (Geograhy ), மெகஸ்தனிஸின் இண்டிகா, ராஜாவிள, மகாவம்சம். தீபவம்சம் ஆகியன. |

- **ஜார்ஜ். ஏல். ஹார்ட்**
- கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழிப் பேராசிரியர் ஜார்ஜ் எல் ஹார்ட் என்பார் தமிழ்மொழியானது இலத்தீன் மொழியின் அளவிற்குப் படைமையானத எனும் கருத்தைக் கொண்டள்ளார். ஏனைய மொழிகளின் செல்வாக்கிற்கு உட்படாமல் முற்றிலும் சுதந்திராமான ஒரு மரபாக அது உருபெற்று எழுந்துள்ளது என அவர் கூறுகிறார்.
- **இலக்கியச் சான்றுகள்:**

AKM IAS & NEET ACADEMY

- தொல்காப்பியப் பொருளதிகாரம் பழந்தமிழரின் அக, புற வாழ்க்கை நூல்களாகிய எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் அக்கால மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டுகின்றன.
- தமிழ் பழங்கதைகளின்படி பண்டைய தமிழ்நாட்டில் முச்சங்கம் என்றழைக்கப்பட்ட மூன்று தமிழ் சங்கங்கள் இருந்தன. பாண்டிய மன்னர்களின் ஆதரவில் இந்த சங்கங்கள் தழைத்தோங்கின.
- தென்மதுரையில் இருந்த முதற்சங்கத்தில் கடவுளரும், முனிவர்களும் பங்கேற்றனர் என்று கூறப்பட்டிருந்தாலும், இச்சங்கத்தைச் சேர்ந்த நூல்கள் ஏதும் கிடைக்கவில்லை
- இரண்டாது சங்கம் கடாபுரத்தில் நடைபெற்றது. தொல்காப்பியம் தவிர ஏனைய இலக்கியங்கள் யாவும் அழிந்து போயின.
- மூன்றாவது சங்கத்தை மதுரையில் **முடத்திருமாறன்** என்ற பாண்டிய மன்னன் நிறுவினான்.
- **சங்க இலக்கியங்கள்:**
- சங்க இலக்கியத்தொகுப்பில் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன இடம் பெற்றுள்ளன.
- காலத்தால் தொன்மை பெற்றதான தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர். இது ஒரு இலக்கண நூல் என்றாலும், சங்க கால அரசியல், சமூக பொருளாதார நிழலமைகளைப் பற்றிய தகவல்களைத் தருகிறது.
- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் அகம், புறம் என்ற இரண்டு திணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன
- இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும், சீத்தலைச்சாத்தனார் இயற்றிய மணிமேகலையும் சங்க கால சமூகம் மற்றும் அரசியல் குறித்த தகவல்களதைத் தருகின்றன.
- யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயரிய தத்துவத்தை உலகிற்கு எடுத்துக் கூறிய பெரும், சங்ககாலப் புலவராகிய கணியன் பூங்குன்றனாரைச் சாரும்.
- சேர மன்னர்களின் வணிகமுறை, ஆட்சிப்பிறப்பு, பொர்த்திறம், கொடைத்திறம் முதலானவற்றைப் பற்றிப் **பதிற்றுப்பத்து** விரிவாக விளக்குகிறது.
- இசைப்பாடலாகிய பரிபாடல், பாண்டியர்களின் தலைநகரமாகிய மதுரையின் சிறப்பையும், வைகை ஆற்றின் சிறப்பையும், திருமால், முருகன் போன்ற தெய்வங்களை வழிபட்ட முறைகளையும் பாடுகிறது.
- பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும்.
- **“அற்றுப்படை நூல்களுக்கு இலக்கணமாக,**
- **ஆற்றிடைக் காட்சி உறழத் ததோன்றிப்**
- **பேற்ற பெருவளம் பெறாஅர்ச்சு அறிவுறீஇச்**
- **சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்”**
- என்ற தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.
- குறிஞ்சிப்பாட்டும், முல்லைப்பாட்டும் நிலவளம், காதலின் சிறப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன.
- நெடுநல்வாடை காதலையும், வீரத்தையும் ஒருசேரப் பேசுகிறது.
- மதுரைக்காஞ்சி, பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்பைக் கூறுகிறது.
- சோழநாடு, தரைவழி வணிகத்தாலும், கடல் வழி வணிகத்துாலும் வளம் பெற்றிருந்ததனை ‘**முட்டாச் சிறப்பின் பட்டினம்**’ என்று பட்டினப்பாலைச் சொற்றொடர் குறிப்பிட்டுச் சொல்கிறது.
- இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம், தமிழர் ஆட்சிமுறை, ஆடல், பாடல், கலைவளம் மற்றும் புகார், மதுரை, வஞ்சி ஆகிய தலைநகரங்களின் சிறப்புகள், வணிகச் சிறப்பு, சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள். விரிவாகப்பேசும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.
- மணிமேகலை, சமய அறக்கருத்துகளையும் வாழ்வியல் நெறிகளையும் எடுத்துரைக்கிறது.

AKM IAS & NEET ACADEMY

♣ பல்வேறு குற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்வதன் மூலமே குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்த முடியும் என்பது, மணிமேகலையின் மையக் கருத்தாகும்.

♣ பசியைப் பிணயாக உருவகம் செய்து, அதைப் போக்கவேண்டிய அவசியத்தையும் கூறுகின்ற புரட்சிக்காப்பியம் மணிமேகலையாகும்.

♣ **பிற சான்றுகள்**

♣ கிரேக்க எழுத்தாளர்களான பிளினி, தாலமி, மெகஸ்தனிஸ், ஸ்ட்ராபோ ஆகியோர் தென்னிந்தியாவிற்கும் மேகலை நாடுகளுக்கும் இடையே நிலவிய வர்த்தகத் தொடர்புகளை குறிப்பிட்டுள்ளனர்.

♣ மௌரியப் பேரரசுக்கும் தெற்கேயிருந்து சேர, சோழ, பாண்டிய ஆட்சியாளர்கள் பற்றி அசோகரது கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

♣ கலிங்கத்துக் காரவேலனின் **ஹதிகும்பா** கல்வெட்டும் தமிழ்நாட்டு அரசுகளைப் பற்றி குறிப்பிடுகிறது.

♣ அரிக்கமேடு, பூம்புகார், கொடுமணல் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளும் தமிழர்களின் வாணிப நடவடிக்கைகளை வெளிப்படுத்துகின்றன.

♣ **சங்க இலக்கியத்ன் காலம்**

♣ சங்க இலக்கியத்தின் காலவரையறை பற்றி அறிஞர்களுக்கிடையே இன்னும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை.

♣ இலங்கை அரசன் **இரண்டாம் கயவாகு**, சேர அரசன் செங்குட்டுவன் இருவரும் சமகாலத்தவர் என்ற செய்தி சங்க காலத்தை நிர்ணயிப்பதற்கு அடிப்படையாகத் திகழ்கிறது.

♣ இச்செய்தியை சிலப்பதிகாரம், தீபவம்சம், மகாவம்சம் ஆகிய நூல்கள் உறுதிப்படுத்துகின்றன.

♣ எனவே, இலக்கியம், தொல்லியல், நாணயவியல் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, சங்க இலக்கியங்களின் காலம் பொ. ஆ. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பொ. ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரை என்ற முடிவுக்கு வரலாம்.

♣ **வெளிநாட்டினரின் குறிப்புகள்:**

♣ **பல** நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட எரித்திரியக் கடலின் பெரிபுளூஸ் என்னும் நூலின் பதிப்புரையில், கிரேக்க மக்கள் நாகரிக சமூகத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே, எகிப்தும், பண்டைய இந்தியாவும் நெடுங்காலமாக வணிகத் தொடர்பு கொண்டிருந்தன எனக் கூறப்பட்டுள்ளது.

♣ ரோமாபுரி அரசன அகஸ்டஸின் சமக்காலத்தவரான ஸ்டிராபோ என்பவர் எழுதிய பூகோள நூல், பிளினி எழுதிய உயிரியல் நூல், தாலமி எழுதிய பூகோள நூல் அகியவை பண்டைய தமிழகத்தின் கடல் வணிகம் பற்றிக் குறிப்பிடுகின்றன.

♣ சேரநாட்டுத் துறைமுகங்கள் அனைத்தும் கண்ணனூருக்கும் கொச்சிக்கும் இடையில் அமைந்திருந்தன. அரேபியாவிலிருந்தும், கிரேக்கத்திலிருந்தும் வணிகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தனவென்று **பெரிபுளூஸ்** என்ற நூல் கூறுகின்றது.

♣ ஆரிசி என்னும் தமிழ்ச்சொல் மொழியில் அரிஸா என்றும், கருவா (இலவங்கம்) என்னும் தமிழ்ச்சொல் கார்ப்பியன் என்றும், இஞ்சிவேர் சின்ஞ்போராஸ் என்றும், பிப்பால் பெர்ப்பெரியாகவும் உருமாற்றம் அடைந்தன.

♣ சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற துகில் (மயில்தோகை), ஆலமக் (அதில் மரங்கள்), சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற மதிப்புயர்ந்த பொருள்களின் பெயர்கள் அனைத்தும் தமிழ்ப்பெயர்களின் சிதைவுகளே என்பதில் ஐயமில்லை.

♣ சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களான தொண்டியைத் திண்டிஸ் என்றும், முசிறியை முஸிரிஸ் என்றும் பொற்காட்டைப் பகரி என்றும் குமரியைக் கொமாரி என்றும் ரோமர்கள் குறிப்பபிட்டுள்ளனர்



AKM IAS & NEET ACADEMY

♣ தமிழகத்தின் கீழைக்கடற்கரைத் துறைமுகங்களான கொற்கையைக் கொல்சாய் என்றும் நாகப்பட்டினத்தை நிகாமா என்றும் காவிரிப்பூம்பட்டினத்தைக் கமரா என்றும், புதுச்சேரியைப் பொதுகே என்றும் மரக்காணத்தைச் சோபட்மா என்றும் மசூலிப்பட்டினத்தை மசோலியா என்றும் அந்நூல்கள் குறிப்பிடுகின்றன.

♣ **ஹிப்பாகிரேட்டஸ்** என்ற புகழ் பெற்ற கிரேக்க மருத்துவம் பொ. ஆ. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் இந்திய மருத்துவ முளைகளையும், மருந்து வகைகளையும் கையாண்டு வந்தார். இவர் மிளகை இந்திய மருந்து என்ற குறிப்பிட்டுள்ளார்.

♣ **கல்வெட்டுகளும் பட்டயங்களும்:**

♣ மன்னர்களின் ஆணைகள், அவர்களின் சாதனைகள் போன்றவை கல்வெட்டுகிளல் இடம்பெற்றுள்ளன.

♣ திருப்பரங்குன்றம், நாகமலை, ஆனைமலை, கீழக்குயில்குடி ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் சங்க காலத்தை என குறிப்பிடப்படுகிறது.

♣ **பல்லவர்காலக் கல்வெட்டுகள்:**

♣ மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, திருச்சி, பல்லாவரம், மாமல்லபுரம், தளவானூர் போன்ற இடங்களில் கிடைத்துள்ளவைக் குறிப்பிடத்தக்கன.

♣ காஞ்சி கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளில், பல்லவர்கால வரலாற்றை அறியமுடிகிறது.

♣ பராந்தகச் சோழனின் **உத்திரமேரூர்க் கல்வெட்டு**. சோழர்கால கிராம ஆட்சிமுறையைத் தொளிவாக எடுத்துக்காட்டுகிறது.

♣ போன், செம்பு ஆகிய உலோகத்தகடுகின் மீது எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன அவற்றிற்குப் **பட்டயங்கள்** என்று பெயர்.

♣ அவை பிராகிருதமொழியிலும், வடமொழியிலும், தமிழிலும் காணப்படுகின்றன.

♣ வேள்விக்குப் பட்டயம், தளவாய்புரச்செப்பேடு, சின்னமனூர்ச் சாசனம், சிவகாசிச் செப்பேடுகள் முதலிய பாண்டியர்காலப் பட்டயங்களும், திருவாலங்காட்டுப் பட்டயங்கள், கரந்தைச் செப்பேடுகள், அன்பில் பட்டயங்கள், லெய்டன் பட்டயங்கள் போன்ற சோழர்காலப் பட்டயங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

♣ **நாணயங்கள்:**

♣ சங்க காலத்தில் செப்பு நாணயங்கள் வழக்கில் இருந்தன. அவை சதுர வடிவமானவை

♣ நாணயத்தின் ஒருபுறத்தில் யானையும், மறுபுறத்தில் இரட்டை மீன்களும் காணப்பட்டன.

♣ யவனர்கள் தமிழகத்தில் மதுரை, புகார் ஆகிய இடங்களிலிருந்து, தங்க நாணயங்களை வெளியிட்டன.

♣ பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் இரட்டை மீன், கப்பல், நந்தி போன்ற சின்னங்கள் காணப்படுகின்றன.

♣ முதலாம் இராஜராஜன் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில், புலியும் அதனருகில் இரட்டை மீன் கொண்ட வடிவங்களும் காணப்படுகின்றன.

♣ இரண்டாம் வரகுணனின் தங்க நாணயம், கிரந்த எழுத்தில் அவனுடைய பெயருடன் காணப்படுகின்றது.

♣ **நினைவுச் சின்னங்கள்:**

♣ மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டுக் கல்வெட்டில், அழியக்கூடிய பொருள்களைான மரம், செங்கல், மண்,

♣ சுண்ணாம்பு கொண்டு பல கோயில்கள், சங்ககாலத்திலும் அதனைத் தொடர்ந்து களப்பிரர் காலத்திலும் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

♣ திருப்பரங்குன்றம், மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமல்லபுரம் போன்ற இடங்களில் காணப்படும் குகைக் கோயில்களும், கற்களால் அமைக்கப்பட்ட இரதங்களும் குறிப்பிடத்தக்கனவாகும்.

♣ வீரம், கொடை, புலமை முதலியவற்றில் சிறந்தவர்களை நினைவுகூறும் பொருட்டு நடப்பட்ட கற்பதுகைகளும், நடுகற்களும் தமிழ்ப் பண்பாட்டின் தொல்பொருள் சின்னங்களாக விளங்குகின்றன.

♣ திருப்பரங்குன்றம், மண்டகப்பட்டு, மகெந்திரவாடி, மாமல்லபுரம், சித்தன்னவாசல் போன்ற இடங்களில் குகைக்கோயில்கள் உள்ளன.

♣ மாமல்லபுர ஒற்றைக்கல் இரதங்கள், தமிழகத்தின் சிறப்பான சிற்பக்கலைக்கு அடையாளமாகத் திகழ்கின்றன.

♣ **அகத்திணை- புறத்திணை:**

♣ தமிழர்கள், தம்வாழ்க்கையை அகம் எனவும் புறம் எனவும் இரு கூளாகப் பிரித்தனர். இதனில், அன்பின் வழிப்பட்டது அகவாழ்வு எனவும் வீரத்தின் வெளிப்பாடு புறவாழ்வு எனவும் கூறுவார்.

♣ **அகத்திணை விளக்கம்:**

♣ உருவத்தாலும். அகவையாலும், அறிவாலும் ஒத்த தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ்வதே அகவாழ்வாகும்.

♣ தலைவனும், தலைவியும் தாம்துய்த்த இன்பம் இத்தகையது எனப் பிறருக்குப் புலப்படுத்த முடியாததே அகவாழ்வாகும். இதுவே அகத்திணையாகும்.

♣ அகத்திணை ஐந்து வகைப்படும், அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும்

♣ பொருந்தாக் காதலைப் **பெருந்திணை** எனவும், ஒருதலைக் காதலைக் **கைக்கிளை** எனவும் பற ஒழுக்கத்தை ஏழு நிணைகளாகவும் கூறுவர்

♣ அகத்திணை, புறத்திணை சார்ந்த செய்திகளைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் விரிவாக விளக்குகிறது.

♣ உரிப்பொருளான காதலைக் கற்பனை செய்து பாடும்போது அதற்குரிய நிலம், பொழுது, பறவை, விலங்கு பூ, மரம் முதலான கருப்பொருள்களைப் பின்னணியாக அமைத்துப் பாடும் மரபு, நெடுங்காலமாக வழக்கத்தில் உள்ளது.

♣ **ஐந்திணைக்கான முதற்பொருளும் உரிப்பொருளும்**

| திணை | நிலம் | பொழுது | | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| | | சிறுபொழுது | வெரும்பொழுது | |
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | யாமம் | கூதிர், முன்பனி | புணர்தலும் புணர்நதல்நிமித்தமுமு் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | மாலை | கார் | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | வைகறை | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | எற்பாடு | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடமும் | நுண்பகல் | இளவேனில், முதுவெனில், பின்பனி | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

- **புறத்திணை விளக்கம்:**
- புறத்ததர் யாவருக்கும் புலப்படும் ஒழுகத்தைப் பற்றிக் கூறுவது **புறத்திணை** எனப்படும்.
- தொல்காப்பியம் புறத்திணைகளை ஏழு எனப் பகுக்க, புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டாகப் பகுத்துள்ளது.
- வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உமிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய எட்டுப் புறத்திணைகள் போருக்கான காரணங்களையும் போர் நடைபெறும் முறைகளையும் கூறுகின்றன.
- மன்னனின் வீரம், கொடை, புகழ் முதலானவற்றைச் சிறப்பித்துப் பாடுவது **பாடாண் திணை** ஆகும்.
- மேற்கண்ட ஒன்பது திணைகளில் கூறாதனவற்றைப் பொதுவியல் திணையில் அடக்கிக் கூறுவர்.
- **விருந்தோம்பல்**
- **"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"** (தொல். பொருள். 540) என்ற தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெற்றுள்ள விருந்து என்னும் சொல் புதியது என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது.
- **விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா**
- **மருந்தஎனினும் வேண்டறபாற் றன்று (குறள் 82)**
- என்னும் குறட்பா இக்கூற்றை விளக்குகிறது.
- இளங்கோவடிகள் **தொல்லோர் சிறப்பின்** என்று விருந்துக்கு அடை கொடுத்துக் கூறியதால், தமிழரின் தொன்மையான பழக்கம் விருந்தோம்பல் என்பதை அறியலாம்.
- சங்க காலத் தமிழர்கள் பசியென்று வருபவர்களை வரவேற்க, வீட்டு வாயிலில் காத்திருப்பர். இரவில் வாயில் கதவை அடைக்கும்முன் விருந்தினர் யாரேனும் உள்ளனரா எனப் பார்ப்பர்.
- **---------------------------------------------------------- கோவலர்**
- **மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளிச்**
- **செவிஅடைதீரத் தேக்கிலைப் பகுக்கும்**
- **புல்லி நல்நாட்டு (அகம் 311, 9-12)**
- ஒருநாள் சென்றாலும், இருநாள் சென்றாலும் பலநாள் பலரோடு சென்றாலும் முதல் நாள் போன்றே இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பினர் என்பதை ஔவையார் பாடல் மூலம் அறியலாம்.
- பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளை **மடைநூல்** குறிப்பிடுகிறது.
- உணவுப் பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, பெரங்கதை, மணிமேகலை போன்ற நூல்களில் கூறப்பட்டள்ளன.
- **வள்ளன்மை:**
- பெற்ற பெருவளத்தை தக்கோர்க்குப் பகிர்ந்தளிப்பதே வள்ளன்மையாகும்.
- மலைசார்ந்த நாடுகளை ஆட்சி செய் குறுநில மன்னர்கள் **வேளிர்** எனப்பட்டனர்.
- எடுத்துக்காட்டாக பொதிய மலையை ஆய், குதிரைமலையை அதியமான், பறம்பு மலையை பரி என்ற வேளிர்கள் ஆட்சி செய்தனர்.
- வளமான ஆற்று சமவெளிகளை சேர, சோழ, பாண்டியர் போன்ற முடியுடை வேந்தர்கள் ஆட்சி செய்தனர்.
- மன்னர்களே கூட கவிதை இயற்றும் அளவு திறமை பெற்றிருந்தனர். (எடுத்துக்காட்டு: ஆரியப் படை கடந்த நெடுஞ்செயழியன்)
- தமிழ்நாட்டை இரண்டாவது கடடமாக, கி.பி. 3- ஆவது நூற்றாண்டு முதல் 6-ஆவது நூற்றாண்டு வரை களப்பிரர்கள் ஆண்டனர்.

♣ **வஜ்ஜிர நந்தி** என்ற சமணத்துறவி மதுரையில் திராவிட சங்கத்தை ஏற்படுத்தினார்.

♣ **அச்சுத விக்ரந்தா** உரையூரை ஆண்ட புகழ் பெற்ற களப்பிர மன்னராவார்.

♣ களப்பிரர் ஆட்சி வட் தமிழகத்தில் பல்லவர்களாலும், தென் தமிழகத்தில் பாண்டியர்களாலும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

| **குறுநில மன்னர்கள்** | **ஆட்சி செய்த பகுதி** | **வள்ளல் தன்மை** |
|---|---|---|
| பேகன் | பழனிமலை | மயிலுக்கு போர்வை தந்நவர் |
| பாரி | பறம்புமலை | முல்லைக் கொடி படர்வதற்குத் தம் தேரைத் தந்தவர் |
| திருமுடிக்காரி | மலையமா நாடு | குதிரைகளைப் பரிசாக வழங்கியவர். |
| ஆய் அண்டிரான் | பொதிய மலை | நீல நாகத்தின் உடையை இறைவனக்குப் போர்த்தி மகிழ்ந்தவர் |
| அதியமான் | தகடூர் | அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்தவர். |
| நள்ளி | கண்டீர மலை | மலைவாழ் மக்களுக்கு அனைத்துப் பொருள்களையும் வழங்கியவர் |
| வல்வில் ஓரி | கொல்லிமலை | யாழ் மீட்டும் பாணர்களுக்குப் பரிசு வழங்கியவர் |

♣ **பண்பாட்டு மரபுகள்**

♣ **தொ**ன்மையான பாலி மற்றும் சமஸ்கிருத இலக்கியங்கள் தமிழ் மற்றும் தென்னிந்தியப் பகுதிளை “**திராமிளா**” (Dramila) மற்றும் “**திராவிட**” என்ற சொற்களால் குறிப்பிட்டன.

♣ வட நாட்டை ஆரியவர்த்தம் எனவும், தென்னாட்டை திராமிளா மற்றம் திராவிட என்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

♣ மாமூலனார் போன்ற சங்ககால புலவர்கள் கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த நந்தர்கள் மற்றும் மௌரியர்களின் சமகாலத்தவர்கள்.

♣ **ஆட்சி முறை:**

♣ சங்க கால அரசு மன்னராட்சி முறையில் அமைந்திருந்தது. மன்னர்கள்கட்டுப்பாடற்ற முழு அதிகாரம் பெற்று விளங்கினர்.

♣ அவை ‘நாளவை’, ‘மன்றம்’ எனவும் அரசவை அழைக்கப்பட்டது.

♣ (அ) காலாட்படை, (ஆ) குதிரைப்படை, (இ) போர் யானைகள், (ஈ) தேர்படை என படைகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன.

♣ சங்க காலத்தில் கடற்படையெடுப்புகளும் நிகழந்துள்ளன. எழுத்துக்காட்டாக கடம்பர் என்னும் கடற்கொள்ளையாளர்களுக்கு எதிராக சேரன் செய்குட்டுவனது படையெடுப்பு, கரிகாலனது சிங்களபடையெடுப்பு என்பனவற்றைக் கூறலாம்.

♣ மண்டலம், கோட்டம், ஊர் என்ற உள்ளாட்சி நிர்வாகப் பிரிவுகள் இருந்தன.

♣ வணிக வரி, சுங்க வரி,உப்புவரி, அன்பளிப்புகள், கப்பங்கள் போன்றவை அரசு வருவாய்களாகும்.

♣ **பேரரசு காலத்தில்**

♣ பேரரசு மண்டலங்காளக பிரிக்கப்பட்டது.

♣ மண்டலங்கள் நாடுகளாகவும், நாடுகள் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு கோட்டமும் பல பேரூர்களையும் (பெரிய நகரங்கள்), ஊர்களையும் (கிராமங்கள்), நகரங்களையும் (வியாபார நகரம்) பட்டினங்களையும் (கடற்கறை நகரங்கள்) கொண்டிருந்தது.

♣ கிராமங்கில் ஊரார், நாடுகளில் நாட்டார் எனப்படும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட உள்ளாட்நி அமைப்புகளால் நிருவகிக்கப்பட்டன.

♣ பிராமணர்கள் குடியிருப்புகளான கிராமங்கள் (பிரம்மதேயம்) உள்ளுர் பிராமணர்களது அவைகளால் நிர்வாகம் செய்யப்பட்டன.

♣ அவை மகாசபைகள் எனப்பட்டது. மகாசபைகள் எவ்விதத்திலும் வெளியார் தலையீடுயின்றி சுதந்திராமாக செயல்பட்டதுடன் பெருவான வரிகிளிலிருந்து விலக்குகளும் பெற்றவையாக இருந்தன.

♣ சோழர்களின் காலம் மகாசபையின் பொற்காலம் என்பர்.

♣ **சமுதாயம்:**

♣ மருத நகரங்களில் அரசர்,அந்தணர், வணிகர், வெள்ளாளர் என்ற நால்வகைப்பிரிவுகள் காணப்பட்டன.

♣ பாணர் (பாடகர்), விளலியர் (நடனமாடுபவர்), குயவர் (மட்பாண்டம் செய்வோர்), உமணர் (உப்பு வணிகர்), வண்ணார் (துணி துவைப்பவர்), நெசவாளர் (துணி நெசவு செய்பவர்), கைவினைஞர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள் என்ற பல தொழில்களை செய்பவர்கள் வாழ்ந்ததாக சங்க கால இலக்கியங்களிலிருந்து அறிய முடிகிறது.

♣ '**கற்பை'** பெண்கள் தங்கள் உயிருக்கு மேலாக மதித்தனர். சில அரச குடும்பங்களில்மட்டும் சதி என்றும் உடன்கட்டை ஏறிய ஒரு சில நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

♣ நாலடியார், திருக்குறள் போன்ற சங்க இலக்கியங்கள் சாதியை குறிப்பிடப்பட்ட போதிலும், அதனை ஏற்கவில்லை. சங்க தமிழர்கள் சமய சடங்குகளின்மீது வைத்த நம்பிக்கையை விட ஒழுக்க நெறியை (நன்னெறி) மதித்தனர்.

♣ பேரரசு கால்தில் அதிகளவில் பக்தி இலக்கியங்கள் எழுதப்பட்டன. தேவாரம், திருவாசகம், நாலாயிரதிவ்யபிரபந்தம், பெரியபுராணம் போன்ற இலக்கியங்கள் சைவ, வைஷ்ணவ சமயத்தைப் போற்றின

♣ பல்லவர்கள் காலத்தல் ஆட்சி மொழியாக சமஸ்கிருதம் ஏற்றுக் கொண்டாலும், அரசின் ஆதரவு சமஸ்கிருத கல்விக்கு இருந்த போதிலும், மத்தவிலாச பிரகசனம், கிரதார்ஜீனீயம், அவந்தி சுந்தரி கதா, காவியதர்சம் போன்ற ஒரு சில சமஸ்கிருத இலக்கியங்களே புகழ்பெற்று விளங்கின.

♣ கோவில்களிலும் சமய சடங்குகளிலும் சமஸ்கிருத மொழியே பின்பற்றப்பட்டது.

♣ **சமயம்:**

♣ சங்க காலத்தில் வழிபாட்டு முறைகள் திணை அடிப்படையில் அமைந்திருந்தன.

♣ வீரக்கற்கள் வழிபாடு இருந்தது சேயோன், மாயோன், வேந்தன், வருணன், வலியோன், கொற்றவை போன்றவை திணை வழியிலான செல்வாக்கு பெற்ற தெய்வங்களாக விளங்கின

♣ கணேசர் வழிபாடு (விநாயகர் மற்றும் பிள்ளையார்) காணப்படவில்லை

♣ குரவைகூத்து, வெறியாட்டு போன்ற ஆடலும், பாடலும் வழிபாட்டில் இடம்பிடித்தன.

♣ பிராமணர்களின் வேள்விகள், சில அரசர்களை கவர்ந்துபோதிலும், மக்களிடையே அவை புகழ் பெறவில்லை.

♣ சங்ககாலத்தில் சமணம், பௌத்தம், அஜீவிகைசம் போன்ற சமயத்தத்துவங்கள்தமிழ் சமுதாயத்தில் இடம்பிடித்தன.

♣ பல்லவர் காலத்தில் பக்தி இயக்கம் சிறப்பான இடத்தைப் பிடித்தது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் புத்த சமண சமயங்களை எதிர்த்து பிரச்சாரம் செய்தனர்.

♣ சிவன், திருமால் போன்ற தெய்வங்களும் அவர்களது தேவியர்களும் முதன்மையான தெய்வங்களாயின.

♣ சோழர் ஆட்சியின் இறுதியில் **முருகவழிபாடு** (முருக பக்தி புகழ்) பெற்றது

♣ கோயில்களில், உள்ளூர் பூசர்கள் படிப்படியாக அகற்றப்பட்டு பிராமணர்கள் பூசகர்களாக மாறினர்.

♣ சமஸ்கிருதம் சமய மொழியாயிற்று. சமண, பௌத்த கோவில்கள் பல இடிக்கப்பட்டன, அல்லது சைவ, வைணவ கோயில்களாக மாற்றப்பட்டன.

♣ சோழர்கள் காலத்தில் ஏற்பட்ட சைவ, வைணவ சமய மோதல்களுக்கு சான்றாக, சதம்பரம் கோவிலில் இருந்த தில்லை கொவிந்தராசர் சிலை அகற்றப்பட்டது. வைணவரான ராமானுஜர் நாட்டை விட்டு வெளியேற நேர்ந்ததையும் கூறலாம்.

♣ பாணரும், விறலியரும் மரபு சார்ந்த இசை மற்றும நடன கலை ஆவர்.

♣ யாழ் என்ற நரம்புக் கருவியும், குழல் என்ற காற்றுக் கருவியும், முழவு என்ற தோல் கருவியையும் இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தினர்.

♣ பல்லவர்களது குடுமியான் மலைக் கல்வெட்டில் உருத்திராச்சாரியார் என்ற புகழ் பெற்ற இசை கலைஞரைப் பற்றிய செய்தியுள்ளது.

♣ **கட்டிடக்கலை:**

♣ சங்க கால கட்டிடங்கள் அழித்தக்க செங்கல், மரம் முதலியவற்றால் அமைக்கப்பட்டவை எனலாம்.

♣ பல்லவர்கள் காலத்தில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய குடவரைக் கோயில்களின் மூலம், ஒரு புதிய வகை சிற்பம் மற்றும் கட்டிடக்கலை அறிமுகப்படுத்தப்பட்டது.

♣ இந்த முறையில் மலைப் பாறைகளைக் குடைந்து புடைப்புச் சிற்பங்களுடன் கூடிய மண்டபங்கள் அமைக்கப்பட்டன.

♣ எடுத்துக்காட்டாக மாமல்லபுரத்திலுள்ள மகிஷாசுர மண்டபம், வராக மண்டபம்.

♣ பின் ரதம் போன்று செதுக்கப்பட்ட ஒற்றைக்கற்கோவில்களை அமைத்தனர். (மாமல்லபுரம் பஞ்சபாண்டவ ரதங்கள்) அதன் பின் செதுக்கப்பட்ட கற்பாறைகளை இணைத்து கற்கோயில்களை கட்டினர்.

♣ எடுத்துக்காட்டாக மாமல்லபுரம் கடற்கரை கோயில், காஞ்சி கைலாச நாதர் ஆலயம், வைகுந்த பெருமாள் ஆலயம், இக் கோயில்களிலுள்ள விமானங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை.

♣ சோழர்கள் காலத்தில் பிரம்மாண்டமான வானளாவிய கோவில்கள் கட்டப்பட்டன.

♣ பரந்துவிரிந்த வளாகங்கள், பாதுகாப்பான உட்புற சுற்றுசுவர், சிற்பவேலைப்பாடு மிக்க அழகிய தூண்களுடன் கூடிய மண்டபங்கள் (மகா மண்டபம், அர்த்த மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம்) கருவறை, பெரிய விமானங்கள், தளங்கள் கட்டப்பட்டன. கடவுள்களுக்கான கருவறைகள் போன்ற கூறுகள் குறிப்பிடத்தக்கவை.

♣ தஞ்சை பிரகதீஸ்வரம், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. கோயில்கள் சோழர் காலக்கட்டிடகலைக்குச் சிறந்த சான்றுகள்.

♣ ஓவியக் கலைக்குச் சான்றாக சித்தன்னவாசல் குகைகள், காஞ்சி கைலாசநாதர் கோவில், பிரகதீஸ்வரர் கோயில்கள் பொன்றவைகளில் மிகச் சிறந்த ஓவியங்கள் உள்ளன.

♣ சோழர் காலத்திய வெண்கலத்தால் ஆன நடராசர் சிலை, சைவ, வைஷ்ணவ உற்சவ மூர்த்தி சிலைகள், 63 நாயன்மார்களின் சிலைகள் உலக புகழ் பெற்றவையாம்.

♣ சங்க இலக்கியங்களில் எண், கணக்கு நாழிகை, யாமம், காதல், கோல் போன்ற அளவைகளும், இலையுதிர், இளவேனில் போன்ற கால கணக்குகளையும் காணலாம்.

♣ ஏலாதி, திரிகடுகம். சிறுபஞ்சமூலம் போன்ற நூல்களின் பெயர்கள் மூலம் அவர்களின் மருத்துவ அறிவை அறியலாம்.



AKM IAS & NEET ACADEMY

- **கணியன்** என்பவர் வானவியல் மற்றும் ஜோதிடவியலில் வல்லவராவார்.
- சமண, பௌத்த சமயங்கள் போன்று தமிழர்களும், **"தீதும் நன்றும் பிறர் தரவாரா"**
- **1.3 சங்க காலம்**
- அசோகரின் கல்வெட்டுகளில் பயன்படுத்திய வரிவடிவத்திற்கு **அசோகன் பிராமி** என்று பெயர்.
- **சங்க கால அரசியல்**
- சங்க காலத்திற்கான அடித்தளம் இரும்புக் காலத்தின் வேர் கொண்டது.
- இரும்புக் காலத்தில் மக்கள் குழுக்களாக தமது ஆளுகைக்குக்கீழ் கொண்டு வந்தனர்.
- துலைவர்கள் அந்நிலப்பகுதிகளைகத் தமது ஆளுகைக்குகீழ் கொண்டு வந்தனர்.
- இவ்வாறு உருவான தலைவர்களில் இருந்தே வரலாற்றின் தொடக்கக் காலத்தில் வேந்தர்கள் தோன்றினார்கள்
- **வேளிர்கள்** என்போர் சங்க காலத்தின் குறுநிலமன்னர்கள் ஆவர்.
- மௌரியப் பேரரசர் அசோகர் கலிங்கத்தையும் (ஒடியா) ஆந்திரம், கர்நாடகத்ததின் சில பகுதிகளையும் படையெடுத்து வென்றார்.
- தற்காலத்திய ஒடிசா, கர்நாடகம். தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் காணப்படும் அசோகரது கல்வெட்டுகள் தமிழகத்திலும் கேரளத்திலும் காணப்படவில்லை.
- எனவே, மௌரியர்களின் மேலாட்சிக்கு உட்படாத சுதந்திரமான ஆட்சியாளர்களாகத் தமிழக வேந்தர்கள் விளங்கினார்கள்
- **சேரர்:**
- அசோகரின் கல்வெட்டுகளில் **கேரளபுத்திரர்கள்** என்று குறிக்கப்பட்டுள்ள சேரர் தற்காலத்துக் கேரளத்தையும், தமிழ்நாட்டின் மெற்குப் பகுதியையும் ஆட்சிபுரிந்தனர்.
- அவர்களது தலைநகராக வஞ்சியும், துறைமுகப் பட்டினங்களாக முசிறியும், தொண்டியும் இருந்தன.
- தமிழ்நாட்டில் தற்போதுள்ள கரூர்தான் வஞ்சி என்று சிலரும், கேரளத்தில் உள்ள திருவஞ்சைக்களம்தான் வஞ்சி என்று வேறு சிலரும் கூறுகின்றனர்.
- சங்க இலக்கியமான பதிற்றுப்பத்து சேர அரசர்கள் குறித்தும் அவர்களுடைய நாட்டின் எல்லைகளைக் குறித்தும் பேசுகிறது.
- சேரர்கள் பனம்பூ மாலை அணிந்தனர். கரூரை அடுத்த புகளூரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் சேர மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் **கரூரில்** கிடைத்துள்ளன.
- சிலப்பதிகாரத்தின் பாட்டுடைத் தலைவியான கண்ணகிக்குக் கோயில் எழுப்பிய சேரன் செங்குட்டுவன் குறித்து சிலப்பதிகாரம் விரிவாகக் கூறுகிறது.
- சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பது மரபு. வில்லும் அம்பும் சேரர்களின் இலச்சினையாகும்.
- **பனம்பூ** மாலையை அவர்கள் அணிந்தனர்.
- பெரும்சோற்று உதியன் சேரலாதன், இமயவரம்பன் நெழுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் ஆகியோர் சேர மரபின்சிறந்த அரசர்களாவர்.
- சேரன் செங்குட்டுவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன். அவனது இளவலான இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
- செங்குட்டுவனின் படையெடுப்புகளில் அவன் மேற்கொண்ட இமாலயப் படையெடுப்பு குறிப்பிடத்தக்கதாகும்.
- தமிழ்நாட்டில் கற்புக்கரசி கண்ணகி அல்லது பத்தினி வழிபாட்டை செங்குட்டுவன் அறிமுகப்படுத்தினார்.



AKM IAS & NEET ACADEMY

- இமாலயப் படையெடுப்பின்போது பத்தினிசிலை வடிப்பதற்கான கல்லைக்கோண்டு வந்தான்.
- கோயில் குடமுழுக்கு விழாவில் இலங்கை அரசன் இரண்டாம் கயவாகு உள்ளிட்ட பல அரசர்கள் கலந்து கொண்டனர்.
- வேந்தர் எனும்சொல் சேரர், பாண்டியர் ஆகியோரைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.
- **சேரல் இரும்பொறை** எனும் அரசன் தனது பெயரில் நாணயங்களை வெளியிட்டார். சில சேர நாணயங்களில்அவர்களின் சின்னமான வில்லும் அம்பும் பொறிக்கப்பட்டுள்ளன.
- **முக்கியத்துவம் மிகுந்த சேர அரசர்கள்**
- உதயன் சேரலாதன்
- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
- சேரன் செங்குட்டுவன்
- சேரல் இரும்பொறை
- சேர அரச குடும்பத்தில் இரு கிளைகள் இருந்ததெனவும், பொறையர் என்னும்கிளையினர் தமிழ்நாட்டின் கரூர் நகரிலிருந்து ஆட்சி புரிந்தனர் எனவும், பல அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- எட்டு சேர அரசர்கள் குறித்தும் அவர்கள் ஆண்ட பகுதிகள், அவர்களது சாதனைகள் குறித்தும் **பதிற்றுப்பத்து** பேசுகிறது.
- செங்குட்டுவன் கடற்கொள்ளையர்களை இடக்கியதன் மூலம் முக்கியத் துறைமுகமாக (கொடுங்களூருக்கு அருகேயான) முசிறியின் பாதுகாப்பை உறுதிபடுத்தினார் என்றும் கூறப்படுகிறது.
- சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் செங்குட்டுவனின் மாபெரும் வட இந்திய படையெடுப்பு சங்க இலக்கியங்களில் சொல்லப்படவில்லை.
- **சோழர்:**
- காவிரி வடிநிலப்பகுதியையும் தமிழ்நாட்டின் வடபகுதிகளையும் ஆண்ட சோழர்களுக்கு **உறையூர்** தலைநகராக இருந்தது.
- காவிரி ஆறு வங்கக் கடலில் கலக்கும் பூம்புகார் என்ற காவிரிப்பூம்பட்டினம் அவர்களுடைய துறைமுகப்பட்டினமாக விளங்கியது.
- கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற சங்க காலப் புலவர் காவிரிப்பூம்பட்டினம் குறித்துப் **பட்டினப்பாலை** என்ற நெடிய பாடலை இயற்றியுள்ளார்.
- காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த வணிகத்தைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.
- பிற்காலச் சோழர்களின் ஆட்சியில் (பொ. ஆ. பி. 10 முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை) உச்சத்தை எட்டிய பாசனநீர் மேலாண்மைக்குக் கரிசால் சோழன் ஆட்சியில்தான் வித்திடப்பட்டது.
- சோழர்களின் இலச்சினை புலதி. ஆவர்கள் சதுரவடிவிலான செப்பு நாணயங்களை வெளியிட்டனர்.
- ஆவற்றின் முகப்பில் புலியின் உருவமும் மறுபுறத்தில் யானை மற்றும் புனிதச் சின்னங்களும் காணப்படுகின்றன.
- தற்காலத்திய திருச்சி மாவட்டத்திலிருந்து தெற்கு ஆந்திரப்பிரதேசம் வரையிலான பகுதியே சங்க காலத்தில் சோழ நாடு எனப்பட்டது.
- சோழர்களின் தலைநகரம் முதலில் உறையூரிலும் பின்னர் புகாரிலும் இருந்தது. சங்க காலச் சோழர்களில் சிறப்பு வாய்ந்தவன் கரிகால் சோழன்.
- அவனது இளமைக்காலம், போர் வெற்றிகள் குறித்து பட்டினப்பாலை விவரிக்கிறது.
- சேரர்கள், பாண்டியர்கள் பதினொரு குறுநில மன்னர்கள் அடங்கிய பெரிய கூட்டிணைவுப் படைகளை கரிகாலன் வெண்ணிப் போரில் முறியடித்தான்.

AKM IAS & NEET ACADEMY

- ஆவன் மேற்கொண்ட மற்றொரு போர் **வாகைப் பறந்தலைப் போராகும்** அதில் ஒன்பது குறுநில மன்னர்களை மண்டியிடச் செய்தான்.
- காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையை கரிகாலன் அமைத்தான். வேறு பல நீர்ப்பாசன ஏரிகளையும் அவான் வெட்டுவித்தான்.
- சங்க காலத்தில் சோழ அரசு வேங்கட மலைக்ள வரை விரிந்திருந்தது. காவிரி கழிமுகப்பகுதி சோழ நாட்டின் மையப் பகுதியாக விளங்கியது.
- சோழர்களின் துறைமுகமான புகார் இந்தியப் பெருங்கடலின் பல பகுதிகளிலிருந்து வணிகர்களை அதன்பால் ஈர்த்தது.
- பட்டினப் பாலை எனும் பதினென்கீழ்க்கணக்கைச் சேர்ந்த நூல், கரிகாலனின் ஆட்சியின் போது அங்கு சடைபெற்ற வணிக நடவடிக்கைகள் பற்றிய விரிவான செய்திகளை வழங்குகிறது.
- **கல்லணை:**
- இது கற்களால் கட்டப்பட்ட தடுப்பணை ஆகும். பாசனத்திற்காகக் கழிமுகப் பகுதி வழியாக நீரைத் திருப்பிவிடுவதற்காக காவிரி ஆற்றின் குறுக்கே இவ்வணை கட்டப்பட்டது.
- **முக்கியத்துவம் வாய்ந்த சோழ அரசர்கள்**
- இளஞ்சேட்சென்னி
- கரிகால் வளவன்
- கோச்செங்கணான்
- கிள்ளிவளவன்
- பெருநற்கிள்ளி
- கரிகாலனின் ஆட்சியின் போது இங்கு நடைபெற்ற ஆரவாரமான வணிக நடவடிக்கைகள் குறித்துக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் விரிவாக விளக்குகிறார்.
- இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாலன் சங்ககால சோழ அரசர்களில் தலையானவராக அறியப்படுகிறார்
- பெருநற்கிள்ளி எனும் பெயருடைய மற்றொரு அரசன் வேத வேள்வியான ராஜசூய யாகத்தை நடத்தியுள்ளார்.
- கரிகாலனின் மறைவைத் தொடர்ந்து உறையூர் முற்றும் புகார் அரச குடும்பத்தினரிடையே வாரிசுரிமை தொடர்பான மோதல் ஏற்பட்டிருக்கிறது.
- **பாண்டியர்**
- பாண்டியர்கள், குறித்தும் அசோகரது கல்வெட்டுகளில் குறிப்புகள் உள்ளன.
- மதுரையைத் தலைநகராகக் கொண்டு தென்தமிழகத்தை அவர்கள் ஆண்டனர்.
- மாங்குளத்தில் கண்டறியப்பட்ட தமிழ் பிராமி கல்வெட்டுகள் **பாண்டியன் நெடுஞ்செழியனைக்** குறிப்பிடுகிறது.
- நெடியோன், முடத்திருமாறன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி ஆகியோர் குறிப்பிடத்தக் பாண்டிய மன்னர்கள்.
- பாண்டியர்களின் இலச்சினை மீன் ஆகும்.
- தற்காலத்திய தெற்கு தமிழ்நாட்டில் சங்ககாலப் பாண்டியர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களின் தலைநகரம் மதுரை.
- ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், கோவலன் கொல்லப்படவும், கண்ணகி சினமுற்று மதுரையை எரிக்கவும் காரணமாக இருந்தவர்.

♣ மற்றொருவர் தலையாலங்கானத்துச் சேருவென்ற நெடுஞ்செழியன், நக்கீரன் மற்றும் பாங்குடி மருதனார் ஆகிய புலவர்களால் போற்றப்பட்டவர்.

♣ செழிப்பான துறைமுகமான கொற்கை பற்றியும், பாண்டியந ாட்டின் சமூக பொருளாதார நிலைமைகள் குறித்தும் மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில் விவரித்துள்ளார்.

♣ களப்பிரர்கள் படையெடுப்பின் விளைவாக சங்க காலப்பாண்டியர்கள் ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

♣ நெடுஞ்செழியன் மிகவும் புகழ்பெற்ற போர்வீரராகப் போற்றப்படுகிறார். அவர் தலையாலங்கானம் என்னுமிடத்தில் சேரர், சோழர் ஐந்து வேளிர்குலத் தலைவர்கள் ஆகியோரின் கூட்டப் படையைத் **தலையாலங்கானம்** என்னுமிடத்தில் தோற்கடித்தார்.

♣ அவர் **கொற்கையின் கலைவன்** எனப் போற்றப்படுகின்றார்.

♣ பாண்டிய நாடு முத்துக்குளிப்புக்குப் பகழ் பெற்றதாகும்.

♣ ஆவர்களின் நாணயங்கள், ஒருபுறத்தில் யானையின் வடிவத்தையும் மற்றொதுபுறத்தில் மீனின் உருவத்தையும் கொண்டுள்ளன.

♣ முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய அரசர் பல வேதவேள்விகளை நடத்தியதைக் கொண்டாடும் விதமாக நாணயங்களை வெளியிட்டார்.

♣ **முக்கியத்துவம் வாய்ந்த பாண்டிய அரசர்கள்**

♣ நெடியோன் முதுகுடமிப் பெருவழுதி

♣ நன்மாறன் நெடுஞ்செழியன்

♣ **மூவேந்தர்கள் சூட்டிக்கொண்ட பட்டங்கள்**

| சேரன் | சோழன் | பாண்டியன் |
|---|---|---|
| ஆதவன் | சென்னி | மாறன் |
| குட்டுவன் | செம்பியன் | வழுதி |
| வானவன் | கிள்ளி | செழியன் |
| இரும்பொறை | வளவன் | தென்னர் |

♣ **அரசுரிமைச் சின்னங்கள்**

♣ செங்கோல் (Scepter), முரசு (Drum), வெண்கொற்றக்குடை (White umbrella) ஆகியன அரசு அதிகாரத்தின் சின்னங்களாகும்.

♣ **மூவேந்தர்கள்**

| **மூவேந்தர்** | **மாலை** | **துறைமுகம்** | **தலைநகர்** | **சின்னம்** |
|---|---|---|---|---|
| சேரர் | பனம்பூ | முசிறி மற்றும் தொண்டி | வஞ்சி மற்றும் கரூர் | வில், அம்பு |
| சோழர் | அத்திப்பூ | புகார் | உறையூர் மற்றும் புகார் | புலி |
| பாண்டியர் | வேப்பம்பூ | கொற்கை | மதுரை | இரண்டு மீன்கள் |

♣ **குறுநில மன்னர்கள் ஆய், வேளிர், கிழார்**

♣ **ஆய்** என்னும் பெயர் பழந்தமிழ்ச் சொல்லான ஆயர் (பொருள்: ஆநிரை மேய்ப்போர்) என்ற சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும்.

♣ சங்க காலத்து ஆய் மன்னர்களில் முக்கியமான வர்களின் பெயர்கள்அந்திரன், திதியன், நன்னன் ஆகியனவாகும்.

♣ வேளிர்கள்- வேளாளர்- பண்டைய காலத் தமிழகத்தில் ஆட்சி செய்த நிலவுடைமைப் பிரிவினர் ஆவர்.

♣ புகழ்பெற்ற வேளிர்கள் கடையெழு வள்ளல்களான பாரி, காரி, ஓரி, பேகன், ஆய், அதியமான, நள்ளி ஆகியோராவர்.

♣ கிழார் என்போர் கிராமங்களின் அல்லது ஒரு சிறிய பகுதியின் தலைவராக இருந்து, பின்னர் நாடு என்றறியப்பட்ட நிர்வாகப் பிரிவின் தலைவராவர்.

♣ இவர்கள் குறிப்பிட்ட இடங்களில் வாழும் பழங்குடிச் சமூகங்களின் தலைவர்களாகவர்.

♣ வேந்தர் எனப்பட்டோர் மிகப் பெரும் வளமான நிலப் பகுதியை கட்டுப்படுத்திய அரசர்களாவர்.

♣ எண்ணிக்கையில் அதிகமாக இருந்து வேளிர்கள், பல்வேறு புவியியல் தன்மைகளைக் கொண்ட, குறிப்பாக மூவேந்தர்களின் வளம் நிறைந்த பகுதிகளின் இடையே அமைந்திருந்த மலைப்பாங்கான காட்டுப் பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர்.

♣ ஆட்சிப்குதிகளை விரிவுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட போர்களே புறத்திணை இலக்கியங்களின் முக்கிய பாடுபொருளாக இருக்கின்றன.

♣ வணிகப் பெருவழிகளிலும், காவிரிப்பூம்பட்டினம் துறைமுகத்திலும் வரி வசூலிக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. மலையகப் பகுதிகளிலிருந்தும், முசிறி துறைமுகத்திலிருந்துமே சேர அரசர் வரி பெற்றனர் என அறிய முடிகின்றது.

♣ **வேந்தரின் எழுச்சி:**

♣ இரும்புக்காலகட்டத்தில் (பொ. ஆ. மு. 1100- 300) தோன்றிய தலைவர்களிலிருந்து தொடக்க வரலாற்று கால வேந்தர்கள் உருவாயினர்.

♣ தலைவர்களில் ஒரு சிலர் மேய்ச்சல் நிலங்களின் மீதும்,வேளாண் நிலங்களின் மீதும் தங்கள் முழுமையான கட்டுப்பாட்டை வைத்ததன் மூலம் உயர்நிலையை (வேந்தர்) அடைந்தனர்.

♣ அசோகர் கல்வெட்டுகளில் **சத்யபுத்ரா** என்று குறிப்பிட்டுள்ள அதியமான நாளடைவில் வலிமை குன்றியதால் சேர, சோழ, பாண்டிய வேந்தர்களைப் பொல அரசன் எபன்ற நிலையை அடைய இயலவில்லை.

♣ கிழார்களையும், வேளிர் குலத்தலைவர்களையும் வேந்தர்கள் அடிபணியச் செய்ததோடு தங்களுக்குள்ளும் பேரிட்டுக் கொண்டனர்.

♣ **சங்க கால ஆட்சியமைப்பு அரசுரிமை:**

♣ **அரசுரிமை** பரம்பரையானது. அரசர் “**கோ**” என அழைக்கப்பட்டார்.

♣ அது கோன் எனும் சொல்லின் சுருக்கமாகும். வேந்தன், கோன், மன்னன், கொற்றவன், இறைவன் எனும் வேறு பெயர்களாலும் அரசர் அழைக்கப்பட்டார்.

♣ பொதுவாக ஆட்சி புரிந்துகொண்டிருக்கும் அரசரின் மூத்தமகனே அடுத்து அரியணை ஏறினார்.

♣ பட்டம் சூட்டப்படும் விழா **‘அரசுக்கட்டிலேறுதல்’** அல்லது முடிசூட்டுவிழா எனப்பட்டது.

♣ பட்டத்து இளவரசர் கோமகன் எனவும் அவருக்கு இளையோர் இளங்கோ, இளஞ்செழியன், இளஞ்சேரல் எனவும் அழைக்கப்பட்டனர்.

♣ அரசர் தினந்தோறும் அரசவையைக் (நாளவை) கூட்டினார்.

♣ நிலவரியே வருவாயின் முக்கிய ஆதாரமாகும்.

♣ இதைத்தவிர அரசு சுங்கவரி, கப்பம், அபராதம் ஆகியவற்றையும் வசூல் செய்தது.

♣ அரசர்களும் வீரர்களும் வீரக்கழல் அணிந்திருந்தனர். அதன்மீது அணிந்திருப்பவரின் பெயரும், அவரின் சாதனைகளும் பொறிக்கப்பட்டிரந்தன.

♣ புறமுதுகில காயமடைவது அவமானமாகக் கருதப்பட்டது.

♣ போரின் போது புறமுதுகில் காயம்பட்டதற்காக அரசர்கள் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து உயிரை மாய்த்துக்கொண்ட நிகழ்வுகளும் நடந்தன.

♣ **சுபை:**

♣ அரசருடைய அரசவை என அழைக்கப்பட்டது

♣ அரசர் அரியணை என்றழைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்வது வழக்கும்.

♣ அரசர்கள் ஐந்து விதக் கடமைகளைச் செய்தனர், கல்விகற்பதை ஊக்குவிப்பது, சடங்குகளை நடத்துவது, பரிசுகள் வழங்கவது, மக்களைப் பாதுகாப்பது, குற்றவாளிகளை தண்டிப்பது ஆகியன அவ்வைந்து கடமைகளாகும்.

♣ தூதுவர்கள் அரசரால் பணியில் அமர்த்தப்பட்டனர்.

♣ அரசருக்கு நிர்வாகத்தில் பல அதிகாரிகள் உதவி செய்தனர்.

♣ அவர்கள் **ஐம்பெருங்குழு** (ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு) **எண்பேராயம்** (எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழு) என இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்துனர்.

♣ **படை:**

♣ அரசருடைய படை என்று அழைக்கப்பட்ட இராணுவம் நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது.

♣ அவை காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்பனவாகும்.

♣ படைத்தலைவர் **'தானைத் தலைவன்'** என அழைக்கப்பட்டார்.

♣ முக்கியமான ஆயுதங்கள் வாள். கேடயம், தோமாரம் (எறியூட்டு) ஈட்டி, வில், அம்பு ஆகியனவாகும்.

♣ தோமாரம் எனப்படுவது சற்று தொலைவில் இருந்து எதிரியின் மீது ஏவுகணையைப் போன்று வீசப்படுவதாகும்.

♣ ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த இடம் **'படைக்கொட்டில்'** என அழைக்கப்பட்டது.

♣ **சட்டமும் நீதியும்**

♣ அரசரே இறுதியான மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆவார்.

♣ தலைநகரில் நீதிமன்றம் **அவை** என்றழைக்கப்பட்டது

♣ திராமங்களில் 'மன்றங்கள்' என்பவை தீர்ப்பு வழங்கப்படும்

♣ உரிமையியல் (Civil) வழக்குகளில் பின்பற்றப்பட்ட வழிமுறையின் படி நாகப் பாம்பு இருக்கும் ஒரு பானைக்குள் வாதி தனது கையை நுழைக்க வேண்டும். நாகம் அவரைத் தீண்டினால் குற்றவாளியாகக் கருதப்பட்டு அவருக்கு தண்டனை வழங்கப்படும். பாம்பு அவரைத் தீண்டவில்லை எனில் அவர் குற்றமற்றவர் எனக் கருதப்பட்டடு விடவிக்கப்படுவார்.

♣ தண்டனைகள் எப்போதும் கடுமையாகவே இருந்தன. திருட்டு வழக்குகளில் மரணதண்டனை வழங்கப்பட்டது. தலையை சீவுதல், உடல் உறுப்புகளைத் துண்டித்தல், சித்திரவதை செய்வது, சிறையில் அடைப்பது, அபதாரம் விதிப்பது ஆகியவை குற்றங்களுக்காக வழங்கப்பட்ட தண்டனைகாளகும்.

♣ **உள்ளாட்சி நிர்வாகம்**

♣ ஒட்டுமொத்த ஆட்சிப் பகுதியும் **'மண்டலம்'** என்றழைக்கப்பட்டது.

♣ மண்டலங்கள் நாடுகளாகப் பிரிக்கப்பட்டன.

♣ ஊர் என்பது கிராமம் ஆகும். அவை பேரூர் (பெரிய கிராமம்) சிற்றூர் (சிறிய கிராமம்), மூதூர் (பழமையான கிராமம்) என அழைக்கப்பட்டன. கடற்கரையோர நகரங்களுக்குப் பட்டினம் எனப் பெயர். 'புகார்' என்பது துறைமுகங்களைக் குறிக்கும் பொதுவான சொல்லாகும்.

♣ **முக்கிய நகரங்கள்**

♣ புகார், உறையூர், கொற்கை, மதுரை, முசிறி, வஞ்சி அல்லது கரூர், காஞ்சி ஆகியன.

♣ வானவரம்பன், வானவன், குட்டுவன், இரும்பொறை, வில்லவர் போன்ற விருதப்பெயர்களை சேர மன்னர்கள் சூட்டிக் கொண்டனர்.

♣ சென்னி, வளவன், கிள்ளி என்பன சோழர்களின் பட்டப் பெயர்களாகும்.

♣ பாண்டியர்களின் சின்னம் மீன், சோழர்களுக்கு புலி, சேரர்களுக்கு வில் அம்பு.

♣ ஆட்சியில் அரசருக்கு உதவியாக பெரும்திராளான அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் நைந்து குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தனர். அமைச்சர்கள், அந்தணர்கள், படைத்தலைவர்கள், தூதவர்கள், ஒற்றர்கள்.

♣ புகார் துறைமுகத்தில் நியமிக்கப்பட்டிருந்து சங்க அதிகாரிகள் பற்றி பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

♣ **சங்க கால சமூகநிலை**

♣ முடிவில்லாத போர்கள் சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் தோன்றுவதற்கான சூழ்நிலைகள் உரவாவதற்கு காரணமாய் அமைந்திருக்கலாம்.

♣ ஆடிமைகள் பற்றிய சில குறிப்புகளும் காணப்படுகின்றன.

♣ மதுரைக்காஞ்சி பகல் மற்றும் இரவு நேரக் கடைவீதிகளையும் (நாளங்காடி, அல்லங்காடி) அங்கு விற்பனையாகும் பலவகைப்பட்ட கைவினைப் பொருள்கள்பற்றியும் பேசுகிறது.

♣ தொலைதூர நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் தமிழகத்தில் தங்கியிருந்த வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

♣ மகதக் கைவினைஞர்கள், மாளவ உலோகப் பணியாளர்கள், மராத்திய எந்திரப் பொறியாளர்கள் பொன்றோர் தமிழகக் கைவினைஞர்களோடு கூட்டுறவு முறையில் இணைந்து பணியாற்றியதாக **மணிமேகலை** குறிப்பிடுகின்றது.

♣ தமிழ்- பிராமி கல்வெட்டுகளில் வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன் போன்ற சொற்கள்இடம் பெற்றுள்ளன.

♣ உப்பு வணிகர்கள் உமணர் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் மாடுகள் பூட்டியவ ண்டிகளில் குடும்பத்தோடு வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

♣ சாத்து என்னும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களைக் குறிப்பதாகும்.

♣ ரோமானியத் தங்க, வெள்ளி நாணயக்குவியல்கள் கோயம்புத்தூர் பகுதியிலும் தென்னிந்தியாவின் ஏனைய பகதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளன.

♣ நான்கு வகை சாதிகள்- அரசர், அந்தணர், வணிகர்,வேளாளர் குறித்து தொல்காப்பியம் கூறுகிறது.

♣ ஆளும் வர்க்கத்தினர் அரசர் என்றழைக்கப்பட்டனர். சங்ககால அரசியல் மற்றும் சமய வாழ்க்கயைில் அந்தணர் முக்கிய பங்கு வகித்தனர்.

♣ வணிகர்கள் வணிகத் தொழிலில் ஈடுபட்டனர். வேளாளர்கள் பயிர்த் தொழில் செய்தனர்.

♣ பழங்குடி இனத்தவர்களான பரதவர், பாணர், எயினர், கடம்பர், மறவர், புலையர் போன்றோரும் சங்க கால சமுதாயத்தில் அங்கம் வகித்தனர்.

♣ பண்டைக்கால தொல்பழங்குடிகளான தோடர்கள், இருளர்கள், நாகர்கள். வேடர்கள் பொன்றோரும் இக்காலத்தில் வாழ்ந்தனர்.

♣ சங்க காலத்தின் முதன்மைக்கடவுள் முருகன் அல்லது சேயோன். **தமிழ்க்கடவுள்** என அவர் போற்றப்பட்டார்.

♣ முருகன் தொடர்பான விழாக்கள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

♣ மாயோன் (விஷ்ணு), வெந்தன் (இந்திரன்), வருணன், கொற்றவை போன்ற கடவுள்களையும் சங்க காலத்தில் வழிபட்டனர்.

♣ போர்களத்தில் வீரனது ஆற்றலையும் தியாகத்தையும் போற்றும் வகையில் அவனது நினைவாக வீரக்கல் நடப்பட்டது.

♣ தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மறைந்த வீரர்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய வீரக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய நீத்தோர் வழிபாடு மிகவும் தொன்மையானதாகும்

- **சிறுபொழுது**
- 1. மாலை - கதிரவன் மறைந்த பிறகு இரவுப்பொழுதின் முற்பகுதி
- 2. யாமம் - நள்ளிரவு , இரவுப்பொழுதின் நடுப்பகுதி
- 3. வைகறை - கதிரவன் தோன்றுவதற்கு முன் இரவுப் பொழுதின் இறுதிப்பகுதி
- 4. காலை - கதிரவன் தோன்றியதற்குப் பின் பகற்பொழுதுதின் முற்பகுதி விடியற்காலம்
- 5. நண்பகல் - பகற்பொழுதின் நடுப்பகுதி
- 6. ஏற்பாடு - பகற்பொழுதின் இறுதிப்பகுதி, கதிரவன் மறைகின்ற காலம்.
- அவ்வையார், நச்செள்ளையார், காக்கைபாடினியார் போன்ற பெண் புலவாக்ள இக்காலத்தில் வாழ்ந்து தமிழ் இலக்கியத்திற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.
- பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர்.
- சமுதாயத்தின் மேல்மட்டத்தில் சதி என்ற உடன்கட்டையேறும் வழக்கம் பின்பற்றப்பட்டது
- பாணர், விறலியர் போன்ற நாடோடிப் பாடகர்கள் அரசவைகளை மொய்த்த வண்ணம் இருந்தனர்.
- கணிகையர் நடனத்தில் சிறந்து விளங்கினர்.
- கூத்து மக்களின் சிறந்த பொழுதுபோக்காக திகழ்ந்தது.
- அந்தணர்கள் என்று அறியப்பட்ட பூசாரிகளும்இருந்தணர். கைவினைத் தொழில் புரிந்த பானை செய்வோர், உலோகவேலை செய்வோர் போன்ற பிரிவினர் சமூகத்தில் இருந்தனர்.
- வட இந்தியாவில் காணப்பட்ட சாதி அமைப்பு தமிழகத்தில் வேரூன்றவில்லை.
- மாறாக ஐவகை நிலச்சூழல் மற்றும் செய்தொழில் அடிப்படையில் சமூகக் குழுக்களாக் காணப்பட்டனர்.
- இசைவாணர்களாகிய பாணர்கள், செல்வம் படைத்தோரைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தினர்.
- **பெண்கள்:**
- சங்க இலக்கியங்களில் தாய், தலைவி, செவிலித்தாய், தோழி என்று பற்பல இடங்களில் மகளிர் குறித்த செய்திகள் பலவாறு கூறப்படுகின்றன.
- வெண்ணி என்ற ஊரைச் சார்ந்த வெண்ணிக்குயத்தியார் பெண்பாற் புலவராகக் கண்டறியப்படுகிறார்.
- மகளிர் திணைப்புனம் காத்தல் குறித்தும், உமணர் குல மகளிர் உப்பு விற்றது குறித்தும் சங்கச் செய்யுள்கள் குறிப்பிடுகின்றன.
- **திணை (நிலம்) சார்ந்த சங்க காலச் சமூகம்**
- நிலம் ஐந்து திணைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- மண்ணின் வளத்தைப் பொறுத்து நிலங்கள் வகைப்படுத்தப்பட்டன. மருதநிலம் **மென்புலம்** (நன்செய்) என அழைக்கப்பட்டது.
- அதில் நெல்லும் கரும்பும் விளைந்தன.
- நெய்தல் தவிர மற்றவை வன்புலம் (புன்செய்) என அழைக்கப்பட்டன. அவற்றில் தானியங்களும் பருப்பு வகைகளும் விளைந்தன.
- பெரும்பொழுது என்பது ஒரு ஆண்டின் கூறுபபாடு இவை ஆறு வகைப்படும்
- ஓவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு திங்கள் கால அளவுடையது.
- சிறுபொழுது என்பது ஒரு நாளின் ஆறு கூறுகள்
- **பெரும்பொழுது**
- **காலம்** **திங்கள்**
- **1.** கார் - ஆவணி, புரட்டாசி,

- 2. குளிர் - ஐப்பசி, கார்த்திகை
- 3. முன்பனி - மார்கழி, தை
- 4. இளவேனில் - மாசி, பங்குனி
- 5. முதுவேனில் - ஆனி, ஆடி

| **கருப்பொருள்** | **குறிஞ்சி** | **முல்லை** | **மருதம்** | **நெய்தல்** | **பாலை** |
|---|---|---|---|---|---|
| **தெய்வம்** | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| **மக்கள்** | சிலம்பன், வெற்பன், பொருப்பன், குறவர், குறத்தியர், கானவர் | குறும்பொறை, நாடன், தோன்றல், கொடிச்சி, ஆய்ச்சிரியர், இடையர், இடைச்சியர். | ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி, கடயர், கடைசியர், உழவர், உழத்தியர் | துறைவன், சேர்ப்பன், பரதவர், பரத்தியர், நுளையர், நீர்க்காக்கை | மீளி, விடலை, காளை, எயிற்றி, எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர். எருவை |
| **பறவை** | கிளி, மயில் | கானக்கோழி | நாரை, நீர்க்கோழி, அன்னம், குருகு | நீர்க்காக்கை | கழகு, பருந்து, புறா |
| **விலங்கு** | புலி, கரடி, சிங்கம்,யானை | முயல், மான் | எருமை, நீர்நாய் | சுறா | வலியிழந்த புலி, செந்நாய் |
| **ஊர்** | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| **நீர்** | அருவிநீர், சுனைநீர் | கன்யாறு | மனைக்கிணறு, பொய்கை, யாறு | உவர்நீர்க்கேணி, உவர்க்கழி | நீர் வற்றிய கனை, நீர் வற்றிய கிணறு |
| **பூ** | குறிஞ்சி, காந்தள், வேங்கை | முல்லை, குல்லை, பிடவம்,தோன்றி | தாமரை, கழுநீர், குவளை | தாழை, நெய்தல், புன்னை | மரா, குரா, பாதிரி |
| **மரம்** | அகில், சந்தனம், வேங்கை | கொன்றை, குறுந்து, காயா | காஞ்சி, மருதம், வஞ்சி | புன்னை, தாழை | இருப்பை, ஓமை, உமிஞை, பாலை |
| **உணவு** | மலைநெல், திணை, மூங்கிலரிசி | வரகு, சாமை, முதிரை | செந்நெல், வெண்ணெலரிசி | மீனும், உப்பு விற்றதால் பெறும்பொருள் | வழிப்பறி செய்த பொருள், கொள்ளையடித்த பொருள் |
| **பறை** | வெறியாட்டுப்பறை, தொண்டகப்பறை, | ஏறுகோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன்கோட்பறை நாவாய்ப்பம்பை | துடி, ஊரெறிபறை, கோர்ப்பறை |
| **பண்** | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் (சாதாரி) | மருதப்பண் | நெய்தல் பண் (செவ்வழி) | பாலைப்பண் (பஞ்சுரம்) |
| **யாழ்** | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலையாழ் |
| **தொழில்** | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், வெறியாடல் தினைகாத்தல் | வரகு விதைத்தல், களை பறித்தல், ஆநிரை மேயத்தல், குழலூதல். | நெல்லரிதல், களை பறித்தல், கடா விடுதல் | மீன்பிடித்தல், உப்பு விளைத்தல் | நிரை கவர்தல், சூறையாடல், வழிப்பறி செய்தல் |

- **சங்க காலப் பொருளாதாரம்**
- **வேளாண்மை உற்பத்தி**

- சங்க கால மக்களின் உயிர்வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதில் வேளாண்மையே முதலிடத்தில் இருந்தது.
- செந்நெல், வெண்ணெல், ஐவனநெல் எனப் பலவகையான நெல்கள் குறித்து இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன..
- ஆதிச்சநல்லூரிலும், பொருந்தல் என்ற இடத்திலும் மேற்கொண்ட அகழாய்வுகளில் தாழிகளுடன் நெல்லும் கிடைத்துள்ளது.
- வளப்பகுதிகளில், இடம்விட்டு இடம் மாறி சாகுபடி செய்யும் முறை **புனம்** எனப்பட்டது
- **மட்கலங்கள் செய்தல்**
- கரியநிறத்தவை, செந்நிற வண்ணம் பூசிய வெள்ளைக் கோடுகள் வரையப்பட்டவை. கருப்பு- சிவப்பு நிறத்தவை என்று பலவிதமான மட்கலங்கள் தயாரிக்கப்பட்டன.
- **இரும்பு உருக்குத் தொழில்**
- கொடுமணலிலும், குட்டூரிலும் இரும்பு உருக்கு உலைகள் அகழாய்வில் வெளிப்பட்டுள்ளன.
- **அணிகலன்கள்:**
- செவ்வந்திக்கல் (Amethyst) செம்மனிக்கல் (Carnelian) போன்றவற்றில் இருந்தும் அழகிய வேலைப்பாடுடைய அணிகலன்கள் செய்யப்பட்டன
- பெருங்கற்கால நினைவுச் சின்னங்களில் பொறிப்பு (Etching) வேலைகள் நிரம்பிய செம்மணிகளும் காணப்படுகின்றன.
- ரோமானியர்களின் நாணயங்களைக் கொண்டு நகைகள் செய்யப்பட்டன.
- கேரளத்தின் பட்டணத்தில் பொன்னை உருக்கும் உலைகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
- சிலிக்கா மற்றும் பிற பொருள்களை உலையிலிட்டு உருக்கி நீண்ட சிறிய குழல்களாக்கிப் பின்னர்அவற்றைச் சிறுசிறு மணிகளாக நறுக்கினர்.
- அரிக்கமேட்டிலும், கடலுருக்கு அருகில் **குடிக்காடு** என்ற ஊரிலும் கண்ணாடி மணி செய்யும் தொழிலகங்கள் இருந்துள்ளன.
- பாம்பன் கடல்பகுதிகளில் சங்குகளை சேகரித்தனர். கைவினைக் கலைஞர்கள் அவற்றை அழகுற அறுத்து எழிலான வளையல்களைச் செய்தனர்.
- நூல் நூற்கும் கதிர்களும், துண்டுத் துணிகளும் கொடுமணலில் கிடைத்திருக்கின்றன.
- கலிங்கம் மற்றும் பிற வகைத் துணிவகைகள் குறித்து இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன.
- பெரிப்ளஸ் என்ற நூலில் தமிழகத்தில் துணிகள் நெய்யப்பட்டது குறித்து தகவல் உள்ளது.
- பருத்தியிலிருந்து நூலை எடுப்பதற்கு நூல் நூற்கும் கதிர் பயன்படுகிறது.
- தமிழ் பிராமி கல்வெட்டுகளில் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் ஆளப்படுகின்றன.
- பொன் வணிகர்கள், துணி வணிகர்கள், உப்பு வணிகர்கள் என்று குறிப்பிட்ட பண்டத்தை மட்டும் வியாபாரம் செய்த வணிகர்களும் இருந்தனர்.
- உப்பு வணிகர்கள் **உமணர்கள்** எனப்பட்டனர். அவர்கள் தம் குடும்பத்தோடு மாட்டு வண்டியில் சென்று வணிகம் செய்தனர்.
- **போக்குவரத்து முறைகள்:**
- நன்கு வடிவமைக்கப்பட்ட யவணர்களின் கப்பல், தங்கம், பிற உலோகக் காசுகளுடன் முசிறித் துறைமுகத்திற்கு வந்து மிளகை ஏற்றிச் சென்றதாக அகநானூற்றின் 149ஆம் செய்யுள் கூறுகிறது.
- கடற்பயணம் மேற்கொள்ள உதவிய கலம், பரி, ஓடம், தோணி, தெப்பம், நாவாய் பொன்றவை கடற்போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டது குறித்து இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

♣ பண்டமாற்றுமுறை மூலமாகவே மக்களிடையே பெருமளவில் பரிமாற்றம் நடைபெற்றது. அரிசியைக் கொடுத்து மீனைப் பெற்றனர்.

♣ உப்பு விலைமதிப்புடையதாகக் கருதப்பட்டது. எனவே ஒர குறிப்பிட்ட அளவு உப்புக்கு அதே அளவு அரிசி பரிமாறிக்கொள்ளப்பட்டது.

♣ ரோமானியக் கப்பல்கள் பருவக்காற்று வீசும் சமயத்தில் மேலைக்கடலான அரபிக்கடலைக் கடந்து தமிழகக் கடற்கரைகளுக்கு வந்தன.

♣ மிளகு போன்ற நறுமணப் பொருள்களும், யானைத் தந்தம், நவமணிகள் உள்ளிட்ட அரிய பொருள்களும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆயின.

♣ தங்கம், வெள்ளி, செம்பு உள்ளிட்ட உலோகங்களும் இறக்கமதி செய்யப்பட்டன.

♣ கிரேக்க, ரோமானிய, மேற்கு ஆசிய மக்கள் உள்ளிட்ட மேற்கத்தியர்கள் **யவனர்** என்று அழைக்கப்படுகின்றனர்.

♣ யவனர் என்னும் சொல் கிரேக்கப் பகதியான '**அயோனியா**' விலிருந்து வந்தது.

♣ **தமிழ்நாட்டிலிருந்து செங்கடல் கரைக்கு**

♣ செங்கடல் கடற்கரையில் உள்ள **பெர்னிகே** துறைமுகத்தில் ஏழரை கிலோ மிளகு இருந்த இந்தியப் பானையும், தேக்கு மரப்பலகைத் துண்டுகளும், தமிழ் பிராமி எழுத்துகள் பொறித்த (தமிழக) பானை ஓடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன.

♣ செங்கடல் கடற்கரையில் பெர்னிகே துறைமுகத்திற்கு வடபகுதியில் உள்ள இன்னொரு துறைமுகம் **குசேர் அல் காதிம்** என்பதாகும்

♣ இந்த இடத்தில் தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட மூன்று சுடுமண் பாண்டத் துண்டுகள் கண்டறியப்பட்டன.

♣ அவற்றில் பனை ஓறி, கண்ணன் (கணன்), சாத்தன் (சாதன்) என எழுதப்பட்டுள்ளது.

♣ **'பெரும் பத்ததன் கல்'** என்ற பெயரில் தாய்லாந்து நாட்டில் உள்ள **குவான் லுக் பாட்** என்ற இடத்தில் அரிய கல் ஒன்ற கிடைத்துள்ளது.

♣ இக்கல், பெரும்பத்தன் என்பவரால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மேலும் அவர் ஒர பொற்கொல்லராக இருக்க வேண்டும்.

♣ அந்தக் கல், தங்கத்தின் தரத்தை அறிய உதவும் உரைகல் ஆகும்.

♣ தென்கிழக்கு ஆசியாவைத் தமிழ் இலக்கியங்கள் **'சுவர்ணமுமி'** என்று குறிப்பிடுகின்றன.

♣ **பட்டணம், கேரளா:**

♣ கேரளத்தின் எர்ணாகுடம் மாவட்டத்தில் உள்ள வடக்குப் பரவூர் என்ற ஊரை ஒட்டிய வடக்கேகரா என்ற சிற்றூரின் அருகே பட்டணம் அமைந்துள்ளது.

♣ மேலை நாடுகளோடும், கீழை நாடுகளோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்த பழங்காலத் துறைமுகம்தான் பட்டணம்.

♣ **கொடுமணல்:**

♣ கொடுமணல், தமிழ்நாட்டில் ஈரோடுக்கு அருகில் உள்ளது. சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் கொடுமணம் தான் இவ்வூர் எனக் கருதப்படுகிறது.

♣ பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளும் இரும்பு, மணிக்கற்கள், சங்கு வேலைப்பாடுகள் குறித்த சான்றுகளும் இங்கே கிடைத்துள்ளன.

♣ தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட 300 க்கும் மேற்பட்ட மட்கலப் பொறிப்புகள் இந்த ஊரில் கிடைத்துள்ளன.

♣ **கீழடி:**

♣ மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சிலைமான் என்ற ஊருக்கு அருகில் கீழடி உள்ளது. இங்கே பள்ளிச் சந்தைத்திடல் என்று அழைக்கப்படும் பரந்த தென்னந்தோப்பில் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் மேற்கொண்ட அகழாய்வுகளின் மூலம் சங்க காலத்து நகரம் புதையுண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

♣ செங்கற் கட்டுமானங்கள், கழிவுநீர் வழிகள், தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட மட்கல ஓடுகள், செம்மணிக்கற்களாலான அணிகள், முத்து, இரும்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், கண்ணுக்கு மை தீட்டும் செப்புக் கம்பி போன்றவை கண்டறியப்பட்டுள்ளன.

♣ ஐந்திணைகளுக்குப் உரிய வழிபாட்டு கடவுள்களைத் தொல்காப்பியம் காட்டுகிறது. குறிஞ்சிக்கு முருகன், முல்லைக்குத் திருமால், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன், பாலைக்குக் கொற்றவை என்று தொல்காப்பியர்.

♣ எனினும் மக்கள் வீரமரணம் எய்திய வீரர்களையும், தமது குல மூதாதையர்களையும் அதிக அளவில் வழிபட்டனர். இயற்கைக்கு மீறிய ஆற்றல் கொண்ட அணங்கு குறித்துச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

♣ குகைகளில் காணப்படும் தமிழ் பிராமி கல்வெட்டுகள் மூலம் சமண சமயம் வழக்கில் இருந்தமை தெரிகிறது.

♣ **நுண்கலைகள்:**

♣ சங்க காலத்தில் பலவகையான கலைகளும் செழித்திருந்தன. சமய சடங்குகளின் போது நிகழ்த்தப்படும் ஆட்டங்களில் ஒரு வகைக்கு **தெவறியாட்டம்** என்று பெயர்.

♣ மகளிர் தம் கண்களுக்கு மைதீட்டுவதற்குச் செம்பினால் ஆன மெல்லிய குச்சிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

♣ இதனால் தங்கள் தோற்றப் பொலிவிலும் அவர்கள் அக்கறை கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது.

♣ **வணிகம்:**

♣ **இக்காலப்பகுதியில்** தமிழகம் மேற்கொண்ட விரிவான மற்றும் இலாபகரமான வெளிநாட்டு வணிகம், தமிழ்மக்கள் மிகச் சிறந்த கடலோடிகள் என்பதை மெய்ப்பிக்கின்றது.

♣ பண்டமாற்று முறை பரவலாக வழக்கத்தில் இருந்தது.

♣ மதுரையில் **'கலங்கரை இலங்குசுடர்'** எனும் ஒளிவிளக்குக் கோபுரங்கள் இருந்தன.

♣ **அல்லங்காடி** எனப்படும் மாலைநேரச் சந்தையும் இருந்துள்ளன.

♣ **மலபார் கருமிளகு:**

♣ எகிப்து அரசன் **இரண்டாம் ராம்செஸின்** பதப்படுத்தப்பட்ட உடல் திறக்கப்பட்டபோது. தொல்லியல் அறிஞர்கள் அவருடைய நாசியினுள்ளும் அடிவயிற்றிலும் கருமிளகுக்கதிர் அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர்.

♣ இவ்வாறு பதப்படுத்தி உடலைப் பாதுகாப்பது பண்டைய நாட்களில் பின்பற்றப்பட்ட முறையாகும்.

♣ **முக்கியத் துறைமுகங்கள்**

♣ முசிறி, தொண்டி, கொற்கை

♣ **முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்:**

♣ உப்பு, மிளகு, முத்துக்கள், தந்தம், பட்டு, நறுமணப் பொருட்கள். வைரம், குங்குமப்பூ, விலைமதிப்பு மிக்க கற்கள், மஸ்லின், சந்தனக்கட்டை

♣ **முக்கிய இறக்குமதிப் பொருட்கள்:**

♣ இந்திய வணிகர்களால் ரோமப் பேரரசுக்கு விநியோகம் செய்யப்பட்ட பட்டு மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது.

♣ ரோமப்பேரரசர்கள் ஆரிலியன் அந்தப்பட்டு, எடைக்கு எடை தங்கம் கொடுத்துப் பெற தகுதியானது என அறிவித்தார்.

♣ **கடல்கடந்த நாடுகளுடன் வாணிகத் தொடர்பு**

♣ தமிழகத்திற்கும் கிரேக்கம், ரோம், எகிப்து, சீனா, தென்கிழக்காசியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குமிடையே வணிக உறவுகள் நிலவியதைத் தொல்லியல் அகழ்வாய்வுகள் மெய்ப்பித்துள்ளன.

♣ **முசிறி- முதல் பேரங்காடி:**

♣ ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி தன்னுடைய இயற்கை வரலாறு எனும் நூலில் முசிறியை இந்தியாவின் முதல் பேரங்காடி எனக் குறிப்பிட்டுள்ளார்.

♣ ரோமானியரின் குடியிருப்பு இருந்த முசிறியில் அகஸ்டஸ் கடவுகளுக்காகக் கோவிலொன்று கட்டப்பட்டிருந்தது.

♣ (பொ.ஆ.மு) இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாப்பிரஸ் இலையில் எழுதப்பட்ட ஒரு ஒப்பந்தப் பத்திரத்தில் (வியன்னாவிலுள்ள அருங்காட்சியகத்தில் உள்ளது) அலெக்ஸாண்டிரியாவைச் சேர்ந்த வணிகர் ஒருவருக்கும் முசிறியைச் சேர்ந்த ஒரு வணிகருக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட வணிக ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

♣ அசோகரின் இரண்டாவது பாறைக் கல்வெட்டாணை அவர்களைத் தனது பேரரசின் எல்லையிலிருந்த அரசுகள் என்று குறிப்பிடுகிறது. இந்த அரசர்கள் மட்டுமே தமிழ்நாட்டின் அரசர்கள் என்பது விவாதத்திற்கு உரியது.

♣ பொ. ஆ. மு. கடைசி நூற்றாண்டின் முடிவில், கிரேக்க அரசுகளை அகற்றிவிட்டு மத்திய தரைக் கடல் உலகின்வல்லரசாக ரோம் மேலெழுந்தது.

♣ மேலும் ரோமானியக் குடியரசு, பொ. ஆ. மு. 27 இல் பேரரசர் அகஸ்டாஸின் கீழ் ஒரு பேரரசு ஆயிற்று.

♣ மிகப் பெரும் செல்வங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ரோம் தான் உலகிலேயே ஆகப் பெரியதும் செல்வச் செழிப்பு மிக்கதுமான நகரமாகும்.

♣ போ. ஆ. முதல் நூற்றாண்டின் எகிப்தியக் கடலோடி ஹிப்பாலஸ் என்பவர் அரபிக் கடலில் வீசம் பருவக்காற்றுகளின் காலமுறை இயல்புகளைக் கண்டறிந்தார்.

♣ அதுவரை, இந்தியாவுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடையிலான கடல்வணிகம், அரபியர்களின்கட்டுப்பாட்டில் இருந்தது.

♣ நேரடி கடல்வழி குறித்த தகவல் அனைவருக்கும் தெரிந்த செய்தியாக ஆன போது. ரோமானியக் கப்பல்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு நேரடியாகப் பயணிக்கத் தொடங்கின.

♣ இந்தியாவிற்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உயர்ந்தது

♣ ஆண்டொன்றுக்கு இருபது கப்பல்கள்என்பதிலிருந்துஏறக்குறைய அன்றாடம் ஒரு கப்பல் என்பதாக அதிகரித்தது.

♣ **தமிழகத்துக்கும் ரோமுக்கும் இடையிலான வணிகம்**

♣ ரோம் ஒரு குடியரசாக இருந்தபோதே ரோமுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையிலான வணிகம் செழித்திருந்தது.

♣ அக்காலத்தைச் சேர்ந்த ரோமானிய நாணயங்களும் கலைப் பொருள்களும், இந்தோ "**ரோமானிய வணிக நிலையம்**" என்று கூறப்பட்டுவந்து, புதுச்சேரிக்கு அருகேயுள்ள அரிக்கமேட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

♣ **மேற்குக்க** கரையிலிருந்து, ரோமானிய வணிகர்கள் நிலவழியே பாலக்காடு கணவாயைக் கடந்து கிழுக்கேயுள்ள உற்பத்தி மையங்களுக்கு வந்தனர்.

AKM IAS & NEET ACADEMY

- ஈரோடிலுள்ள கொடுமணல், படியூர், வாணியம்பாடி ஆகிய இடங்களில் ரோம் நாட்டில் அதிக தேவையில் இருந்த ஒரு நவரத்தினக் கல்லான கோமேதகம் கிடைக்கிற சுரங்கங்களிருந்தன.
- மேலும், ஈரோடு அருகேயுள்ள சென்னிமலையில், உற்பத்தி செய்யப்பட்ட இரும்பும:. எ.ஃ.கும் ரோமபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.
- பொ.ஆ.முதல் நூற்றாண்டின் முடிவில், ரோமானியம் கப்பல்கள் தமிழகத்தின்கோரமண்டல் (சோழ மண்டலம் என்பதன் திரிபு) எனப்படும் கிழக்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களுக்குப் பயணிக்கத் தொடங்கின.
- மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த முக்கியத் துறைமுகங்கள் நவுரா (கண்ணனூர்), தொண்டி (பொன்னானி) ஆகியனவாகும்.
- இவை சேர மன்னர்களால் ஆளப்பட்ட தமிழ்நிலப்பரப்பின் வடக்கு எல்லையில் அமைந்திருந்ததாகச் சொல்லப்பட்டது.
- முசிறி அல்லது **முசிரிஸ்** என்பது மேலும் தெற்கே அமைந்திருந்த ஒரு முக்கியத் துறைமுகமாகும். இது பாரம்பரியமாகக் கொடுங்களூர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.
- அண்மையில் முசிறியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வு, இத்துறைமுகம் ஒரு சில கிலோமீட்டர்கள் தூரத்தில் உள்ள பட்டணம் என்னும் ஊரில் இருந்திருக்க வேண்டும் என்று கூறுகிறது.
- இந்தியாவிலிருந்து ரோமுக்குச் சென்ற கப்பல்கள், மிளகு, அதிக அளவில் முத்துகள், தந்தம், பட்டுத்துணி, செல்வமிக்க ரோமானியர்களிடையே தனிப் பயன்பாட்டுக்கென மிகுதியாக தேவைப்பட்ட ஒருவகை நறுமணத் தைலமான கங்கைப் பகுதியிலிருந்து தருவிக்கப்பட்ட விளாமிச்சை வேர்த் தைலம், இலவங்கப்பட்டை, மர இலையான தாளிசபத்திரி எனும் நறுமணப்பொருள், நீலக்கல், கோமேதகம், வைரம், ஆமை ஓடு ஆகியவற்றைச் சுமந்து சென்றன.
- ரோமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கியமான பொருள்கள் நாணயங்கள், புஷ்பராகக் கல், அஞ்சனம், பவளம், கச்சா கண்ணாடி, தாமிரம், தகரம், ஈயம், மது வகைகள் ஆகியனவாகும்.
- பொ. ஆ. முதல் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில், பேரரசர் டைபிரியஸ் ஆட்சியின்போது வணிகத்தின் அளவு உச்சத்தை எட்டியது.
- ஒவ்வோராண்டும் இந்தியாவுடனான வணிகத்தால் ரோமாபுரிக்கு 55 **மில்லியன் செஸ்டர்செஸ்** (பண்டைய ரோமானியப் பணம்) இழப்பு ஏற்பட்டது என்றொரு புகார் எழுந்தது.
- இறுதியாக, பேரரசர் வெஸ்பேசியன் ரோம் நாட்டுச் செல்ல வகுப்பினரின் ஆடம்பரப் பொருள் நுகர்வை தடை செய்து சட்டமியற்றினார்.
- அதையடுத்து இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை ஒப்பீட்டளவில் குறைந்த மதிப்புடைய பண்டங்களாக பருத்தித் துணிகள், மிளகு ஆகியவை மட்டுமே என்றாயிற்று.
- சீனாவிலிருந்து பட்டுத் துணியும், நூலும் கடல் வழியே சோழமண்டல துறைமுகங்களுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து அவை மீண்டும் கப்பல்களில் ஏற்றப்பட்டு ரோமுக்கு அனுப்பப்பட்டன.
- ஆமை ஓடுகள் (ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கியமான பொருள்), இந்தியப் பெருங்கடலில் மலேயாவுக்கு அருகிலுள்ள தீவுகளிலிருந்து பெறப்பட்டது.
- தமிழ்நாட்டின் நிட்சியாகத் தமிழ் இலக்கியங்களில் சித்தரிக்கப்படும் ஜாவா மற்றும் இலங்கையுடன் நிரந்தரத் தொடர்பும் இருந்தது.
- **அயல்நாட்டு வணிகர்கள் (யவணர்)**
- சோழமண்டலக் கடற்கரையில் இருந்த மிக முக்கியமான துறைமுகம் புகார் (பூம்புகார்) ஆகும்.
- இங்கே யவன வணிகர்கள், துறைமுகப் பகுதியில் குறிப்பாக அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த குடியிருப்புப் பகுதிகளில் மொழியைப் பேசுபவர்களாகவும் கருதப்பட்டனர்.



AKM IAS & NEET ACADEMY

♣ தமிழக மக்களால் இவர்கள் வெளியாட்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும்,கடினமாக ஒலிக்கின்ற ஒரு மொழியைப் பேசுபவர்களாகவும் கருதப்பட்டனர்.

♣ இதனால் அவர்களுடன்தமிழ்ப்பகுதி மக்கள் தயக்கத்துடன் பழகினர்.

♣ மதுரையிலிருந்து கோட்டை, பெரிய வாள்கள் தாங்கிய யவனர்களால் பாதுகாக்கப்பட்டது.

♣ அவர்களது கண்கள் சாம்பல் அல்லது நீல நிறத்தில் இருந்ததால் வன்கண் யவனர் எனச் சுட்டப்பட்டுள்ளனர்.

♣ இச்சொல், கிழக்கத்திய மத்திய தரைக் கடல் பகுதிகளிலிருந்து வருகை தந்த அனைவரையும் குறிக்கிற ஒரு பொதுப் பெயராகிப்போனது.

♣ யவனர் என்ற சொல்லுக்கு கிரேக்கர்கள் என்ற பொருள் இருப்பதினால் மட்டுமே இவர்கள் அனைவரும் கிரேக்கர்கள் என முடிவு செய்ய இயலாது.

♣ **வணிகமும் பொருளாதாரமும்:**

♣ நவீனத்துக்கு முந்தைய அனைத்துப் பொருளாதாரங்களிலும் பரிமாற்றத்துக்கு ஒரு முக்கியமான ஏகமாகப் பண்டமாற்றுமுறை விளங்கியிருக்கிறது.

♣ சுழற்சியில் உள்ள பண அளவை அதிகரிப்பதற்காக உள் நாட்டிலேயே போலி ரோமானிய நாணயங்களும் கூட அச்சடிக்கப்பட்டன.

♣ அமராவதி ஆற்றுப் படுகையில் பெரிய அளவுகளில் சேர நாணயங்களும்கூடக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

♣ **நெல் முக்கியவகை பயிர்**

♣ பலா, மிளகு இரண்டுக்கும் சேர நாடு புகழ் பெற்றதாகும்.

♣ பருத்தி மற்றும்பட்டுஇழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட துணிகள் உயர்ந்த தரமுடையதாக இருந்தன.

♣ நீராவியைவிடவும், பாம்பின் தோலைவிடவும்மெலிதான துணிகள் செய்யப்பட்டதாக சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

♣ உறையூரில் உற்பத்தி செய்யப்பட்டபருத்தியாடைகளுக்கு மேலை நாடுகளில் பெரம்தேவை காணப்பட்டது.

♣ சங்க இலக்கியங்கள், கிரேக்க- ரோமானிய நூல்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் இது குறித்த ஏராளமான தகவல்களைத் தருகின்றன.

♣ அகஸ்டஸ், டைபீரியஸ், நீரோ போன்ற ரோமானியப் பேரரசர்கள்வெளியிட்ட தங்கம்மற்றும் வெள்ளியாலான நாணயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

♣ பருத்தியாடைகள், மிளகு, இஞ்சி, ஏலக்காய், இலவங்கம், மஞ்சள் போன்ற நறுமணப் பொருட்கள், தந்தவேலைபாடு நிறைந்த பொருட்கள், முத்துகள் மற்றும் விலையுயர்ந்த கற்கள் போன்றவை சங்க காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களாகும்.

♣ தங்கம், குதிரைகள், இனிப்பான மதுவகைகள் ஆகியன முக்கிய இறக்குமதிகளாகும்.

♣ **பிற அம்சங்கள்**

♣ **பெண்களின் நிலை:**

♣ சமூக வாழ்வில் பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் இல்லை. கற்றிந்த, அறிவுக் கூர்மையுடைய பெண்கள் இருந்தனர்.

♣ நாற்பது பெண்புலவர்கள், வாழ்ந்து அரியநூல்களை கொடுத்துச் சென்றுள்ளனர்.

♣ திருமணம் சொந்த விருப்பத்தைச் சார்ந்து அமைந்திருந்தது. இருந்தபோதிலும் கற்பு பெண்களின் மிகச் சிறந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டது.

♣ **சங்க காலப் பெண்பாற்புலவர்கள்**

♣ ஔவையார், வெள்ளிவீதியார், காக்கைப் பாடினியார், ஆதி மந்தியார், பொன்முடியார்

AKM IAS & NEET ACADEMY

♣ **மத நம்பிக்கைகள் மற்றும் சமூகப்பிரிவுகள்**

♣ மக்களின் முதன்மைக் கடவுள் சேயோன் அல்லது முருகன். சுங்க காலத்தில் வழிபடப்பட்ட ஏனைய கடவுளா் சிவன், மாயோன் (விஷ்ணு), இந்திரன், வருணன் கொற்றவை ஆகியோராவா்.

♣ நடுகல் வழிபாடும் வழக்கத்தில் இருந்தது. பௌத்தமும் சமணமும் கூட உடனிருந்தன.

♣ தமிழகத்தில் சாதிமுறை வளா்ந்திருக்கவில்லை. ஒப்பீட்டளவில் வா்ணாசிரம முறை திராவிடத் தென்னாட்டின் பின்னா்வந்ததே

♣ **நடுகல்:**

♣ பண்டைக்காலத் தமிழா்கள் போா்களத்தில் மரணமுற்ற வீரா்கள்மேல்பெரும்மரியாதை கொண்டிருந்தனா். போரில் மரணமடைந்த வீரனின்நினைவைப் போற்றுவதற்காக நடுகற்கள் நடப்பட்டன.

♣ **உடை மற்றும் அணிகலன்கள்:**

♣ பொருளாதார வசதிமிக்க மக்கள் மஸ்லின், பட்டு மற்றும் நோ்த்தியான பருத்தியிழைத் துணிகளினால் ஆண் ஆடைகளை அணிந்தனா்.

♣ சங்க இலக்கியங்கள் பாம்பின் தோலைக் காட்டிலும் மென்மையான துணிகளைப் (கலிங்கம்) பற்றிக் குறிப்பிடுகின்றன.

♣ **கலைகள்:**

♣ பலவிதமான இசைக்கருவிகளான முரசு,புல்லாங்குழல்,யாழ், போன்றவை பற்றிய பல குறிப்புகள் உள்ளன.

♣ கரிகாலன் இசையின் ஏழு ஸ்வரங்கள் குறித்து பெரும்புலமை பெற்றிருந்தான் (ஏழிசை வல்லான்).

♣ பாடல்கள் பாடும் புலவா்கள் பாணா் விறலியா் என அழைக்கப்ட்டனா்.

♣ 'கணிகையா்' நடனங்களை நிகழ்த்தினா். கூத்து (நாட்டுப்புற நாடகம்) சங்ககால மக்களுடையமிக முக்கியமாக பண்பாட்டு அம்சமாக விளங்கியது.

♣ அவா்கள் '**முத்தமிழ்**' எனும் கோட்பாட்டை உருவாக்கினா் (இயல், இசை. நாடகம்).

♣ **தொழில்**

♣ மக்களின் மிக முக்கியமான தொழில்கள் வேளாண்மை, ஆநிரை மேய்த்தல், மீன்பிடித்தல், வேட்டையாடுகள் ஆகியவையாகும்.

♣ மேலும் கைவினைத் தொழில் செய்வோராரான தச்சா், கொல்லா், பொற்கொல்லா், மண்பாண்டம் செய்வோரும் இருந்தனா்.

♣ **விழா்க்கள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்**

♣ அறவடைத் திருநாய் (பொங்கல்), காா்த்திகை தீப விழா ஆகியன அவற்றில் சிலாவகும்.

♣ இந்திரவிழா தலைநகரில் கொண்டாடப்பட்டது.

♣ நடனமாடுதல், எருதுச்சண்டை, சேவல் சண்டை, தயாமாடுதல், வேட்டையாடுதல், மல்யுத்தம் செய்தல், ஊஞ்சலாடுதல் ஆகியன அவற்றில் முக்கியமானவை ஆகும்.

♣ **கருத்தியலும் மதமும்:**

♣ முறைப்படுத்தப்பட்ட மத நடவடிக்கைகளின் தோற்றம் அசோகா் கால்திலிருந்து தெண்படத் தொடங்குகிறது.

♣ பிராமணருடைய வருகை குறித்தும் வேதச்சடங்குகள் நடைபெற்றமைக்கும் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ன.

♣ ஆனால் இக்காலகட்டத்தில் 'வா்ணாசிராமம்' என்னும் கருத்தியல் தமிழ் பகுதிகளில் வேரூன்றவில்லை.

♣ தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், காவிரிப்பூப்பட்டினம் ஆகிய இடங்களில் பௌத்த ஸ்தூபிகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன.

♣ தமிழகத்தில் காணப்படும் தமிழ்-பிராமி கல்வெட்டகளுடன் கூடிய எண்ணற்ற குகை கறைவிடங்கள் பௌத்த மதத்தைக் காட்டிலும் சமண மதம் செல்வாக்குடன் விளங்கியதைப் பறைசாற்றுகின்றன.

♣ சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுகளில் ஒன்று **சேந்தன், கூற்றன்** என்ற இரு அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது.

♣ அவர்களின் குடும்பம் வம்சாவளி ஆகியன குறித்து எக்குறிப்பும் காணப்படாவிட்டாலும் சில அறிஞர்கள் அவர்களைக் களப்பிர அரசர்கள் எனக் கருதுகின்றனர்.

♣ பொ. ஆ. ஆறாம் நூற்றாண்டின் மூன்றாவது கால்பகுதி காலத்தில் களப்பிரர்கள் ஆட்சி பாண்டியர்களால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது.

♣ **களப்பிரர்கள்**

♣ பொ. ஆ. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சங்ககாலம் படிப்படியாகத் தனது சரிவை சந்தித்தது.

♣ களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி இரண்டரை நூற்றாண்டுகள் ஆட்சி செய்தனர்.

♣ களப்பிரர்களைப் பற்றி அறிய நமக்குக் குறைவான குறிப்புகளே கிடைத்து உள்ளன.

♣ **ஆனால் அவர்களின் ஆட்சி குறித்து இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.**

♣ இலக்கியச்சான்றுகள், தமிழ் நாவலர் சரிதை, யாப்பெருங்கலம், ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

♣ சீவக சிந்தாமணி, குண்டலகேசி ஆகிய இரண்டும் இக்காலத்தில் எழுதப்பட்டவைகளாகும்.

♣ தமிழகத்தில் பௌத்தமும், சமணமும் முக்கியத்துவம் பெற்ற காலம் அது.

♣ சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் அறிமுகத்தால் வட்டெழுத்து என்னும் புதிய எழுத்துமுறை உருவானது.

♣ பதிணென்கீழ் கணக்கைச் சேர்ந்த பல நூல்கள் இயற்றப்பட்டன.

♣ **இக்காலத்தில் வணிகமும் வர்த்தகமும் தொடர்ந்து செழித்தோங்கின, எனவே களப்பிரர் காலமானது பொதுவாகச் சித்தரிக்கப்பட்டதைப் போன்று இருண்ட காலம் அல்ல.**

♣ **1.4 அரசியல் நிலை:**

♣ வீரமிகு முடியுடைய மூவேந்தரும் முடியாட்சி முறையையே பின்பற்றினர்.

♣ **மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்**

♣ **பாறர வந்த பழவிற்றாயம்**

♣ என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் தந்தைக்குப் பின் தனயனே தரணியை ஆளும் தனி உரிமை பெற்றான் என்று அறிகின்றோம்.

♣ சில சமயங்களில் சில உட்பூசல்கள் ஓங்கி இருந்ததை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. கோவூர்கிழார் புறநானூற்றுப் பாடலில் (45) நெடுங்கிள்ளிக்கும், நலங்கிள்ளிக்கும் ஏற்பட்ட பகைமையைச் சுட்டிக்காட்டி **"உம்மில் ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே"**

♣ பெண்கள் அரசு செலுத்தியது பற்றிச் செய்திகள் கிடைக்கப்பெறாவிட்டாலும், அரசவையில் அரசனுக்கு இணையாக ஆட்சி பீடத்தின் அருகில் இருந்தார் எனத் தெரிகின்றது.

♣ **மன்னரின் பண்புகள்:**

♣ உயிரெலாம் உறைவதோர் உடம்பாகிய சங்ககால மன்னர், முறைசெய்து காப்பாற்றும் இறையாக கருதப்பட்டனர். மக்களின் தந்தையாக அவன் கருதப்பட்டான்.

♣ **"புலிபுறங் காக்குங் குருளைபேல**

♣ **மெலிவால் செங்கோ னீபுறங் காப்ப" (புறம் 42)**

♣ புலி தன் குட்டிகளைக் காப்பது போல மக்களைக் காத்தான் மன்னன்.

♣ **அரசரின் முடிசூட்டுவிழா:**

♣ முடிசூட்டு விழா நடக்குமன்று அரசுரிமைச் சின்னங்களை அரச குடும்பத்தின் உறவினரும், மூத்த அறிவுசால் புலவர்கள் முன்னிலையிலும், மன்னனுக்கு அளித்து அரசப் பொறுப்பை ஏற்கச் செய்வர்.

♣ **அமைச்சரவை**

♣ மன்னனுக்கு உறுதுணையாக இருந்தவர்களே அமைச்சர்கள், அவர்கள் நாட்டில் அமைதி நிலவவும், அறம் செழிக்கவும்,வளமை பெருகவும் வாழ்நாள் முழுவதும் உதவிபுரிந்தனர்.

♣ நன்றும் தீதும் அறிநத்து அரசன் தீய வழியினில் செல்லாமல் பார்த்துக் கொள்வதைத் தம் கடமையாக எண்ணினர்.

♣ **தூதுவனும் ஒற்றனும்**

♣ மன்னரின் மாட்சிமை மங்காதிருத்தக் தூதுவரும் ஒற்றரும் முக்கியமானவர்.

♣ இவர்கள் மன்னனின் கண்ணாகவும் காதாகவும் இருந்து நாட்டில் நடப்பவைகளை உடனுக்குடன் தெரியப்படுத்துவர்.

♣ **மன்னனும் புலவரும்**

♣ சங்ககாலம் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும், சிற்றரசர்களும் புலவர்களைப் போற்றினர்.

♣ **ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும்:**

♣ **“இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்**

♣ **கெடுப்பா ரிலானுங் கெடும்”**

♣ என்பது வள்ளுவர் கருத்து

♣ அரசனுக்கு அறநெறி கூற இரண்டு பேரவைகள் இருந்தன என சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கூறுகின்றன. அவை ஐம்பெருங்குழுவும், எண்பேராயமுமாகும்.

♣ **“அதைசொடுபட்ட ஐம்பெருங் குழுவினில்”** எனச் சிலம்பு செப்புகின்றது: ஐம்பெருங்குவினில்,

♣ 1. அமைச்சர்

♣ 2. புரோகிதர்

♣ 3. படைத்தளபதி

♣ 4. தூதுவர்

♣ 5. சாரணர் முதலாவோர் இருந்தனர்.

♣ இவர்களில் சாரணர் என்போர் ஒற்றராவர், அவர்கள் அனைவரும் அரசனின் அந்தரங்கச் செயல்களில் தொடர்பு கொண்டவர்கள்.

♣ **எண் பேராயம்**

♣ 1. கரணத்தியலவர் (அரசாங்கப் பெருங்கணக்கர்)

♣ 2. கருமவிதிகள் (அரசாங்க பலதிறப்பட்ட வேலைகள் புரிவோர்)

♣ 3. கனகச்சுற்றம் (அரசாங்க பொருள் பாதுகாப்பு அதிகாதிகள்)

♣ 4. கடைகாப்பாளர் (நாடு காவல் அதிகாரிகள்)

♣ 5. நகரமாந்தர் (நகரங்களின் பிரதிநிதிகல்)

♣ 6. கடைத்தலைவர் (காலாட்படைகளுக்குத் தலைவர்)

♣ 7. யானை விரர் (யானைப்படைத் தலைவர்)

♣ 8. இவுளிமறவர் (குதிரைப் படைத்தலைவர் )

♣ ஐம்பெருங் குழுவினரையும் எண்பேராயத்தையும் கூட்டி, அவர்களின் ஆலோசனைப்படி ஆராய்நது நாட்டிற்கு நல்லனவற்றை மன்னர் செய்வார். முடியாட்சி மன்னனாக இருப்பினும் இவ்வாறு முறைசெய்து அவன் மக்களைக் காத்தான்.

♣ **நாட்டின் பாதுகாப்பு**

♣ அந்தியர் படையெடுப்பினின்று காப்பாற்ற நாட்டின் பல அரண்கள் இருந்தன. மதிலரண், நிலவரண், நீரரண், காட்டரண், மலை அரண் என ஐவகை அரண்களில் சிலவற்றையேனும் நாடு பெற்றிருக்க வேண்டும்.

♣ மதில்கள் உயரம், அகலம், திண்மை, அருமை (பொறிகள் உள்ளதாய்) ஆகிய இந்நான்கும் பெற்றிருக்க வேண்டும்.

♣ **படையும் போர் முறையும்**

♣ "அடிக்கின்ற கோலுக்கு அஞ்சாதுமேன்மேலும் சீறிவரும் அரவம் போன்ற நெஞ்சுடைய வீரர்களைக் கொண்ட தமிழகத்தின்" சங்ககாலப் படை நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது.

♣ ஆவை காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்பனவாம். போர்களத்தில் மன்னனே முன்னின்று போர்புரிவான்.

♣ வேல் வடித்துக் கொடுக்கக் கொல்லர் இருந்தனர். அது அவரது கடமையாகும். கொல்லன் சீர்கெட்ட வேல்களைச் செப்பனிட்டுத் தந்தான்.

♣ இத்தகைய படைக்கருவிகள் இருந்த இடம் **படைக்கலக் கொட்டில்** எனப்பட்டது.

♣ நாட்டைக் கவர முயன்ற மன்னன் வஞ்சி மலரை அணிந்தான்: கோட்டையை முற்றுகையிட்ட மன்னன் உழிஞை மலரைச் சூடிக்கொண்டான்.

♣ கோட்டைக்கப்பால் வலிமையை நிலைநாட்ட எதிர்த்து நின்று போர்புரிந்தவர் தும்பைப் பூ சூடினார்.

♣ போரின் வெற்றியைக் குறித்தல் பொருட்டு வாகை மலரைச் சூடினார்.

♣ போரின்பொழுது புறமுதுகிட்டு ஓடுதல் கிடையாது, புறமுதுகிட்டு ஓடும் ஒருவனை வீரர் எவரும் தாக்குதல் செய்யார்.

♣ அத்தகையோரைத் தாக்குவோர் சிறந்த வீரராகக் கருதப்படமாட்டார். அவ்வாறு தாக்குண்ட மன்னன் நாணி வடக்கிருந்து உயிர்விட்டான்.

♣ **கிராம அரசுகள்**

♣ சிறிய ஊர்கள் சிறப்புடன் ஆட்சிபுரிய ஊர் மன்றங்கள் இருந்தன. அதற்குரிய உறுப்பினர்களைக் குடஓலை மூலம் தேர்ந்தெடுத்தனர்.

♣ இது போன்ற தேர்வு முறையைப் பற்றித் தெளிவாக உத்திரமேரூர் சோழர் காலத்துக் கல்வெட்டுக் கூறுகின்றன.

♣ '**மன்றம்**' என்று குறிப்பிடுவதைப் போன்று பொதியில், அம்பலம் போன்ற சொற்களும் அவையைக் குறிப்பிடுகின்றன.

♣ பொதியில், அம்பலம் ஆகியவை சமம் என்றும், மன்றம் என்பது கிராமத்தின் நடுவில் அமைந்துள்ள மரத்தடி (இரத்தி, பலா, விலா, வேம்பு) என்றும் வேறுபடுத்திக் கூறுகின்றது.

♣ **நகர அரசுகள்:**

♣ புகார், கொற்கை, முசிறி, வஞ்சி போன்ற நகரங்களைப் பற்றிய செய்திகளை நூல்கள் தெரிவிக்கின்றன.

♣ **வருவாய்:**

♣ வரியே அரசின் முக்கிய வருவாயாகும்.

♣ 1. வரி

♣ 2. சுங்கம்

♣ 3. சிற்றரசர்களிடமிருந்து கிடைத்த திறை

♣ 4. படையெடுப்பின் போது கைப்பற்றப்பட்ட செல்வம் என வருவாயை நான்காகப் பிரிக்கவும். ஆறில் ஒரு பகுதி வருவாய் அரசிற்கு அளிக்கப்பட்டது.

♣ **சுங்கம்:**

♣ வாணிகச் சாத்துக்கள் (வணிகர் கூட்டம்) சென்ற வழிகளில் சுங்கச் சாவடிகள் இருந்தன.

♣ அவரவர் பொருள்களுக்கு ஏற்ப சுங்கம் வாங்கப்பட்டது. சுங்கச் சாவடிகளில் வேலை செய்வோருக்கு நாள் முழுமையும் ஓய்வே கிடையாதாம்.

♣ **திறை**

♣ மன்னனைக் காண வரும்பொழுது சிற்றரசர், ஆண்டுதோறும் காசாகவோ நாட்டுப் பொருளாகவோ கொடுக்கலாம்.

♣ மேற்கூறிய வருமானமின்றி, தண்டனையின் மூலம் கிடைத்ததும் படையெடுப்பின் போது கைப்பற்றியதும், கள்வர்களிடமிருந்து கைக்கொண்டதும், சொத்தின் உரிமையாளன் இல்லாமல் இருந்த பொருள்களும் அரசு பெற்ற மற்ற வருவாய்களாகும்.

♣ மக்களின் விவசாயத்தைப் பெருக்க அணைகள் கட்டவும், கல்விக்கும், காட்டை அழித்து நாட்டைப் பெருக்கவும் வருவாய் பயன்பட்டது.

♣ **நில அளவும எடையும்**

♣ வேலி, மா, செய் போன்றவை அக்கால நில அளவு முறைகள் என பாடல்கள் தெரிவிக்கின்றன.

♣ தூணி, பதக்கு என்பன முகத்தல் அளவைகள்.

♣ தொடி, க.ஃ.சு, கழஞ்சு (பொன் நிறுக்க) என்பன நிறுத்தல் அளவைகள்.

| பெயர் | எண் அளவு |
|---|---|
| முந்திரி | 1/320 |
| அரைக்காணி | 1/160 |
| அரைக்காணி முந்திரி | 3/360 |
| காணி | 1/80 |
| கால் வீசம் | 1/64 |
| அரைமா | 1/40 |
| அரை வீசம் | 1/32 |
| முக்காணி | 3/80 |
| முக்கால் வீசம் | 3/64 |
| ஒருமா | 1/20 |
| மாகாணி (வீசம்) | 1/16 |
| இருமா | 1/10 |
| அரக்கால் | 1/8 |
| மூன்றுமா | 3/20 |
| மூன்றுமா வீசம் | 3/16 |
| நாலுமா | 1/5 |

♣ **மற்றங்களும் தண்டனையும்:**



AKM IAS & NEET ACADEMY

♣ குற்றம் செய்தவன் தண்டனை அடைந்த முறையில் மாறுபாடு இருந்தாலும் தவறு செய்தவன் மன்னன் என்றாலும் தண்டனை வழங்கப்பட்டது.

♣ பசுவின் கன்றைக் கொன்ற தன் மைந்தனைத் தேர்ச் சக்கரத்தில் கிடத்தி மடிய வைத்த **மனுநிதிச் சோழனும்,** அறுக்க வேண்டும் என்ற மக்கள் தீர்பிற்குச் செவிமடுத்துத் தன் கையையே வெட்டிக்கொண்ட பொற்கைப் பாண்டியனும், மாணிக்கப் பரல்களுக்கும், முத்துப் பரல்களுக்கும் மாறுபாடு அறியாது மாறுபட்டு நீதி வழங்களி மாசிலாக் கோவலனை மடிய வைத்த தவற்றிற்காக **'யானோ அரசன் என்று கூறி யானே கள்வன்''** என்ற நீதி வழங்கித் தன்னுயிர் நீத்த பாண்டியனும் சில எடுத்துக்காட்டுகள்.

♣ திருடாத குற்றத்திற்குக் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு கோவலன் கொல்லப்பட்டான். இவ்வாறு மன்னரின் மனப்போக்குப்படியும் தண்டனை வழங்கப்பட்டது.

♣ சாட்சி முறை கொண்டு நீதி வழங்கப்பட்டது. பொய் சாட்சி கூறுவோர் நாக்குத் துண்டிக்கப்பட்டது. பொய் சாட்சி கூறுவோர் சதுக்க பூதத்திற்கு அஞ்சினர். மூட நம்பிக்கையிலும் நீதிமுறை வழங்கப்பட்டது.

♣ பாம்பு இட்ட குடத்தினுள் குற்றவாளியின் கையினை விடச்சொல்வதும், அது கடித்தால் குற்றவாளி; கடிக்காவிட்டால் நன்னடத்தை மிக்கோனாவான். இராஜ துரோகச் செயல்களுக்குக் கொலை தண்டனையே வழங்கப்பட்டது.

♣ **சிறைச்சாலைகள்:**

♣ சிறைச்சாலைகள் இருந்தன. அச்சிறைச் காலைகளின் கைதியாக இருப்போன் மன்னனேயாயினும் சில சமயங்களில் கீழ்த்தரமாக நடத்தப்பட்டார்கள் என்பதை அறிகின்றோம். பெண்களுக்கெனத் தனிச்சிறை இருந்ததாகத் தெரியிவில்லை.

♣ **1.5. தமிழர் குடும்ப முறை**

♣ குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது.

♣ **குடும்பம்:**

♣ குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடைப்படை, திருமணமே.

♣ குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன.

♣ இன்று நாம் வழங்கும் 'திருமணம்', 'குடும்பம்' ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியததிலும் சங்க இலக்கியங்களிலும் இடம்பெறவில்லை.

♣ குடும்பம் எனும் சொல் முதன்முதலில் **திருக்குறளில்** தான் (1029) பயின்று வருகிறது.

♣ சங்க இலக்கியத்தில் **'குடம்பை', 'கடும்பு'** ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை

♣ **'குடும்பை'** என்ற சொல், இருபது இடங்களில் பயின்று வருகிறது. **'குடும்பு'** எனும் சொல் கூடி வாழுதல் என்று பொருள்படுகின்றது.

♣ குடும்பம் எனும் சொல்லுடன் **அம்** விகுதி சேர்த்துப் பொருண்மை விரிவாக்கமாக **குடம்பம்** எனும் சொல் அமைந்தது. பண்டைத் தமிழர்கள் குடும்பம் எனும் அமைப்புடன் வாழ்ந்த இடங்கள் பற்றிப் பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

♣ **இரவுக் குறியே இல்லகத் துள்ளும்**

♣ **மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே**

♣ **மனையகம் புகாஅக் காலை யான**

♣ **(பொருளியல்- 129)**

♣ எனும் தொல்காப்பிய நூற்பா **'இல்', 'மனை'** ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகின்றனது.

♣ **வாழிடம்**

♣ சங்க இலக்கியத்தில் மேலும் பல சொற்கள் உள்ள.

- **இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம்.**
- மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை','நும்மனை' (அகம், 346: 16-17) என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காண முடிகிறது.
- இன்னும் சில இடங்கிளல் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில' (புறம் 221-6) எனவும், திருமணத்திற்குப்பின் கணவனும மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' (Neolocal) எனவும் வழங்கப்பெற்றுள்ளன.
- **மணந்தகம்:**
- மணம்புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே 'மணந்தகம்' (Family Procreation) எனப்படுகிறது.
- முதல் குழந்தை பிறக்கும்வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது.
- தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.
- தொல்காப்பியத்தில் இத்தகைய செய்தி தொடர்பினைக் காணலாம். (தொல். பொருள். 151).
- **தாய்வழிக் குடும்பம்:**
- சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள், தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது.
- பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய் முறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- **சிறுவர்தாயே பேரிறி பெண்டே (புறம். 270)**
- **செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் (புறம். 276)**
- **பானரைக் கூந்தல் முதயோள் சிறுவன் (புறம். 277)**
- **முளரிமருங்கின் முதியோள் சிறுவன் (புறம். 278)**
- **என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும் (கலி. பாலை. 8)**
- முதலான தொடர்களில் இவளது மகன் என்றே கூறப்பட்டது. இவனது மகன் எனக் கூறப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.
- சுங்க காலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய முறை (Matrilocal) இருந்துள்ளது.
- திருமணத்திற்குப்பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது. (அகம் 24:10, 247:14, 284:13)
- தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருப்பதால் பெண் குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது.
- தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.
- தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஒரு மருதத்திணைப் பாடல் (குறுந். 295) தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.
- **தந்தைவழிக் குடும்பம்**
- மனித குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழி முறையானது தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்களின்வழி அறிய முடிந்தாலும், சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகிவிட்டதையும் காணமுடிகிறது.

AKM IAS & NEET ACADEMY

- ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் (Patrilocal) வாழ வேண்டும்.
- மணமான பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்தபோது அவனுடைய தாய் அவளுக்குச் சிலம்புகழி நோன்பு செய்திருக்கிறாள.
- **நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்**
- **எம்மனை வதுவை நல்மணம் கழிக**
- **(ஐங்குறு. 399:1-2)**
- மேலும், (மலையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே) (குறுந். 135) என்னும் குறுந்தொகைப் பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது.
- **தனிக்குடும்பம்**
- **தனிக்குடும்பம்** (Nuclear Family) தோன்றுவதற்கான தொடக்கநிலைக் குடும்பங்கள் பற்றிச் சங்க இலக்கியங்கள் மிகுதியாகப் பேசியிருக்கின்றன.
- இளமகவுநிலைக் குடும்பங்களின் காட்சிகளை ஐங்குறூறு தெளிவுபடுத்துகிறது (406).
- "**மறியிடைப் படுத்த மான்பிணைபோல்**" மகனை நடுவணாகக்கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்ந்திருக்கின்றனா. (ஐங்குறுநூறு 401)
- தாய், தந்தை , குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால் அது தொடக்கநிலை மற்றும் எளிய நெருக்கமான குடும்பம் எனப்படும்.
- **விரிந்த குடும்பம்**
- சங் காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவுபெற்று இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழும் "**விரிந்த குடும்பம்**" (Extended Family) முறையையும் காண முடிகிறது.
- கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப (Lineally Extended family) முறையை ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் (279) கூறுகிறது.
- சங்க காலக் குடும்ப அமைப்பில் முதல்நிலை உறவினர்களை மட்டும் ஓரளவு இனம் காண முடிகிறது.
- நற்றாய் பெற்ற தாய் ஒருபுறம் இருந்தாலும் செவிலித்தாயும் அவளது மகளாகிய தோழியும் குடும்ப அமைப்பில் முதன்மைப் பங்கு பெறுகின்றனர்.
- **தமிழர் பரம்பரை**
- **பரன் பரை**
- **சேயோன் சேயோள்**
- **ஓட்டன் ஓட்டி**
- **பூட்டன் பூட்டி**
- **பாட்டன் பாட்டி**
- **தந்தை தாய்**
- **நாம்**
- **மகன் மகள்**
- **பெயரன் பெயர்த்தி**
- **கொள்ளுப் பெயரன் கொள்ளுப் பெயர்த்தி**
- **எள்ளுப் பெயரன் எள்ளுப் பெயர்த்தி**
- **1.6. வாழ்க்கை முறை- தொழில்கள்**

♣ 1. **தச்சுத் தொழில்**

♣ அரண்மனைகளிலும் பொது இடங்களிலும் தச்சுத்தொழில் மிகவும் சிறப்புற்றிருந்தது. நெடுநல்வாடையில் பாண்டியந ாட்டு அரசியின் கட்டிலைப் பற்றி வருணிக்கப்பட்டுள்ளது.

♣ அக்கட்டிலைத் தச்சர் தந்தத்தாற்பட்ட யானைகளின் கொம்பினால் திண்மையுடன் ஆக்ககினார். பல நிறம் கொண்ட மயிர்களை உள்ளே வைத்தும் சிங்கம், புலி போன்ற வேட்டையாடும் தொழில்களைப் பொறித்த தகடுகள் வைத்துத் தைக்கப்பட்டன.

♣ அக்கட்டிலின் கால்கள் உருண்டு திரண்ட மகளிரின் பாற்குடமன்ன மார்புகளையொத்து இருந்தன. யவன நாட்டுத் தச்சர்கள் தச்சுத் தொழிலின் திறமையுடையவர்கள் என்றும் தெரிகின்றது.

♣ 2. **நெசவுத் தொழில்**

♣ அறுவை, **கலிங்கம்** என்றும் பெயரிட்டு அழைக்கப்பட்டன. ஆடைகள் பற்றிப் பல பாடல்கள் மூலமாக நாம் அறியலாம்.

♣ **"புகாப் புகர் கொண்ட புன் பூங்கலிங்கமொடு"** என்று பூவேலையொடு செய்யப்பட்ட கலிங்கத்தைப் பற்றி நற்றினை (90) தெரிவிக்கின்றது.

♣ பாம்பின் தோலை ஒத்த வடிவினையும், மூங்கில் மரத்தின் உட்பகுதியில் காணப்படும் தோலைப் போன்று பூ வேலையுடன் காணப்படுமாம். பட்டு நூலாலும் கலிங்கம் நெய்யப்பட்டது.

♣ அவை **நூலாக கலிங்கம்** என்று பெயரிட்டு அழைக்கப்பட்டது. மூற்கிற் சோறு போல என்று கூறியது போல பால் ஆவி போன்ற ஆடைகளுடன் மயிராலான ஆடைகளும் நிறைய இருந்தன.

♣ 3. **துணி வெளுக்கும் தொழில்**

♣ **"வறனில் புலத்தி யெல்லித் தோய்த்த**

♣ **புகாப் புகர் கொண்ட புன் பூங்**

♣ **கலிங்கமொ: "**

♣ என்ற நற்றிணைப் பாடல் கூறுகின்றது. பூ வேலைப்பாடுகள் அமைந்த ஆடைகளை இரவிலே களர் நிலத்து உவர் மண்ணில் ஊற வைத்துத் துவைத்து சோற்றின் கஞ்சியினைக் கொண்டு புலர்த்துவராம்

♣ ஒவ்வொரு ஊரிலும் புலத்தி இருந்தாளென்றும், அவளுடைய தொழிலுக்காக நெல் கொடுக்கப்பட்டதென்றும் பாடல்களினின்று அறியக் கிடக்கின்றது.

♣ 4. **குயவுத் தொழில்**

♣ குயவர்களைப் பற்றியும் அவர்கள் செய்த மட்பாண்டங்கள், தாழி போன்றவற்றைப் பற்றியும் அறிகின்றோம்.

♣ தாழி முதலியன அவர்கள் செய்தனர். தற்பொழுது அகழ்வாராய்ச்சியன் மூலம் ஆதிச்நல்லூர், அரிக்கமேடு மதுரை, கரூர், பூம்புகார் போன்ற இடங்களில் காணப்பட்ட தாழிகளே இதற்குச் சான்று.

♣ **5. அணிகலத் தொழில்**

♣ பொற்கொல்லர்களை **உருக்குத் தட்டார்** என்றும், **பணித்தட்டார்** என்றும் இருவகைப்படுத்துவார்.

♣ பொற்கொல்லர் செய்த ஆபரணங்கள் பலவாகும். அரசு குடும்பத்திற்கு ஆபரணங்கள் செய்வதற்கென பொற்கொல்லர் தனியே இருந்தனர் என்று சிலப்பதிகாரத்தின் மூலம் தெரிகின்றது.

♣ **தொல்காப்பியத்தில்** (பொரு.15) கூறப்பட்டுள்ள பண்புகளுக்கேற்ப சங்ககாலப் பெண்டிர் திகழ்ந்தனர். சங்ககாலப் பெண்டிர் உயிரினும் நாணத்தைப் போற்றினர்

♣ அந்நாணத்தையும் விடக் கற்பை மிகவும் சிறந்ததென மதித்தனர். கேள்வியிர் வல்லமை பெற்றிருந்தது பேலவே இயல், இசை, நாடகத்தில் தேர்வுற்றிருந்தனர்.

♣ அவர்கள் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் புலமை பெற்றிருந்தனர்.

♣ நாட்டுப்பற்றும், விருந்தோம்பலும் மற்றைய குறிப்பிடத்தக்க உயர்பண்புகளாகும்.

♣ **கல்வி:**

♣ பெண்கள் கல்வி கேள்விகளில் சிறந்த விளங்கினர். பல பெண்பாற் புலவர்களின் பாடல்களே இதற்குச் சான்று. நச்செள்ளையார், நன்முல்லையார், ஆதிமந்தியார், நப்பசலையார், முடத்தாமக் கண்ணியார், பொன்முடியார் போன்ற பல பெண்பாற் புலவர்கள் பல பாடல்களை இயற்றினார்.

♣ காக்கை பாடினியம், சிறுகாக்கை, பாடினியம் என்ற இரு யாப்பிலக்கண நூல்களைப் பாடியவர் காக்கைப் பாடினியார் என்ற பெண்பாற் புலவரேயாவார்.

♣ **2. இல்வாழ்க்கை**

♣ இல்லற வாழ்க்கை இன்னலின்றி இன்பமாய்த் திகழப் பெற்றோர்கள் அவர்களிடையே பத்துப் பொருத்தங்களைப் பார்ப்பர்.

♣ மேற்கண்ட பொருத்தங்களோடு திருமணம் நடைபெறும்.

♣ சங்கம் மருவிய சிலப்பதிகாரத்தில் நடைபெற்ற திருமண முறை ஆரியர் இல்லாமல் தீயை வளர்க்காமல் அதனை வலம் வராமல் நடைபெற்றது.

♣ தலைவன் கொண்ட தலைவியின் காதலைப் பற்றிக் குறுந்தொகை (3) கூறும்பொழுது, அது நிலத்தைவிடப் பெரிய தாய், வானத்தைவிட உயரமாய், கடலைவிட ஆழமாய் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது.

♣ மணவிழாவின் போது, மணமக்களுக்குத் தாலி ஏதும் கட்டப்பட்டதாகத் தெரியவில்லை.

♣ **யாயும் ஞாயும் யாராகியரோ, எம்தந்தையும் நும் தந்தையும்,**

♣ **எத்தகைய முறையை உடையவர். நீயும் நானும் எத்தகைய**

♣ **வழியை அறிவோம் -(குறள்- 40)**

♣ அன்பு நெஞ்சம் தான் நம் இருவரையும் இணைத்தது எனத் தலைவன் கூறுகின்றான்.

♣ தான் பிறந்த வீட்டில் உண்ட தேன் கலந்த பாலினும் தன் தலைவனுடன் சென்று பாலைநிலத்தில் மான் உண்ட எஞ்சிய சின்னீரைப் பருகுவதையே பெரும் பேரின்பமாகத் தலைவி கருவாள், என ஐங்குறு நூறு கூறுகின்றது.

♣ **3. கற்பொழுக்கம்:**

♣ தாய், தந்தையர், கணவன் மற்றும் பெரியோர் கற்பித்த நன்னெறியில் ஒழுகி நிற்பதே கற்பெனப்படும்.

♣ இச்சிறப்பு வாய்ந்த கற்பு வாழ்க்கையில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிதலும் உண்டு.

♣ கணவன் பிரிந்து சென்ற போது மகளிர் தம்மை அணி செய்து கொள்ளமாட்டார்கள், இதனைச் சிலப்பதிகாரம் தெள்ளிதின் உணர்த்துகிறது.

♣ கோவலன் கண்ணகியைப் பிரிந்து காலத்து, கண்ணகி தன் கால்களில் சிலம்பணியவில்லை, இடையில் மேகலை அணியவில்லை, காதில் தோடு சூட்டவில்லை, கண்ணில் மை தீட்டவில்லை.

♣ 4. **விருந்தோம்பல்- மகளிரின் உயர்பண்பாடு**

♣ விருந்தோம்பலைத் தம் வாழ்வின் பயனாகக் கருதிப் போற்றிவந்தவர் சங்ககாலத் தமிழர், இறப்பைத் தடுக்கும் மருந்தே என்றாலும், விருந்தினரைப் புறத்தே விட்டுத் தாம் மட்டும் உண்ணும் நெஞ்சம் கொண்டவரல்லர்.

♣ **5. வீரத்தாய்:**

♣ புறப்பாடல் ஒன்றில் (276) ஒக்கூர் மாசாத்தியார் ஒரு வீரத்தாயைப் போற்றுகிறார். போர்க்களத்தில் எவர்வரினும் புறங்கொடாத தோளைப் பெற்ற இளமகன். முதுகிலே அமைதியிழந்து, "அவன் முதுகிலே புண்பட்டிருந்தால் அவனுக்குப் பாலூட்டிய என் மார்பகத்தை அறுத்தெறிவேன்" என்று புறப்பட்டாள்.

AKM IAS & NEET ACADEMY

♣ அனால் அவன் இரும்பு நெஞ்சத்திலே குருதிகொப்பளிக்க அம்புபட்டிருந்தது கண்டு, இடியெனச் சரித்து எதிரிகளை எள்ளி நகையாடினாள்.

♣ **6. உடன்கட்டை ஏறுதல்**

♣ கணவன் இறந்த விட்டான் என்ற செய்தி கேட்டுக் கணவனுடன் தீப்பாய்த்து உயிர்விட்ட பெண்களைப் பற்றிச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

♣ தன் கணவன் பூதப்பாண்டியன் இறந்தவுடன் பெருங்கோப்பெண்டு தீப்பாய முற்பட்டாள். ஆதனைத் தடுத்து நிறுத்திய சான்றோரை நோக்கிச் சினந்து அவள், "**பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றிரே!**" என வர்ணித்து,

♣ **"என் கணவன் மறைத்தபின் நானும் மடிதலே நேரிது: நன்னீர்ப்**

♣ **பொய்கையும் தீயும் எனக்கு ஒன்றே" (புறம் -246)**

♣ என்ற கணவனுடன் இறத்தலை இன்பமாகக் கருதியவர் பலருண்டு

♣ நெடுஞ்செழியன் இறந்தவுடன் அப்பேரதிர்ச்சியிலே அவனது மனைவி கோப்பெருந்தேவியும் உயிர்நீத்தாள். குணவன் இறந்தபின் உயிர்விடாது தலையை மொட்டையடித்து மங்கல அணி, வளையல் போன்றவற்றைக் களைந்து நோன்பு இருக்கும் பெண்டிரும் உண்டு. மறுமணம் செய்து கொள்ளும் பழக்கம் வழக்கில் இல்லை.

♣ **7. மகளிரின் பொழுதுபோக்கு**

♣ சங்ககால மகளிரின் விளையாட்டுகளில் பூவிளையாட்டு புனல் விளையாட்டு, பந்து விளையாட்டு, கழங்கு முதலியன குறிப்பிடத்தக்கன.

♣ சுனைப் பூவைப் பறித்து மாலையாகத் தொடுத்து விளையாடும் விளையாட்டு, வரிபட்ட மணலில் வண்டற்பாவை செய்து விளையாடும் விளையாட்டு (ஐங்குநூறு -360) நெய்தல் நிலத்திற்குரியன.

♣ பொம்மை விளையாட்டில் தம்மையே மறந்து விளையாடுவர். சங்ககாலப் பெண்டிர், தாங்கள் செய்வித்த அழகிய பொம்மைகளுக்குப் பொட்டிட்டு, பூவிட்டு பட்டாடை பலவாகச் சூட்டிட்டு பெயருமிட்டுத் திருமணம் நடத்தி வைப்பர்.

♣ கழங்கு என்பது மற்றொரு விளையாட்டு (சொக்கட்டான் என்பர்). சிறுமிகள் முதல் பெரும் மூதாட்டிகள் வரை இதனை விரும்பி விளையாடுவர். பொன்னால் செய்த கழங்கினை கொண்டு விளையாடியதைப் பெரும்பாணாற்றுப்படை (334-35) கூறுகின்றது.

♣ **8. கூந்தல் ஒப்பனையும், ஆடை அணிவகைகளும்**

♣ குழல், அளகம், கொண்டை, பனிச்சை,துஞ்சை என்பன ஐம்பால், என நச்சினார்க்கினியர் கூறுகிறார். இவ்வாறு நைந்து விதமாகக் கூந்தலை அமைத்து அழக செய்துகொள்ளும் இயல்பினர் சங்க கால மகளிர்.

♣ நீராடிய பின்னர் மகளிர் தம் கூந்தலுக்கு அகிற்புகையும், சந்தனப் புகையும் ஊட்டுவர். கொண்டை போடும் பழக்கமும் சடை பின்னும் பழக்கமும் இருந்தது. அக்கொண்டைதனில் பூச்சூடும் வழக்கமும் இருந்தது. வெட்சி, வேங்கை, நரந்தம், குவளை, அடும்பு, மல்லிகை முதலிய பூக்களைச் சூட்டிக் கொண்டனர்.

♣ **9. பெண் கல்வி**

♣ சங்க காலம் மகளிர் கல்வியறிவு பெற்ற சுதந்திரப் பறவைகளாய்ப் பாடல்கள் பாடி மன்னரிடம் புகழ்பெற்றனர். கவிதை பாடினார், இசை பயின்றனர், கணவனைப் போற்றினர், தெய்வத்தைத் தொழுதனர், விருந்தோம்பால் விரும்பிச் செய்து நாட்டுப்பற்றும் மிகப் பெற்றிருந்தனர்.

♣ **1.8. சங்ககாலப் பொருளாதாரம்**

♣ **1. உழவு**

♣ **சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**

♣ **உழந்தும் உழவே தலை.**

♣ அத்தகைய உழவர் பிறரிடம் சென்று இரவார். தும்மிடம் இரப்பார்க்கும் மறைக்காது கொடுப்பார்.

♣ காவிரிப் பூம்பட்டினத்துப் பண்டகசாலையின் முற்றங்களில் இத்தகு விளைபொருள்கள் மூட்டைகளில் அடுக்கப்பட்டிருந்தன.

♣ உழவுத் தொழிலை வளர்ச்சியடைய வைக்க ஆறுகளை வெட்டி அகலப்படுத்தினர்: கரைகளை உயர்த்தினர்: கால்வாய்களை வெட்டினர், மதகுகள் கட்டினர்.

♣ 2. **உணவு**

♣ குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற நிலங்களின் தன்மைக்கேற்ப பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றைப் பண்டமாற்று முறை மூலம் பொருள் மாற்றம் செய்து தேவையானவற்றைப் பெற்றனர்.

♣ **3. சங்ககால வணிகம்**

♣ சங்க கால வணிகத்தைப் பற்றி ஆராயும் பொழுது அதை இருவகையாகப் பிரித்துக் கொள்ளலாம். அவற்றை உள்நாட்டு வணிகம். ஆயல்நாட்டு வணிகம் என்று பிரிக்கலாம்.

♣ எருதுகளையும், கோவேறுக் கழுதைகளையும் வண்டிகளை இழுக்கப் பயன்படுத்தினர் என்று சங்க நூல்கள் தெரிவிக்கின்றன.

♣ கோவேறு கழுதைகள் **அத்திரி** என்ற பெயரில் அழைக்கப்பட்டன.

♣ பண்டமாற்று முறையில் நெல் முக்கிய தானியமாகக் கருதப்பட்டது. உப்பின் மதிப்பு நெல்லின் மதிப்பிற்கு இணையாக இருந்தது.

♣ நற்றினைப் பாடலில், வண்டி நிறைய உப்பைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, அதே அளவிற்கு நெல்லை ஏற்றிச் சென்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

♣ மலைநாட்டு வேடர்கள் தயிர் கொண்டு வந்த முட்டிகளுக்குள் பாண்டிய உழத்திகள் நெல்லை அளிப்பர் என்று புறநாநூறு கூறுகின்றது. மீனுக்குப் பதிலாக நெல்லை அளித்த செய்தியை ஐங்குநுறூறு கூறுகிறது.

♣ **4. நாணயங்கள்:**

♣ சங்ககால மக்கள் காசுகளையும் கைக்கொண்டிருந்தனர் என்று தெரிகின்றது.

♣ அகழ்வராய்ச்சியின் பயனாக செங்கம் என்ற பகுதியில் ஈயக்காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

♣ காசுகளின் வடிவத்தைப் பற்றிப் புலவர் வெண்ணாகனார் வருணிப்பதிலிருந்து காவன் பூதனார் என்று புலவரின் அகப்பாடல் மூலம் காசுகள் மஞ்சள் நிறமாக இருக்க வேண்டும் என்று தெரிகின்றது;

♣ **அயல் நாட்டு வணிகம்**

♣ கடல் கடந்து வெளிநாடுகள் செல்லக் கலம், மரக்காய், வங்கம், நாவாய் போன்றவை உதவின.

♣ அயல் நாட்டினின்ற வணிகம் செய்தவர்கள் யவணர் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தங்கியிருந்த இடம் யவணச்சேரி என்று அழைக்கப்பட்டது.

♣ சோழநாட்டின் பெருந் துறைமுகமாகிய புகாரைப் பற்றிய சிறப்புச் செய்தியினைப் பட்டினப்பாலை தெளிவாகத் தெரிவிக்கின்றது.

♣ புகார்த் துறைமுகம் பல நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்ததைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

♣ காவிரிப்பூம்பட்டினம்பல பொருள்களை நாவாய்மூலம் கொண்டுவந்து குவித்து, மாற்றாகப் பல மூட்டைகளை எடுத்துச் செல்லக் காத்திருக்கும் துறைமுகமாகும்

♣ தமிழ்நாட்டினின்று ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் 75 சதவீதம் மிளகாகும். **ஹிப்போக்கிரேட்டஸ்**,கலென் போன்ற வைத்திய ஆசிரியாகள் பிளகை மருந்தாக உபயோகப்படுத்தினர்.

♣ மிளகை இந்திய மருந்தெனத் தனியே பெயரிட்டு அழைத்தனர். தமிழ்நாட்டு விலையைவிட மேலும் ஒரு பங்கு ஏற்றி உரோமபுரியில் விற்கப்பட்டதாகப் பிளினி கூறுகின்றார்.

♣ குதிரைகள் இறக்குமதிப் பொருளாகவே இருந்தன. அத்தகைய குதிரைகள் வேகமான நடையை உடையன என்றும் அவை பாரசீகத்திலிருந்து வந்தன என்று தெரிகின்றது.

♣ மதுபானத்திற்கு கள், தோப்பி, பிழி, தேறல், நறவு, மகிழ், மட்டு போன்ற பல பெயர்கள் இருந்ததைச் சங்க நூல்கள் தெரிவிக்கின்றன.

♣ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவில்லை

♣ மாறாக, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தனர் என்பதை

♣ **"யவனர் நன்கலந் தந்த தண் கழை் தேறல்"**

♣ என்ற வரியிலிருந்து அறியலாம். மதுவை அரசனும், படைவீரர்களும், பெண்களும் அருந்தியதாகத் தெரிகின்றது.

♣ **1.9. சங்ககாலம் சமயம்**

♣ சங்ககால சமயம் சகிப்புத் தன்மை மிக்கது. பல சமயத்தைச் சார்ந்தவர்கள் வேறுபாடு இல்லாமல் அன்பையே இறைவானாகக் கருதி வாழ்ந்தனர்.

♣ தாம் வாழும் நிலத்தின் தெய்வத்திற்குக் கோயில் கட்டினர்; விழா நடத்தினர்; மாலைகள் சூட்டி மனதார வாழ்த்தினர்.

♣ முல்லைக்கு மாயோனும் குறிஞ்சிக்கு முருகனும் (சேயோன்), மருதத்திற்கு இந்திரனும் (வேந்தன்), நெய்தலுக்கு வருணனும் கடவுளாகக் கூறப்பட்டுள்ளனர்.

♣ தொல்காப்பியம் சிவனைப்பற்றி அமைப்பு ஏதும் குறிப்பிடவில்லை. தொகை நூல்கள் சிவன் என்ற பெயரைக் குறிப்பிடாவிட்டாலும், சிவனின் சிறப்புப் பெயர்களைக் கூறுகின்றன

♣ கறைமிடற்று, அண்ணல், நீலமணிமிடற்று அண்ணல்,முக்கட் செல்வன், முழு முதல்வன், பாகத்து ஒருவன், முக்கனான், ஆலமர் செல்வன், நலதாரி என்றும் குறிப்பிடுகின்றன.

♣ சிவனைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அந்நூல்கள் கொன்றை மாலை அணிந்தவன், முடிமேல் பிறைச் சந்திரன் சூட்டப்பெற்றவன், கங்கையைத் தாங்கியவான், மூன்று கண்களைப் பெற்றவன், கழுத்தில் விஷக்கறை அடைந்தவன், உமையொரு பாகம் பெற்றவன், முப்புரங்களை எரித்தவன், எரித்த அச்சாம்பலைப் பூசியவன் என்று கூறுகின்றன.

♣ சேரன் செங்குட்டுவன் சிவன் அருளால் பிறந்தவன் என்றும், அவன் சிவபூசை செய்தான் என்றும் அவன் அவையில் **சாக்கையன்** என்பான் கொடு கொட்டிக்கூத்து ஆடினான் என்றும் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது.

♣ 1. **முருகன்**

♣ வெல்போர்க் கொற்றவைச் சிறுக என்று முருகன் கொற்றவையின் மகனாகக் கூறப்படுகிறான் (திருமுருக, 258).

♣ திருமுருகாற்றுப் படையில் முருகனின் ஆஅறுபடை வீடுகள் அழகுபடக் குறிப்பிடப்பட்டுள்ளன.

♣ சிவன் பல பெயர்களில் அழைக்கப்பட்டது போலக் கொற்றவைச் சிறுவன், குறிஞ்சிக் கிழவன், அறுவர் பயந்த ஆறமர் செல்வன்; ஆலமர்ந்த கடவுளின் மகன், அந்தணர். வெறுக்கை, மங்கையர் கணவன், வானோர் தானைத் தலைவன் என்றும் முருகன் சிறப்பிக்கப்படுகின்றான்.

♣ திருவாவினன்குடி, திருவேரகம். திருச்சீரலையாய் ஆகிய பகுதிகளில்முருகன் ஆரியக் கடவுளான சப்ரணமியத்தோடும், கார்த்திகேயனோடும் தொடர்பு படுத்தப்படுகின்றான்.

♣ (திருமுருகு 91-102) திருப்பரங்குன்றத்தில் முருகன் தமிழ்க் கடவுளாகக் கருதப்படுகிறான்.

♣ **2. கொற்றவை:**

- சங்ககால மக்களின் வெற்றி தெய்வமாகப் போற்றப்படும் கொற்றவை முருகனுடைய தாயாகத் திருமுருகாற்றுப் படையில் குறிப்பிடப்படுகின்றாள், **"போர்க்களத்திற்குச் சென்ற தலைவன் பெரும் வெற்றிபெற்றுப் பெருமையுடன் திரும்ப வேண்டும்"** என்ற வெறியாட்டு வழிபாடு நடத்தியதாக நெடுநல்வாடை (168) கூறுகின்றது.
- கவுரி, சமரி, சூலி, நீலி,மாலின் தங்கை, நெற்றிக் கண்ணைப் பெற்றவள் என்றெல்லாம் அவள் அழைக்கப்படுகின்றாள்.
- கலித்தொகையில் அவளைப்பற்றிக் கூறும்பொழுது எல்லாம் உணர்ந்தவள்., பெரிய காட்டிடை வாழ்பவள், பேய்க் கணங்களை உடையவள் என்று சிறப்பிக்கின்றது.
- இக்கொற்றவை முதலில் பாலைநிலத்தெய்வமாக இருந்து, பின்னர் திணைகளுக்குரிய தெய்வமாக ஆனாள் என்று கூறப்பட்டுள்ளது.
- **3. விஷ்ணு (திருமால்)**
- மால், மாயோன் (கரியவன் எனப்பொருள்) என்று கூறப்படும் திருமால் அல்லது விஷ்ணு முல்லை இடையர்களின் தெய்வமானான்.
- அவனது ஆயர்பாடி லீலைகளைப் பற்றி அகநானூறும் (51) ஞாயிற்றைக் கொண்டுவந்து, ஞாலத்தின் இருள்நீங்க ஆகாயத்தில் நிறுத்தியதைப் புறநானூறும் (174), அரவணையில் படுத்து ஆனந்த சயனம்செய்ததைப் பெரும்பாணாற்றுப்படையும் களி கூறுகின்றன.
- சிலப்பதிகாரத்தில் மாயோனைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது அவனது இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், திருவிக்கரம் அவதாரம் முதலிய பற்றியும் குறிப்பிடுவது அக்கால மக்களின் வைணவ நெறி முறைகளை எடுத்துக்காட்டுகின்றன.
- **4. இந்திரன்**
- மருதநில மக்களின் மனதிலுரைத் தெய்ரம் இந்திரனாவான். அவனுக்குக் கோயில் இருந்தது.
- சங்க காலத்தின் பற்காலத்தில் எழுதப்பெற்ற சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் இந்திரனுக்கு வழிபாடு நடத்தி இந்திரவிழா எடுத்ததுபற்றி விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- **5. வருணன்:**
- வருணன் நெய்தல் நிலக்கடவுள் என்று தொல்காப்பியம் கூறியபோதிலும் சங்க நூல்கள் வருணணைப் பற்றி ஏதும குறிப்பிடவில்லை.
- ஆனால் நெய்தல் நிலமக்கள் சினைசுறாவின் ஓட்டை நட்டு வணங்கினர் என்று மட்டும் குறிப்பிடுகின்றது.
- **6. கோவில்கள்**
- சங்க காலக் கோயில்கள், நியமம், கோட்டம், நகரம், பள்ளி என்று பலவாறு அழைக்கப்பட்டன. ஆனால் அக்கோயில்கள் அழியத்தக்க பொருள்களாலேயே ஆக்கப்பட்டன என்பதை முதலாம் மகேந்திரவர்மனின் கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம்.
- **7. விழாக்கள்**
- விழாக்கள் மாதந்தோறும், வருடத்திற்கு ஒருமுறை, சில குறிப்பிட்ட நட்சத்திரங்கள் அல்லது காலங்கள் ஆகிய முறைகளில் நடைபெற்றன.
- கார்த்திகை மாதங்களில் கார்த்திகைத் திருவிழா கார்த்திகேயனுக்கு நடைபெற்றது.
- தை மாதத்தில் தைநீராடல் திருவிழா நடைபெற்றது
- இந்திரனுக்கு திருவிழா நடைபெற்றதைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது.
- சங்கபாடல்கள் முருகப் பெருமானுக்குத் திருவிழா எடுத்ததைப் பற்றி வெகுசிறபபாகத் தெரிவிக்கின்றன.
- **8. வெறியாட்டு**

AKM IAS & NEET ACADEMY

♣ வழிபடுவேரின் மீது முருகப்பெருமான் வெளிப்படுவான். ஆதனை வெறியாட்டு என்று கூறுவர். இவ்வழிபாட்டில் பூசாரி கிடையாது. இடுக்கண் வரும்பொழுது காத்து இன்பத்தை அளிப்பவன் முருகன் என்று எண்ணினர் மக்கள்.

♣ வெறியாட்டத்தின் பொழுது ஆட்டு கடாவைப் பலிகொடுக்கும் நிகழ்ச்சியைக் குறுந்தொகை கூறுகிறது.

♣ **சமண சமயம்**

♣ மௌரிய மன்னர் சந்திரகுப்தரும், பத்திரபாகுவும் மற்றும்பல சமணத் துறவிகளும் தென்னாட்டில் சமணம்பரவக் காரணமாயிருந்தனர். அச்சமணம் **திகம்பரசமணம்** எனப்பட்டது.

♣ சிலப்பதிகாரம், மணிமேகலை, மதுரைக் காஞ்சி ஆகிய நூல்களில் காவிரிப்பூம்பட்டினம், மதுரை வஞ்சி, காஞ்சி ஆகிய பெருநகரங்களில் சமணப் பள்ளிகள் இருந்தன என்பது பற்றிய குறிப்புகளில் இருக்கின்றன.

♣ அவர்களது பள்ளி ஸ்ரீ கோயில் நிக்கந்தக்கோட்டம் எனவும் கூறப்பட்டது. சமணர்களும் போதகர்களும் தங்கிய இடம் சமணப்பள்ளி எனப்பட்டது. அப்பளிளிகளில் ஓவியங்கள் காணப்பட்டன.

♣ இல்லறத்தில் ஈடுபட்ட சமணர், **ஸ்வரணர்** எனப்பட்டனர். கோவலன் ஸ்ராவக நோன்பியாவான்.

♣ சமண மதத்தில் பெண் துறவியர் இருந்தனர் என்தற்குக் கவுந்தி அடிகளே உதாரணம். ஆண் பெண் இருபாலரும் அடிகள் என அழைக்கப்பட்டனர்.

♣ **பௌத்த மதம்**

♣ சந்திரகுப்த மௌரியரின் பேரனான அசோக மாமன்னன் காலத்தில் பௌத்தம்தென்னாட்டில் அதிக அளவில் பரவ ஆரம்பித்தது.

♣ பெண், ஆண் இருபாலரும் துறவறத்தை மேற்கொண்டவர். பெண் துறவியருக்கு மணிமேகலை ஓர் எடுத்துக்காட்டு, ஆசையை ஒழித்து உயிர்களிடத்து அன்பு காட்டுவதே அன்னாரின் முக்கிய உபதேசமாகும்.

♣ சாத்தன், பாசண்ட சாத்தன் போன்ற புத்த ஆலயங்கள் பூம்புகாருக்கு அருகில் இருந்தன.

♣ காவிரிபூம்பட்டினத்தில் அமைத்திருந்த புத்தராலயத்தில் இந்திரனால் கட்டப்பட்ட ஏழு அரங்குகள் இருந்தன என்றும், அங்கே புத்த சங்கத்தினர் தங்கினர் என்றும் தெரிகின்றது.

♣ அரசன் மொழியும் ஆணைகள் வாய்மொழியாகவே இருக்கும். அவற்றுக்குக் **திருவாய்க்கேள்வி** என்று பெயர்.

♣ இவ்வாணைகளைக் கேட்டு உரியவர்களுக்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்கும் பொறுப்புடையவனுக்குத் திருவாய்க்கேள்வி என்று பெயர்.

♣ வேந்தன் ஆணை பிறப்பிக்கும் முறையும், அது நிறைவேற்றப்பெற்ற முறையும் இராசராசன் செப்பேடுகளில் உள்ளன.

♣ **பள்ளிப்படை கோவில்கள்**

♣ அரசர்கள் இறந்த இடத்தில் அமைக்கப்பட்ட கோயில்களே பள்ளிப்டை கோயில்கள்.

♣ இறந்தோரைப் புதைத்தல் **பள்ளிப்படுத்தல்** எனப்பெறும், அவ்விடத்தில் கோயில் எடுத்தல் நல்மரபாகக் கருதப்பேறும். போர்களத்தில் இறந்த வீரர்கட்கு கல் எடுக்கும் மரபின் அடிப்படையில் இத்தகைய கோயில் எடுக்கும் பழக்கம் தோன்றியது எனக்கருத இடமுள்ளது.

♣ இத்தகைய போயில்களுக்குப் பள்ளிப்படை என்று பெயர்.

♣ பிற்காலத்தில் அரிஞ்சயன் என்னும் மன்னன் இறந்த இடத்தில் கட்டப்பட்ட கோயில்கள் அரிங்சயனேஸ்வரம், இக்கோயில்கள் புகழ் அடையவில்லை. பிற்காலத்தில் இவை இடித்தத் தரைமட்டம் ஆக்கப்பட்டன.

♣ முதலாம் ஆதித்த சோழன் இறந்த திருக்காளத்தி அருகில் பரந்தக சோழன் ஒருபள்ளிப் படைக்கோயில் எழுப்பினான். கண்டராதித்தன் நினைவாக அவன்மனைவி செம்பியன் மாதேவி கோனேரிராசபுரத்தில் பள்ளிப்படைக் கோயில்கள் அமைக்கப்பெற்றன.

♣ **இடங்கை, வலங்கை -வேறுவாடு**

♣ வலங்கைப் பிரிவினர் அரசில் படைப்பெறுப்புகளில் இருந்து பரிசில்களும் சிறப்புகளும் பெற்றனர். இடங்கைப்பிரிவினர் எல்லாவற்றிலும் தாழ்நிலையில் இருந்தனர்.

♣ இடங்கைப்பிரிவினர் வலங்கைப்பிரிவினர் மேல் போர்தொடுத்தனர்.

♣ அந்தணரையும், வேளாளரையும் இவர்கள் எதிர்த்துப் போரட வேண்டிய நிலை ஏற்பட்டது.

♣ இடங்கைப் பிரிவினர் வணிகர்களாகவும், மொழிலாளர்களாகவும் பிழைத்து வாழ்ந்தனர்.

♣ இடங்கை, வலங்கைப்பிரிவில் ஒவ்வொரு பிரிவும் 98 குலங்களைக் கொண்டிருந்தது.

♣ வலங்கை, இடங்கைப் பிரிவினர் மகன்மை வரி (தலைக்கட்டுவரி) செலுத்தி வந்தனர். அரசு அதிகாரிகள் வல்ங்கை இடங்கைப் பிரிவினரிடம் வாங்கிய வரிகளைத் தாமே கைப்பற்றி நுகர்ந்தனர்.

♣ வரிச்சுமை தாங்காத அவ்விரு பிரிவும கோயிலை இடித்துக் குழப்பம் விளைவித்தான். இவர்கள் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளையர் கோயில் கருவூலத்தைக் கொள்ளை கொண்டனர்.

♣ காசிப முனிவர் இயற்றி வந்த வேள்விக்கு அரக்கர்கள் இடையூறு செய்துவந்தனர். முனிவர் கட்டளைப்படி இடங்கைத் தொண்ணூற்றெட்டு வகுப்பினர் வேள்விக்குண்டங்களில் தோன்றி வேள்வியைப் பாதுகாத்தனர்.

♣ அவர்கள் சோழநாட்டிற்குக் காசிப்பரோடு வந்தனர். பிராமணர்கள் பல்லக்கிலிருந்து இறங்கும்போது அவர்களிடம் புறம் நின்று கைகொடுத்தனர்.

♣ மன்னனுக்கு வலப்புறம் நின்ற உரிமைபெற்றோர் வலங்கையினர் என்றும் இடப்புறம் நிற்கும்உரிமை பெற்றோர் இடங்கையினர் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கும் எனச்சான்றோர் கருதுவர்.

♣ **மெய்க்கீர்த்திகள்**

♣ மெய் கீர்த்தி- உண்மைப்புகழ்

♣ இத சிற்றிலக்கிய வகைகள் ஒன்று.

♣ மன்னருடைய உண்மைப் புகழைக்கல்வெட்டுகளில் காணமுடிகிறது.

♣ அரசனது வழிமுறையையும் பகழையும் விரித்துரைப்பதோடு அரசன் வாழ்நாட்கள் மிகுதிப்பட வேண்டும் என வாழ்த்துவது மெய்க்கீர்த்தி

♣ பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல் என இலக்கண நூல்கள் மெய்க்கீர்த்தியின்இலக்கணத்தை பிற்காலத்தில் இராசராச சோழன் காலம் முதல் கல்வெட்டில் மெய்க்கீர்த்தி இடம்பெற்றது. மெய்க்கீர்த்தி பூ மருவிய, ஸ்வஸ்திக் ஸ்ரீ என்ற மங்கலச் சொற்களில் தொடங்கும். இதன் வாழ்த்துப் பாடல் சமஸ்கிருதத்தில் இடம்பெறும். இது பிற்காலத்தில் மிகப்பெரிய வரலாற்று அதாரமாக திகழ்ந்தது.

♣ **வாள் போழ்தடங்களல்**

♣ வாள் போழ்தடங்கல் என்பது சங்ககாலத்தில் பின்பற்றப்படும் முறை

♣ அதாவது இறந்து பறக்கும் குழந்தைகள் போருக்கு செல்லும் வாய்ப்பு கிடைப்பதில்லை.

♣ எனவே இறந்த குழந்தையை வாளால் கீறிப் புதைப்பது வாள்போழ்தடங்கல் எனப்படும்.

♣ **ஓம்படைக் கிளவி**

♣ துர்மம் நிலையாக நடைபெற வேண்டும என்பதற்காகச் கூறப்படும் பாதுகாவற் சொல் ஓம்படைக்கிளவி எனப்படும்.

♣ இது கை எழுத்துக்கு முன்னும் அமையும் "பன்மாகேஸ்வரா் ரசைஷ, வைஷ்ணவா் ரசைஷ" இதற்குத் தீங்கு நினைத்தவன் கங்கைக் கரையில் காரம் பசுவைக் கொன்ற பாவத்திற்கு போவான், பாவத்திற் போவாா்.

♣ **1.10. பண்டைத் தமிழரின் உணவு, உடை, உறையுள்**

♣ **உணவுப் பழக்கம்:**

♣ பண்டைத் தமிழா்கள் சுவைமிக்க உணவுப் பொருள்களைச் சமைப்பதில் தோ்ந்திருந்தனா். அவரவா் வாழ்ந்த நிலத்திற்கேற்ப உணவு வேறுபட்டது.

♣ மரக்கறி உணவோடு புலாலுணவும் பெரிதும் விரும்பியுண்ணப்பட்டது

♣ பல்வகையான மதுவகைகளையும் விரும்பியுண்டனா். மன்னா்கள் இரவலா்க்கு அளித்த விருந்துகளில் புலானுணவே பரிமாறப்பட்டது.

♣ பண்டு தமிழகத்து மருத நிலங்களில் பல வரகயான நெல் வகைகள் பயிரிடப்பட்டன. **இராசா அன்னம்** என்பது உயா்வகை நெல்லாகும். பண்டமாற்றில் விலையை அறுதியிட நெல்லே பயன்பட்டது.

♣ நெற்சோற்றை நண்டுக் கறியோடு உண்டனா்.

♣ அக்காலத்தில் ஊறுகாய் போடும் பழக்கமும் இருந்துள்ளது. உமணா்கள் வண்டியின் முன்புறத்தில் கயிற்றால் வரிந்து கட்டி வைத்திருந்த ஊறுகாய்ப்பானை மத்தளம்போல் காட்சியளித்ததாம்.

♣ பாா்ப்பனப் பெண்கள் விருந்தினா்க்கு மாவடு ஊறுகாயோடு உணவு பரிமாறுவா்.

♣ எயினா்கள் களா் நிலத்தில் வளரும் ஈச்சம்பழம் போன்ற மேட்டு நிலத்தில் விளைந்த சோற்றினை நாய் வேட்டையாடிக் கொணா்ந்த உடும்புக் கற்யோடு உண்டனா்.

♣ ஆயா்கள் பெரிய கற்றத்தைக் கொண்ட நண்டின் சிறு குஞ்சுகளைப் போன்ற தினைச் சோற்றைப் பாலுடன் கலந்துண்டனா்.

♣ கடலோரத்தில் வாழ்ந்த வலைஞா்களின் உணவு பற்றியும் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

♣ மறைகாப்பாளா்கள் இராசா அன்னம் என்னம் உயா்வகை நெல்லரிசியை உணவாகக் கொள்வா்; நறுமோா் அவா்க்கு மிக விருப்பமானதாகும்.

♣ முயலை வேட்டையாடி உண்டனா், பகற்பொழுதிலேதிறந்தவாயையுடைய வேட்டை நாயுடன் கானகம் சென்று வேலிகளில் வலையை மாட்டி வைத்துப் பசிய புதா்களிலிருந்து முயல்களை வெளிப்படச் செய்து அகப்படுததுவா். ஆதன் இறைச்சியை விரும்பியுண்டனா்.

♣ ஈயலைக் கூட உணவாகக் கொண்டனா். நன்கு புளித்த மோாில் ஈயலை ஊறப்போட்டுப் புளிக்கறி சமைத்துண்டனா் (புறம். 119).

♣ தென்னை, பனை மரங்களிலிருந்து இறக்கிய கள்ளைத் தவிர வீட்டிலேயே சமைத்த ஒருவகைக் கள் தோப்பி என வழங்கிற்று.

♣ பெரும்பாணாற்றுப்படையில், மறவா்கள் ஆட்டுக்கிடாயினை அறுத்து உண்டு, இல்லத்தில் சமைத்த தோப்பியைப் பருகி தண்ணுமை ஒலிக்கத் தம் வலிய தோளை உயா்த்தி ஆடுவது பேசப்படுகிறது.

♣ உள்நாட்டுக் கள்ளைத்தவிர வெளிநாட்டிலிருந்து வருவித்த மது வகைகளையும் உண்டனா். பெரும்பாலும் மன்னா்களும் செல்வா்களும் இதனையுண்டனா்.

♣ அதியமான் அஞ்சிகள் குறைவாக இருந்தால் அதனை ஒளவையாா்க்கும் அவா் போன்ற இரவலா்க்கும் கொடுப்பான்; தான் சிறிதுமுண்ணான். ஆனால் மிகுதியாக இருக்கும் பொழுது தானும் உண்டு புலவாின் பாடலைக் கேட்டு மகிழ்ந்திருப்பான்.

♣ **உடை:**

♣ சங்க காலத் தமிழா்கள் அவரவாின் தகுதிக்கு ஏற்ப உடையணிந்தனா். ஆடவா் இடையில் ஓா் ஆடையும் மேலே ஒரு துண்டும் அணிந்தனா்.

- **'உண்பது நாழி உடுப்பவை இரண்டே'**
- என்னும் நக்கீரர் வாக்கால் இதனை உணரலாம்.
- வீரர்கள் நீலநிறக் கச்சையினை அணிந்தனர். அதிலே பூ வேலை செய்யப்பட்டிருந்தது.
- **"நீலக்கச்சைப் பூவாராடை"**
- என்னும் புறநானூறு இதற்குச் சான்றாகும்.
- இன்று போல் அனைவரும் மேற்சட்டை அணிந்திலர். சிலரே அணிந்தனர். அது கஞ்சுகம் எனப்பட்டது. அரண்மனைப் பொற்கொல்லன் சட்டையணிந்திருந்தான்.
- **"புண்ணிய நறுமலர் ஆடை போர்த்து"** சிலம்பு புதுமணப் பெண்கள் தம் உடலையும் முகத்தையும் புத்தாடையால் மூடிக்கொண்டதாக குறிப்புண்டு.
- அக்காலத்து ஆடைகளின் நேர்த்தியும் அழகும் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்ற. கண்ணுக்குப் புலப்படாத மெல்லிய இழைகளால் ஆடை நெய்யப்பட்டது. அழகிய பூத்தொழில் செய்யப்பட்டிருந்தது. பாம்பின் சட்டையைப் போல அவ்வளவு மென்மையாக ஆடை விளங்கிற்று.
- பாம்பின் சட்டைபோன்றும் மூங்கிலின் உட்புறத்து வெண்டோல் போலவும் அமைந்த பூங்கலிங்கம் பற்றிப் புறநானூறு பேசுகிறது.
- **பாம்புரி யன்ன வடிவின காம்பின்**
- **கழைபடு சொலியின் இழையணி வாரா**
- **ஒண்டிங் கலிங்கம் - புறநானூறு**
- தமிழ்நாட்டில் பருத்தி மிகுதியும் விளைந்தது. பருத்தியிலிருந்து நூல் நூற்றலைக் **கொட்டை நூற்றல்** என்பர் . கணவனை இழந்த பெண்கள் நூற்புத் தொழிலில் ஈடுபட்டனர்.
- நெசவாளர்கள் தனித்தெருவில் வாழ்ந்தனர் என அறிகிறோம். புட்டுத் துணியை நூலாக் கலிங்கம் என்று வழங்கியுள்ளனர்.
- **1.11. இறப்பு, ஈமச்சடங்கு, நடுகல், தென்புலத்தார் கடன்**
- சங்க இலக்கியகளில் இறப்புப் பற்றிய செய்திகள் மலிந்து கிடக்கின்றன. இறந்தவர்களைச் சுடுகாட்டில் தீமூட்டி எரித்தலும்,தமாழிகளில் இட்டுப் புதைத்தலும், வீரர்கட்கும் பறிர்க்கும் கல் நட்டு வழிபாடு செய்தலும், பெண்கள் தீப்பாய்ந்து உயிர் நீத்தலும், கைம்மை நோன்பு இயற்றுதலும்,இறந்துபட்ட முன்னோட்கட்டுத் தென்புலத்ததார் கடனிறுத்தலும் பற்றிய விவரங்கள் பரந்த கிடக்கின்றன.
- **வெள்ளாறுவை போர்த்தல்**
- பிணத்தின் மீது கோடித்துணி போர்த்தும் மரபு இன்றும் உண்டு. அக்காலத்தில் வீரர்கள் இறந்போது தூய வெள்ளாடை போர்த்தினார்கள்
- **மாரடித்துப் புலம்பல்:**
- இறந்து பட்டோரின் உரிமை மகளிரும் பிற பெண்டிரும்தம்முடைய கை வளைகள் சிதறுமாற தம் மார்பகங்களில் அறைந்து புலம்பிப் பூசலிட்டழுவதும் அன்றைய மரபாக இருந்தது.
- **இளவெளிமான்** என்னும் வள்ளல் மாய்ந்தபோது அவன் மகளிர் மாரடித்துப் புலம்பியதை புறம் விளக்குகிறது.
- **சாப்பறை முழுங்குதல்**
- நெய்தல் திணை இரக்கம் என்னும் உணர்வு பற்றியதாகும். இறந்தார் வீட்டில் முழங்கும் பறைக்கும் நெய்தல் பறையென்றே பெயர் வழங்கிற்று
- **ஈமப்பெருங்காடு**



AKM IAS & NEET ACADEMY

- ♣ பிணஞ்சுடும் சுடுகாடு, ஈமப் பெருங்காடு என்றும் முதுகாடு என்றும் அழைக்கப்பட்டது. இது கள்ளியும் முள்ளியும் மண்டிய இடத்தில் அமைந்திருந்தது. ஊருக்கு வெளியே இருந்தமையால் **புறங்காடு** என்றும் பெயர்பெற்றது.
- ♣ இப்பெருஞ்சுடுகாட்டில் பேய்கள் ஆடுவதாகவும் நம்பியுள்ளனர். ஆந்தைகளும் கழுகுகளும் அங்கு வட்டமிடும்.
- ♣ **தாழியற்கவித்தல்**
- ♣ இடுதல் சுடுதல் என்னும் இரண்டு மரபுகளும் அன்று ஒருசேர இருந்துள்ளன. தாழிகள் இன்றி வெறும் குழிகளில் புதைத்தனராவெனத் தெரியிவில்லை. தாழியிடுதலைக் கவித்தல் என்கின்றனர்.
- ♣ **கைம்மை நோன்பும் தீப்பாய்தலும்**
- ♣ கணவனை இழந்த பெண்கள் கைம்மைக் கோலம் கொண்டு நோன்பு இயற்றி, வரும்பிறிவியலும்தம் கணவனைக் கூட முயன்றனர்.
- ♣ அவர்கள் தம் கூந்தலைக்கூட கொய்தனர்; குறுந்தொடிகளை நீக்கினர்; பிற அணிகலன்களையும் ஒழித்தனர்; அல்லியரிசியினை உணவாகக் கொண்டனர்.
- ♣ **தீப்பாய்தல்**
- ♣ அருகிய நிலையில் பெண்டிர் உடன்கட்டை ஏறியுள்ளனர். பூதப்பாண்டியன் இறந்தபோது அவன் மனைவி தீப்பாய்ந்தாள். ஆவள் தீப்பாய்வதனைச் சான்றோர் தடுத்தனர்.
- ♣ அவர்களைப் பார்த்து அவள் பேசுவதாக அமைந்த பாடல் நெஞ்சை உருக்கவல்லதாகும்.
- ♣ **தென்புலத்தார் கடன்**
- ♣ இறந்துபட்டவர்கட்கு அவர்குளுடைய மைந்தர் செய்யும் ஒரு கடமையே தென்புலத்ததார் கடன் என்பது.
- ♣ இதனைப் **பிதிர்கடன்** என்பர் வடநூலார். பிண்டோதக் கிரியை என்றும் கூறுவார். வடவர் வடதிசையை புண்ணிய திசையென்றும் தென்திசையைக் கூற்றுவன் திசை என்றும் கூறியுள்ளனர்.
- ♣ **1.12. கால வகைப்பாடு**
- ♣ அறிஞர் சிலேட்டர் என்பார் "தமிழருடைய வானநூற் கணிதமுறையே வழக்கிலுள்ள எல்லாக் கணிதங்களிலும் நிதானமானது"
- ♣ **கணியர்**
- ♣ தமிழ்நாட்டில் வானியலிலும் அதனடிப்படையிலெழுந்த சோதிடத்திலும், வல்ல அறிஞர் அறிவர், கண, கணியன் என அழைக்கப்பட்டவர்.
- ♣ கணியன் பூங்குன்றன், பக்குடுக்கை நன்கணியார், கணிமேதாவியார் என்போர் புலவர்களாக விளங்கியுள்ளனர்.
- ♣ அரசனுடைய அவையில் பெருங்கணிகள் இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.
- ♣ **ஆறு பருவங்கள்:**
- ♣ ஓராண்டினைத் தமிழர் ஆறு பெரும் பொழுதுகளாகப் பகுத்தனர். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும்.
- ♣ நச்சினார்க்கினியர் கருத்துப்படி அன்று ஆவணியில் ஆண்டு தொடங்கிற்று; ஆடியில் முடிந்தது.
- ♣ சிங்கவோரையாகிய ஆவணி முதலாகக் கொண்டு கணக்கிடும் முறை பொ. ஆ. மு. 500 க்கு முற்பட்டது என்றும், சித்திரை முதலாகக் கொண்டு கணக்கிடுவது 2500 ஆண்டகளாக இருந்து வருகிறது என்றும் அறிஞர் **கா. சுப்பிரமணிய பிள்ளை** குறிப்பிட்டுள்ளார்.
- ♣ தமிழர் ஆண்டினை ஆறு பருவங்களாகப் பகுத்தாற்போலவே ஒரு நாளையும் ஆறு சிறுபொழுதாகப் பகுத்தனர்.

♣ வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு,மாலை, யாமம் என்பன அவையாகும். ஒரு நாளைக்கு அறுபது நாழிகைகள் என்று கணக்கிட்டுள்ளனர். ஒரு நாழிகை என்பது 24 நிமிடங்கள் கொண்டதாகும்.

♣ **1.13. பண்டைத் தமிழரின் விளையாட்டும் பொழுதுபோக்கும்**

♣ **தமிழக விளையாட்டுகள்**

♣ **நோக்கம்:**

♣ விளையாட்டுகள் ஓரினத்தின் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவன.

♣ விளையாட்டின் அடிப்படை நோக்கம் போட்டியிடுதலாகும். உடலிலும் உள்ளத்திலும் உள்ள ஆற்றல்களை வெளியிடவும், எதிர்பாராத தோல்விகளை எதிர்கொள்ளவும் மனப்பான்மை மேம்படவும் விளையாட்டு உதவுகிறது.

♣ **ஓடி விளையாடு பாப்பா- நீ**

♣ **ஓய்ந்திருக்க லாகாது பாப்பா**

♣ **கூடி விளையாடு பாப்பா மாலை முழுதும் விளையாட்டு -என்று வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா**

♣ என்று பாரதி,விளையாட்டின் மேன்மையறிந்து அதனைப் பழக்கமாக்கிக் கொள்ள வலியுறுத்துகிறார்.

♣ விளையாட்டுகள் பால் அடிப்படையிலும்,தன்மை அடிப்படையிலும் பல்வேறு வகையினவாக அமைகின்றன. மகளிர் விளையாட்டுகள் பெரும்பாலும் அக விளையாட்டுகளாகவும்,ஆடவர் விளையாட்டுகள் புற விளையாட்டுகளாகவும் உள்ளன.

♣ **சிறுவர் விளையாட்டுகள்:**

♣ பம்பரம், கிளித்தட்டு. உப்பு விளையாட்டு, கள்ளன் காவலன், கோலி, கிட்டிப்புள், காற்றாடி, பந்துவிளையாட்டு ஒற்றையா இரட்டையா, நீச்சல் முதலியன சிற்றூர் சிறுவர் விளையாடுவன ஆகும்.

♣ பூப்பறித்தல், கரகரவண்டி. தட்டாங்கல், பல்லாங்குழி,ஊஞ்சல், தாயம் என்பன சிற்றூர்ச் சிறுமியர் விளையாடுவன.

♣ சடுகுடு போட்டிகள் (கபடி),மட்டைப்பந்து, கால்பந்து,கைப்பந்து, எறிபந்து,இறகுப்பந்து, ஓட்டம், தடைதாண்டி ஓட்டம் எனப் பலவகை விளையாட்டுகள் போட்டி ஆட்டங்களாக விளையாடப்படுகின்றன.

♣ வீரவிளையாட்டுகளில் என்றும் பெரு விருப்பமுடையவர்கள் தமிழர். மற்போரிடல், ஏறுதழுவுதல், வேட்டையாடுதல், நீரில்மூழ்கி மணல் எடுத்தல் என்பன படைமை வாய்ந்த ஆடவர் விளையாட்டுகள்.

♣ முற்காலத்தில் மற்போரில் வல்ல மல்லர், மன்னரால் மதிக்கப்பெற்றனர்.

♣ களத்தில் பல்லாயிரவர் சூழ்ந்து நிற்க, தருக்கும் செருக்கும் நிரம்பிய ஆமூர் மல்லனுக்கும் வீரமும் தீரமும் வாய்ந்த நலங்கிள்ளிக்கு இடையே நடைபெற்ற வீர விளையாட்டைப் புறநானூறு என்னும் சங்க இலக்கிய நூல் வருணிக்கின்றது.

♣ **முல்லை:**

♣ முல்லை நிலத்தில் ஏறுதழுவுதல் என்னும் வீரவிளையாட்டு நடைபெற்றது. முரசு அதிர, பம்பை முழங்க, தொழுவத்திலிருந்து கொழுமைமிக்க காலைகள் ஒவ்வொன்றாக வெளியே ஓடிவரும்.

♣ கொம்பிலே உள்ளது காளையின்தெம்பு என்றறிந்த வீரர்கள் காளையின் கொம்பைப் பிடித்து, அதன் கொட்டத்தை அடக்குவர்

♣ **"வாலைப் பிடித்தல் தாழ்வு"** என்பது தமிழர் கொள்கை

♣ பல்லோர் சூழ்ந்த நிற்க கிணற்றுக்குள் துடுமெனப் பாய்ந்து குதித்து மணல் எடுத்து வருதல் ஒருவகை வீர விளையாட்டாகக் கருதப்பட்டது.

♣ **பெண்கள்:**

- பண்டைய நாளில் பெண்கள் வட்டாடுதல், கழங்கு, அம்மானை, பந்தாடுதல், ஊஞ்சல், ஓரையாடுதல் எனப் பல விளையாட்டுகளில் இனிதே பொழுது போக்கினார்கள்.
- அரங்கு இழைத்து (கட்டம் வரைந்து) நெல்லிக்காய்களை வைத்து நகர்த்தி ஆடும் ஆட்டம் வட்டாடுதலாகும்.
- அக்கால மகளிர் நண்டு, ஆமை ஆகியவற்றைக் கோல்கொண்டு அலைத்து ஓரையாட்டம் ஆடி மகிழ்ந்தனர். சிறுவர்,சிறுதேர் உருட்டி விளையாடி மகிழ்ந்தனர்.
- சிறுமியர் முத்துகளைக் கிளிஞ்சல்களின் உள்ளே இட்டு ஆட்டிக் களிப்புற்றனர்.
- **விளையாட்டுகள்:**
- இங்ஙனம், வீர விளையாட்டுகள் ஆடுவதில் விருப்புற்று விளங்கிய தமிழர் விலங்குப்போர் காண்பதிலும் வேட்கையுற்று விளங்கினர்.
- அரசர் வாழும் தலைநகரங்களில் யானைப்போர் நடைபெறுவதற்கும்,அதனைக் காண்பதற்கும் தனியிடங்கள் இருந்தன. மதுரையில் உள்ள தமுக்கம் மைதானம் யானைப்போர் காண்பதற்கான திடலாகும்.
- ஆட்டுக்கிடாய்ப் போர், சேவற்போர், கடுமையான காளைப்போர் என்பனவற்றைத் தமிழர் கண்டு மகிழ்ந்தனர். சோழநாட்டின் பழைய தலைநகரமான உறந்தையூரில் வீரக்கோழிகள் சிறந்திருந்தமையால் கோழியூர் என்னும் பெயரும் அதற்கமைந்தது என்பர்
- காலம் செல்லசெல்ல அதற்கேற்ப விளையாட்டுகளின் தன்மையும் போக்கும் மாறியுள்ளன. பண்டைய ஏறுதழுவுதல் விளையாட்டு இன்று சல்லிக்கட்டாகவும் மஞ்சுவிரட்டாகவும் அறியப்படுகின்றன.
- அன்று ஏறுதழுவியவரையே மகளிர் விரும்பி மணந்தனர். இன்று அவ்விளையாட்டானது பணமுடிப்பு. பரிசுப்பொருள்கள் பெறுதல், பலர் சேர்ந்து மாடு விரட்டல் என மாறிவிட்டது.
- தமிழரின் தற்காப்புக்கலை விளையாட்டுகளில் ஒன்றாகச் சிலம்பாட்டம் வளர்ந்து வருகிறது.
- நிலத்திலிருந்து ஓர் ஆளின் நெற்றி உயரம் வரை இருக்கும் தடியைச் சுழற்றி ஆடும் ஆட்டமே சிலம்பாட்டமாகும்.
- குச்சி விளையாட்டு, கம்பு விளையாட்டு எனச் சிற்றூர்களில் அறியப்படும் சிலம்பாட்டம் இன்றும் ஊர் விழாக்களில் நடைபெறுகிறது.
- ஊர்த்திருவிழாக் காலங்களில் வழுக்குமரம் ஏறுதல், உறியடித்தல்,மஞ்சள்நீர் ஊற்றுதல் ஆகிய விளையாட்டுகளை இன்றைக்கும் சிற்றூர்களில் காணலாம்.
- **கபடி:**
- உலக அரங்கில் தமிழரின் வீர விளையாட்டான கபடி (சடுகுடு)க்குத்தனியிடம் கிடைத்துள்ளது. கபடி விளையாடும் போது பாடிக்கொண்டே விளையாடுவது நம் மூதாதையர் வழக்கம்
- கபடிப் போட்டியில் பாடும் மரபு மறைந்துவிட்டது.
- **பொதுவானவை:**
- தமிழக அரசு, விளையாட்டின் பெருமையும் பயனும் மக்களைச் சென்றடைய தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தி ஊக்கமளித்து வருகிறது.
- விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் தருவதனோடு கல்வியிலும், வேலை வாய்ப்பினும் அரசு முன்னுரிமை அளிக்கின்றது.
- இயந்திரக் காலத்தாலும் புதுமைப் போக்காலும்சமுதாய மாற்றத்தாலும் விளையாட்டுகள் குறைந்து கொண்டும் மாறியும் வருகின்றன.
- 1. **புனலாடுதல்**

♣ ஆடவரும் பெண்டிரும் ஆறுகளிலும், குளங்களிலும் புனலாடி மகிந்தமையை அகப்பாடல்கள் பல எடுத்துச் கூறுகின்றன.

♣ குறிப்பாகப் பரத்தையருடன் ஆடவர் நீராடி மகிழ்தல் மருதச் செய்யுட்களில் பேசப்படுகின்றது.

♣ **2. குதித்து மணல் கொள்ளல்:**

♣ பெண்கள்பலரும் சூழ்ந்து நிற்கக் கிணற்றுக்குள் துடுமெனப் பாய்ந்து குதித்து மணல் கொண்டு மேலே வந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய கல்லா இளமைப் பருவத்தினை நினைத்து கழிவிரக்கப்படுகிறார் **தொடித்தலை வழுத்தண்ரூன்றினார்** என்னும் புலவர்.

♣ **3. வேட்டையாடல்**

♣ வேடுவர்கள் வேட்டையைத் தம் தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆனால் மன்னர்களோ வேட்டையை வீரமிக்க பொழுதுபோக்காக் கருதினர்.

♣ வல்வில்லோரியும், கண்டீரக் கோப்பெரு நற்கிள்ளியும் சிறந்த வேட்டைக்காரர்களாக விளங்கினர்.

♣ **4. இசையும் கூத்தும்**

♣ ஓயாது போரிலும் அரசியல் அலுவல்களிலும் ஈடுபட்டு அலுத்த வேந்தர்கள் தம் அவையில் புலவர் பெருமக்களின் இலக்கிய விளக்கங்களைக் கேட்டும். பாணர், கூத்தர், விறலியர்களின் பாடலையும், ஆடலையம் கேட்டும் கண்டும் இன்புற்று அவர்கட்குப் பெரும் பொருளைப் பரிசாக அளித்தனர்.

♣ பாணரும், கூத்தரும், நகைவேழம்பருவ பரிசாக அளித்தனர்.

♣ **5. வீர விளையாட்டுக்கள்**

♣ விழா நாட்களிலும் ஓய்வு நேரத்திலும் வீரர்கள் வீர விளையாட்டுகளில் திளைத்தனார். இதற்காக முரண்களரிகள் இருந்தன.

♣ **6. வட்டாடல்**

♣ அக்காலத்தில் சிறப்புற்றிருந்த விளையாட்டுக்களில் ஒன்று வட்டாடுதலாகும். இதற்கென்று அரங்கிழைத்துக் காய்களை நகர்த்தி வட்டாடுவர்.

♣ திருவள்ளுவரும் “**கல்லாது கோட்டி கொளல் அரங்கின்றி**

♣ **வாட்டாடுதலை யொக்கும்”**

♣ இளங்கீரணார் பாடிய நற்றிணைப் பாட்டொன்றில் வேப்பமரத்து நிழலில் கல்லாச் சிறுவர் கட்டளையன்ன வட்டரங்கிளைத்து நெல்லிக்காயை வட்டமாகக் கொண்டு ஆடுவடு பற்றிய குறிப்புள்ளது.

♣ 7. **பந்தாடுதல்**

♣ நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒருவகைப் பந்தினைக் கொண்டு ஆடுதல் அன்றைய மகளிர் வழக்கமாக இருந்தது. மாடி வீடுகளில்- மேல் மாடத்தில் பெண்கள் பரிப் பந்தாடியது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

♣ **8. கழங்காடுதல்**

♣ மகளிர் விளையாட்டுகளில் கழங்கு என்பது ஒன்றாகும். திண்ணைகளில் பொன்னாலான கழங்கினை வைத்து விளையாடியதாகப் புறநானூறு குறிப்பிடுகிறது.

♣ **9. ஊசலாட்டம்**

♣ மரத்தின் கிளையில் கயிற்றினை ஊசலாகக் கட்டி அதிலமர்ந்து ஆடி மகிழ்தல் பற்றிய குறிப்புகள் பலவுண்டு. அப்போது பாடும் பாடல் ஊசல் வரியாகும்

♣ **10. ஓரையாடுதல்**

♣ மகளிர் விளையாட்டுகள் ஓரையென்பது ஒன்று. ஆமை, நண்டு ஆகியவற்றைக் கோல்கொண்டு அலைத்து விளையாடுவது இவ்விளையாட்டாகத் தெரிகின்றது.

AKM IAS & NEET ACADEMY

- **"ஓரை யாயத் தொண்டொடி மகளிர்" -புறநானூறு**
- **11. வண்டலிழைத்தல்:**
- வண்டலிழைத்தல் என்பது ஒருவகை விளையாட்டாகும். மணலால் பாவை செய்து அதற்குப் பூச்சூட்டி மகிழும் விளையாட்டு
- **"வாலிழை மடமங்கையர்**
- **வரிமணல் புனைபாவைக்குக்**
- **குலவுச்சினைப் பூக்கொய்து"**
- **12. முக்காற் சிறுதேர்**
- சிறுவர்கள் மூன்று கால்கள் உடைய சிறுதேரையுருட்டி விளையாடுவது பற்றிப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன.
- "பொற்காற் சிறுவர் புரவியினறுருட்டும் முக்காற் சிறுதேர்" மகளிர் எறிந்த குழையினால் தகைக்கப்படுதலைப் பட்டினப் பாலையம் கூறும்.
- **13. கிலிகிலியாடல்:**
- சிறுவர்கள் கிலுகிலுப்பை என்னும்விளையாட்டுக் கருவியினால் ஒலியெழுப்பி விளையாடுதலை இன்றும் காணலாம்.
- சங்க நாளிலும் இருந்தது என்று சிறுபாணாற்றுப்படை வழியாக அறிகின்றோம்.
- உமணர்களோடு சென்ற குழந்தைகளைப் போன்ற மந்தி முத்துக்களைக் கிளிஞ்சல்களில் இட்டுக் குழந்தைகளோடு கிலிகிலியாடும் வளமார்ந்த நாடு பாண்டி நாடு என்கிறது இந்நூல்.
- **14. கோழிப்போர்:**
- வீரவுணர்வுமிக்க தமிழர்கள் ஆட்டக் கிடாய்களையும், காடை, கவுதாரி, கோழி முதலான பறவைகளையும் பழக்கிப் போரிடச் செய்து மகிழ்வதில் நாட்டம் கொண்டிருந்தனர்.
- **குப்பைக்கோழித் தனிப்போர்** போல என்று குறுந்தொகைப் புலவர் ஒருவர் அரிய உவமையை ஆள்கின்றார்.
- இதனால் கோழியைப் பழக்கிப் போரிடச் செய்ததும் வழக்கிலிருந்தது என அறியலாம்.
- **15. ஏறு தழுவல்**
- முல்லை நிலத்து ஆயர்கள் கூரிய கொம்புகளை உடைய காளைகளை அடக்குவதனை ஒரு வீர விளையாட்டாகக் கொண்டனர்.
- அத்தகு வீரர்களையே ஆயர்குடிப் பெண்கள் விரும்பி மணந்தனர்.
- **"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
- **புல்லாளே ஆய மகள்"**
- என்னும் கலித்தொகைப் பாடல் பகுதி இதற்குச் சான்றாகும்.
- **1.14 பழந்தமிழரின் அறிவியல் சிந்தனைகள்**
- **தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள்**
- **அறிவு அற்றம் காக்கும் கருவி** என்றவர் வள்ளுவர்.
- அறிவின் நுண்ணிலை வளர்ச்சியே அறிவியல்
- **விண்ணியல் அறிவு:**
- உலகம் உருண்டை என்று பதினாறாம் நூற்றாண்டிற்கு பிறகே மேலைநாட்டினர் உறுதி செய்தனர். ஆன்ம இயல் பேசும் திருவாசகம் விண்ணியலையும் பேசுகிறது

AKM IAS & NEET ACADEMY

- **அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
- **அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி**
- **ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
- **நூற்றொரு கோடியின்மேற்பட விரிந்தன**
- பெருவெடிப்புக் கொள்கையின் படி இப்பேரண்டம் விரிவடைந்து நிற்பதை இப்பாடல் ஆழமாக விளக்குகிறது.
- உலகம் என்னும் தமிழ்ச்சொல் உலவு என்னும் சொல்லில் இருந்து பிறந்தது.
- உலவு என்பது சுற்றுதல் என்ற பொருளைத் தரும்.
- ஞாலம் என்னும் தமிழ்ச்சொல் **ஞால்** என்னும் சொல்லில் இருந்து பிறந்தது.
- ஞால் என்பதற்கு தொங்குதல்என்பது பொருள்.
- வுானத்தில் காற்றில்லாப் பகுதியும் உள்டு என்பதை தமிழர்கள் அறிந்திருந்தனர்.
- இதனை '**வறிது நிலைஇய காயமும்**' என்னும் புறநானூறு வரி விளக்குகிறது. '**வலவன் ஏவா வானூர்தி**' என்னும் புறநானூற்றுத் தொடரினால் தமிழர்கள் வானூர்தியை விண்ணில் செலுத்தி இருக்கலாம் என அறியப்படுகிறது.
- **பொறியியல் அறிவு:**
- கரும்பைப் பிழிவதற்கு எந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.
- இதனைத் '**தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த**' என்னும் பதிற்றுப்பத்து வரிகள் குறிப்பிடும்.
- நிலத்தில் இருந்து நீரை உறிஞ்சி இறைக்கும்ஆழ்துளைக் கிணறு,அக்காலத்தில் இருந்திருக்கலாம் என்பதனை, **'அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்'** என்னும் பெருங்கதை வரியின் வாயிலாக அறிய முடிகிறது.
- பெருங்கதையில் வரும் எந்திர யானை கிரேக்கத் தொன்மத்தில் குறிப்பிடப்படும் டிராய் போருடன் இணைத்துப் பேசப்படும் எந்திரக்குதியுடன் ஒத்தது.
- **கனிமவியல் அறிவு:**
- சிலப்பதிகாரம் பல்வகை மணிகளையும் அதன் தன்மைகளையும் விளக்குகிறது.
- **ஊர்காண் காதையில்,**
- **ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்**
- **இலங்குகதிர் விடுஉம் நலங்கெழு மணிகளும்**
- என்னும்இவ்வடிகள் ஐவகை மணிகளை விளக்குகிறது.
- **மண்ணியல் அறிவு:**
- தமிழர், தம் வாழிடங்களை நிலத்தின் தன்மைக்கேற்ப பாகுபடுத்தியுள்ளனர் அவையே ஐவகை நிலங்கள், மேலும் செம்மண், களர்நிலம், எனவும் நிலத்தைத் தமிழர் வகைப்படுத்தினர்.
- செம்மண் நிலத்தை அதன் பயன்கருதிப் போற்றினர். இதனைச் **செம்புலப் பெயல் நீர்போல** என்னும் குறுந்தொகை வரி உணர்த்தும்.
- உவர்நிலம், மிகுந்த நீரைப் பெற்றிருந்தும் பயன்தருவதில்லை, இதனை, அகல்வயல் பொழிந்தும் உறுமிடத் துதவா உவர்நிலம் என்னும் புறநானூறு வரிகள் விளக்குகிறது.
- எதற்கும் பயன்படாத நிலம் களர்நிலம், இதனைப் பயவாக் களரனையர் கல்லாதவர் என்பார் திருவள்ளுவர்.
- **அணுவியல் அறிவு:**

♣ அணுவைப் பிளக்கவும், சேர்க்கவும் முடியம் என ஆய்ந்து ஔவை, **அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி** என்று சொல்கிறார்.

♣ **ஓர் அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன்** எனக் கம்பர் கூறுவார்.

♣ இதன் மூலம் அணுச்சேர்ப்பும் அணுப்பிரிப்பும் பற்றிய கருத்துக்கள் அறியப்பட்டுள்ளது.

♣ **நீரியல் அறிவு:**

♣ நீரியல் இயக்கமே உலகை வளப்படுத்தகிறது. இதனை, திருவள்ளுவர் தன் குறளில் கூறியுள்ளார்.

♣ **நெடுங்கடலும் தன்னீரமை குன்றும் தடிந்தெழிலி**

♣ **தான் நல்கதாகி விடின் - குறள்**

♣ மழையை அமிழ்தம் என்றார் திருவள்ளுவர்

♣ **மருத்துவ அறிவ:**

♣ உடம்பார் அழியின் உயிரார் அழிவர் என்பார் திருமூர்.

♣ திருவள்ளுவர் மருந்து என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார்.

♣ உடல் உறுதியாய் வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் சமநிலையை காரணமாகம்.

♣ இன்று பரவலாகப் பயின்று வரும் இயற்கை மருத்துவம் என்னும் மருந்தில்லா மருத்துவ முறையை, அன்றே நம் தமிழர் கண்டறிந்துள்ளனர்.

♣ **மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**

♣ **அற்றது போற்றி உணின் -குறள் 942**

♣ **'மருந்தாகித் தப்பா மரத்தற்றால்'** என்னும் குறள் வரி தமிழ் மருத்துவத்தின் தொன்மையை கூறுகிறுது.

♣ புதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்தமருத்துவம்.

♣ **அறுவை மருத்துவம்:**

♣ கண்ணிடந் தப்பிய கண்ணப்பன் வரலாறு ஊனுக்கு ஊன் என்னும் செய்தியை கூறுகிறது.

♣ **உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி அடல்**

♣ **உறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்**

♣ என்னும் கம்பரின் வாக்கு அறுவை மருத்துவத்தை மெய்ப்பிக்கின்றன.

♣ மணிமேகலையின் தோழி சுதமதியின் தந்தையை மாடுமுட்டியதால், அவரின் குடல் சரிந்தது. சரிந்த குடலைப் புத்தத் துறவி சரிசெய் செய்தியை மணிமேகலை எடுத்துரைக்கிறது.

♣ பல்வகை அறிவியல் செய்திகள், உயிரியல் செய்திகள்,மருத்துவ செய்திகள், விரவிக்கிடக்கும் நூல் திருவாசகம்.

♣ **'மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும்'** எனத் தொடங்கும் பாடலடிகள் கருவியல் அறிகை நன்கு தெரிவிக்கின்றன.

♣ தமிழரின் அறிவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது வானியல் பற்றிய அறிவாகும். ஞாயிறு, திங்கள் என ஆராய முற்பட்டபோதே வானியல் ஆய்வு தோன்றிவிட்டது எனலாம். உலகில் தோன்றிய பல்வேறு அறிவியல் கல்விகளில் மிகத் தொன்மையானது பழைமையானது வானியல் கல்வி.

♣ வானியலைப் பற்றிக் கணித்துக் கூறுபர்களை அறிவன, கணியன், நாழிகைக் கணக்கர் எனவும் அழைத்தனர்.

♣ சூரியனின் வெப்பத்தாலே பருவகாலங்கள் ஏற்படுகின்றன என சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

- உலகம் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், வெப்பம், காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது
- **நிலம் நீர் தீ வளி விசும்போடும் ஐந்தும்**
- **கலந்து மயக்கம் ஆதலின்---------** (தொல்காப்பியம், பொருள்:635)
- இது போன்றதொரு குறிப்பைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும்
- **மண்திணிந்த நிலனும்**
- **நிலன் ஏந்திய விசும்பும்**
- **விசும்பு தைவரு வளியம்**
- **வளித்தலை இய தீயும்**
- **தீ முரணிய நீரும் என்றாங்கு**
- **ஐம்பெரும்பூதத்து இயற்கை போல்-------- (புறம் 2)**
- **உலகம் தட்டையா? உருண்டையா?**
- மேலை நாட்டார், பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முன்பு வரை, உலகம் தட்டையானது என்றே நம்பி வந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில்தான் போலந்து நாட்டைச் சார்ந்த நிக்கோலஸ்கிராப்ஸ் என்பவர் உலகம் தட்டை இல்லை. உருண்டையானது என முறையாகக் கணித்துக் கூறினார். ஆனால் அதனை எவரும் ஏற்றுக் கொள்வில்லை
- பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கலீலியோ,உலகம் உருண்டையானது என்பதனைத் தம்தொலைநோக்கியால் கண்டுபிடித்துச் சொன்ன பிறகுதான் மக்கள் ஏற்றுக் கொண்டனர்.
- மேலை நாட்டினர் கண்டறிந்ததற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சொல்லியது ஒரு தமிழ்க்குரல், அந்தக் குரலுக்கு உரியவர் திருவள்ளுவர்.
- **சமுன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
- **உழுந்தும் உழவே கலை - குறள் 1031**
- என்னும் குறட்பாவில் உலகம் சுழல்கிறது எனக் கூறுகின்றார். உருண்டையான பொருள்தான் சுழலும் என்பது அறிவியல் உண்மை. உலகம் உருண்மையாக இருக்கும் என்பதனை எந்தக் கருவியும் இல்லாத அக்காலத்தில் வள்ளுவர் உணர்ந்து தம் குறளில் கையாண்டுள்ளமை வியப்புக்குரியது.
- **ஞாயிறுக்காட்சி**
- வானவெளியில் மிகப்பெரிய வின்மீன் ஞாயிறு. ஞாயிற்றை வழிபடும் வழக்கம் வானவியல் மரபால் உண்டானது எனலாம்.
- சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றதும் என ஞாயிற்றைப் போற்றியுள்ளமையைக் காணலாம்.
- ஞாயிற்றைச் சுற்றியுள்ள பாதையை ஞாயிற்று வட்டம் என்றனர் ழுந்தமிழர் எனப் புறநானூறு குறிப்பிடுகின்றனது
- **செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்**
- **பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் - புறம் 30**
- இப்பாடலின் வாயிலாக ஞாயிற்று வட்டம், அதன்இயக்கம்,அந்தரமாய் நிற்கும் வான்வெளிமண்டலம் என்பனபற்றிய வானவியல் அறிவை உணரமுடிகின்றது.
- **திங்கள் தோற்றம்**
- தானே ஒளிவிடக்கூடிய ஞாயிற்றை நாள்மீன் எனவும், ஞாயிற்றிடமிருந்து ஒளிபெற்று ஒளிவிடக்கூடியவற்றைக் கோள்மீன் எனவும் பண்டைத்தமிழர் குறிப்பிட்டுள்ளனர்.

♣ திங்கள், தானாக ஒளிவீசுவதில்லை. இந்த வானியல் உண்மையைத் திருக்குறள் வெளிப்படுத்துகிறது.

♣ **மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**

♣ **காதலை வாழி மதி. -குறள் 1118**

♣ இக்குறளில் திங்களுக்குத் தானாக ஒளிவிடும்தன்மை இல்லை என்னும் வானியல் உண்மையை அறியலாம். திங்களைப் பாம்பு கொண்டற்று (குறல், 1146) என்னும் குறள் தொடர்,திங்கள் மறைப்புப் (சந்திரகிரணம்) பற்றியதாகும். திங்களின் நிலையைக் கருதித் தேய்பிறை, வளர்பிறை எனவும் குறித்துள்ளனர்.

♣ **கோள்கள் பற்றிய தமிழரின் கருத்து**

♣ கோள்களின் நிறம், வடிவம் முதலியவற்றைப் பற்றியும் தமிழர் அறிந்திருந்தனர்.

♣ செந்நிறமாய் இருந்த கோளைச் **செவ்வாய்** என அழைத்தனர். இன்றைய அறிவியல் வல்லுநர்கள் செவ்வாய்க்கோளில், மண் சிவப்பு நிறமாய் இருப்பதனை அங்குச் சென்றுள்ள செயற்கைக்கோள் அனுப்பும் ஒளிப்படங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

♣ வெண்மை நிறமுடைய கோளை வெள்ளி என அழைத்தனர். வெள்ளிக்கோளில் வெள்ளித்தாது இருப்பதனை இன்று அறிவியல் ஆய்வு புலப்படுத்தியுள்ளது. ஞாயிறு உதயத்திற்கு முன்பே வெள்ளி எழுந்து விடியலை உணர்த்துவதனால் இதனை விடிவெள்ளி என்றனர்.

♣ புதிதாகக் கண்டறிந்த கோளைப் புதன் என அழைத்தனர். புதிதாக அறிந்ததனால் அதற்கு **அறிவன்** எனவும் பெயருண்டு **வியா** என்றால் பெரிய, நிறைந்த எனப் பொருள்படும். வானில் பெரிய கோளாக வலம் வருவதனையே வியாழன் என்றனர்.

♣ சனிக்கோளைக் காரிக்கோள் என அழைத்தனர். இக்கோளில் கந்தகம் இருப்பதாக இன்றைய அறிவியல் ஆய்வு கூறுகிறது.

♣ இதனால் கோள்களின் நிறம், வடிவம் அதன் தன்மை முதலியவற்றைத் தமிழர்கள் அறிந்திருந்தார்கள் என்பது தெளிவாகிறது.

♣ சூரியன் முதலான 9 கோள்களை வான்வழிப் பயணங்கள் பற்றிய குறிப்புகளும், சீவகசிந்தாமணியில் மயிற்பொறி விமானத்தின் செயல்திறனும், கம்பராமாயணத்தில் இராவணன் செலுத்திய புட்பக விமானமும். பெருங்கதையில் வானூர்தி வடிவமும்,அதனை இயக்கும் முறையும் பற்றிய வான் பயணச் செய்திக் காணப்படுகின்றன.

♣ பழந்தமிழர் நிலத்தையும் கடலையும் மட்டுமல்லாமல் நீலவானத்தையும் ஆளுமை செய்தவர்கள் என்பது வெளிப்படை.

♣ **1.16. தமிழரின் கடற்பயணம்**

♣ **தமிழரின் கடற்பயணம்**

♣ '**திரைக்கடல் ஓடியம் திரவியம தேடு**' என்று ஔவையும், **யாதும் ஊரே யாவரும் கேளிர்** என்று கணியன் பூங்குன்றனாரும் கூறியுள்ளனார்.

♣ தமிழர்களின் பிற நாடுகளுக்கு கடற்பயணம் மேற்கொண்டதை **முந்நீர் வழக்கம்** எனத் தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளது.

♣ இப்பிரிவு காலில் (தரைவழிப்பிரிதல்) பிரிவு, கலத்தில் (நீர்வழிப்பிரிதல்) பிரிவு என இரு வகைப்படும்.

♣ அயல்நாட்டு வாணிகத்திலேயே வருவாய் மிகுதி. அதிலும் நீர்வழியாகச் செய்யும் வாணிகம் பெரும் பொரளைத்தரும்.

♣ பொருளீட்டுதலை பழந்தமிழர் தம் கடமையாக் கருதினர். இதனை தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ள பொருள்வயிற்பிரிவு விளக்குகிறது.

♣ **யவணர்**

♣ பல்லாயிரம்ஆண்டுகட்கு முன்னரே தமிழர் மேற்கே கிரீசு, உரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையிலும் கடல் வழி வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன.

♣ எகிப்து, பாலஸ்தீனம்,மெசபடோமியா, பாபிலோனியா, சீனம் ஆகிய நாடுகள் தமிழரின் பொருள்களை விரும்பிப் பெற்றன.

♣ ஏலமும், இலவங்கமும், இஞ்சியும், மிளகும் மேற்காசிய நாடுகளில் நல்ல விலைக்கு விற்கப்பட்டன.

♣ பிற நாட்டார் உள்ளத்தைக் கவரும் பொருள்களாக முத்தும், பவளமும், ஆரமும், அகிலும், வெண்துகிலும் இடம் பெற்றன.

♣ பழந்தமிழர்கள் கிரேக்கரையும், உரோமானியரையும் **யவணர்** என அழைத்தனர்.

♣ **கப்பல் கட்டுதல்**

♣ **'கலம்செய் கம்மியர்'** என ஒருவகைத் தொழிலாளர் தமிழகத்தில் இருந்தனர் அவர்களால் பெருங்கப்பல்கள் கட்டப்பட்டன.

♣ **புறநூனூறு கூறும் உவமை**

♣ நான்கு பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள் உள்ளன. அதன்நடுவில் தனியாக மதிலோடு கூடிய அரசனது கோட்டை உள்ளது. அக்கோட்டையின் தோற்றமானது, நடுக்கடலில் செல்லும் கப்பலுக்கு உவமையாகப் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

♣ **கடலைக் குறிக்கும் சொற்கள்:**

♣ ஆழி, ஆர்கலி, மந்நிர், வாரணம்,பௌவம், பரவை, புணரி

♣ **மரக்கலத்தைக் குறிக்கும் சொற்கள்**

♣ கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, ப.்.றி, ஓடம்.

♣ குடலில் செல்லும் பெரிய கலம் '**நாவாய்**' எனப்படும்

♣ **பட்டினப்பாலை:**

♣ புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவது போல் அசைந்தன.

♣ அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின எனப் பட்டினப்பாலை கூறுகின்றது.

♣ **புறநானூறு:**

♣ பெரிய நாவாய்கள் காற்றின் துணைகொண்டே இயங்கின. அவை பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன.

♣ கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

♣ **முசிறி:**

♣ முசிறி- சேரர் துறைமுகம்

♣ அங்குச் சுள்ளி என்னும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள், ஆற்றுத்துறைகள் கலங்கிப் போகும்படி வந்து நின்றன.

♣ யவனர்கள் பொன்னைச் சுமந்து வந்து அதற்கு ஈடாக மிளகை ஏற்றிச் சென்றனர் என்ற செய்தியை அகநானூறு கூறுகிறது.

♣ **கொற்கை:**

♣ கொற்கை- பாண்டிய துறைமுகம்

AKM IAS & NEET ACADEMY

♣ இத்துறைமுகத்தில் முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக நடந்ததை வெனிசு நாடு அறிஞர் மார்க்கோபோலோ சுறியுள்ளார்.

♣ மதுரைக்காஞ்சியும், சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முகத்தின் சிறப்பை கூறியுள்ளன.

♣ **விளைந்து முதிர்ந்த விழுமுத்து** என மதுரைக்காஞ்சி கூறுகிறது.

♣ **காவிரிப்பூம்பட்டினம்:**

♣ இது சோழர்களின் துறைமுகம்

♣ இங்கு பெரும்பாலும் வாழ்ந்தவர்கள் வணிகர்கள்.

♣ இங்கு சுங்கச்சாலையும், கலங்கரை விளக்கமும் இருந்தன.

♣ கடற்கரையை அடுத்துள்ள ஊர்களை பட்டினம், பாக்கம் என்று அழைத்தனர்.

♣ கடல்வழியே வந்த குதிரைகளும், தரை வழியே வந்த மிளகுப் பொதிகளும், இமயத்திலுண்டான மணிகளும் பொன்னும், குடகு மலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், கொற்கைத்துறையில் பிறந்த முத்தும், கீழ்க்கடலில் உண்டான பவளமும், கங்கையில் உண்டான பொருள்களும். காவிரியில் உண்டான வளங்களும், ஈழ நாட்டிலிருந்து வந்த உணவுப் பொருள்களும், பிற நாட்டுப் பொருள்களும், பிற அரிய பொருள்களும் வந்து சேர, வளம் மிகுந்த பரந்த இடத்தையுடைய தெருக்களாக விளங்கின.

♣ **ஏற்றுமதி இறக்குமதி**

♣ பழந்தமிழகத்தின் வாணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகளை பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் கூறுகின்றது.

♣ இரத்தினம்,முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய் இலவங்கப்பட்டை, இஞ்சி போன்றவை ஏற்றுமதி ஆயின.

♣ தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன.

♣ சீனத்துப் பட்டும், சர்க்கரையும் தமிழகத்திற்கு இறக்குமதி ஆயின.

♣ கரும்பு, அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவில் இருந்து கொண்டு வந்து பயிரிடப்பட்டது.

♣ **மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்** என்றவர் பாரதி.

♣ **1.17. தமிழரின் கப்பற்கலை**

♣ பயணம் தரைவழிப் நீர்வழிப் பயணம், வான்வழிப் பயணம் என மூன்று வகைப்படும். நீர்வழிப் பயணத்தை உள்நாட்டு நீர்வழிப் பயணம், கடல்வழிப் பயணம் என இருவகைப்படுத்தலாம்.

♣ நமக்குக் கிடைத்துள்ள நூல்களிலேயே மிகவும் பழமையானது தொல்காப்பியம், அந்நூல் **முந்நீர் வழக்கம்** என்று கடற்பயணத்தைக் குறிப்பிகிறது. எனவே, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழர்கள் கடல் பயணம் செய்துள்ளனர் என்பதை அறியலாம்.

♣ **கடலோட கால்வல் நெடுந்தேர் கடலோடும்**

♣ **நாவாயும் ஓடா நிலத்து - திருக்குறள்**

♣ **உலகு கிளர்ந்தனன் உருகெழு வங்கம்-** என்று பெரிய கப்பலை அகநானூறு குறிப்பிடுகிறது. இதனையே பதிற்றுப்பத்து என்னும் நூலும்.

♣ **"அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்**

♣ **பெருங்கலி வங்கம்"**

♣ சேந்தன் திவாகரம் என்னும் நிகண்டு நூலில் பலவகையான கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

♣ எடை குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து எடுத்துவிட்டுத் தோணியாகப் பயன்படுத்தினான். உட்பகுதி தோண்டப்பட்டவை என்பதால் அவை **தோணிகள்** எனப்பட்டன.

♣ தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்றைச் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப்பயன்படுத்தினர்.

♣ நியூசிலாந்து நாட்டு வெலிங்டன் அருங்காட்சியகத்தில் பழங்காலத் தமிழ்நாட்டுக் கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட மணி ஒன்று இடம்பெற்றுள்ளது. தமிழர்கள் அயல் நாடுகளுக்குக் கப்பல்களில் சென்றனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். பிற்காலச் சோழர்களில் இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் பெரிய கப்பற்படையைக் கொண்டு பல நாடுகளை வென்றனர் என்பதை வரலாறு பகிர்கிறது.

♣ தமிழர்கள் முற்காலத்திலேயே கப்படல் கட்டும் கலையை நன்கு அறிந்திருந்தனர். கப்பல் கட்டும் கலைஞர்கள் **கம்மியர்** என்று அழைக்கப்பட்டனர் இதனைக்

♣ "**கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇய்**" என்னும் மணிமேகலை அடியால் அறியலாம்.

♣ கப்பல்கள் தண்ணீரிலேயே இருப்பவை என்பதால் தண்ணீரால் பாதிப்பு அடையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர்.

♣ நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். பக்கங்களுக்குத் தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர்.

♣ மரத்தின் வெட்டப்பட்ட பகுதியை **'வெட்டுவாய்'** என்பர். அதன் **'கண்ணடை'** என்பது இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ஆகும்.

♣ மேலும் கழி உள்ள அரங்களைப் பயன்படுத்தாமல் தவிர்த்தனர். நீளம், அகலம், உயரம் ஆகியவற்றைச் சரியான முறையில் கணக்கிட்டுக் கப்பல்களை உருவாக்கினார்.

♣ இவற்றைத் தச்சுமுழம் என்னும் நீட்டலளவையால் கணக்கிட்டனர். பெரிய படககளில் முன்பக்கத்தை யானை, குதிரை, அன்னம் முதலயவற்றின் தலையைப் போன்று வடிவமைப்பதும் உண்டு. கரிமுக அம்பி, பரிமுக அம்பி என்றெல்லாம் இவை அழைக்கப்பட்டன.

♣ மரங்களையும் பலகைகளையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும்போது அவற்றுக்கு இடையே தேங்காய் நார், பஞ்சி ஆகியவற்றில் ஒன்றை வைத்து நன்றாக இறுக்கி ஆணிகளை அறைந்தனர்.

♣ சுண்ணாம்பையும் சணலையும் கலந்து அரைத்து அதில் எண்ணெய் கலந்து கப்பலின் அடிப்பகுதியில் பூசினர். இதனால் இம்முறையை இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோபோலோ என்னும் கடற்பயணி வியந்து பாராட்டியுள்ளார்.

♣ இரும்பு ஆணிகள் துருப்பிடித்துவிடும் என்பதால் மரத்தினாலான ஆணிகளையே பயன்படுத்தினர். இந்த ஆணிகளைத் தொகுதி என்பர்.

♣ "ஆங்கிலேயர் கட்டிய கப்பல்களைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பழுது பார்க்க வேண்டும். ஆனால் தமிழர் கட்டிய கப்பல்களை ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லை" என்று **வாக்கர்** என்னும் ஆங்கிலேயர் கூறியுள்ளார்.

♣ பெரிய பாய்மரம், திருக்கைத்திப் பாய்மரம், காணப் பாய்மரம், கோசுப் பாய்மரம் போன்ற பலவகையான பாய்மரங்களைத் தமிழர் பயன்படுத்தினர்

♣ பாய்மரங்களை கட்டும் கயிறுகளும் பல வகையாக இருந்தன. ஆஞ்சான் கயிறு, தாம்பாங்களிறு, வேடாங்கயிறு, பளிங்கைக் கயிறு, மூட்டங்கயிறு, இளங்கயிறு, கோடிப்பாய்க்கயிறு என்பவை அவற்றுள் சில, பாய்மரக் கப்பலின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும் பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்தனர் என்று பரிபாடல் கூறுகிறது.

♣ கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது. எரா, பருமல், வங்கு, கூம்பு பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும். கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் எரா எனப்படும்.

♣ குறுக்கு மரத்தைப் பருமல் என்பர், கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி **சுக்கான்** எனப்படும். கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும்.

♣ சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பல்களில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. இது காந்த ஊசி பொருத்தப்பட்ட திசைகாட்டும் கருவியாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கப்பல் செலுத்துபவரை மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி முதலிய பல பெயர்களால் அழைப்பர்.

♣ காற்றின் திசையை அறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். இவ்வுண்மையை,

♣ **நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**

♣ **வளி தொழில் அண்ட உரவோன் மருக**

♣ என்னம் புறப்பாடல் அடிகளில் வெண்ணிக் குயத்தியார் குறிப்பிடுகிறார்.

♣ திசைகாட்டும் கருவியைப் பயன்படுத்திம் வானில் தோன்றும் விண்மீன்களின் நிலையை வைத்தும் திசையை அறிந்து கப்பலைச் செலுத்தினர். கப்பல் ஓட்டும் மாலுமிகள் சிறந்த வானியல் அறிவையும் பெற்றிருந்தனர்.

♣ கடலில் செல்லும் கப்பல்களுக்குத் துறைமுகம் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்காக அமைக்கப்படுவது கலங்கரை விளக்கம் ஆகும். உயரமான கோபுரத்தின் உச்சியில் ஒளிவீசும் விளக்கினைக் கொண்டதாக இ∴து அமைக்கப்படும்.

♣ கலம் என்றால் கப்பல், கரைதல் என்றால் அழைத்தல், கப்பலை அழைக்கும் விளக்கு என்னும் பொருளில் இது **கலங்கரை விளக்கம்** எனப்பட்டது.

♣ பெரிய கப்பல்கள் துறைமுகத்தில் கரைக்கு அருகில் வர இயலாது. எனவே கப்பலில் வரும் பொருள்களைத் தோணிகள் மூலம் கரைக்கும் கொண்டு வந்தனர். இச்செய்தியை

♣ **கலம் தந்த பொற்பரிசம்**

♣ **கழித்தோணியால் கரை சேர்க்குந்து**

♣ என்று புறநானூறு கூறுகிறது.

♣ முற்காலத்தில் மக்கள் பயணம் செய்வதற்க மட்டுமன்றிப் போர் பிரயவும் கப்பல் பெரிதும் பயன்பட்டது. ஆனால் இக்காலத்தில் பெரும்பாலும் பொருள்களை ஏற்றிச் செல்லவே கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைச் சரக்குக் கப்பல்கள் என்பர்.

♣ 1.18. **தமிழர் வாணிபம்**

♣ தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாகக் கூறுகின்றன.

♣ **வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு** என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. மூவேந்தர்களின் காலத்தை வரையறுத்துக் கூறமுடியவில்லை.

♣ வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் இடம்பெற்றுள்ளன.

♣ **சேரர்**

♣ முடியுடைய மூவேந்தர்களில் சேரர்கள் பழமையானவர்கள் என்று கூறுபவர் உண்டு. சேர, சோழ, பாண்டியர் என்னும் தொடரையே இதற்குச் சான்றாகக் காட்டுவர். மேலும் தொல்காப்பியமும் **போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்** எனச் சேரரை முன் வைக்கின்றது.

♣ சேரர்களின் நாடு குடநாடு எனப்பட்டது. இவர்களின் தலைநகராக வஞ்சி விளங்கியது.

♣ இந்நகர் மேற்கு மலைத்தொடரில் தோன்றி அரபிக்கடலில் கலக்கும் பேரியாற்றங்கரையில் இருந்தது. இதனைக் கருவூர் என்றும் அழைப்பர்.

♣ தொண்டி, முசிறி, காந்தளூர் என்பன சேரநாட்டின் துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. சேரர்களின் கொடி விற்கொடி ஆகும். பனம்பூ இவர்களுக்குரிய பூ ஆகும்

♣ **சேர நாட்டின் எல்லைகள்:**

♣ பண்டைய சேர நாடு என்பது இன்றைய கேரளப் பகுதிகளும் தமிழ்நாட்டின் சேலம், கோவை மாவட்டங்களின் பகுதிகளும் இணைந்து பகுதியாக விளங்கியது என்பர். சேலம், கோவைப் பகுதிகள் கொங்கு நாடு என்று பெயர்பெற்றன.

♣ இப்பகுதிகளைச் சேரர்களின் உறவினர்கள் ஆட்சி செய்து வந்தனர்.

♣ **கொங்கும் மண்டலம்:**

♣ கார்மேகக் கவிஞர் இயற்றிய **கொங்கும் மண்டலச் சதகம்** என்னும் நூலில் வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலை, மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கரை என இந்நான்கு எல்லைகளுக்குட்பட்ட பகுதியாகக் கொங்குமண்டலம் விளங்கியதாகக் கூறப்படுகிறது.

♣ இன்றைய நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களையும் சேலம், கரூர் மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் கொங்குமண்டலம் விளங்கியது என்பர்.

♣ கொங்குநாட்டுப் பகுதியை காவிரி, பவானி, நொய்யல், ஆன்பெருநை என்று அழைக்கப்படும் அமராவதி ஆகிய ஆறுகள் வளம் செழிக்கச் செய்கின்றன.

♣ **பழங்கால வணிகம்:**

♣ உழவு, கைத்தொழில், வணிகம் என்னும் மூன்றும் ஓர நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு அடிப்படைகளாகம் என்பர்.

♣ உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கியுள்ளனர். சேரர்கள் வலிமை மிகுந்த கப்பல் படையை வைத்திருந்தனர்.

♣ அதற்கு

♣ செங்குட்டுவனின் கடற்போர் வெற்றியால் அவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று அழைக்கப்பட்டான். கடம்பர் என்னும் கடற்கொள்ளையர்களைச் சேரமன்னர்கள் அடக்கினர்.

♣ முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது. இங்கிருத்துதான் மற்ற நாடகளுக்கு மினகு, முத்து, யானைத் தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. பொன், மென்மைமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடமைதந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன. இச்செய்தியை,

♣ **மீனோடு நெற்குவைஇ**

♣ **மிசையம்பியின் மனைமறுக்குந்து** - புறம் 343: 1-3

♣ என்னும் பாடல் விளக்குகிறது.

♣ சேரநாட்டில் உள்நாட்டு வணிகமும் நன்கு வளர்ச்சியற்றிருந்தது. மக்கள் தத்தம் பொருள்களைத் தந்து தமக்குத் தேவையான பொருளைப் பெற்றனர்.

♣ நெல்லே விலையைக் கணக்கிட அடிப்படையாக இருந்தது என்பர். உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையனவாக இருந்தன என்பதை,

♣ **நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**

♣ **கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும் (அக.390)**

♣ என்னும் அகப்பாடல் மூலம் அறியலாம்.

♣ **கொங்கு மண்டலப் பகுதிகளில் இன்றைய வணிகம்**

♣ **நீலகிரி**

♣ கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் சந்திக்கும் இடமே நீலகிரி ஆகும். இம்மாவட்டம் முழுவதும் மலைப் பகுதியாலானது. காடுகள் நிறைந்த இம்மாவட்டத்தில் தோட்டப்பயிர்களான காப்பி, தேயிலை, உருளைக்கிழங்கு , கேரட், முட்டைகோசு ஆகியவை பெருமளவில் பயிரிடப்படுகின்றன; தைலமரம் (யூகலிப்டஸ்) வளர்க்கப்படுகிறது.

♣ நீலகிரி மாவட்டம் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறைந்தது. புகைப்படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை, துப்பாக்கி வெடிமருந்துத் தொழிற்சாலை, தைலமரம் (யூகலிப்டஸ்) எண்ணெய்த் தொழிற்சாலை ஆகியனவும் உள்ளன.

♣ **கோயம்புத்தூர்**

♣ கோவன்புத்தூர் என்னும் பெயரே கோயம்புத்தூர் என்று மருவி வழங்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் நெல், வாழை, கரும்பு, காய்கறிகள், பூக்கள் போன்றவை பெருமளவில் பயிரிடப்படுகின்றன. பஞ்சாலைகள், நூற்பாலைகள், மின்சாரப் பொருள்கள், எந்திரங்கள், வீட்டுஉபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இம்மாவட்டத்தில் நிறைந்துள்ளன.

♣ **திண்டுக்கல்:**

♣ வரலாற்றுச் சிறப்புமிக்க திண்டுக்கல்லில் நெல், சோளம், தினை வகைகள், வாழைப்பழம், காய்கறிகள் போன்றவை விளைவிக்கப்படுகின்றன. இப்பகுதி மலர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது. எனவே **தமிழ்நாட்டின் ஹாலந்து** என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

♣ **ஈரோடு:**

♣ பரப்பளவில் ஈரோடு தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகிறது. பருத்தி, எள் போன்றவை பயிரிடப்படுகின்றன. தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை ஈரோட்டில்தான் நடைபெறுகின்றது.

♣ துணி நூற்பாலைகள், எண்ணேய் ஆலைகள், சர்க்கரை ஆலைக்ள பெருமளவில் உள்ளன. நூல் நூற்பு, துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல், அச்சிடுதல், தோல் பதனிடுதல் முதலான தொழில்களும் இம்மாவட்டத்தில் நடைபெறுகின்றன.

♣ **திருப்பூர்**

♣ இன்று திருப்பூர் மிகச்சிறந்த பின்னலாடை நகரமாக விளங்குகிறது. நெல், கரும்பு, பருத்தி, வாழை போன்றவை இங்கு விளைவிக்கப்படும் முதன்மையான பயிர்களாகும். இம்மாவட்டம் பின்னலாடைகள், ஆயத்த ஆடைகள் மூலம் தமிழ்நாட்டிற்குப் பெரும் வருவாயை ஈட்டித்தருகிறது.

♣ இந்தியாவின் முதல் ஆயத்த ஆடைப் பூங்காவான நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது. தேசிய அளவில் புகழ்பெற்ற காங்கேயம் காளைகள் இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

♣ **நாமக்கல்**

♣ பச்சைமலை, கொல்லிமலை, சேர்வராயன் மலையின் ஒரு பகுதி ஆகியவை இம்மாவட்டத்தில் உள்ளன. நெல், கரும்பு, சோளம், நிலக்கடலை, பருத்தி ஆகியவற்றுடன் மலைப்பகுதிகளில் விளையும் திராட்சை, ஆரஞ்சு, காப்பி பாக்கு, ஏலம் போன்றவையும் பயிரிடப்படுகின்றன.

♣ முட்டைக்கோழி வளர்ப்பிலும் முட்டை உற்பத்தியிலும் தென்னிந்தியாவிலேயே நாமக்கல் முதன்மையான இடம் வகிக்கின்றது. இங்கே சிமெண்ட், காகிதத் தொழிற்சாலைகள் உள்ளன. கைத்தறி நெசவு, வெண்கலப் பொருள்கள் செய்தல் முதலான தொழில்களும் நடைபெறுகின்றன. சிற்றுந்து, சரக்குந்து ஆகியவை அதிக அளவில் இயங்கும் மாவட்டமாக நாமக்கல் விளங்குகிறது.

♣ **சேலம்:**

AKM IAS & NEET ACADEMY

♣ மாங்கனி நகரம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது சேலம். இம்மாவட்டதில் நெல், பருப்பு வகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி, பாக்கு ஆகியன பயிரிடப்படுகின்றன.

♣ இந்தியாவிலலேயே இம்மாவட்டத்தில்தான் ஜவ்வரிசி அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகின்றது.

♣ தமிழ்நாட்டில் கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம் இதுவே. இங்குப் பால் பண்ணைத் தொழிலும் சிறப்பாக நடைபெறுகின்றது. இரசாயனப் பொருள், அலுமினியம், சந்தன எண்ணெய், வனஸ்பதி ஆகியவை தயாரிக்கும் ஆரலகள் நிறைந்த மாவட்டமாகவும் சேலம் விளங்குகிறது. முலாம் பூசும் தொழிலும் பெருமளவில் நடைபெறுகிறது. **ஏழைகளின் ஊட்டி என்று** அழைக்கப்படும் **ஏற்காடு** இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது.

♣ **கரூர்:**

♣ கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய இப்பகுதிக்கு வஞ்சிமாநகரம் என்னும்பெயரும் உண்டு. கிரேக்க அறிஞர் தாலமி, கரூரைத் தமிழகத்தின் முன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.

♣ நெல், சோளம். கேழ்வரகு, கம்பு, கரும்பு போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன. கல்குவாரித்தொழிற்சாலைகள் இங்கு உள்ளன. கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர்பெற்ற மாவட்டமாகக் கரூர் விளங்குகிறது. தோல் பதனிடுதல், சாயமேற்றுதல், கற்சிற்ப வேலைக்ள போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன. பேருந்துக் கட்டுமானத் தொழிலின் சிகரமாகக் கரூர் விளங்குகிறது.

♣ துறைமுக நகரங்கள், யவனக் குதிரைகள் ஓடுகிற ஓசையாலும் உரோமானியங்கள் பொருள்களைப் பொற்காசுகள் கொடுத்து வாங்கும் ஒலியாலும் விளக்கொளியாலும் நிரம்பி, வெளிநாட்டினரும் உள்நாட்டினரும் இரவில் நடமாடும் தூங்காத நகரங்களாகத் திகழ்ந்தன.

♣ மார்க்கோபோலோ தமது பயணக் குறிப்பில் இந்த நகர அமைப்புகள், மாட மாளிகைகள் ஆகியன தம்மைக் கவர்ந்ததாக எழுதியுள்ளார்.

♣ பொ. ஆ. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த இத்தாலி நாட்டின் பிளினி தம் குறிப்பில் எகிப்து அரசி கிளியோபாட்ரா கொற்கை முத்தை அணிந்ததாகப் பதிவு செய்துள்ளார்.

♣ கப்பல்களும் படகுகளும் வந்து தங்கிச் செல்வதற்குரிய இடம் துறைமுகமாகும்.

♣ இப்பகுதி கடல்வழிப் போக்குவரத்து நடைபெறும் இடமாக உள்ளது.

♣ பண்டைத் தமிழர்கள் போர், வணிகம் போன்ற காரணங்களுக்காவும் துறைமுகங்களைப் பயன்படுத்தினர்.

♣ தமிழகத்தின் துறைமுகங்கள் ஆற்றின் கழிமுகங்களில் அமைந்திருந்தன.

♣ அறிவியல் வளர்ச்சியடைந்த இந்நாளில் திசைகாட்டும் கருவிகள், செயற்கைக்கோள்கள் துணையோடு கடல்வழிப் பயணத்தைத் திறம்பட மேற்கொள்ளமுடிகிறது.

♣ பொருள்களைக் குறைந்த பொருட்செலவில் உலகநாடுகள் முழுவதிலும் கொண்டு சேர்க்க இன்றும் தரைவழி, வான்வழிப் போக்குவரத்தைவிடக் கடல்வழிப் போக்குவரத்தே பெரிதும் துணைபுரிகின்றது.

♣ தமிழர்கள் கடல் கடந்து சென்றதைப் போலவே கிரேக்கர்களும் உரோமானியர்களும் சாவகத்தீவினரும் வணிகத்திற்காகத் தமிழகத்திற்கு வந்து சென்றனர்.

♣ **1.19. உலகளாவிய தமிழர்கள்**

♣ யாதும் ஊரே யாவரும் கேளிர் எனக் கூறியவர் கணியன் பூங்குன்றனார்.

♣ **கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு**

♣ **முன்தோன்றிய மூத்தகுடி-** புறப்பொருள் வெண்பாமாலை.

♣ **தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குண முண்டு**

♣ என்று **நாமக்கல் கவிஞர்** மூற்றுக்கு ஏற்ப தமிழர்கள் தங்களது பண்பாட்டு அடையாளங்களை மறவாமலும் மாற்றிக் கொள்ளாமலும் வாழ்கிறார்கள்

- **தமிழினப்பரவல்**
- உலகில் உள்ள 235 நாடுகளில் ஏறத்தாழ 154 நாடுகளில் தமிழர்கள் உள்ளனர்.
- இருபது நாடுகளில் இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர் வாழ்கின்றனர்.
- **துமிழர் புலம்பெயரக் காரணங்கள்**
- **"திரைக்கடல் ஓடியும் திரவியம தேடு"** என்றவர் ஔவையார்.
- சாதுவன் வணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்று குறிப்பு மணிமேகலையில் உள்ளது.
- **தமிழர்கள்**
- சில தமிழர்கள் அடிமைக்கூலிகளாகவும், சிலர் நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாகவும், சிலர் அன்னியப் புடையெடுப்பின் காரணமாகவும் தமிழகத்தைவிட்டு புலம் பெயர்ந்தனர்.
- சிங்கப்பூர், மலேசியா, பினாங்குத் தீவு ஆகிய நாடுகளில் கோவில்கள் கட்டி ஆண்டுதோறும் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.
- ரீயூனியன் தீவில் வசிப்பவர்கள் பெரும்பாலும் தமிழர்கள்.
- **மொழிநிலை:**
- இலங்கையில் வாழும் தமிழர்களில் 95 விழுக்காட்டினர் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழிலேயே கல்வி கற்கின்றனர்.
- சிங்கப்பூர், மொரிசியசு, மலேசியா, பிஜித்தீவுகள், தென் அமெரிக்கா, கனடா, பிரிட்டனில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.
- **தமிழ் ஆட்சிமொழி:**
- இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஆகிய நாடுகளில் தமிழ், ஆட்சிமொழியாகத் திகழ்கிறது.
- **ஆட்சிநிலை**
- சிங்கப்பூர், மொரிசியசு ஆகிய நாடுகளில் குடியரசுத்தலைவர்களாகவும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூரில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சராகவும் உள்ளனர்.
- தமிழர் புலம்பெயர்ந்து சென்று பல நாடுகளில் வாழ்ந்தாலும், நமது உடலுழைப்பாலும், நேர்மையாலும் அந்நாடுகளை வளம் பெறச் செய்தனர்.
- **பூம்புகார்:**
- பண்டைய தமிழகத்தின் மிகப் பழமையான நகரங்களுள் பூம்புகாரும் ஒன்று.
- காப்பிய மாந்தர்களான கோவலனும், கண்ணகியும் இந்த ஊரில்தான் பிறந்தார்கள்.
- பூம்புகார் புகழ்பெற்று விளங்கிய துறைமுக நகரமும் கூட
- துறைமுகங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றுதான் பூம்புகார் துறைமுகம் ஆகும்.
- இது காவிரி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் தற்போதைய மயிலாடுதுறை அருகே உள்ளது
- இந்த நகரத்துக்குப் புகார், காவிரிப்பூம்பட்டினம் போன்ற பெயர்களும் உண்டு. சங்க காலச் சோழ அரசின் துறைமுகம் பூம்புகார். பூம்புகார் துறைமுகத்தில் சீரும், சிறப்புமாக நடந்த வணிகம் குறித்து சங்க இலக்கிய நூலான பட்டினப்பாலையிலிருந்தும், இரட்டை காப்பிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலையிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.
- சிலப்பதிகாரம் பூம்புகாரின் சிறப்பைப் பேசுகின்றது. சிலப்பதிகார நாயகி கண்ணகியின் தந்தை மாநாய்கன். மாநாய்கன் என்றால் பெருங்கடல் வணிகன் என்று பொருள். நாயகன் கோவலனின் தந்தை மாசாத்துவன். மாசாத்துவன் என்றால் பெருவணிகன் என்று பொருள். இதிலிருந்து பெருவணிகர்களும் நிறைந்த பகுதியாக பூம்புகார் விளங்கியது தெளிவாகிறது.
- இங்கு வெளிநாட்டவர் குடியிருப்புகளும் தோன்றின.

♣ பூம்புகார் நகரத்து வணிகர்கள் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர் பெற்றவர்களாக விளங்கினார்கள். மிகச் சரியான விலைக்கே பொருள்களைவிற்றனர். கூடுதலான விலைக்கு பொருளை விற்பது தவறான செயல் என்று அவர்கள் கருதினர் என்பதை பட்டினப்பாலை கூறுகிறது.

♣ கடல் வழியாகக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. கருமிளகு தரைவழித் தடங்கள் வழியே இறக்குமதி ஆனது. வட மலையிலிருந்து தங்கம் இறக்குமதி செய்யப்பட்டது. அது பெருகூட்டப்பட்டு மீண்டும் அயல்நாட்டுக்கு ஏற்றுமதியானது.

♣ பூம்புகார் நகர வாழ்வினை சிலப்பதிகாரத்தின் புகார் காண்டத்தினை வாசித்து பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களை வாசித்தும் அறியலாம்.

♣ **மதுரை:**

♣ இந்தியாவில் உள்ள மிகப் பழமையான நகரங்களில் மதுரையும் ஒன்று. சங்கம் வளர்த்த நகரம் என்று பெயர் பெற்றுள்ளதில் இருந்தே இதன் தொன்மையைப் பரிந்து கொள்ளலாம்.

♣ பண்டை காலத்தில் மதுரையை முறையே பாண்டியர்களும், சோழர்களும், களப்பிரர்களும் ஆட்சி செய்தனர். இடைக்காலத்தில் பிற்காலச் சோழர்களும், பிற்காலப் பாண்டியர்களும், அவர்களைத் தொடர்ந்து நாயக்கர்களும் ஆட்சி புரிந்தனர்.

♣ இதன் விளைவாகப் பண்பாட்டுக் கலப்பு நிகழ்ந்தது. வணிகம் செழித்தது. இதற்கான சான்றுகள் மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்துள்ளது.

♣ சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்த பெருமை மதுரைக்கு உண்டு. கடைச்சங்க காலத்தில் தமிழ்ப் பணி செய்த புலவர்கள் 49 பேர்.

♣ பண்டைய இஸ்ரேல் அரசர் சாலமோன் முத்துக்களை உவரி என்னுமிடத்திலிருந்து இறக்குமதி செய்தார். பாண்டியர் துறைமுகமான கொற்கைக்கு அருகில் உவரி உள்ளது.

♣ ரோமானிய நாணயங்கள் என்ற இரண்டு வகை அங்காடிகள் மதுரையில் இருந்துள்ளது.

♣ **தூங்கா நகரம்:**

♣ நாளங்காடி, அல்லங்காடி என்ற இரண்டு வகை அங்காடிகள் மதுரையில் இருந்தன.

♣ நாளங்காடி என்பது பகல் பொழுதிலான அங்காடியாகும். அல்லங்காடி என்பது இரவு நேரத்து அங்காடியாகும்.

♣ இரவு-பகல் பேறுபாடு இல்லாமல் உயிர்ப்புள்ள நகரமாக மதுரை விளங்கியதால் தூங்கா நகரம் என்று அழைக்கப்பட்டது.

♣ பிறாட்டு நாணயங்களும் மதுரையில் அச்சடிக்கப்பட்டது. மதுரையின் புகழுக்கு ஒரு சான்று ஆகும்.

♣ புகழ்பெற்ற கிரேக்க வரலாற்றாசிரியர் மெகஸ்தனிஸின் குறிப்புகளில் மதுரையைப் பற்றிய தகவல்கள் உண்டு.

♣ மௌரிய வம்ச அரசானான் சந்தி குப்தரின் அமைச்சரான சாணக்கியர் மதுரையைப் பற்றி தனது அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

♣ மதுரை நகரைச் சுறிறிலும் இருந்து அகழியில் யானைகள் கூட செல்லும் அளவுக்கு அகலமான சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன.

♣ **காஞ்சி**

♣ கல்வி கற்பதற்கான இடத்தினை பள்ளி என்று அழைக்கிறோம். இப்பள்ளிகள் காஞ்சி நகரில் தான் முதன்முதலில் ஏராளமாகக் அமைக்கப்பட்டன.

♣ சமணர் அமைத்த பள்ளிகளில் சமண மாணவர்களும், புத்த விகாரங்களில் புத்த மாணவர்களும் பயின்றனர்.

♣ நாளந்தா பல்கலைக்கழகத்தில் பயின்ற சீன வரலாற்றாசிரியர் யுவான் சுவாங் கூடுதல் படிப்புக்காக காஞ்சியில் இருந்த கடிகைக்கு வந்திருக்கிறார்.

♣ புகார் துறைமுக நகரம், மதுரை வணிக நகரம் காஞ்சி கல்வி நகரம் ஆகும்.

♣ **“நகரங்களில் சிறந்தது காஞ்சி”** என்று கவிஞர் காளிதாசர் கூறுகிறார்.

♣ **“கல்வியில் கரையிலான காஞ்சி”** என்று நாயன்மார்குளம் முதன்மையானவரான திருநாவுக்கரசர் காஞ்சி நகரைப் புகழ்ந்துள்ளார்.

♣ புத்தகளா, சாஞ்சி போன்ற ஏழு இந்தியப் புனிதத் தலங்களுள் காஞ்சியும் ஒன்று என சீன வரலாற்றாசிரியர் யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.

♣ தொண்டை நாட்டில் உள்ள மிகப் பழமையான நகரம் காஞ்சியாகும்.

♣ தர்மபாலர், ஜோதிபாலர் சுமதி, போதிதர்மர் போன்ற சான்றோர்கள் காஞ்சியில் பிறந்து வாழ்ந்தவர்கள்.

♣ காஞ்சி கோயில்களின் நகரம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு உள்ள கைலாசநாதர் கோவில் புகழ்பெற்றது. பிற்காலப் பல்லவ மன்னன் ராஜசிம்மன் இந்த கற்கோவிலைக் கட்டினார்.

♣ பௌத்த துறவியான மணிமேகலை தனது இறுதிக் காலத்தை காஞ்சியில் கழித்தார் என்பது இதன் சிறப்புக்கு இன்னொரு சான்று ஆகும்.

♣ காஞ்சி நகரைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான ஏரிகள் வெட்டப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டது.

♣ **முசிறி:**

♣ தமிழ்நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் சேரர்களின் ஆட்சி எல்லைக்குள் அமைந்த புகழ்பெற்ற துறைமுகம் முசிறி.

♣ அக்காலத்தில் சேரநாட்டுத் தலைநகரான வஞ்சி, பேரியாற்றின் கரையிலுள்ள முசிறித் துறைமுகப் பட்டினத்திற்கு அருகேயே அமைந்திருந்தது.

♣ முசிறித் துறைமுகத்தில் மிளகு ஏற்றுமதி சிறப்புடன் நடைபெற்றது.

♣ யவனர் விரும்பி வாங்கியதால் மிளகிற்கு **யவனப்பிரியா** என்ற பெயர் ஏற்பட்டது.

♣ யவனக் கப்பல்கள் பொன்னைத் தந்து மிளகை வாங்குவதற்காக முசிறிக்கு வந்தன. இதனை,

♣ **கள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க**

♣ **யவனர் தந்த வினைமான் நன்கலம்**

♣ **பொன்னொரு வந்து கறியொடு பெயரும்**

♣ **வளங் கெழு முசிறி அகநானூறு (149)**

♣ அரேபியர் சேரநாட்டு மிளகைக் கொண்டுபோய்ச் செங்கடல் துறை முகங்களிலும் எகிப்தின் நைல்நதி கடலில் கலக்கும் இடத்திலுள்ள அலெக்சாண்டிரியா துறைமுகப் பட்டினத்திலும் விற்றனர்.

♣ முசிறித் துறைமுகப்பட்டினத்தில் அரேபியர் வணிகம் செய்த இடத்திற்குப் பந்தர் (கடைவீதி) என்று பெயர். முசிறித் துறைமுகப் பந்தரில் முத்துகளும் விலையுயர்ந்த நகைகளும் விற்கப்பட்டன.

♣ முசிறித் துறைமுகத்தில் பவளம், கண்ணாடி, செம்ப, தகரம், ஈயம் முதலிய பொருள்கள் யவனர்களால் இறக்குமதி செய்யப்பட்டன.

♣ கடல்வழி வணிகம் ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டது. எடுத்துக்காட்டாக, முசிறி-அலெக்சாண்டிரியா ஒப்பந்தம் என்பது முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகன் ஒருவனுக்கும் எகிப்தின் நைல் நதிக்கரையிலுள்ள அலக்சாண்டிரியா நகரில் வாழ்ந்த கிரேக்க வணிகன் ஒரவனுக்கும் பொ. ஆ. பி. 150 அளவில் ஏற்படுத்தப்பட்டதாகும்.

AKM IAS & NEET ACADEMY

- அவ்வணிக ஒப்பந்தப்படி, தமிழ் வணிகன் ஒருவன், கப்பலில் ஒருமுறை கொண்டு சென்ற வணிகப் போருள்களின் பண மதிப்பீடு 2,94,84,000 கிராம் வெள்ளியின் எடைக்கு ஈடானது என்பது குறிப்பிடத்தக்கது. அன்று எகிப்து நாடு உரோமப் பேரரசின் கீழ் இருந்தது.
- **கொற்கை:**
- தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றில் மேற்குக்கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம் கொற்கை.
- பாண்டியர்களில், ஆளும் மன்னரை அடுத்து அரசாள வரும் பட்டத்து இளவரசர்கள் இத்துறைமுக நகரிலேயே தய்ச நிருவாகம் கற்றனர்.
- பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்துறந்தபின் கொற்கையில் இருந்து பட்டத்து இளவரசன் வெற்றிவேற் செழியன் மதுரை வந்து அரியணை ஏறினான் என்னும்செய்தியைக் சிலப்பதிகாரத்தின் நீர்ப்படைக் காதையிலுள்ள
- **கொற்கையிலிருந்து வெற்றிவேற் செழியன் (அடி: 127)**
- **மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின் (அடி: 134)**
- **மாலைத் திங்கள் வழியோன் ஏறினன் (அடி: 138)**
- ஆகிய அடிகள் குறிப்பிடுகின்றன.
- கொற்கைக் குடாக்கடல் அக்காலத்தில் நிலத்தின் உள்ளே ஐந்து கல் தொலைவிற்கு ஊடுருவியிருந்தது.
- செல்வர் ஏறிவரும் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக்கொள்ளும் அளவிற்குக் கரையோரங்களில் பொருள்கள் குவிந்திருந்தன. இதனை அகநானூறு
- **---------- திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்**
- **குவர்நடைப்பரவிக் கால்வடுத் தபுக்கும்**
- **நற்றோர் விழுதி கொற்கை முன்துறை**
- **(வெண்கண்ணனார் பாடல் 130)**
- எனக் குறிப்பிடுகிறது.
- முத்துக் குளிப்பது மட்டுமன்றி வலம்புரிச்சங்கு எடுக்கவும் அங்குள்ள ஆடவர் கலில் மூழ்குவர் என்னும் செய்தியைக் **வலம்புரி மூழ்கிய வான்திமில் பாதவர் என அகநானூற்றின் 350 ஆம் பாடல் சுட்டுகிறது.**
- **வெளிநாடுகளில் இருந்து கடல்வழி வந்தவை குதிரைகள்**
- **உள்நாட்டில் இருந்து தரைவழியில் வந்தவை கறி (மிளகு)**
- **வடமலையில் இருந்து வந்தவை**
- **மெருகிடப்பட்ட பொன், மணிக்கற்கள்**
- **மேற்குமலையில் இருந்து வந்தவை சந்தனம், ஆரம்**
- **தென் கடலில் இருந்து சிடைத்தவை முத்து**
- **கீழ்க்கடலில் விளைந்தவை பவளம்.**
- தற்காலத்தில் கொற்கைப் பகுதியில் நடந்த அகழாய்வின்போது கிடைத்த பெருங்கற்காலத்தைச் சார்ந்த முதுமக்கள் தாழிகள், இப்பகுதியின் தொன்மைக்கு மேலும் சான்றுகளாகின்றன.
- கொற்கையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் உரோம் நாட்டின் அகஸ்டஸ் மன்னனின் அரசவைக்கு முத்துகளைப் பரிசாக அளித்தார்கள் என்று வரலாற்று அறிஞர் ஸ்டிராபோ குறிப்பிடுகிறார்.
- பாண்டிய மன்னர்களின் குதிரைப் படைகளுக்காக ஆண்டுதோறும் கொற்கைத் துறைமுகத்தில் ஆயிரக் கணக்கான பாய்மரக் கப்பல்களில் 16,000அரேபியக் குதிரைகள் வந்து இறங்கின் என்கிற செய்தியையும் வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர்.

♣ கொற்கைப் பட்டினத்தில் பாண்டியந ாட்டு நாணயங்களை அச்சிடுவதற்கான பட்டறைகள் நிறைந்த ஒரு தெரு இருந்திருக்கிறது. அந்தத் தெருவிற்கு **அ.்.கசாலை** எனப் பெயரிடப்பட்டிருந்தது.

♣ பாண்டியர்கள் வெளியிட்ட மீன்முத்திரை பதித்த வெள்ளி நாணயங்கள் இங்குக் கிடைத்துள்ளன.

♣ **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என உலக மாந்தரின் உறவை விரும்பியவர்கள் தமிழர்கள்.

♣ **தமிழகம்- ஊரும் பேரும்**

♣ **குறிஞ்சி நில ஊர்கள்**

♣ தமிழகத்தில் வளமார்ந்த மலைகள் பலவுண்டு, மலையின் அருகே உள்ள ஊர்களுக்கு ஆனைமலை, சிறுமலை, திருவண்ணமாமலை, நாகமலை, வள்ளிமலை, விராலிமலை எனப் பெயர்கள் வழங்குவதனைக் காணலாம்.

♣ ஓங்கியுயர்ந்த நிலப்பகுதி மலை எனவும், மலையின் உயரத்தில் குறைந்ததனைக் குன்று எனவும், குன்றிலும் உயரத்தில் குறைந்ததனைக் கரடு எனவும், பாறை எனவும் பெயரிட்டு அழைத்தனர்.

♣ குன்றை அடுத்துள்ள ஊர்கள் குன்றூர், குன்றத்தூர், குன்றக்குடி என வழங்கப்பெற்றன. குட்டப்பாறை, சிப்பிப்பாறை, பூம்பாறை, மட்டப்பாறை, மணப்பாறை, வால்பாறை என்னும் ஊர்ப்பெயர்களுக்கான காரணத்தையும் இதனால் அறியலாம்.

♣ மலையைக் குறிக்கும் வடசொல் **கிரி** என்பதாகும். கிருஷ்ணகிரி, கோத்தகிரி, சிவகிரி, நீலகிரி என்பன மலையையொட்டி எழுந்த ஊர்ப்பெயர்கள்

♣ குறிஞ்சி நிலமக்கள் மலையிலிருந்து பிற இடங்களுக்குச் சென்று தங்கிய போதும் தங்கள் நிலப்பெயரை மறவாது ஆழ்வார்க்குறிச்சி, கல்லடைக்குறிச்சி, குறிச்சி, கள்ளக்குறிச்சி, மொடக்குறிச்சி எனப் பெயர் வைத்துக் கொண்டனர் போலும், குறிஞ்சி என்னும் சொல்லே மருவிக் குறிச்சியாயிற்று.

♣ **முல்லை நில ஊர்கள்:**

♣ முல்லை நில ஊர்கள் சூழ்ந்த பகுதிக்குக் குடிபெயர்ந்த மக்கள், மரங்களுக்குப் பெயர் சூட்டி, அம்மரப்பெயர்களோடு ஊர்ப்பெயர்களையும் வழங்கினர்.

♣ ஆத்தி (ஆர்) மரங்கள் சூழ்நத ஊர் ஆர்க்காடு எனவும், ஆலமரங்கள் நிறைந்த ஊர் ஆலங்காடு எனவும், களாச்செடிகள் நிறைந்த பகுதி **களாக்காடு** எனவும், மாமரங்கள் செழித்திருந்த இடம் மாங்காடு எனவும், பனைமரங்கள் நிறைந்திருந்த ஊர் பனையபுரம் எனவும் பெயரிட்டுத் தம்மித்தைக் குறிப்பிட்டனர். காட்டின் நடுவில் வாழந்த மக்கள், அங்குத் திரியும விலங்குகளால் தகக்கும், தம் கால்நடைகளுக்கும் ஊறு நெராவண்ணம் வேலி கட்டிப் பாதுகாத்தனர். அவ்வூர்கள் பட்டி, பாடி என்றழைக்கப்பெற்றன. ஆட்டையாம்பட்டி, பெரிய கொல்லப்பட்டி முதலிய நூற்றுக்கணக்கான பட்டிகள் தமிழ்நாட்டில் உள்ளன. ஆடு மாடுகள் அடைக்கப்படுமிடம் **பட்டி** எனப்படும் .

♣ **மருதநில ஊர்கள்**

♣ நிலவளமும், நீர்வளமும் பயிர்வளமும் செறிந்த மருதநிலக் குடியிருப்பும் ஊர் என வழங்கப்பட்டது. ஆறுகள் பாயும் இடங்களில் ஆற்றூர் என வழங்கும் ஊர்கள் தவிராமல் இடம்பெற்றிருக்கும். இதுவே காலப்போக்கில் பேச்சுவழக்கில் ஆத்தூர் என மருவி வழங்குகிறது.

♣ கடம்பமரம் சூழ்ந்த பகுதி கடம்பூர், கடம்பத்தூர், தென்னை சூழ்ந்த பகுதி தொங்கூர், புளியமரங்கள் அடர்ந்த பகுதி புளியங்குடி, புளியஞ்சோலை, புளியம் பட்டி என வழங்கும் ஊர்கள் மரப்பெயர்த் தொகுப்பு அடிப்படையில் பெயரிடப்பட்ட ஊர்களாகும்.

♣ நம் முன்னோர் குளம், ஏரி, ஊருணி முதலிய நீர்நிலைகளை உருவாக்கி, அவற்றோடு உர்ப்பெயர்களையும் இணைத்தனர். சீவலப்பேரி, புளியங்குளம், பேராவூரணி, மாங்குளம், வேப்பேரி என்பன இவ்வாறு தோன்றிய ஊர்ப்பெயர்களே.

♣ **நெய்தல் நில ஊர்கள்**

♣ பழங்காலத்தில் கடற்கரையில் உருவான பேரூர்கள் பட்டினம் எனவும், சிற்றூர்கள் பாக்கம் எனவும் பெயர் பெற்றிருந்தன. நெடிய கடற்கரையை உடைய தமிழகத்தில் பரதவர் வாழ்ந்த ஊர்கள் கீழக்கரை, கோடியக்கரை, நீலாங்கரை எனப் பெயர் பெற்றிருக்கின்றன. இக்காலத்தில் மீனவர் வாழுமிடங்களின் பெயர்கள் குப்பம் என்னும் பெயரைச் சேர்த்துப் பல்கிப் பெருகி வருகின்றன.

♣ **அரசும் ஊர்களும்**

♣ பெருவேந்தரும் குறுநில மன்னரும் அரண்கள் அமைத்து மக்களைக் காத்தனர் அரண்களுள் கோட்டையும் ஒன்று.

♣ கோட்டை சூழவிருந்த ஊர்களே கந்தர்வக்கோட்டை, தேவக்கோட்டை, நாட்டரசன்கோட்டை, நிலக்கோட்டை, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை என வழங்கலாயின.

♣ **திசையும் ஊர்களும்**

♣ நாற்றிசைப் பெயர்களும் ஊர்களுடன் குறிக்கப்பெற்றன. தம் ஊருக்குக் கிழக்கே எழுந்த ஊர்ப்பகுதியைக் கீழூர் எனவும். மேற்கே அமைந்த ஊர்ப்பகுதியை மேலூர் எனவும் பெயரிட்டு வழங்கினர்.

♣ தெற்கே உள்ளது தென்பழஞ்சியாகவும் வடக்கே உள்ளது வடபஞ்சியாகவும் பெயர் பெற்றன.

♣ நாயக்க மன்னர்கள் தமிழகத்தை எழுபத்திரண்டு பாளையங்களாகப் பிரித்துத் தம் ஆளுகைக்குட்படுத்தினார்கள். அவர்கள் ஊர்ப்பெயர்களுடன் பாளையத்தைச் சேர்த்து வழங்கினார்கள், அவ்வாறு பெயர்பெற்ற ஊர்கள் ஆரப்பாளையம், இராசபாளையம், கணக்கம்பாணையம், குமாரபாளையம், கோபிச்செட்டிபாளையம், கோரிப்பாளையம், மேட்டுப்பாளையம் எனப் பலவாகும்.

♣ காலச்சுழற்சி, ஆட்சிமாற்றம், வேற்றினக்கலப்பு முதலிய காரணங்களால் ஊர்ப்பேயர்கள் மருவி மாறி வழங்கலாயின.

♣ கல்வெட்டுகளில் காணப்படும் மதிரை மருதையாகி இன்று மதுரையாக மாறியுள்ளது. கோவன்புத்தூர் என்னும் பெயர் கோயமுத்தூர் ஆகி, இன்று கோவையாக மருவியுள்ளது.

♣ **நகரம்:**

♣ சிறந்த ஊர்கள் நகரம் என்னும் பெயரால் வழங்கப்படும்.

♣ நாட்டின் தலைமை சான்ற நகரம் தலைநகரம்.

♣ ஆழ்வார்களில் சிறந்த நம்மாழ்வார் பிறந்த இடம் குருகூர் என்னும் பழம் பெயரைத் துறந்து, ஆழ்வார்திருநாகரியாகத் திகழ்கின்றது.

♣ பாண்டி நாட்டிலுள்ள விருதுப்பட்டி வாணிகத்தால் மேம்பட்டு இன்று விருதுநகராக விளங்குகிறது.

♣ **சென்னை:**

♣ இக்காலத்தில் தமிழ்நாட்டின் தலைசிறந்த விளங்கும் நகரம் சென்னை மாநகரம். முந்நூறு ஆண்டுகட்கு முன்னே சென்னை ஒரு பட்டினமாகக் காணப்படவில்லை. கடற்கரையில் துறைமுகம் இல்லை. கோட்டையும் இல்லை.

♣ சென்னையின் பகுதிகளாக இன்ற விளங்கும் மயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும் கடற்கரைச் சிற்றூர்களாக அந்நாளில் காட்சி அளித்தன.

♣ மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சுரம் என்னும் சிவாலயம் மிகப் பழமை வாய்ந்தது. திருஞானசம்பந்தர் அதனைப் பாடியுள்ளார்.

♣ திருமயிலைக்கு அருகே உள்ள திருவல்லிக்கேணி, முதல் ஆழ்வார்களால் பாடப்பெற்றது. அவ்வூரின் பெயர் அல்லிக்கேணி என்பதாகும். அல்லிக்கேணி என்பது அல்லிக்குளம். அல்லி மலர்கள் அழகுற மலர்ந்து கண்ணினைக் கவர்ந்த கேணியின் அருகே எழுந்த ஊர் அல்லிக்கேணி எனப் பெயர் பெற்றது. அங்கே பெருமாள், கோவில் கொண்டமையால் அடைமொழி பெற்றுத் **திருவல்லிக்கேணி** ஆயிற்று.



AKM IAS & NEET ACADEMY

♣ திருவல்லிக்கேணிக்கு வடக்கே மேடும் பள்ளமுமாக பல இடங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று நரிமேடு.

♣ தொழில்களால் சிறப்படையும் ஊர்கள் பேட்டை எனப் பெயர் பெறும். சேலத்திற்கு அருகில் செவ்வாய்க் கிழமைகளில் சந்தை நடைபெறும் ஓர் ஊர். செவ்வாயப் பேட்டை எனப்படுகிறது.

♣ **புரம்**

♣ புரம் என்னும் சொல், சிறந்த ஊர்களைக் குறிப்பதாகும். ஆதியில் காஞ்சி எனப் பெயர் பெற்ற ஊர் பின்னர், புரம் என்பது சேர்ந்து காஞ்சிபுரம் ஆயிற்று. பல்லவபுரம் (பல்லாவரம்), கங்கைகொண்ட சோழபுரம், தருமபுரம் முதலியவை மேலும் சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

♣ **பட்டினம்:**

♣ கடற்கரையில் உருவாகும் நகரங்கள் பட்டினம் எனப் பெயர் பெறும். காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், காயல்பட்டினம், குலசேகரப்பட்டினம், சதுரங்கப்பட்டினம் ஆகியவை பட்டினம் எனப் பெயர் பெற்ற ஊர்கள் ஆகும்.

♣ **பாக்கம்:**

♣ கடற்கரைச் சிற்றூர்கள் பாக்கம் எனப் பெயர் பெறும், பட்டினப்பாக்கம், கோடம்பாக்கம், மீனம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேப்பாக்கம், இப்படி பாக்கம் எனப் பெயர் பெற்ற ஊர்களைக் குறிப்பிடலாம்.

♣ **புலம்**

♣ புலம் என்னும் சொல் நிலத்தைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக மாம்புலம், தாமரைப்புலம், குரலைப்புலம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

♣ **குப்பம்**

♣ நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள், குப்பம் என்னும் பெயரால் வழங்கப்பெறும். காட்டுக்குப்பம், நொச்சிக் குப்பம், மந்தாரக்குப்பம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

♣ **தூங்கா நகர் - மதுரை**

♣ தூங்க நகர், திருவிழா நகர், கோவில் மாநகர், தமிழர் தம் நாகரிகத் தொட்டிலாகத் திகழ்ந்த **"தென்னிந்தியாவின் ஏதென்ஸ்"** என்று புகழப்படுவது மதுரை.

♣ தமிழகத்தில் இரண்டாவது பெருநகரமாகத் திகழும் நகரம்.

♣ பாண்டிய நாட்டின் பழமையான கலைநகரமாக விளங்கியது மதுரை. இ∴கு இன்றைய தமிழகத்தின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. மதுரை என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். தமிழும் மதுரையும் இனிமையின் இயல்பால் அமைந்தவை. தமிழ் என்றால் மதுரை, மதுரை என்றால் தமிழ். இங்ஙனம்,

♣ **மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்**

♣ **பூவோடு புரையுஞ் சீரூர் பூவில்**

♣ **இதழகத் தளைய தெருவம் இதழகத்து**

♣ **அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்**

♣ என்னும் பரிபாடல் அடிகள் கூறுவது போலவே இன்றும் கோவிலும் தெருக்களும் அவ்வாறே காணப்படுகின்றன. இவை இரண்டும் பிரிக்க இயலாதவை. அதனாலேயே மதுரையைப் போற்றப் புகுந்த புலவர் எல்லாரும் தமிழோடு சேர்த்தே போற்றிப் புகழ்ந்தனர். **தமிழ்கெழு கூடல்** எனப் புறநானூறு போற்றியது.

♣ நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர். தூம் பாடிய சிறுபாணாற்றுப்படையில், "**தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை"** என்று குறித்தார்.

♣ இளங்கோவடிகள், தமது நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் **ஓங்குசீர் மதுரை, மதுரை மூதூர், தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை, மாண்புடைய மரபின் மதுரை, வானவர் உறையும் மதுரை,**

AKM IAS & NEET ACADEMY

**பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்** எனப் பற்பல அடைமொழிகளால் மதுரைக்குப் புகழ்மாலை சூட்டி மகிழ்நதார்.

♣ சேரநாடு **வேழமுடைத்து,** சோழநாடு **சோறுடைத்து,** பாண்டியநாடு **முத்துடைத்து,** தொண்டைநாடு **சாந்றோர் உடைத்து** என்பன தமிழகத்தின் சிறப்பை உணர்த்தும்.

♣ **நான்மாடக்கூடல்**

♣ மதுரைக்குக் கூடல் எனவும், ஆலவாய் எனவும் வேறுபெயர்கள் வழங்குகின்றன. நான்மாடக்கூடல் என்னும் பெயரே கூடல் என மருவியுள்ளது.

♣ திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநழுவூர் ஆகிய நான்கு திருக்கோவில்கள் சேர்ந்தமைந்ததனால், நான்மாடக்கூடல் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர்.

♣ கன்னிகோவில், கரியமால் கோவில், காளிகோவில், ஆலவாய்க் கோவில் ஆகிய நான்கு திருக்கோவில்களும் மதுரைக்குக் காவலாக அமைந்ததனால், நான்மாடக்கூடல் என்னும் பெயரமைந்தது என்பாரும் உள்ர்.

♣ வருணன், மதுரையை அழிக்க ஏழு மேகங்களை அனுப்பினான். அதனைப்பற்றி இறைவனிடம் பாண்டியன் முறையிட, இறைவன் நான்கு மேகங்களை மதுரையைக் காக்க அனுப்பினார். அந்நான்கும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்தமையால் நான்மாடக்கூடல் என்னும் பெயர் ஏற்பட்டதாகப் **பரஞ்சோதியார்** கூறியுள்ளார்.

♣ எந்நாட்டவரும் வ்வூரினரும் வந்து கூடும் வளமான நகர் என்தனால், கூடல் என்னும் பெயர் பெற்றது என்பர்.

♣ சங்கம் வைத்துச் செந்தமிழை வளர்க்க, புமலவர் எல்லாரும் கூடியதானால், கூடல் என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் அறிஞர் கூறுவர்.

♣ **ஆலவாய்:**

♣ மதுரையை விரிவுபடுத்த எண்ணிய பாண்டியன், இறைவனிடம் அதன் எல்லையை வரையறுத்துத் தருமாறு வேண்டினான். இறைவன், தன் கையணியாகிய பாம்பிடம் எல்லையை வரையறுக்க ஆணையிட்டார். பாம்பு, வாலை நீட்டி வலமாகத் தன் உடலை வளைத்தது. அவ்வாலைத் தனது வாயில் சேர்த்து மதுரையின் எல்லையை வகுத்துக் காட்டியது. அன்றுமுதல், மதுரைக்கு ஆலவாய் என்னும் பெயர் அமைந்ததாகத் திருவிளையாடற்புராணம் கூறுகிறது. ஆலவாய் என்பது, ஆலத்தை (விடத்தை) உடைய பாம்பினைக் குறிக்கும்.

♣ மதுரையில் எழுந்தருளிய ஈசன், ஆலமர நிழலில் வீற்றிருந்ததனால் ஆலவாய் என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர்.

♣ **மதுரை என வழங்க காரணம்:**

♣ மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் மருதை என வழங்கி இடம், காலப்போக்கில் மதுரை என்றாகியதாம். குல்வெட்டில் **மதிரை** என்னும் பெயர் காண்ப்படுகிறது.

♣ சங்ககால மதுரை, பூம்புனல் ஆறாகிய வையை ஆற்றங்கரையில் அமைந்திருந்தது.

♣ **சிறப்புகள்**

♣ யானைக் கூட்டங்கள் அகழிக்குச் செல்வதற்கு ஏற்ற சுருங்கை (சுரங்க) வழியும் அமைந்திருந்தது.

♣ மதுரை மாநகரின் நடுவில் அண்ணல் கோவிலும் அதனைச் சுற்றி ஒழுங்குற அமைந்த தெருக்களும், தாமரைப் பொருகுட்டையும் அடுக்கடுக்கான இதழ்களைப் போன்றும் காட்சியளித்தன. இஃது அன்றைய தமிழர்தம் நகரமைப்புக் கலையில் நுணுக்கத்தை உலதகிற்குப் பறைசாற்றும் அடையாளமாகத் திகழ்கின்றது.

♣ சிவன், திருமால், பலராமன், செவ்வேள், ஐயை, கொற்றவை, சிந்தாதேவி எனக் கடவுளர் பலருக்கும் கோவில்கள் இருந்தள்ளன. அரண்மனை, பல்வேறு தெருக்கள், அறங்கூறு அவையம், அம்பலங்கள், மன்றங்கள், அறக்கூழ்ச்சாலைகள், நாளங்காடி, அல்லங்காடி முதலியன மதுரையில் இருந்துள்ளன.

♣ சங்கப்புலவர்களுள் கணக்காயனார் மகனார் நக்கீரனார், குமரனார், நல்லந்துவனார், மருதனிளநாகனார், இளந்திருமாறன், சீத்தலைச் சாத்தனார், பெருங்கொல்லனார், கண்ணகனார், கதங்கண்ணாகனார், சேந்தம்பூதனார் முதலியோர் அன்றைய மதுரையில் வாழ்ந்தோராவர்.

♣ **மதுரை வீதிகளின் பெயர்**

♣ **அறுவை வீதி - ஆடைகள் விற்கும் கடைவீதி**

♣ **கூலவீதி - தானியக்கடை வீதி**

♣ **பொன்வீதி - பொற்கடை வீதி**

♣ **மன்னவர் வீதி - மன்னர் வாழும் வீதி**

♣ **மறையவர் வீதி - அந்தணர் வீதி**

♣ **மதுரையின் மாண்பு:**

♣ சிவபெருமான் சுந்தர பாண்டியனாகவும் செவ்வேள் உக்கிரகுமாரப் பாண்டியனாகவும் உமையம்மை மலையத்து வசனுக்கு மகளாகத் தோன்றித் தடாதகைப் பிராட்டியராகவும் மருதையை ஆண்டனர். அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக மாணிக்கவாசகர் திகழ்ந்தார். திருஞானசம்பந்தர், கூன்பாண்டியன் காலத்தில் மதுரையில் மங்கையர்க்கரசி, குலச்சிறையார் உதவியுடன் சைவத்தைக் காத்தார். பாண்டியந ாட்டை ஆண்டு மன்னருள் பலர், சிறந்த புலவர்களாகவும் விளங்கினர். அவருள் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், வரகுண பாண்டியன், அதிவீரராம பாண்டியன் முதலியோர் நற்காலவர்களாகவும் சிறந்த பாவலர்களாகவும் திகழ்ந்தார்கள்.

♣ மீனாட்சியம்மன் கோவிலில் மீனாட்சியம்மையும் சொக்கநாதரும் அழகுற வீற்றிருந்து அருளுகின்றனர். கோவிலின் உள்ளே பொற்றாமரைக்குளம் அமைந்து உள்ளது. இக்கோவிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் சிற்ப வேலைப்பாடுகள் மிக்கது.

♣ **திருமலை நாயக்கரின் திருப்பணிகள்**

♣ திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார். மீனாட்சியம்மன் கொவிலுக்குத் திருப்பணிகள் பல செய்தார். கலைநயமிக்க நகரமாக மதுரையைக் கவினுற அமைத்தார். சிற்பங்கள் மிக்க புது மண்டபத்தைக் கட்டினார், கோடை விடுதியான தமுக்கமும், குளிர்பூந்தோட்டமாகிய பெரிய தெப்பக்குளமும், கலைநயத்தில் தாஜ்மகாலை யொத்த திருமலை நாயக்கர் மகாலையும் அமைத்து மதுரையை அழகுபடுத்தினார். அதில், மிகச் சிறந்த ஓவியங்களை அமைத்தார், பெருவிழாக்கள் பலவும் திருக்கோவிலில் நடைபெறுமாறு செய்தார்.

♣ சித்திரத் திருவிழாவைச் செந்தமிழ்நாட்டு மக்களேயன்றிப் பன்னாட்டினரும் பார்த்து மகிழுமாறு சிறப்புற நடைபெறச் செய்தார், மதுரையை விழா நிறைந்த நகரமாக விளக்கமுறச் செய்தார், இராணி மங்கம்மாள் அமைத்த சத்திரங்களும் சாலைகளும் மதுரைக்குப் பெருமை சேர்ப்பனவாக இன்றும் திகழ்கின்றன.

♣ **நிகழ்வுகள்**

♣ பரஞ்சோதியாரின் திருவிளையாடற்புராணம், தருமிக்கு இறைவன் தண்டமிழ்ப் பாடல் தந்தமை பற்றிக் கூறுகிறது.

♣ மதுரையைச் சுற்றியுள்ள மலைகளில் வாழ்ந்த சமண முனிவர்களால் நாலடியார் இயற்றப்பெற்றது.

♣ குமகுருபருக்கு மீனாட்சியம்மையே சிறுமியாக வந்து முத்துமணி மலையைப் பரிசளித்தது.

♣ **கல்வி வளர்க்கும் மதுரை:**

♣ வள்ளல் பாண்டித்துரையார், மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்தார்.

♣ ஆயிரங்கால் மண்டபம், அட்டசத்தி மண்டபம், புது மண்டபம், நகரா மண்டபம் என்பன இந்நகருக்கு மேலும் அணி சேர்ப்பன.

♣ சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம் கோவலன் பொட்டல் என்னும் பெயருடன் இன்றும் அப்பகுதி மக்களால் வழங்கப்படுகிறது.

♣ பழங்கால மதிலின் எஞ்சிய சிறபகுதி மேலவெளி வீதியல் மாநகராட்சித் தென்மண்டல அலுவலமாக இயங்கி வருகிறது. கீழ வாசல், மேலவாசல், தெற்குவாசல், வடக்குவாசல் என வழங்கப்படும் இடங்கள் கோட்டையின் மதில் வாய்கள் இருந்த இடங்களாக அறியப்படுகின்றன.

♣ கையிற் சிலம்புடன் உட்கார்ந்திருக்கும் உருவச்சிலை அமைந்த கோவில், செல்லத்தம்மன் கோவிலாக இன்றும் மக்களால் வழிபடப்படுகிறது.

♣ கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரமே மதுரை மூதூர் எனக் குறிப்பிடுவதனால் மதுரையின் படைமை பெறப்படும்.

♣ **மீனாட்சியம்மன் கோவில்:**

♣ மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் படமையானது கிழக்குத கோபுரம், உயரமானது தெற்குக் கோபுரம். இது 160.9 அடி உயரமும் 1511 கதை உருவங்களும் உடையது.

♣ **திருமலை நாயக்கர் மகால்:**

♣ மரம் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது நாயக்கர் மகால். இதன் ஒவ்வொரு தூணும் 82 அடி உயரமும் 19 அடி சுற்றளவும் கொண்டது.

♣ **கல்தோன்றி மண்தோன்றும் காலத்தே வாளொடு**

♣ **முன்தோன்றி மூத்தகுடி- புறப்பொருள் வெண்பாமாலை**

♣ **"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குண முண்டு'**

♣ என்ற நாமக்கல் கவிஞர் கூற்றுக்கு ஏற்ப தமிழர்கள் தங்களது பண்பாட்டு அடையளங்களை மறவாமலும் மாற்றிக் கொள்ளாமலும் வாழ்கிறார்கள்.

♣ **திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி**

♣ திருநெல்வேலி தமிழகத்தின் பழமையான நகரங்களுள் ஒன்று. பழந்தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆண்டு வந்தனர். அவர்களுள் பாண்டியர்களின் நலைநகரமாக மதுரை விளங்கியது. அவர்கள்து இரண்டாவது நலைநகரமாகத் திருநெல்வேலி விளங்கியது.

♣ இந்நகரைச் சுற்றி நெல் வயல்கள் வேலி போல் அமைந்திருந்ததால் திருநெல்வேலி எனப் பெயர் பெற்றது.

♣ துற்போது நெல்லை என்று மருவி வழங்கப்படுகிறது.

♣ "**திக்கெல்லாம் பகழுறும் திருநெல்வேலி'** என்று திருஞானசம்பந்தரும், '**தண்பொருநைப் புனல் நாடு'** என்று சேக்கிழாரும் திருநெல்வேலியின் சிறப்பைப் போற்றியுள்ளனர்.

♣ திருநெல்வேலி மாவட்டம் மலை வளம் மிகுந்த பகுதியாகும். இப்பகுதியின் சிறப்புமிக்க மலையாகிய பொதிகை மலை இலக்கியங்களில் பாராட்டப்பட்டு உள்ளது.

♣ **'பொதிய லாயினும் இமய மாயினும் பதியெழு அறியாப் பழங்குடி**

♣ என்று இளங்கோவடிகள் பொதிகை மலைக்கு முதலிடம் கொடுத்துப் பாடுகிறார். இலக்கியங்களில் திரிகூடமலை என வழங்கப்படும் குற்றாலமலை புகழ் பெற்ற சுற்றுலா இடமாகத் திகழ்கின்றது.

♣ **வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**

♣ **மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**

♣ என்று குற்றால மலைவளத்தைத் திரிகூட ரொசப்பக் கவிராயர் தம் குற்றாலக் குறவஞ்சி நூலில் பாடியுள்ளார்.

♣ திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு தாமிரபரணி ஆகும். இதனைத் **தண்பொருநை நதி** என்று முன்னர் அழைத்தனர்.

♣ இது பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி என்று பல கிளை ஆறுகளாகப் பிரிந்து திருநெல்வேலியை நீர்வளம் மிக்க மாவட்டமாகச் செய்கிறது.

♣ திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிப்பது உழவுத் தொழில், தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு பாசமமும் கிணற்றுப் பாசனமும்கூடப் பயன்பாட்டில் உள்ளன. இருபருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. மானாவாரிப் பயிர்களாகச் சிறதானியங்கள், எண்ணெய் வித்துகள் காய்கனிகள், பருத்தி பயறுவகைகள் போன்ற பயிரிடப்படுகின்றன.

♣ இராதாபுரம், நாங்குநேரி, ஆம்பாசமுத்திரம், தென்காசி போன்ற பகுதிகளில் பெருமளவில் வழை பயிரிடப்படுகின்றன. இங்கு விளையும் வாழைத்தார்கள் தமிழ்நாடு மட்டுமன்றிக் கர்நாடகம், கேராளம் போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

♣ நெல்லிக்காய் உற்பத்தியல் தமிழகத்தில் நெல்லை மாவட்டமே முதலிடம் வகிக்கின்றது.

♣ முற்காலத்தில் திருநெல்வேலிக்கு **வேணுவனம் என்னும்** பெயரும் இருந்துள்ளது. மூங்கில் காடு என்பது அதன் பொருளாகும். மூங்கில் நெல் மிகுதியாக விளைந்தமையாக அப்பகுதிக்கு நெல்வேலி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கருதுவர்

♣ கோற்கையில் விளைந்த பாண்டி நாட்டு முத்து உலகப் புகழ் பெற்றதாக விளங்கியது.

♣ நுகரின் நடுவே நெல்லையப்பர் திருக்கோயில் அமைந்துள்ளது. கோவிலைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் மாட வீதிகள் அமைந்துள்ளன. அவற்றைச் சுற்றித் தேரோடும் திருவிழா நடைபெறும் என்பதை.

♣ **'திங்கள் நாள்விழா மல்கு திருநெல் வேலியுறை செல்வர் தாமே'**

♣ என்னும் திருஞானசம்பந்தர் பாடல் அடிகளால் அறியலாம்.

♣ நெல்லை மாநகரில் உள்ள தெருக்கள் பல அதன் பழமைக்குக் சான்றாக உள்ளன. காவற்புரைத் தொரு என்று ஒரு தெரு உள்ளது. காவற்புரை என்றால் சிறைச்சாலை. ஆரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் இங்குச் சிறை வைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது.

♣ மேல வீதியை அடுத்துக் கூடைக்கடைத் தெரு உள்ளது. கூலம் என்பது தானியத்தைக் குறிக்கும். கூலக்கடைத்தெரு என்பதே மருவிக் கூழைக்கடைத் தெரு என வழங்கப்படுகிறது.

♣ அ.்.கசாலை என்பது அணிகலன்களும் பொற்காசுகளும் உருவாக்கும் இடம். முற்காலத்தில் பொன் நாணயங்கள் உருவாக்கும் பணியாளர்கள் வாழ்ந்த பகுதி அக்கசாலைத் தெரு என்னும் பெயரில் அமைந்துள்ளது.

♣ தாமிரபரணி ஆற்றின் மேற்குக் கரையில் திருநெல்வேலியும் கிழக்குக் கரையில் பாளையங்கோட்டையும் அமைந்துள்ளன. இவ்விரு நகரங்களும் இரட்டை நகரங்கள் என அழைக்கப்படுகின்றன. பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால் அந்நகரைத் **தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்ட்** என்பர்.

♣ நெல்லை நகரின் மேற்கே பேட்டை என்னும் ஊர் உள்ளது வணிகம் நடைபெறும் பகுதியைப் பேட்டை என வழங்குதல் பண்டைய மரபு. இப்பகுதி முன்பு பெருவணிகம் நடைபெற்று இடமாக இருந்திருக்க வேண்டும். பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை நெல்லை நகர மக்கள் எதிர்கொண்டு வரவேற்ற இடம் பாண்டியபுரம் எனவும் அவன் தேவியாகிய மங்கையர்கரசியை மகளிர் எதிர்கொண்டு வரவேற்ற இடம் திருமங்கை நகர் என்னும் வழங்கப்படுகின்றன.

♣ நாயக்க மன்னரின் தளவாயாக மவிளங்கிய அரியநாயகரின் வழித் தோன்றல் வீராராகவர். அவரது பெயரில் அமைந்த ஊர் வீரராகவபுரம் எனவும், அவரது துணைவியார் மீனாட்சி அம்மையார் பெயரில் உள்ள ஊர் மீனாட்சிபுரம் எனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

♣ சேரன்மாதேவி, கங்கைகொண்டான், திருமலையப்புரம், வீரபாண்டியபட்டினம், குலசேகரன்பட்டினம் போன்ற ஊர்கள் பண்டைய வரலாற்றை நினைவூட்டுவனவாக உள்ளன. பாளையங்கோட்டை என்னும் பெயர்கள் இம்மாவட்டத்தில் பகோட்டைகள் பல இருந்தமைக்குச் சான்றாக விளங்குகின்றன.

♣ அகத்தியர் பொதிகை மலையில் வாழ்ந்தார் என்பர். சங்கப் புலவரான மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர் ஆகியோர் திருநெல்வேலிச் சீமையில் பிறந்த தமிழக்குச் செழுமை சேர்த்துள்ளனர். அயல்நாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்றோரையும் தமிழின்பால் ஈர்த்த பெருமைக்கு உரியது திருநெல்வேலி.

♣ **1.21. தொன்மைத் தமிழகம்- பொதுக்குறிப்புகள்**

♣ **மனித நாகரிகத் தொட்டில்:**

♣ முதல் மாந்தன் தோன்றிய இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்.

♣ **சிலப்பதிகாரப் பாடல்**

♣ **ப.்.றுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**

♣ **குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள**

♣ தமிழகம் இன்றுபோல் இல்லாமல், குரிமுனைக்குத் தெற்கே இன்னும் விரிந்து குமரிமலை, ப.்.றுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது.

♣ இச்செய்தியைச் சிலப்பதிகாரப் பாடல் வரிகள் தெளிவாக உணர்த்தும்.

♣ **பாவேந்தர்:**

♣ புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன், தமிழின் பழமை சிறப்பினைப் பெருமிதம் பொங்க பின்வருமாற கூறகிறார்.

♣ **திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்**

♣ **விண்ணோடும் உடுக்களோடும் மங்குல்கடல்**

♣ **இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்**

♣ **தனிநாயகம் அடிகளாரின் கூற்று:**

♣ தமிழ்ச்சங்கம் இருந்தது என்ற மரபுச் செய்தி இடைவிடாது இருந்து வருகிறது.

♣ இந்தியாவில் இத்தகைய மரபு செய்தி வேறெங்குமில்லை என்றார் தனிநாயகம் அடிகளார்.

♣ **மொழித் தென்மை:**

♣ மதுரையில் இருந்தது தமிழ்ச்சங்கத்தை **தமிழ்கெழு** கூடல் என புறநானூறு கூறுகிறது.

♣ **தமிழ்வேலி** எனப் பரிபாடல் கூறுகிறது.

♣ **கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்** என திருவாசகமும் கூறுகிறது.

♣ உலகில் உள்ள உயரிய மனித இனத்தின் மரபுச் செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது.

♣ **இசைக்கலை:**

♣ பண்டையக்காலத் தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது.

♣ **நரம்பின் மறை** என்று தொல்காப்பியம் கூறுகிறது.

♣ இயலிசை நாடகக் கலைஞர்கள் பாணன், பாடினி, கூத்தன், விறலி என அழைக்கப்பட்டனர்.

♣ ஒப்பாரி என்பது இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர் என்று இறந்தவரைப் பற்றிப் பாடுவது.

♣ தாலாட்டு என்பது குழந்தையைத் தொட்டிலிலிட்டுப் பாடுவது.

♣ இன்றைய கருநாடக இசைக்குத் தாய் நம் தமிழிசையே.

♣ **பண்ணொடு தமிழொப்பாய்** என தேவாரம் கூறுகிறது.



AKM IAS & NEET ACADEMY

- குழலினிது யாழினிது என்று இசைபொழியும் கருவிகளை வள்ளுவம் குறிக்கின்றது.
- உலகில் மொழி உருவம் பெறுவதற்கு முன் இசை பிறந்துவிட்டதென்பர்.
- தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன.
- **உழவுத் தொழில்:**
- **உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்கிறது திருக்குறள்.**
- **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்கிறது புறநானூறு மற்றும் மணிமேகலை.**
- உழவுக்குச் சிறப்புப் பெற்ற நிலம் மருதநிலம். இது வயலும் வயல் சார்ந்த இடமாக உள்ளது.
- தமிழ்ச்சமூகம் மூத்த சமூகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- அறனெனப்பபட்டதே இல்வாழ்க்கை என்ற இல்லறம், உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்னும் எளிய வாழ்க்கை, செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்க்கும் உயர்பண்பு, கொள்வதும் மிகைகொளாது கொடுப்பதுவும் குறைபடாது வாழும்கொள்கைச் சிறப்பு, களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே என்ற வீரம் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கும் என்னும் தூய அன்பு, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகப் பொதுமை போன்ற தன்னேரில்லாத பண்புகளோடு உயர்ந்திருந்தது நம் தமிழர் சமுதாயம்.
- **திணைத் நிலத் தெய்வங்கள்:**
- தமிழர் திணைநிலத் தெய்வ வழிபாடு, இயற்கை வழபாடு, நடுகல் வழிபாடு ஆகியவற்றைத் தமது வழிபாடுகளாகக் கொண்டிருந்தனர்.
- குறிஞ்சிக்கு முருகனையும், முல்லைக்குத் திருமாலையும், பாலைக்குக் கொற்றவையையும் தெய்வங்களாகக் கொண்டு வழிபட்டனர்.
- வேற்றியைக் கொண்டாடக் கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை வணங்கும் மரபிருந்தது.
- இயற்கைப் பொருள்களான ஞாயிறு, நிலவு, நெருப்பு முதலானவற்றையும் அவர்கள் வணங்கினார்கள்.
- வீரத்தை உணர்த்த விர்களுக்கு நடுகல் வழிபாடு செய்வதும் வழக்கத்தில் இருந்தது.
- **நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்**
- **பெயரும் பிடும் எழுதி அதர்தொறும்**
- **பிலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல் - அகநானூறு 67**
- **விழாக்கள்:**
- தைத்திங்கள் நோன்பு, தை நீராடல், கார்த்திகைத் திருநாள், திருவாதிரை விழா, பங்குனி உத்திர விழா, இந்திர விழா, வேலன் வெறியாட்டு விழா, இளவேனில் விழா போன்ற விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடினர் என்பதை அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் முதலிய இலக்கியங்கள் மூலம் அறியலாம்.
- **அறுமீன் சேரும் அகலிரு நடுநாள்**
- **மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி - அகநானூறு 141**
- **வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
- **வெறியாட்டு அயர்ந்த காந்தளும் - தொல். புறத் 63**
- **ஆடை, அணிகலன்கள்**
- ஆடவர் இடையில் ஓர் ஆடையும், மேலே ஒரு துண்டும் அணிந்தனர்; சிலர் மேற்சட்டை அணிந்தனர், மேற்சட்டையைக் **'கஞ்சுகம்'** என்றனர்.
- துணி தைக்கும் பழக்கமும் இருந்தது. துணி தைப்பவர் துன்னக்காரர் எனப்பட்டார்.
- சிலம்பு, மேகலை, குழை, மோதிரம், கடகம் முதலானவற்றைப் பெண்கள் அணிந்து மகிழ்ந்தனர்.
- சிறுவர் ஐம்படைத்தாலி என்னும் கழுத்தணி அணிந்தனர்.

- **புகைவிரிந்தன்ன பொங்கு துகில் உடீஇ - புறம். 398:19**
- **ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம்**
- **- பெரும்பாணற்றுப்படை, அடி: 469**
- **தமிழர் உணவு:**
- உயிர் காக்கும் அமுதம் உணவு என்பதை அறிந்தோர் பழந்தமிழர்
- **அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு**
- **கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்**
- **- சிறுபாணாற்றுப்படை, அடி: 194, 195**
- **பண்டைத் தமிழர் திருமண முறை:**
- பழந்தமிழர் வாழ்வு அகம், புறம் என இருதிறப்பட்டதாக இருந்தது. அக வாழ்வைப் பாடுவது அன்பின் ஐந்திணை எனப்பட்டது.
- பெண்ணுக்கு மணமகன் பரிசம் அளிப்பது வழக்கதில் இருந்தது. மண நிகழ்வின்போது மணமக்களை நெல்லும் மலரும் கலந்த நீரால் நீராட்டி, தூய ஆடை அணிகலன்களை அணவித்தனர்.
- **சிறுவளை வலையெனப் பெருந்தேர் மண்ணிஎம்**
- **முன்கடை நிறிஇச் சென்றிசி னோனே - நற்றிணை, 300**
- **இல்லறம்:**
- அறத்தின் வழிப்பட்ட வாழ்க்கையைப் பழந்தமிழர் வாழ்ந்தனர்.
- இதன் காரணத்தால்தான் குடும்ப வாழ்க்கை இல்லறம் எனப்பட்டது.
- இல்லறத்தார்க்கு விருந்தோம்பல், சுற்றம் தழுவல், வறியோர் துயர் துடைத்தல் ஆகியவை தலையாய கடமைகளாக இருந்தன.
- **இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**
- **அசையுடன் இருந்தோர்க்கு அருப்புணர்வு இன்மென**
- **- நற்றிணை 214**
- தலைவன் தலைவியர் செம்புலப் பெயல் நீர் போல் அன்புடை நெஞ்சம் கலந்தவர்கள் 'இம்மை மாறி, மறுமை ஆயினும் நீயாகியர் என் கணவர்' என மனைவியும் நரைமுடி வரினும் தலைநாள் போன்ற அன்போடு மனைவியைப் போற்றுவதைக் கணவரும் தம் கடமையாகக் கருதினர். அறிவறிந்த மக்களைப் பெருவது இல்லறத்தின் நற்பேறு என வாழ்ந்தனர்.
- **பழந்தமிழகத்தில் கல்வி :**
- திருக்குறளில் கல்வி, கேள்வி, அறிவுடைமை போன்ற அதிகாரங்கள், அக்காலக் கல்வியின் சிறப்பை விளக்குவன.
- கல்வி ஒருவனுக்கு உயர்வளிக்கும் என உறுதியாக நம்பியதால் எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில் கற்றோரை மதித்தனர்.
- பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் இருந்தது.
- **பல்கேள்வித் துறை போகிய**
- **தொல்லாணை நல்லாசிரியர்**
- **உறழ் குறித் தெடுக்க உருகெழுகொடியும்**
- **- பட்டினப்பாலை, அடி: 169-171**
- **பழந்தமிழர் சமூகத்தில் தொழில்கள்:**

- தச்சுத் தொழில் மேலோங்கி இருந்தது.
- இரும்பாலும் பொன்னாலும் கருவிகள் நகைகள் செய்யப்பட்டன.
- நெய்தல் தொழில் மேம்பட்டிருந்தது. உமணர் ஊர் ஊராகச் சென்று உப்பு வணிகம் செய்தனர்.
- தொழில் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. உழவுத்தொழில் மிகப் பெரும் தொழிலாக இருந்தது.
- **தமிழர் அறிந்த கலகைள்:**
- இசை, நாட்டியம், நாடகம், ஓவியம், சிற்பம் முதலான பல்வேறு கலைகள் அக்காலத்தே செழித்திருந்தன. அவற்றுக்கான இலக்கண நூல்களும் தோன்றின. ஐவகை நிலத்திற்கும் தனித்தனியே பண்வகை, யாழ், பறை போன்றவை இருந்தன. பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர், பாணன், பாடினி முதலான இசைக் கலைஞர்கள் சிறப்புப் பெற்றிருந்தனர்.
- சங்ககாலத் தமிழர் மண்ணாலும் மரத்தாலும் தந்தத்தாலும் ஆண சிற்பங்களை அமைத்தனர்.
- தமிழர் போற்றி வளர்த்த கலைகளுள் கூத்துக் கலையும் ஒன்று. கூத்தர், விறலியர் முதலிய கலைஞர் பலர் அக்காலத்தில் இருந்தனர். மன்னர்க்குரிய கூத்து **'வேத்தியல்'** என்றும் மற்றவர்க்குரியவை **'பொதுவியல்'** என்றும் அழைக்கப்பட்டன. கூத்துக்கலை போலவே நாடகக்கலையும் மக்களிடையே சிறப்பிடம் பெற்றிருந்தது.
- **மொழிவளம்:**
- தமிழ் மொழி வேறெல்லா மொழிகளையும் விட உயர்ந்தது என மார்தட்டத் தேவையுமில்லை. அது அழகுமாகாது.
- அக்காலத்தே, உலகிலே பல நாடுகள், உருவம் கூடப்பெறவில்லை, நாடான பலவற்றிலே மொழிவளம் இல்லை. மொழிவளம் இருந்த இடங்களிலும் இலக்கியம் எழவில்லை இங்கொன்றும் அங்கொன்றுமாக இலக்கியம் எழுந்து இடங்களிலும், இத்துனைப் புலவாக்ள இருந்ததில்லை அதிலும் பெண்பாற் புலவர்கள் இங்கு இருந்தது போல, அளவிலாயினும் சரி, தரத்திலாயினும் சரி, மற்ற இடங்களிலே இருந்ததாக யாரும் கூறினாரில்லை.
- முடியுடை மூவேந்தர்கள் மட்டுமல்ல; குறுநில மன்னர்கள், வேளிர்கள், பலரும் கூடப் பலவர் பெருமக்களை ஊக்குவித்தனர். கவிதை பெருக்கெடுத்தது; தமிழ் மணம் கமழ்ந்தது.
- **இயற்கை வளம்**
- புழனிமலைப் பேகன், பறம்புமலைப் பாரி, கோடைமலை நெடுவேட்டுவன், கொல்லி மலை ஓரி, பொதியமலை ஆய் ஆண்டிரன், குரைமலை அதியமான், முதரமலைக் குமணன், தோட்டிமலைப் பெரு நள்ளி ஆகியோர் தீந்தமிழ் பாதுகாவலராய் விளங்கினர்.
- **"ழவார் சோலை மயிலாடப்**
- **புரிந்து குயில்கள் இசைபாடக்**
- **காமர் மாலை அருகசைய**
- **நுடத்தாய் வாழி காவேரி"**
- ஏன்ற பாடினார் இளங்கோ.
- **கவிதை வளம்**
- ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு, புலவர் பெருமக்கள், இயற்றியது அகம்-புறம் -எனும் இரண்டினை அறிந்து இயற்றினர்.
- வாழ்க்கை ஒரு கலை, அதனை மக்கள் உயர்த்த உணரவேண்டும் என்ற பெரு நோக்குடன் இயற்றினர்.
- ஒரு யானை அது ஒரு நாய், தன்பிடி முன் வர வெட்கப்பட்டுக் கொண்டு புறக்கடைப் பக்கம் போய் நின்றதாம் ஈதென்ன வேடிக்கை, யானை வெட்கப்படுவதா ஏன்?

AKM IAS & NEET ACADEMY

- தந்தம் உடைந்து விட்டது நகங்கள் தேய்ந்து போய் விட்டன.
- அந்தத் தந்தத்தைக் கண்டு எத்தனை முறை பெண் யானை களிப்புற்றிருக்கும்.
- எப்படி எதிரே போவது வெட்கமாக இருக்கிறதே என்று. எனவே புறக்கடைப் பக்கம் சென்று நிற்கிறது.
- தந்தம் ஒடிந்தது ஏன் தெரிகிறா? கோடி மதில் பாய்ந்தது போரில் கோட்டைச் சுவரினைக் கொடு கொண்டு தந்தத்தைக் கொண்டு, தாக்கிற்று கோட்டைச் சுவரும் இடிந்தது, தந்தமும் உடைந்தது.
- வெறும் காதல் மட்டுமா, இதிலும் காணக்கிடக்கிறது தமிழர் போர் முறை விளக்கப்படுகிறது மனப்போக்குத் தெரிவிக்கப்படுகிறது. அரிய நகைச்சுவை ததும்புகிறது இத்தனையும் தமிழ் அந்தத் தமிழ், நமது மொழி!
- **கழனிக் கரும்பின் சாய்ப்புறம் ஊர்ந்து**
- **பழனயாமை பசுவெயில் கொள்ளும்.**
- நன்செய் நிலத்தில் வளார்ந்துள்ளது கரும்பு, ஆமைக்கு இளவெயிலில் காயந்து இன்புறும் எண்ணம், கரும்பின் வழியாக ஏறிக் காலை இளம் வெயிலில் காய்கிறது. நீா் வயல் சூழ் வளவயலைக் கண்டார்; கவி சுரந்தது. இரவெல்லாம், பாவம், நீா் நிரம்பிய இடத்திலிருந்ததால், உடலுக்கு வெப்பம் தேவைப்படுகிறது; இளவெயிலில் காய்கிறது, ஆமை.
- கவனித்தனையா, பலவா் தந்துள்ள கருத்துள்ள பதம் ஒன்றை -காலை வெயில் என்று கூறினார் இல்லை- வெயிலில் காய்ந்தது என்றது சொன்னாரில்லை- பசு வெயில் என்கிறார். செல்லமாக!!
- இதுபோல, இயற்கையோடு நெருங்கிய தொடா்பு கொண்டிருந்தால், எழில் கண்டு இன்புற மட்டுமன்று, பயன் பெற்றிடவும், இயற்கையில் பொருள் விளங்கிக் கொள்ளவும் முடிந்தது. பழந்தமிழா்களால்.
- **பண்பு வளம்**
- இயற்கை வளம் காட்டுவதுடன் நின்றாரில்லை, அரசா்கள் முறை தவறி நடந்தகாலை இடித்துரைத்தனா். கோல் கோணாதிருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தினா்.
- **மாரிதான் சிலரை வதைந்து பெய்யுமொ**
- **காற்றும் சிலரைக் கடிந்து வீசுமோ**
- **குலமும் ஒன்றே குடியும் ஒன்றே**
- **இறப்பும் ஒன்றே பிறப்பம் ஒன்றே**
- **- தனிப்பாடல்**
- இத்தகைய பண்பாட்டுக்குச் சொந்தமானது. இங்கு பிறந்தவா்கள் நமக்கெனத் தணி மரபுச் சிறப்புண்டு.
- **விளக்கம்**
- அறிஞா் அண்ணா தம் திராவிட நாடு, காஞ்சி ஆகிய கிழமை இதழ்களில் தம்பிக்கு எனும் தலைப்பில் கடிதம் எழுதியுள்ளாா். அவை அரசியல், பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றில் விழிப்புணா்ச்சி எற்படுத்தின.
- அக்கடிதங்களுள் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி பழந்தமிடகம் எனும் தலைப்பில் தரப்படுகிறது.
- இக்கடிதத்தில் வரலாற்றுக் தொண்மை, பண்பாட்டுச் சிறப்பு, இலக்கிய வளம் ஆகியன எடுத்துக்காட்டப்படுகின்றன.
- **பூம்புகாா்:**
- பண்டைச் சோழநாட்டின் தலைநகா், புகாா். காவிரிப்பூம்பட்டினம் எனும் பெயா்களாலும் இந்நகா் அழைக்கப்படுகிறது.
- சீரும் சிறப்புமாக விளங்கிய அந்நகா் கடலால் கொள்ளப்பட்டது.
- எனினும் காவிரிப்பூம்பட்டினம் எனும் நகா் இப்போது நாகை மாவட்டத்தில் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு, மாடங்கள் கொண்ட கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

♣ **கொற்கை:**

♣ பாண்டிய நாட்டுப் பழைய நகர்களுள் ஒன்று கொற்கை. அந்நகருக்குக் காத தொலைவிற்கு அப்பால், சாலி என்பாள் ஆபுத்திரைனைப் பெற்றதாக மணிமேகலை கூறுகிறது.

♣ சங்த காலத்தில் சிறப்புற்றிருந்த இந்நகரின் முத்துகள் உலகப் புகழ் வாய்ந்தவை.

♣ இவ்வூர் தூத்துக்குடிக்கு அண்மையில் உள்ள உவரி கொற்கை எனப்படினும் பழங்காலக் கொற்கை கடலுள் அமிழ்ந்து விட்டதாகச் சொல்லுவர்.

♣ **தொண்டி:**

♣ பண்டைச் சோழநாட்டின் துறைமுகப்பட்டினங்களுள் ஒன்று. சேரநாட்டிலும் தொண்டி எனும் கடற்கரை நகர் இருந்தது.

♣ இந்நகர் பற்றிய குறிப்புகள் புறநானூறு 7, 48 ஆம் செய்யுள்களில் காணப்படகின்றன.

♣ தற்கால திருமறைக்காட்டிற்கு அண்மையில் உள்ளது. சேரநாட்டுத் தொண்டியும் இதுவும் வேறு வேறு ஊர்கள்.

♣ சேரள (பழங்காலச் சேரநாடு) மாநிலம் கொல்லாண்டி எனும் பெயரில் அமைந்துள்ளது. கொல்லம் அருகிலுள்ள ஊரைக் குறிப்பதாகவும் கொள்வர். இரு ஊர்களும் கடற்கரையில் உள்ளனவாகும்.

♣ **முசிறி:**

♣ முசிறியை முரசீபத்தனம் என வால்மீகி இராமாயணம் கூறுகிறது. எனவே இந்நகரின் தொன்மை விளங்கும். இது மேற்குக் கடற்கரைத் துறைமுகமாக இருந்தது. தற்காலத்தில் முசிறி எனும் ஊர் திருச்சி மாவட்டத்திலுள்ளது.

♣ **மூவகை முரசு:** வீரமுரசு, நியாய முரசு, தியாக முரசு.

♣ **தானை- படை:** பண்டைக் காலத்து மன்னர்கள் யானை, தேர், குதிரை, காலாள் என நால்வகைப் படைகளைக் கொண்டிருந்தனர். **'யானை தேர் பரி காலாளென்றிவை நால்வகைத் தானை'** (சூடாமணி நிகண்டு. 373)

♣ **தமிழ் மூன்று:** இயல், இசை, நாடகம்

♣ **ஐவகை நிலம்:** குறிஞ்சி, முல்லை. மருதம், நெ்யதல், பாலை

♣ ஓரெழுத்து ஒருமொழிகள். தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழி எண்ணிக்கை 42.

♣ கருத்துப் படையல்கள்: இலக்கியங்கள்

♣ முடியுடை மூவேந்தர்: சேர, சோழ, பாண்டியர்

♣ குறுநில மன்னர்கள்: பண்டைத் தமிழகத்தில் முடியுடை மூவேந்தர்களன்றி 5 சிறிய நிலப்பரப்புகளைக் குறுநில மன்னர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் வேளிர் எனவும் அழைக்கப்பட்டனர்.

♣ **பழனிமலை:**

♣ மதுரைக்கு வடமேற்கில் 60 கி.மீ தொலைவில் உள்ள ஊர், முருகன் கோயில் உள்ளது. அவ்வூர் அருகே மேற்கு கிழக்குத் தொடர்ச்சி மலைகள் சந்திக்கும் மலைப் பகுதியுள்ளது.

♣ அதுவே பண்டைய வேளிர் பேகன் ஆண்ட மலை. பேகன் **ஆவியர்** குடியைச் சேர்ந்தவனாதலால் அவன் ஆண்ட பகுதியின் தலைநகர் (பழனி) கவிஞன் குடி எனப்பட்டது.

♣ பேகன் மனைவி கண்ணகி, இவள் சிலப்பதிகாரக் கண்ணகி அல்லள்.

♣ **பறம்பு மலை:**

♣ பிரான் மலை எனத் தற்காலத்தில் வழங்கப்படும் மலையே பறம்பு மலை எனப்பட்டது. இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளது. இம்மலைப் பகுதியை ஆண்டவன் பரிவேளிர். இவன் கடையேழு வள்ளல்களுள் ஒருவன்.

♣ **கோடை மலை:**

♣ இம்மலை கூடிய நெடுவேட்டுவனுக்குரியத.

♣ **ஓரி:**

♣ கொல்லிமலையை ஆண்டவன் ஓரி. வல்வில் ஓரி எனப் பாரட்டப்படுபவன். நாமக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்தில் அமைந்திருக்கும் மலைத்தொடர் கொல்லிமலையாகும்.

♣ **ஆய்:**

♣ பொதிய மலைப் பகுதியை ஆண்டவன் ஆய். இவனது தலைநகர் ஆய்க்குடி. இவ்வூர் நெல்லை மாவட்டத்தில் உள்ளது. செங்கோட்டை, வல்லம் (நான்கு) வலசைகள் ஆகியன ஆய்க்குமடிக்கு அருகாமையிலுள்ள பண்டை வரலாற்றுச் சிறப்புடைய ஊர்கள். இவ்வூர் சாம்பவர் வடகரைச் சாலையில் அமைந்துள்ளது.

♣ **குதிரை மலை:**

♣ ஆதியமான் நெடுமானஞ்சி ஆண்ட மலை. இது தற்காலத்தில் கருநாடகத்தின் ஒரு எல்லையில், தமிழ்நாடு தருமபுரிக்கும் அண்மையில் உள்ளது. இதற்கு குதரை மூக்கு மலை எனும் பெயரும் உண்டு.

♣ **முதிர மலை:**

♣ கடையேழு வள்ளல்களுள் ஒருவனான குமணன் ஆண்ட மலை முதிரமலை, கடையேழு வள்ளல்கள்: பாரி, ஓரி, காரி, பேகன், ஆய், நள்ளி, குமணன்.

♣ **தோட்டி மலை:** இது கண்டீரகோப் பெநள்ளிக்கு உரிய மலையாகும்.

♣ **பூவார் சோலை -------------- வாழி காவேரி:** இவ்வரிகள் சிலப்பதிகாரம் 'காணல்வரி'யில் இடம் பெற்றதாகும்.

♣ **கழியளா --------- சொல்லும்:** இவ்வரிகள் திருஞானசம்பந்தர் தேவாரம் கல்லூர் பதிகத்தில் இடம் பெற்றுள்ளன.

♣ **கண்ணுத லோன்--------- கலயநல்லூர் காணே:** இச்செய்யுள் சுந்தரர் தேவாரம், கலையநல்லூர் பதிக முதல் பாடல்.

♣ **ஈன்ற மாத்தின்---------------- வளவயல்:** இவ்வரிகள் அகநானூறு 306 ஆம் பாடலில் இடம் பெற்றுள்ளன. **பெரும் பெயர் மகிழ்ந** எனத் தொடங்கும் செய்யுள் மதுரை கூலவாணிகள் சீத்தலைச் சாத்தனார் பாடியது.

♣ **கழனிக் ---------------- கொள்ளும் :** இவ்வரிகளும் அகநானூறு 306 செய்யுளில் உள்ளவாகும்.

♣ **நெடுஞ்சழி---------------------- உலரும்:** இவ்வரிகள் அகநானூறு 320 ஆம் செய்யுளில் உள்ளன. இதனையும் மதுரைக் கூலவணிகன் சீத்தலைச் சாத்தனாரே பாடியுள்ளார்.

♣ **மாரி தான்------------------- பேதையீரே:** தனிப்பாடல்

♣ **தென்னகப் பண்பாடு:**

♣ கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு மன் தோன்றி மூத்தகுடி தமிழக்குடி. இதனால் தமிழ்க் குடியின் பழமையும் வீரமும் புலப்படுகின்றது.

♣ தென்னவர் வாழ்ந்த நாட்டை திராவிடம் என்றும் அவர்களின் மொழியைத் திராவிட மொழி என்றும் வரலாறு கூறுகிறது.

♣ உணவு, தோல் காரணமாக பிரிந்தவர்கள், தங்களுக்குள் தொடர்பு இன்மையால் பேசிய மொழிகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.

♣ அவையே இன்று திராவிட மொழிகள் என்று கூறப்படும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகும்.

♣ **தமிழ்ப் பண்பாடு**

♣ தமிழர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மன்பே பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்திருந்தனர்.

♣ தமிழர் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாகக் கருதப்படுகிறது.

♣ **தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள்:**

♣ **காதல்:**

♣ தமிழர் காதலை அன்பின் ஐந்திணை என்றனர். இ∴து ஒருவனும் ஒருத்தியும் கொண்ட உளமொத்தத் தூயகாதல் வாழ்க்கையாகும்.

♣ இது களவு, கற்பு என இரண்டாக அமையும். ஐந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாக விளங்குபவர்கள்.

♣ காதல் வாழ்வு அறத்திலிருந்து மாறுபடாமல் அன்பின் வழிப்பாட்டாக அமையும்.

♣ **“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**

♣ **நன்கலம் நன்மக்கட் பேறு”**

♣ என்று வள்ளுவரும் காதல்வழிவந்த மனைமாட்சியைச் சிறப்பிக்கின்றார்.

♣ **வீரம்:**

♣ பண்டைய தமிழர்கள் வீரத்தைத் தொல்காப்பியப் புறத்திணை இயல் எடுத்துக் கூறுகின்றது.

♣ தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்பாடை என்ற நால்வகைப் படைகளும் போரில் ஈடுபட்டன.

♣ அக்காலத் தமிழரிடம் அறப்போர் முறையே அமைந்திருந்தது. இதனை **நெட்டிமையார்** புறப்பாடலால் அறியலாம்.

♣ பசுக்களும், பசுவை ஒத்த பார்ப்பனர்களும், பெண்களும், நோயுடையவர்களும், புதல்வர்களை பெறாதவரும், யாம் அம்பு விடுவதற்குமுன் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள், என வீரன் ஒருவன் கூறுவதிலிருந்து தமிழரின் அறப்போர் முறை விளங்கும்.

♣ மேலும் வீரர் அல்லாதவர்கள், புறங்காட்ட ஓடுவார், புண்பட்டார், முதியோர், இளையோர், இவர்கள் மீது படைக்கலம் செலுத்தலாகாது என்பது புறநானூற்றால் அறிய முடிகிறது.

♣ **நட்பு:**

♣ கபிலரும் பறம்ப மலைத்தலைவன் பாரியும் நட்பாயிருந்தனர். பாரியின் மகளிர் இருவரையும் பாரி இறந்தபின் கபிலரே மணமுடித்து வைக்கிறார்.

♣ மேலும் கபிலர் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாமனைக் கண்டு பறம்பு நாட்டின் வளம், பாரியின் சிறப்பு, அவன் வீரம்,அவனைப் பிரிந்து வாடும் மக்கள் நிலையைக் கூறுகிறார்.

♣ துன் வறுமையைக் கூறாது, நண்பனின் பிரிவை சேரமன்னனிடம் கூறும் நிலை அவர்கள் நட்பின் ஆழத்தைக் காட்டுகிறது.

♣ கோப்பெருஞ்சோழன் தம் மக்களிடம் நாட்டை விட்டு மனம் நொந்து வடக்கிருந்து உயர் துறக்க முயல்கிறான். அது கேட்டு. இதுவரை கோப்பெருஞ்சோழனை நேரில் பாராமலே நட்புக் கொண்டிருந்த புலவர் பிசிராந்தையார் தாமும் நண்பனுடன் வடக்கிருந்து உயிர்துறக்க வந்து விரும்பியவாறு உயிர் துறக்கிறார்.

♣ அதியமான் நெடுமாஞ்சியிடம் நட்பு கொண்ட ஔவையார் தொண்டை மானிடம் சென்று அதியமானின் வீரம் வெளிப்படுமாறு வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடி நடக்க விருந்த பெரும்போரைத் தடுத்ததும் சங்க இலக்கியங்களால் அறியப்படும் செய்திகளாகும். அதியமானும் அமிழ்தினும் இனிய நெல்லிக்கனியை தானுண்ணாது ஔவைக்குக் கொடுத்து மகிழ்ந்தான்.

♣ **விருந்தோம்பல்:**

♣ விருந்து என்ற சொல்லுக்குப் **புதுமை** என்பது பொருள். உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியராக நம்மிடம் வரும் மக்களை விருந்து என்றனர் தமிழர்.

♣ அறவோர்க்கும் அளித்தல், அந்தணர் ஓம்புதல், ஆகிய அறங்களைத் தான் செய்யாது விட்டேன் என்று கண்ணகி வருந்திக் கூறுவதை சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

♣ **ஈகை:**

♣ கொடையிலிருந்து வேறுபட்டது ஈகை. திருவள்ளுவர் ஈகைக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

♣ **'வறியார்க்குஒன்று ஈவதேஈகை: மற்று எல்லாம்**

♣ **குறியெதிர்ப்பை நீரது உடைத்து'**

♣ என்னும் குறளில் பதில் உதவி செய்ய முடியாத ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகையாகும்.

♣ பிற கொடைகள் யாவும் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையை உடையது.

♣ வறியோர் பசி தீர்த்தலே ஒருவன் தான் செல்வத்தைச் சேர்த்து வைக்கும் இடமென்று சங்ககால மக்கள் எண்ணி வாழ்ந்தனர்.

♣ **கொடை:**

♣ சங்க காலத்தில் அரசர்கள் கொடை வள்ளல்களாக இருந்திருக்கிறார்கள்.

♣ பாரி, ஓரி, காரி, பேகன் போன்றோர் கடையேழு வள்ளல்கள் என்று போற்றப்பட்டனர். பாரி முல்லைக்குத் தேரையும், பேகன் மயிலுக்குப் போர்வையையும் அளித்து அழியாப் புகழ் பெற்றனர்.

♣ **கற்புடைமை:**

♣ சங்க கால மக்களின் இல்லறம் நல்லறமாக நடந்தமை இலக்கியங்களால் அறிய முடிகிறது.

♣ திருவள்ளுவர்

♣ **"தெய்வக் தொழாஅள் கொழுநன் றொழுசெழுவாள்**

♣ **பேய்யெனப் பேய்யும் மனழ"**

♣ என்று கூறுகிறார்.

♣ காலத்தில் பெய்து காக்கும் மழைக்குச் சமமானவர்களாகக் கற்புடைய பெண்டிர் மதித்து வணங்கப்பட்டனர்.

♣ **உலக ஒருமைப்பாடு**

♣ பண்டையத் தமிழர்கள் நாகரிகம் பண்பாட்டில் சிறந்து இருந்தனர்.

♣ கடல்கடந்து வெளிநாடுகளுக்கும் சென்று தமிழர் வணிகம் செய்து சிறந்தனர்.

♣ கணியன் பூங்குன்றனார் என்னும் புலவரின் புறப்பாடல்.

♣ ''**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

♣ **தீதும் நன்றும் பிறர்தர வாரா''**

♣ கணியன் பூங்குன்றனாரின் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற புறப்படால் வரி ஐக்கியநாடுகள் சபை நுழைவு வாயிலில் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கல்லில் வடித்து பதிக்கப்பெற்றிருக்கிறது என்று எண்ணி மகிழத்தக்கது.

♣ **முத்தமிழ்**

♣ உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழி.

♣ ''**திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்**

♣ **உடுக்களோடும் பொங்கு கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்''** என்று

♣ பாரதிதாசன் கூறிய கருத்து இங்கு நோக்கத்தக்கது.

♣ தீந்தமிழ் மொழி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முப்பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது.

♣ எனவேதான் நாட்டு மக்களுக்கு நல்வழி கூறவிழைந்த தமிழ் மூதாட்டி ஔவையாரும் விநாயகரை **"சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று வேண்டுகின்றார்.**

♣ **இயற்றதமிழ்:**

♣ முத்தமிழில் முதலில் நிற்கும் இயற்றமிழ், ஏனைய இரண்டிற்கும் மொழிக்கும் அடிப்படையாய் அமைகிறது.

♣ மொழி முதற்காரணமாகிய அணுத்திரள் ஒலி, அங்காத்தல், இதழ்குவிதல், நா அசைவு இவற்றால் வெவ்வேறு எழுத்தாகிறது.

♣ இவ்வெழுத்துகள் தனித்தோ தொடர்ந்தோ சொல்லாகிறது. சோற்களும் சொற்றொடர்களும் பொருள் குறித்தனவாக அமைகின்றன.

♣ கட்டுரைகள், சிறுகதைகள், புதினங்கள், கவிதைகள், செய்யுள்கள், புதுக்கவிதைகள், நாடக இலக்கியங்கள், விமர்சனங்கள் திறனாய்வுகள், உரையாசிரியர்களின் விளக்கங்கள் என்று அனைத்தும் இதனுள் அடங்கும்.

♣ **இசைத்தமிழ்:**

♣ துமிழ் என்று தோன்றியதொ அன்றே இசையும் தோன்றியது. துமிழர் வாழ்வில் இசைப்பாட்டு இணைந்து வளர்ந்தது. கருவறை தொடங்கி கல்லறை வரைக்கும் இசையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர் தமிழர்.

♣ பிறந்த குழந்தைக்குத் தாலாட்டுப் பாட்டு, விளையாட்டுப் பாட்டு, வேடிக்கையோடு அறிவுக்கு விருந்து வைக்கும் விடுகதைப் பாட்டு, தொழில் பாட்டு, நாற்று நடவுப் பாட்டு, எதிர்பாட்டே இல்லாத ஏற்றப்பாட்டு, திருமணப் பாட்டு, ஊஞ்சல் பாட்டு, வழிநடைப் பாட்டு, இறைவழிபாட்டுக்கு உரிய பக்திப் பாட்டு, இறுதியில் கையறு நிலையாக ஒப்பாரிப் பாட்டு, இப்படி ஏற்றமிகு தமிழர் வாழ்வில் எண்ணற்ற பாட்டுக்கள் இடம் பெற்றிருந்தன.

♣ பண் என்னும் தமிழ்ச் சொல் இசையைக் குறித்து நின்றது. திருத்தியமைக்கப்பட்ட, பண்படுத்தப்பட்ட இசையை பண் என்றனர் தமிழர்.

♣ இறைவனோடு கலக்க இசையைக் கருவியாக்கி மகிழ்ந்தனர் தமிழர். இவ்வழிபாட்டு முறையை **நாதோபாசனை** என்றனர் வடமொழியாளர்.

♣ இதயத்தைத் தொட்டுவிடும் இசை காதுகளுக்கும் போர்த்து விடுகிற கௌரவப் பொன்னாடை என்று கூறுகிறார் **கவிஞர் மு. மேத்தா.**

♣ பழந்தமிழ் இசை நூற்களாக இன்று அறியப்பெறுபவை பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், இசை நுணுக்கம், பஞ்ச மரபு, தாள சமுத்திரம், கச்சபுட வெண்பா, இந்திரகாளியம், பதினாறு படலம், தாளவகை கோவையோத்து, இசைத் தமிழ்ச் செய்யுள் துறைக்கோவை, இன்னபிற பலவாம். இந்நூல்கள் நமக்கு முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை.

♣ **"இன்பத் தமிழிசை எமது- அது**

♣ **இன்பந்தரும்படி வாய்ந்த நல்அமுது"**

♣ ஏன்பார் பாவேந்தர் பாரதிதாசன்

♣ நாயன்மார்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் இறைவழிபாட்டிற்கு உறுதுணையாக இசையைப் போற்றி வளர்த்தனர்.

♣ நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பும் ஞானசம்பந்தன் என்று ஞானசம்பந்தப் பெருமான் போற்றப்படுகிறார்.

AKM IAS & NEET ACADEMY

- தமிழிசையை வளர்க்கக் காலஞ்சென்ற இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் ஆற்றிய அருந்தொண்டு அளவிடற்கரியது.
- தமிழிசைச் சங்கம், தமிழிசைக் கல்லூரி இவற்றை நிறுவியும், நடத்தியும் அவர் தமிழிசை சிறக்க அனைத்து வழிகளிலும் முயன்றார்.
- சங்க காலத்தில் ஐவகை நிலத்திலும் முறையே குறிஞ்சிப்பண், பாலைப்பண் (பஞ்சுரம்), முல்லைப்பண் (சாதாரி), மருதப்பண், நெய்தல் பண்(செவ்வழி) என்ற அடிப்படைப் பண்கள் பொதுவாக இசைக்கப்பட்டன.
- மேலும் வைநளம், சீகாமரம் போன்ற பண்களும் இருந்ததாக அறியமுடிகிறது.
- சங்க கால இசைக் கருவிகள், யாழ், குழல், ஆகுளி, பதலை, பாண்டில், தடாலி, தண்ணுமை, சரடிகை முதலானவையாகும்.
- குறிஞ்சியாழ், பாலையாழ், முல்லையாழ், மருதயாழ், விளிரியாழ், சீறியாழ், போன்றவை இசைக்கப்பட்டன.
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் முதலியன இசையைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன.
- **நாடகத்தமிழ்:**
- முத்தமிழின் மூன்றாம் பகுதியான நாடகத் தமிழ் சிறப்பு மிக்கது. மக்களின் அக, புற இயல்புகளை நடிப்பின் மூலம் மேடையில் வெளிப்படுத்துவது நாடகம்.
- தமிழிசை போல், தொன்மையான தமிழ் நாடக நூல்களும், நாடக் கலை நுணுக்க நூல்களும் அழிந்து போயின்.
- தொல்காப்பியரின் மெய்ப்பாட்டில், நாடகக் கலைஞர்கள் வெளிப்படுத்த வேண்டிய, நகை, அழுகை, இளிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம், சினம், உவகை என்றும் எட்டு மெய்ப்பர்டுகளையும், அவை தோன்றுவதற்கு வேண்டும் நிலைக்களன்களையும் குறிப்பிட்டுள்ளது.
- முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், செயன்முறை, மதிவாணனார், நாடகத்தமிழ் என்னும் நூல்கள் முறையே அடியார்க்கு நல்லார், யாப்பருங்கல உரையாசிரியர், இறையனார்களவியலுரை ஆசிரியர் ஆகியோரால் குறிப்பிடப்பட்டுள்ளன.
- கூத்தும், நாடகமும் நடக்கின்ற ஆடுகளம் பற்றி விரிவான செய்திகள் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன.
- இடைக்காலத்தில் தேனா்றிய இராச ராச விஜயம், பூம்புலியர் குலோத்துங்க சோழ சரிதை போன்ற நாடகங்கள் இருந்தமை பிற்காலச் சோழர் காலத்தில் நாடகக்கலை சிறந்திருந்ததைக் காட்டுகிறது.
- 18-ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் இராம சரித நாடகமும் கோபால கிருஷ்ண பரிதியின் **நந்தனார் சரித்திரக் கீர்த்தனை** என்ற நாடகமும் புகழ் பெற்றனவாகும்.
- 19-ஆம் நூற்றாண்டில் நாடகம் மேன்மேலும் நன்கு வளரத்தொடங்கியது. பரிதிமாற் கலைஞரின் கலாவதி, ரூபாவதி, மானவிசயம் என்னும் நாடகங்களும் **நாடகவியல்** என்னும் நாடக இலக்கணம் பற்றிய நூலும் பெருமைப்படத்தக்கனவாகும்.
- பேராசிரியர் சுந்தரம் பிள்ளயின் மனோன்மணீயம் நாடக நூலும் அவரைப் பின்பற்றி அண்மையில் புலவர் ஆ.யூனி எழுதிய **அனிச்ச அடி** நாடக நூலும் நல்ல கவனிப்பைப் பெற்றன.
- நாடகத்தின் தந்தை என போற்றப்பட்ட பம்மல் சம்பந்த முதலியாரின் மனோகரா, லீலாவதி, வேதாள உலகம், சபாபதி போன்ற பல்வேறு நாடகங்கள் சிறப்பாக அமைந்து அனைவரது பாராட்டையும் பெற்றன.
- நாடக உலகின் இமயம் எனக் கருதப்பட்ட சங்கரதாஸ் சுவாமிகள் பவளக்கொடி, சதி அநுசுயா, வள்ளதிருமணம், சத்தியவான் சாவித்திரி என்னும் புராண நாடகங்களையும், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளிலிருந்து மொழி பெயர்த்துச் செய்யப்பட்ட தமிழ் நாடகங்களையும் இயற்றினார்.

AKM IAS& NEET ACADEMY

♣ மாரியப்ப சுவாமிகள், கிட்டப்பா கே.பி. சுந்தரம்பாள் ஆகியோர் நடிப்பாற்றலும் குரல் வளமும் கொண்ட கலைஞர்களாகத் திகழ்ந்தனர்.

♣ கு.சா. கிருஷ்ண மூர்த்தியின் அந்தமான கைதி, ப. நீலகண்டனின் முள்ளில் ரோஜா, என்.எஸ்.கே. நாடகக் குழுவின் நாம் இருவர், பைத்தியக்காரன், நாரண துரைக்கண்ணனின் உயிரோவியம், டாக்டர். மு. வரதராசனாரின் டாக்டர் அல்லி அரு. ராமநாதனின் இராசராச சோழன், பேரறிஞர் அண்ணாவின் வேலைக்காரி, ஓர் இரவு, சந்திரோதயம், நீதி தேவன் மயக்கம். கலைஞர். கருணாநிதியின் மந்திரி குமாரி, தூக்குமேடை போன்ற நாடகங்கள் மக்கள் மத்தியல் பெரும்பாராட்டைப் பெற்றன.

♣ ஆர். எஜ், மனோகர் காட்சிகளைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் அற்புதமான மேடை அமைப்புகளுடன் நாடகங்களை நடத்தி நாடகக் கலைக்கு அருமையான தொண்டு செய்துள்ளனர்.

♣ எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன் போன்ற திரைக்கலைஞர்கள் நாடகத்துறை மூலம் திரைஉலகுக்கு வந்தவர்கள் என்று அறியும்போது நாடகத்தின் சிறப்பு மேலும் கூடுகிறது.

♣ கோமல் சுவாமிநாதனின் "**தண்ணீர் தண்ணீர்**" நாடகம் மக்களிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

♣ **தொல்காப்பியம் உணர்த்தும் வாழ்க்கை முறை:**

♣ இன்றுள்ள தமிழ் நூல்களில் மிகப்பழமையான நூல் தொல்காப்பியம் ஆகும்.

♣ இது முதல் நூலாக திகழ்ந்தாலும் அகத்தியம் என்னும் இலக்கண நூலுக்கு வழிநூலென்பர்.

♣ குள்ளமுனிவர், அகத்தியர் என்னும் முனிவரால் செய்யப்பட்ட முதல் தமிழ் இலக்கண நூல் அகத்தியம் என்று கூறுவர். அஃது தற்போது கிழடக்கப் பெறாமையால் தொல்காப்பியம் முதல் நூலாகியது.

♣ தமிழுக்கு மட்டுமல்லாமல் தமிழர் வாழ்வுக்கும் அமைக்கப்பட்ட அற்புதமான இலக்கண நூல் எனக் கருதப்படுகிறது.

♣ இதன் காலம் பற்றி வெவ்வேறு கருத்துகள் நிலவுகின்றன. எனினும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு என அறிஞர் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

♣ தொல்காப்பியத்தை இயற்றியவர் பழமையான காப்பியக் குடியில் தோன்றிய தொல்காப்பியர் என்று கருதப்படுகிறது.

♣ **உலகத்தோற்றம் பற்றிய கருத்து:**

♣ நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் ஆகிய ஐவகை இயற்கைப் பொருள்களைக் கொண்டு தானாகவே இவ்வுலகம் தோன்றியது என்ற கருத்தை தொல்காப்பியர் வெளிப்படுத்தியுள்ளார்.

♣ **நிலம், நீர், தீ, வளி விசும்பெடு ஐந்தும்**

♣ **கலந்து மயக்கம் உலகம்.**

♣ **அகவாழ்வு:**

♣ பெரியோர்களாலும், பெற்றோர்களாலும் நிச்சயிக்கப்பட்ட திருமண முறைகளும், ஆடவர் பெண்டிர் தாமாகவே கண்டு காதலித்துத் திருமணம் செய்து கொள்ளும் பழக்கமும் இருந்ததாக தொல்காப்பியம் கூறுகிறது.

♣ சடங்குகளில் புரோகிதர்கள் பயன்படுத்தப்படவில்லை.

♣ ஆண் ஆளப்பிறந்தவன் என்றும், பெண் கற்பைப் பேணிக் காத்து இல்லம் புரிய துணை நிற்பவள் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார்.

♣ பரத்தையர் என்னும் ஊர்ப் பொதுமகளிர் சமுதாயத்தில் இருந்தனர்.

♣ அகவாழ்க்கை விளக்குவது அகத்திணை எனப்படும் திணை என்பது ஒழுக்கம் பற்றிய பெரும்பிரிவு துறை என்பது அகத்திணையில் அமைந்த சிறு உட்பிரிவுகள் ஆகும்.

♣ **திணை வகைகள்:**

- தமிழ் மக்கள் வாழ்ந்த நிலம் ஐந்தாகப் பிரிக்கப்பட்டது.
- நில அமைப்பு மேற்கு தொடங்கி கிழக்கு வரை, முறையே மலைகளும், காடும், சமவெளிகளும், கடற்கரையும் இருப்பதை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பெயரிட்டு பின்னர் பாலை என்ற புதிய நிலத்தையும் அதில் வாழ்மக்களின் ஒழுக்கத்தையும் அறிந்து இயம்பினர். ஆகவே திணை ஐந்தாக பிரிக்கப்பட்டது.
- இத்திணைகள் மக்களின் அக வாழ்க்கையை விளக்குவதால் அதில் சிறப்பில்லாது விளங்கும் மற்ற இரண்டு ஒழுக்கங்களுக்குக் கைக்கிளை, பெருந்திணை எனப் பெயரிட்டு அதை புறத்திணைகளோடு சேர்த்தனர்.
- கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம். ஆண், பெண் இருவரில் ஒருவர் மட்டும் காதல் கொண்டு இருப்பது. பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். வயது முதிர்ந்தவர் மிக இளையவர் போல் காதல் கொள்வதும் பலவந்தம் செய்வதும் ஆகும்.
- **குறிஞ்சித்திணை:**
- மலை நிலமாகிய குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களின் ஒழுக்கத்தைக் கூறுவது குறிஞ்சித்திணை ஆகும்.
- மலையும் மலையைச் சார்ந்த இடமுமே குறிஞ்சியாகும்.
- தலைவனும் தலைவியும் சேர்ந்து மகிழ்ந்து இருப்பதை அதிகம் விரும்புவது இதன் உரிப்பொருள்.
- இவ்விருவருக்கிடையே நிகழும் சந்திப்பு, அதற்குரிய காரணங்களை எடுத்துரைப்பதே குறிஞ்சி ஒழுக்கம்.
- இத்திணையின் தெய்வம் மாயோன் எனப்படும் முருகன் ஆவார்.
- **முல்லைத்திணை:**
- காடும், காடு சார்ந்த நிலமும் முல்லை நிலம்.
- இதன் தெய்வம் மாயோன் (திருமால்) பிரிந்து சென்ற தலைவன் திரும்பும்வரை காதலி தன் கற்பின் வலிமையால் தன் துயரத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பது முல்லையெழுக்கம்.
- இத்திணையின் ஒழுக்கம் **ஆற்றி இருத்தல் ஆகும்.**
- **மருதத்திணை**
- வயலும், வயல் சார்ந்த இடமும் மருத நிலம் ஆகும், நீர் வளம். நிலவளம் அமைந்த நிலப்பகுதியாகும்.
- இதன் தெய்வம் இந்திரன் நல்ல அரசும், நாகரிகமும், கூட்டு வாழ்க்கையும் அமையப் பெற்ற நிலம் மருதம் ஆகும்.
- தலைவன், தலைவி இருவரிடையே தோன்றும் ஊடல், அவ்வூடலின் காரணங்கள் பற்றிக் கூறும் இத்திணை.
- ஊடல் நீக்கும் வாயிலாக பாணன், கூத்தன், பாங்கன், தோழி ஆகியோர் செயல்படுவதைக் கூறுவதும் இத்திணையாகும்.
- **நெய்தல் திணை:**
- கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும், இந்நில ஒழுக்கத்தைக் கூறுவது நெய்தல் திணையாகும்.
- இந்நிலத்துத் தெய்வம் வருணன்.
- தலைவன் வரவுக்குக் காத்திருத்தல், தன்மனத் துயரை பிறரிடம் கூறுதலும் நெய்தல் ஒழுக்கமாகும்.
- இரங்கல் என்ற நிலையே நெய்தலின் ஒழுக்கமாகும்.
- **பாலைத்திணை**
- பாலை நிலத்திலே நிகழும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது காலைத் திணை.

- நீரில்லாது வறண்டுபோன நிலப்பகுதியே பாலை நிலம். இதற்குத் தொல்காப்பியர் தனிநிலம் குறிப்பிடவில்லை.
- வானம் பொய்த்து வறண்டு போனால் எந்த நிலத்திலும் பாலை தோன்றலாம்.
- எனினும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பாலைநிலம் பற்றிக் கூறும்போது. "குறிஞ்சி நிலமும் அதை அடுத்து அமைந்துள்ள முல்லை நிலமும் சந்திக்கும்இடத்தில் நிலம் மயங்கி பாலை என்ற நிலம் மீது தோன்றுகிறது" என்பதை தோன்ற **"குறிஞ்சியும் முல்லையும் முறைமையிற் றிரிந்து பாலை என்பதோர் படிமம் கொள்ளும்"** என்கிறார்.
- இதற்குத் தெய்வம் கொற்றவை
- இத்திணைக்குரிய ஒழுக்கம் பிரிவு தலைவன் தலைவி பிரிவைப் பாடும் பாடல்கள் பாலையின் பாடல்காளாகவே கருதப்படும்.
- **புறவாழ்வு:**
- மனித வாழ்வின் உறுதிப்பொருள்களில் அறம், பொருள், வீடு என்ற மூன்றைப் பற்றிய செய்திகள் இங்கு கூறப்படுகின்றன.
- இப்புற ஒழுக்கம் பத்து வகைப்படும். அவை முறையே வெட்சித்திணை, கரந்தைத் திணை, வஞ்சித்திணை, காஞ்சித்திணை, உமிஞைத் திணை, நொச்சித் திணை, தும்பைத் திணை, வாகைத் திணை, பாடாண் திணை, பொதுவியல் திணை என்பனவாகும். சிலர் கைக்கிளை, பெருந்திணை என்ற இரண்டு அகப்பொருள் புறத்திணைகளையும் சேர்த்து எண்ணுவர்.
- **வெட்சித்திணை:**
- பகைவர் நாட்டின் மீது படையெடுக்க விரும்பும் அரசன் தன் பகைமையை உணர்த்த பகைவர் நாட்டு பசுக்களை கவர்ந்து வரச் செய்வான்.
- அவ்வாறு கவர்ந்து வரச்செல்லும் வீரர்கள் வெட்சிப் பூமாலை அணிந்து செல்வர். இதவே பொருக்குக் காரணமாக அமைகிறது.
- **கரந்தைத் திணை:**
- வெட்சி மாலை சூடிய வீரர்கள் கவர்ந்து செல்லத் தொடங்கிய பசுக்களை பகைமன்னனின் வீரர்கள் கரந்தைப்பூமாலை அணிந்து மீட்டுச் செல்வர். இது கரந்தைத் திணையாகும்.
- அக்காலத்தில் மாடுகளே செல்வமாகக் கருதப்பட்டது. அதிக மாடுகள் உள்ளவனே செல்வந்தனாகக் கருதப்பட்டான். அதனால் மாடு என்ற சொல்லுக்கும் செல்வம் என்ற பொருள் வழங்கலாயிற்று.
- **வஞ்சித்திணை:**
- பகைவர் நாட்டின் மேல் படையெடுத்துச் செல்லுதல் வஞ்சித்திணையாகும். இவ்வீரர்கள் **'வஞ்சிப்பூமாலையை'** சூடிச்செல்வர்.
- **காங்சித்திணை:**
- நாட்டின் மேல் படையெடுத்து வரும் வஞ்சிமலர் சூடிய வீரர்கள் காஞ்சித்திணை வீரர்கள் நாட்டு எல்லையில் தடுத்து நிறுத்துவர். இவ்வீரர்கள் **காஞ்சிப்பூமாலையை** சூடிச்செல்வர்
- **உமிஞைத் திணை:**
- பகைவர் நாட்டின் மீது படையொடு சென்று மதிலை வளைத்துப் போரிடுவது உமிஞைத் திணயையாகும். இவ்வீரர்கள் **உமிஞைப்பூ மாலை** சூடுவர்.
- **நொச்சித் திணை:**
- மதிலை வளைத்துப் போர் செய்யும் உமிஞைத் திணை வீரர்கள் மதிலுள் புகாமல் தடுத்துப் போரிடுபவர், நொச்சித் திணை வீரராவர். இவர்கள் **நொச்சிப்பூ மாலையைச்** சூடிய போர் செய்வர்.

♣ **தும்பைத் திணை:**

♣ இரும்பெரம் வேந்தர்களும் நாள் குறித்து, பொதுவிடத்தில் போர் செய்தல் தும்பைத் திணையாகும். இவ்வீரர் இருபக்கத்தவர்களும் **தும்பைப் பூமாலை** சூடிப் போர் செய்வர்.

♣ **வாகைத் திணை:**

♣ போர் செய்யும் இருவேந்தருள் ஒருவர் வெற்றி பெறுவர், அவ்வீரர்கள் **வாகைப்பூச்சூடி** வெற்றியை மகிழ்ந்து கொண்டாடுவர், வெற்றி பெற்றவரைப் புகழந்து பாடும் பாடல்கள் வாகைத் திணையைச் சார்ந்த பாடலாகும்

♣ **பாடாண் திணை:**

♣ தனிப்பட்ட ஒருவரின் வீரம், கொடை, புகழ் முதலிய ஒழுக்கத்தைச் சிறப்பித்துப் பாடுதல் பாடாண் திணை எனப்படும்.

♣ **பொதுவியல் திணை:**

♣ மேற்கூறப்பட்ட ஒன்பது திணைகளில் வகைப்படுத்த முடியாத பாடல்களான அறம் கூறும் பாடல்களையும், அறிவு கூறும் பாடல்களையும் இப்பொதுவியல் திணையில் அடக்கிக் கூறுவர்.

♣ உலகில் எந்த மொழியிலும் இல்லாத உயரிய திணைப்பாகுபாடு என்பது ஒழுக்கத்தின் உன்னத நிலை என்றால் அது மிகையாகாது.

♣ **சங்க இலக்கியங்களில் காணப்படும் சமயக்கருத்துகள்:**

♣ சங்க காலத் தமிழரிடையே அவர்களுக்கே உரிய சமயம் இருந்தது. இச்சமயத்தின் செல்வாக்கைத் தனிமனிதனிடமும் காண முடிந்தது. இச்சமயம் அவர்களின் சமூக வாழ்வியல் குறுக்கிடவில்லை.

♣ தன்னுடைய நிலத்தின் தெய்வத்தை வழிபட்டதோடு அமையாமல் வைதீக சமய வழிபாட்டு முறையும் இருந்தது.

♣ சொர்க்கம், நரகம், வீடுபேறு, மறுபிறப்பு, வினைப்பயன் பற்றிய நம்பிக்கைகளும் இருந்தன.

♣ வீரர்களின் நடுகல் வணக்கமும், இறந்துபட்ட முன்னோர் வணக்கமும் இருந்தது. மரம், கல்,மலை, விலங்குகள் போன்றவையும் வணங்கப்பட்டன.

♣ **கடவுள், இயவுள், இறை:**

♣ தனி முதற்பொருள், அளவில் ஆற்றலுடைய **இயவுள்** எனப்பட்டது. அதைக் கடவுள் என்றும் அழைத்தனர்.

♣ நம்மை இயக்குபவன் இயவுள் என்றழைக்கப்பட்டான். நம்மைக் கடந்தவன், அறியமுடியாதவன், ஆனால் உள்ளவன் என்பது தோன்ற கடவுள் என்றும் அழைக்கப்பட்டான்.

♣ அனைத்திலும் நீக்கமற்ற நிறைந்து ஒளிர்பவன் இறை என அழைக்கப்பட்டான்.

♣ **சிவவழிபாடு:**

♣ சங்ககாலத் தமிழர் சிவனை வழிபாடு செய்தனர். முப்புரம் எரித்தவர், முக்கண் முதல்வர், வார்சடைக் கடவும், என்றெல்லாம் அழைக்கப்பட்ட சிவபெருமான் வழிபடுகடவுளாகச் கையில் சூலம் ஏந்தி இருந்தான் என அறியப்படுகிறது.

♣ **வருணன் வழிபாடு:**

♣ மழைக்குக் கடவுள் வருணன். திருவள்ளுவரும் வான்சிறப்பு என மழையைப் போற்றியுள்ளமையும், இளங்கோவடிகளும் மாமழை போற்றதும் என வருண வழிபாட்டைக் காண முடிகிறது.

♣ **இந்திரன்:**

♣ மருதநில மக்கள் இந்திரனை வழிபட்டிருக்கிறார்கள், எப்போதும் இன்பம் விழைந்து ஆடல் பாடல்களில் மனம் செலுத்தும் இந்திரனைப் போலவே இன்பம் விழைந்து வாழ்ந்தமை சங்க இலக்கியங்களால் அறிய முடிகிறது.

♣ **திருமால்:**

♣ திருமால் முல்லை நில மக்களின் தெய்வம் ஆவார். திருமால் பண்டைத் தமிழர்களால் வணங்கப்பட்டவர். பரிபாடல் என்னும் இலக்கியம் திருமால் பெருமையினைப் பகரும் பலராமர் வழிபாடும் சிறப்புப் பெற்றிருந்தது.

♣ **நிமித்தங்கள்:**

♣ நிமித்தங்கள் தமிழர் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டன. எதிர்வரும் தீமையை முன் உணர்த்துவன நிமித்தங்கள் ஆகும்.

♣ போருக்கு செல்லும் முன் நிமித்தமறியும் பண்பு நம் தமிழரிடையே இருந்தது.

♣ **ஊழ்வினை:**

♣ ஊழ் என்னும் வினைப்பயனை மக்கள் மதித்தனர். முற்பிறப்பில் செய்த வினைப்பயன்களை ஊழ்வினைப் பயன் என்றனர்.

♣ தொடர்ந்து அடுத்த பிறவியும் இவ்வினைப் பயன் காரணமாகவே அமையும் என நம்பினர் தமிழர்.

♣ திருவள்ளுவரும் '**ஊழிற் பெருவளி யாவுள**' என்று விளவுகின்றனர்.

♣ மாடலனும் கோவலன் பற்றி கவுந்தி அடிகளாரிடத்துக் கூறுங்கால் இக்கோவலன் **"இம்மை செய்தலேயன்றி நல்வினை இத்திருத்தகு மாமணிக் கொழுந்துடன் ஈண்டுப் போயிருந்தது முன்வினை"** என்றார்.

♣ **தென்புலத்தார்:**

♣ இறந்துபட்ட முன்னோர்கள் இடையுலகம் ஒன்றில் வாழ்வதாக எண்ணினர். ஆவர்கள் வாழும் உலகம் தென் திசையில் இருப்பதாக நம்பினர், அதனால் அவர்கள் தென்புலத்தார் என்றழைக்கப்பட்டனர்.

♣ **நடுகல் வணக்கம்:**

♣ போர்களத்தில் வீரமரணம் அடைந்த வீரர்களை அடக்கம் செய்த இடத்தில் அவ்வீரனது பெயர், புகழ் சிறப்பியல்புகளை எழுதிய கல்லை நட்டு வணங்கினர். இதற்கு நடுகல் வணக்கம் என்ற பெயர் வந்தது.

♣ **பத்தினி வணக்கம்:**

♣ கணவனைத் தெய்வமாக மதித்து வாழ்ந்த பெண்களுக்குச் சிலையெடுதுதுச் சிறப்பு வழிபாடுகள் செய்தமையை சிலப்பதிகாரம் வாயிலாக அறிகிறோம்.

♣ **பேய், பூதம், அணங்குகள்:**

♣ பேய், பூதம், அணங்குகள் இருப்பதாகவம் அவை மக்களை அச்சுறுத்துவதாகவும் கருதி அஞ்சினர்.

♣ ஆணங்குகள், மலை, குளம், கடல் போன்ற இடங்களில் இருப்பதாக நம்பினர்.

♣ **இயற்கை வழிபாடு:**

♣ பழந்தமிழர் இயற்கையை வழிபாடு செய்தனர். சூரியன், மழை, ஆறு, மரம், (வேம்பு, அரசு) ஆகியவற்றை வழிபாடு செய்த வாழ்ந்தனர்.

♣ **பிறசமயங்கள்:**

♣ மணிமேகலை என்ற சிறப்பு வாய்ந்த காப்பியத்தை தமிழ்மொழி அச்சமயத்திற்கு வழங்கிச் சிறப்பிக்கிறது. வளையாபதியும், குண்டலகேசியும், பௌத்த காப்பியங்களே.

♣ **வீரசொழியம்** என்ற இலக்கணநூலும் பௌத்தர்கள் இயற்றியதே.

♣ இந்திய நாட்டின் தொன்மையான சமயங்களில் சமண நமயமும் ஒன்று.

♣ சமணர்கள் மதுரையில் வச்சிர நந்தி சங்கத்தை நிறுவித் தமிழ்த் தொண்டு புரிந்து வந்தனர்.

♣ சங்க கால சமணப்புலவர் உலோச்சனார், நிகண்டனார் என்னும் இருவர்.

♣ சமணரான இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் படைத்தார்.

♣ சீவக சிந்தாமணி திருத்தக்க தேவர் என்ற சமணச் சான்றோரால் இயற்றப்பட்டது.

♣ இவை தவிர ஐஞ்சிற காப்பியங்களாகிய உதயண குமார காவியம், நாக குமார காவியம்,யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகியவையும் சமணப் பெரியோர்கள் பாடியதேயாகும்.

♣ நீதி நூல்கள் பலவும் இலக்கண நூல்களும், நிகண்டும், சமணப் பெரியோர்களால் செய்யப்பட்டிருக்கின்றன.

♣ **இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழ்ப்பண்பாட்டின் கொடை:**

♣ **மொழிக்கொடை:**

♣ மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்கயில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திராவிடா்கள் மிக உயர்ந்த நாகரிகத்துடன் வாழ்ந்ததை அறிகிறோம்.

♣ வடநாட்டு மொழிகள் பலவற்றிலும், தென்னாட்டு மொழிகள் அனைத்திலும் தமிழ்ச் சொற்களை இன்றும் காண முடிகிறது.

♣ **திருக்கோயில்கள்:**

♣ வானுயர்ந்து நின்று இந்நாட்டின் சமயப் பண்பாட்டு வளர்ச்சிகளை எடுத்துக்காட்டும் அழகிய சின்னங்கள் தமிழகத்தின் திருக்கோயில்களாகும்.

♣ சமண, பௌத்த சமயங்களைச் சார்ந்த பள்ளிகளும், கோயில்களும், குடைவரைக் கோயில்களையும் தமிழகமெங்கும் காணமுடிகிறது.

♣ திருச்சி, தஞ்சை, திருவானைக்கா, சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர், தென்காசி, காஞ்சி, சுசீந்தரம், திருவரங்கம், திருக்கழுக்குன்றம், குடந்தை, கன்னியாகுமரி, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் மிகச்சிறப்பு வாய்ந்த இந்து சமயத்திருக்கோயில்களைக் காணலாம்.

♣ **ஓவியம்:**

♣ மொழி தோன்றுவதற்கு முன்பே ஓவியம் தோன்றியது எனலாம்.

♣ ஓவிய எழுத்துக்கள் இன்றும் மொழி எழுத்துகளாகப் பயன்படுத்தப்படுவதை ஜப்பான், சீன மொழிகளில் காணலாம்.

♣ தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராச சோழனின் வரலாற்று நாடகக் காட்சிகள் இன்றும் இருப்பதைப் பார்க்க முடிகிறது.

♣ **நாட்டியம்:**

♣ பண்டைத் தமிழர்கள் நாட்டியக் கலையில் சிறந்து விளங்கினர். நாட்டியம் என்பது இறையோடு கூடிய கூத்து ஆகும்.

♣ சிலப்பதிகாரம் கூத்து வகைகள் பற்றி இயம்பகிறது.

♣ கை வழிக்கண்களும் கண்வழி மனமும் செல்ல ஆடுதலே ஆடலின் நுட்பமாகம்.

♣ ஆடவல்ல நடனமகள் **விறலி** என்றழைக்கப்படடாள், நடன மகன் கூத்தன் என்றழைக்கப்பட்டான்.

♣ வள்ளிக் கூத்து, முருகனை வழிபட்டு ஆடும் குன்றக்குரவை, திருமாலை வழிப்பட்டு ஆடும் ஆய்ச்சியர் குரவை.

♣ பெண்கள் கைகோத்தாடும் குரவைக் கூத்து துணுங்கைக் கூத்து, குணலைக் கூத்து போன்றவை இலக்கியங்களில் காணப்படும் கூத்து வகைகளாகும்.

♣ சிவன் ஆடுகின்ற கூத்து **தாண்டவம்** எனப்படும்.

♣ வைணவப் பெருமக்களும் திருமாலைக் குழலூதிக் கோபியருடன் ஆடும் கண்ணனாகப் போற்றினார்.

♣ இந்தியப் பெருநாட்டிற்கு பரதக்கலை ஒரு சிறந்த கொடை என்றால் மிகயாகாது.

♣ **விழாக்கள்:**

♣ தமிழ் மக்கள் உழைப்பே செல்வமாக கொண்டு வாழ்ந்தனர்.

AKM IAS & NEET ACADEMY

- தன் நிலத் தெய்வங்களை வணங்கி விழாக்கள் செய்தனர். உயிர்த்தொழிலாம் உழவுத்தொழில் செய்து மகிழ்ந்தனர். பயிர் வளர்வதற்கும் மழைக்கும் காரணமான சூரியனை வணங்கி விழா வெடுத்தனர்.
- சர்க்கரை பொங்கலிட்டு, கரும்பு வைத்துப் படையல் செய்து சூரியனை வழிபட்டனர்.
- உழவுக்கும் தொழிலுக்கும் உதவிய கால்நடைகளுக்கு நன்றி பாராட்டும் விழாவாக மறுநாள் மாட்டுப் பொங்கள் விழா கொண்டாடினர்.
- மேலும் இந்நாளில் “**மஞ்சுவிரட்டு, விற்போர்- மற்போர், வாள்போர்”** போன்ற வீர விளையாட்டுக்களை விளையாடி மகிழ்வர்.
- தொழில் செழிக்க உதவிய காவரியாற்றுக்கு விழா எடுத்தனர். ஆடிமாதம் 18-ஆம் நாள் ஆடிப்பெருக்காக கொண்டாடி, நாடும் வீடும் சிறக்க மேலும் அருளுமாறு வெண்டி வழிபட்டனர்.
- இத்தமிழர் பொங்கல் விழாவே வடக்கில் மகர சங்கராந்தியாகக் கொண்டாடப்படுகிறது.
- **ஜல்லிக்கட்டு:**
- பண்டைத் தமிழரின் வீரவிளையாட்டில் ஜல்லிக்கட்டும் ஒன்று. இதை அக்காலத்து ‘ஏறுதழுவல்’ என்பர்
- அடக்கமுடியாத காளைகளை அடக்கிப் பரிசாகப் பெண்களை மணப்பர் பண்டைத் தமிழர்.
- **இந்திர விழா**
- மருத நிலக்கடவுள் இந்திரன், இந்திரனை வழிபட்ட மக்கள் இந்திரன் கேளிக்கைகளில் மகிழ்ந்திருப்தைப் போலவே தாங்களும், மகிழ்ந்திருக்க விரும்பி, வசந்த காலத்தின் முழு நிலா நாளை இந்திர விழாவாகக் கொண்டாடி மகிழ்வர்.
- இவ்விழா முன்னும் பின்னுமாக 5, 6 நாட்கள் நடைபெறும். மக்கள் கேளிக்கைகளிலும் வீர விளையாட்டுக்களில் மகழ்ந்திருப்பதையே விரும்புவர்.
- இவ்விழா சங்ககாலத்தில் சிறந்திருந்தது என்பதை சிலப்பதிகாரம் மூலம் அறிகிறோம்.
- **பிற கொடைகள்:**
- **திருக்குறள்** : உலகப்பொதுமறையாம் திருக்குறள் தமிழர்களின் கொடையாகும்.
- **மருத்துவம்** : சித்த மருத்துவம் என்னும் மூலிகை மருத்துவத்தை உலகிற்கு வழங்கியவர்கள் தமிழர்கள்.
- **இசை** : தமிழிசை தமிழர்களின் பண்பட்ட உணர்விற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- **கப்பல் கட்டுமானம்** : பன்னெடுங்காலத்திற்கு முன்னரே கப்பல் கட்டுமானத்தையும், தொழில்நுட்பத்தையும் அறிந்திருந்தனர். தமிழர்கள் கப்பல் போக்குவரத்து தமிழர்கள் கண்ட தொழில்நுட்பமாகம்.
- **விருந்தோம்பல்:** பழந்தமிழர் விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.
- **நட்பு** : பழந்தமிழர் நட்பினை உயிரினும் மேலானதாய் மதித்துப் போற்றினர். உணர்ச்சியொத்து பழகுதலே நட்பு என்றனர்.
- **காதல் :** தமிழர் காதல் என்னும் சொல்லை அன்பு செலுத்துதல் முதலாய பல நிலைகளில் பயன்படுத்தினர்.
- **வீரம் :** பண்டைத் தமிழரின் வாழ்வு முறையே அவர்களது வீரம் செறிந்த வாழ்வு முறை எனலாம்.
- **மானம் :** “மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்” என்று தமிழர்கள் மானத்தை உயிரினும் மேலானதாய் போற்றினர்.
- **கற்பு** : கடவுள் நெறிக்கு மேலானதாய் பெண்கள் கற்பு நெறியில் வாழ்ந்து அழியாப் புகழ்பெற்றனர். இக்கடற்புடைமை தமிழரின் உயரிய ஒழுக்கம் நெறியாம்.
- **தமிழ்நாட்டில் உள்ள தொல் பழங்கால பாறை ஓவியங்கள்**
- கீழ்வலை- விழுப்புரம்
- உசிலம்பட்டி- மதுரை

- குமுதிபதி- கோவை
- மாவடைப்பு- கோவை
- பொறிவரை- கரிக்கையூர், நீலகிரி
- திராவிட மொழிகளுக்குள் மூத்த மொழியாய் இலங்கவ தமிழ்.
- எத்தகைய கால மாற்றத்திலும் எல்லாப் புதுமைகளுக்கும்ஈடுகொடுத்து இயங்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு.
- தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.
- முதலில் தம் எண்ணங்கள் மெய்ப்பாடுகள், சைகைகள், வேறுப்பட்ட ஓவியங்கள் முதலியவற்றின் மூலமாகப் பிறருக்கு தெரிவிக்க முயன்றனர்.
- மனித இனம் வாழ்ந்த இடஅமைப்பும் இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத் தூண்டின.
- இதனால் பல மொழிகள் உருவாயின. ஊலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில்மொழிக்குடும்பங்கள் பலவாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
- உலகின் குறிப்பிடத்தக்க, பழமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று.
- மொகஞ்சதாரோ- ஹரப்பா அகழாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.
- தமிழ் என்ற சொல்லிலிருந்துதான் திராவிடர் என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.
- ஹூராஸ் பாதிரியார் என்பார் இம்மாற்றத்தைத் தமிழ்
- -தமிழா- தமிலா- டிரமிலா- ட்டிமிலா- த்ராவிடா- திராவிட என்று விளக்குகின்றார்.
- **மொழிஆய்வு:**
- தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவானவை என்ற கருத்து அறிஞர் பலரிடையே நிலவி வந்தது.
- இம்மொழிகளில் வடமொழிச் சொற்கள் மிகுந்து காணப்பட்டதால் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் வடமொழியே மூலம் எனவும் அறிஞர்கள் கருதினர்.
- 1816ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப், ராஸ்க், கிரிம் முதலானோராலும் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- முதன்முதலில் **பிரான்சிஸ் எல்லிஸ்** என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியோரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார்.
- இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் **தென்னிந்திய மொழிகள்** எனவும் பெயரிட்டார்.
- இதனையொட்டி, மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- ஹோக்கன் என்பார் இம்மொழிகள் அனைத்தையும் இணைத்துத் **தமிழியன்** என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை என்று கருதினர்.
- மாக்ஸ் முல்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார்.
- 1856ல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல், திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்கு செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

♣ கால்டுவெலுக்குப் பின்னர் ஸ்டென்கனோ, கே.வி. சுப்பபையா, எல்.வி. இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரானோவ், தெ.பொ. மீனாட்சிசுந்தரம் முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில்குறிப்பிடத்தக்கவர்கள்.

♣ **திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள்:**

♣ சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும்.

♣ திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

♣ **சான்று:**

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, குடகு |
| ∴கன் | குரூக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

♣ திராவிட மொழிகளில் எண்ணுப் பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன.

| | |
|---|---|
| மூன்று | தமிழ் |
| மூணு | மலையாளம் |
| மூடு | தெலுங்கு |
| மூரு | கன்னடம் |
| மூஜி | துளு |

♣ **குறில், நெடில் வேறுபாடு:**

♣ திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

♣ அடி- குறில் வளி- குறில்

♣ ஆடி- நெடில் வாளி- நெடில்

♣ **பால்பாகுபாடு:**

♣ திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால் வடமொழியில் இவ்வாறு அமையவில்லை.

♣ இம்மொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும் கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன.

♣ ஜெர்மன் மொழியிலும்இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது.

♣ முகத்தின் பகுதிகளான வாய், மூக்கு, கண் ஆகியவை வேறுவேறு பால்களாகச் சுட்டப்படுகின்றன.

♣ வாய்- ஆண்பால், மூக்கு-பெண்பால், கண்-பொதுப்பால் எனப் பகுக்கும் நிலை உள்ளது.

♣ திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணைஒருமையில் காணப்படுகிறது.

♣ அ∴றிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை.

♣ தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர். (எ.கா. கடுவன்- மந்தி; களிறு-பிடி)

♣ **வினைச்சொற்கள்:**

♣ ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொற்கள் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால் எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை.

♣ திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

♣ **எ.கா. :** வந்தான்- உயர்திணை ஆண்பால் ஒருமை

♣ இவ்வியல்புக்கு மாறாக **மலையாள மொழி** மட்டுமே அமைந்துள்ளது.

♣ அம்மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பாலறி கிளவிகள் இல்லை.

♣ தனிச் சொற்களாலேயே ஆண், பெண், பகுப்பை அறிந்து கொள்ள முடியும்.

♣ இவ்வாறு திராவிட மொழிகள் சில பொதுப்பண்புகளைப் பெற்றிருந்தாலும் அவற்றுள் தமிழுக்கென்று சில சிறப்புக் கூறுகளும் தனித்தன்மைகளும் உள்ளன.

♣ **தமிழின் தனித்தன்மைகள்:**

♣ தொன்மையும் இலக்கண இலக்கியவளமும் உடையது தமிழ் மொழியாகும்.

♣ இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென் ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் பெசப்படும் பெருமையுடையது தமிழ்மொழி.

♣ ஏனைய திராவிட மொழிகளை விடவும்தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.

♣ தமிழ்மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

♣ ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.

♣ இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலனவை தமிழிலேயே அமைந்துள்ளன.

♣ தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

♣ திராவிட மொழிக் குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.

♣ தமிழ்மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது. அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

♣ **தமிழ் வரிவடிவ வளர்ச்சி:**

♣ தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை **ஓவியா எழுத்து** என்பர்.

♣ ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

♣ **தமிழ் எழுத்துகள்:**

♣ காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

♣ தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது. கல்வெட்டுகள் பொ. ஆ, மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

செப்பேடுகள் பொ.ஆ.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட:டகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.

♣ வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும். தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம் ஆகும். சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன.

♣ முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகள் பழைய தமிழெழுத்துகளில் காணப்படுகின்றன.

♣ கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன. இதனைக் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் **கண்ணெழுத்து படுத்த எண்ணும் பல்பொதி** (சிலம்பு5 : 12) என்னும் தொடரால் அறியலாம்

♣ **கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளின் அமைப்பு:**

♣ **'ஸ'** எனும் வட எழுத்து காணப்படுகிறது.

♣ மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை.

♣ **'எ'** கர, **'ஒ'** கரக் குறில் நெடில் வேறுபாடில்லை.

♣ **வரிவடிவ வளர்ச்சி:**

♣ எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைகின்றன.

♣ பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். அந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன. பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்கோடுகள் பயன்படுத்தப்பட்டன. ஓலைகளில் நேர்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர். சில எழுத்துகளை அழகபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவையே நிலையான வடிவங்களாக அமைந்துவிட்டன.

♣ **பெரியார் எழுத்துச் சீர்திருத்தம்:**

♣ இருபதாம் நூற்றாண்டுவரை ணா, றா, னா ஆகிய எழுத்துகளை என் எழுதினர். அதே போல ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளை என எழுதினர்.

♣ இவற்றை அச்சுக் கோப்பதற்காக இவ்வெழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட்ட வேண்டியிருந்தது. இக்குறைகளை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார். அவரது எழுத்துச் சீர்திருத்தங்கள் சில ஏற்கப்பட்டுத் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

♣ காலந்தோறும் ஏற்பட்ட இவ்வாறான வரிவடிவ வளர்ச்சி காரணமாகத் தமிழ் மொழியைப் பிற மொழியினரும் எளிதில் கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது, தமிழ்மொழி கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாகவும் ஆகியிருக்கிறது.

♣ **சங்கம் மருவியகாலம்:**

♣ சங்ககால வீழ்ச்சியும் களப்பிரர் கால எழுச்சியும் சந்தித்துக் கொண்ட காலகட்டமே சங்கம் மருவிய காலம் என்று கூறப்படுகிறது.

♣ இத்தழுவல் நிகழ்ந்த காலத்தை நிலை மாறுபாட்டுக் காலம் (Transitional State) ஆகும்

♣ இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையில் சங்கம் மருவிய காலத்து வாழ்வியல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

♣ சங்கம் மருவிய காலத்தைக் களப்பிரர் காலம் என்று கூறுவதுண்டு.

♣ **சங்கம் மருவிய காலத் தமிழ்நாடு:**

♣ சங்கம் மருவிய காலத்தில் அரசியல் அமைப்பில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் கோலோச்சிக் கொண்டிருந்தனர். குறுநில மன்னர்களும் சுயேட்டையாக ஆட்சி செய்து கொண்டிருந்தனர்.

♣ பூம்புகாரும், வஞ்சியும், கொற்கையும்,உறையூரும், மதுரையும் வளமிக்க துறைமுகங்களாகவும், துறைமுகப் பட்டினங்களாகவும் நவநாகரிக நகரங்களாகவும் திகழந்தன. வாணிகப் பொருளாதாரத்தில் பணப்புழக்கம் பெருகியது.

♣ பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரம்மதேய கிராமங்களில் நிலச் சொந்தக்காரர்களாக இருந்து மண்ணின் மைந்தர்கள் குத்தகைதாரர்களாகவும், உழவர்களாகவும், உழைப்பாளிகளாகவும் மாற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

♣ **சமுதாய நிலை:**

♣ சங்கம் மருவிய காலத்தில் சாதியைச் சுற்றி சமுதாயம் சுழலத் துவங்கியது. படிமுறை சாதிமுறை (Hirarchical Caste System) வெளிப்படையாகத் தெரியலாயிற்று

♣ வருண -வைதிக- வேத- பிராமண சாதியினர், உயர் சாதி, கீழ்ச் சாதி என்று சாதி வேறுபாட்டைத் தோற்றுவித்தது.

♣ **சமய நிலை:**

♣ சங்கம் மருவிய காலத்தில் புத்த மதமும், சமண மதமும், செல்வாக்கு பெற்றன, அருகக் கோட்டங்களும், புத்த விகாரங்களும் பெருகின.

♣ அதேபோன்று வேத வைதீக பிராமணர்களின் வேள்விகள் நடத்தும் பழக்கமும் இருந்தது. சிவன் கொயில்களும், வைணவ ஆலயங்களும் அதிகரித்தன. சமயப் பிரச்சாரப் போட்டிகள் தங்கு தடையின்றி நடைபெற்றன.

♣ சமயச் சார்பற்ற நோக்குக்குப் பதில் சமயம் சார்ந்த கண்ணோட்டம் சமூக அங்கீகாரம் பெற்றது.

♣ **சங்கம் மருவிய கால இலக்கியம்:**

♣ **செல்வியல் சங்ககாலம்:**

♣ செவ்வியல் சங்ககாலம் (Classical Sangam Age) கி.பி. 250 இல் முடிவுக்கு வந்ததாகக் கருதப்படுகிறது. சங்க காலத்துக்கும் பேரரசுப் பல்லவா் காலத்துத் துவக்கத்துக்கும் (கி.பி. 575) இடைப்பட்ட காலம் சங்கம் மருவிய காலம் என்று கருதப்படுகிறது.

♣ சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்கள் தோன்றிய காலம் சங்ககாலத்தின் நீட்சியேயாகும்.

♣ **“களப்பரா் காலத்துக்கு முந்தியதும் சங்ககாலத்தின் மருங்கில்**

♣ **நிலவியதுமான காலத்தை ஈண்டு சங்கம் மருவிய காலம்”** என்று வரையறுத்துள்ளார் வே. தி. செல்வம்.

♣ **காப்பிய காலம்:**

♣ சிலப்பதிகாரமும் மணிமேகலையும் படைக்கப்பட்ட காலம் காப்பிய காலமாகும். சங்கம் மருவிய காப்பிய கால இலக்கித்தோடு ஒப்பிட்டுப் பார்க்க சங்கம் மருவிய காலம் உதவி செய்கிறது.

♣ **மறுமலர்ச்சி இலக்கியம்:**

♣ இருண்ட காலம் என்று கருதப்பட்ட களப்பிரா் காலத்தில்தான் தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி பெற்றது. இலக்கிய வளர்ச்சியின் உச்சக்கட்த்தை எட்டியது.

♣ ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குக் கிறித்துவ சமயமும், காட்டுமிராண்டிகளின் தாக்குதல்களுமே பிரதான காரங்கள் என்று கூறுபவர் கிப்பன்.

♣ களப்பிரா்களைக் காட்டுமிராண்டிகளாக்கி அவா்களே சங்க காலத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று கூறுவது பிரச்சினையே எதிர்கொள்ளாமல் ஒதுங்கி போவதற்குச் சமமாகும்.

♣ சங்ககாலத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

♣ **அரசியல் காரணங்கள்:**

♣ மன்னராட்சி முறையில் வாரிசுரிமை பற்றிய தெளிவின்மை, வாரிசுகளிடையே பொறாமைப் போட்டியை வளர்த்தது. அரச குடும்பத்தினரின் அரசியல் குறுக்கீடுகளும், ஆடம்பரச் செலவுகளும் ஆட்சியைப் பலவீனப்படுத்தின.

♣ **பொருளாதாரக் காரணங்கள்:**

♣ சங்ககாலத் திணைப் பொருளாதாரத்தில், நிலம் பொது உடைமையாய் இருந்தது. உழுது உழைத்தோர் தனி உடைமைத் தளையின்றி சுதந்திரமாக, தன்னிறைவோடு வாழ்ந்தனர்.

♣ பின்னர் ஏற்பட்ட நிலவுடைமைப் பொருளாதாரம் சுயநலத்தையும் சுரண்டல் மனப்போக்கையும் வளர்த்துவிட்டது. நிலக்கிழார்கள் நிலமற்றோரின் உழைப்பில் வாழந்தனர்.

♣ **சமுதாயக் காரணங்கள்:**

♣ வெளியிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து குடியேறியோரின் சமுதாய நிலைப்பாட்டால் தமிழ்க் குல சமுதாங்களுக்கிடையேயான சமநிலையும், சகவாழ்வும், விட்டுக் கொடுத்து வாழும் நிலையும் மாறிப்போயிற்று.

♣ குறிப்பாக வேத வைதீக சாதி வேற்றுமை தமிழர்களின் சமுதாய ஒற்றுமையைச் சீர் குலைத்து விட்டது. உயர்சாதி, கிழ்ச்சாதி வேறுபாடு வேரூன்றியது.

♣ **சமயக் காரணங்கள்:**

♣ சங்க கால சமுதாயம் சமயம் சாரா சமூகமாக இருந்தது. மன்னர்களும் அவர்களது சமய நம்பிக்கையை மக்கள்மீது திணிக்க வில்லை. மன்னர்களும், மக்களும் மத உரிமையை மதித்தனர். இவர்களது சமயம் சாராப் பொதுநோக்கு வியப்புக்குரியது.

♣ ஆனால் வடக்கிலிருந்து வந்த வேத வைதீக பிராமண சமயமும், பௌத்த சமண சமயங்களும் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு தமிழ்நாட்டின் சமயப் பொதுப் பார்வையைக் குருடாக்கி விட்டது.

♣ தமிழர்கள் சமயங்களின் வழிப் பிரிந்தனர். தமிழர்களின் இயற்கை சார்ந்த சமயம், வேத வைதீகப் பிராமண சமயமும், பௌத்த சமண சமயங்களும் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு தமிழ்நாட்டின் சமயப் பொதுப் பார்வையைக் குருடாக்கிவிட்டது.

♣ **கலாச்சார காரணங்கள்:**

♣ சங்ககாலச் சமுதாயத்தில் ஏற்பட்ட பொருளாதார, சமூக, சமய மாற்றங்கள் மக்களின் கலாச்சாரத்தையும் பாதித்தன. இம்மாற்றங்களுக்கு முதலில் பலியானது கல்விதான்.

♣ சங்ககாலத் தமிழ்நாட்டில் **'கற்றலின் வாய்ந்த பிறப்பில்லை'** என்று கருதப்பட்டது.

♣ நூல், அரசன், ஆசிரியன், தாய், தந்தை ஆகிய ஐவரும் ஐங்குரவர் என்று கருதப்பட்டனர். திண்ணைப் பள்ளிகளாயினும் கல்வி அனைவருக்கும் பொதுவாக இருந்தது.

♣ ஆனால் இந்நிலை ஆரிய அந்தணர், பௌத்தர்கள், சமணர்கள் வந்த பின்னர் அடியோடு மாறிப்போயிற்று! மக்களுக்கு வேதக் கல்வியும், பௌத்தக் கல்வியும், சமணக் கல்வியும் கற்பிக்கப்பட்டன.

♣ சைவ இலக்கியம், பௌத்த இலக்கியம், சமண இலக்கியம் என்று ஒரு புதிய இலக்கிய சாதி உருவாக்கப்பட்டது. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சமய இலக்கியங்களாகச் சித்திரிக்கப்பட்டன.

♣ சிலப்பதிகாரக் காலத்தில் சமயத்தோடு சாதியும் கைகோர்த்துக் கொண்டது. **"நால்வகை வருணத்து அடங்காத்தம்பலை"** என்ற சிலப்பதிகார சொற்றொடர் இதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

♣ சங்ககாலப் பரத்தையர், சிலப்பதிகாரக் காலக் கணிகையர் ஆயினர். மூதவி ஒரு விதிவிலக்காகக் காட்டப்பட்டார்.

♣ சுருக்கமாகச் சொன்னால், காப்பிய காலத்தில் கலாச்சார சீரழிவு அதன் உச்சகட்டத்தை எட்டியது எனலாம்.

AKM IAS & NEET ACADEMY

- ♣ அரசியல், பொருளாதார, சமுதாய, சமய, கலாச்சார சீர்கேடுகள் களப்பிரர் எளிமையாகத் தமிழ் நாட்டின் மீது படையெடுத்து, கைப்பற்றுவதற்கான களத்தை ஏற்படுத்திக் கொடுத்தன.
- ♣ களப்பிரர் பற்றிய வரலாற்றுச் சான்றுகள்
- ♣ 1. இலக்கிய சான்றுகள்
- ♣ 2. செப்பேட்டுச் சான்றுகள்
- ♣ 3. கல்வெட்டுச் சான்றுகள்
- ♣ **இலக்கியச் சான்றுகள்:**
- ♣ புத்ததத்தர் பாலி மொழியில் எழுதிய **விநயவிநிச்சயம்** என்ற நூல் பிரதான இலக்கியச் சான்றாகக் கருதப்படுகிறது.
- ♣ இவர் இந்நூலில் களப்பக் குலத்தைச் சேர்ந்த அச்சுத விக்கிரமன் என்ற மன்னன் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகரமாகக் கொண்டு சோழ நாட்டை ஆட்சி செய்தார் என்ற அரிய தகவலைத் தந்துள்ளார்.
- ♣ மேலும் புத்ததத்தர் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தனது நூலை எழுதி முடித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அச்சுதவிக்கிரமன், சேர, சோழ, பாண்டிய மன்னர்களைத் தோற்கடித்து, சிறைப்பிடித்து வைத்ததாக இலக்கிய மரபும் உள்ளது.
- ♣ களப்பிரர் காலத்தில்தான் பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் படைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்நூலாசிரியர்களை சமணர்கள் எனக் கருதி களப்பிரர் காலத்தைக் கணிக்க முற்படுகின்றனர்.
- ♣ தமிழ் நாவலர் சரிதை, அமிதசாகரரின் யாப்பருங்கலம், சேக்கிழாரின் பெரிய புராணம் ஆகியவை களப்பிரர்களைப் பற்றிய தகவல்களைத் தருகின்றன.
- ♣ **செப்பேட்டுச் சான்றுகள்:**
- ♣ காசக்குடி, கொற்றமங்கலம், வேள்விக்குடி, தளவாய்புரம், தகடூர்ச் செப்பேடுகள் களப்பிரர் பற்றிய குறிப்புகளைக் கொடுக்கின்றன. இவற்றுள் **வேள்விக்குடி செப்பேடு** வரலாற்று முக்கியத்துவமுடையது.
- ♣ **கல்வெட்டுச் சான்றுகள்:**
- ♣ கல்வெட்டுகளில் திருப்புகலூர் கல்வெட்டுகள், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டுகள், செந்தலை கல்வெட்டுகள் முக்கியமானவை. இவை களப்பிரர் பற்றிய செய்திகளைக் கொடுக்கின்றன.
- ♣ **செந்தலை கல்வெட்டு** முத்தரையர் மரபு முறை பற்றித் தெரிந்து கொள்ளப் பயன்படுகிறது.
- ♣ வேள்விக்குடி செப்பேட்டில் மட்டும் களப்பிரர் பற்றிய தகவல்கள் உள்ளன. இத்தகவல்களும் ஒருசார்புடையனவாகவே உள்ளன.
- ♣ **வேள்விக்குடி செப்பேடு:**
- ♣ வேள்விக்குடி செப்பேடு பாண்டியன் சடையவர்மன் பராந்தகன் நெடுஞ்சடையன் (பொ.ஆ. 765-790) ஆட்சிக் காலத்தில் தரப்பட்டது.
- ♣ இச்செப்பேட்டில் சங்க காலத்துப் பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி, வேள்வி செய்து, கொற்கைக் கிழான் நற்கொன்றன் என்ற அந்தணனுக்கு வேள்விக்குடியைத் தானமாகக் கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளது.
- ♣ சங்க காலத்து நற்கொன்றனின் வழிவந்த நற்சிங்கன் என்ற அந்தணன், களப்பிர மன்னன் வேள்விக்குடியை திரும்பப் பெற்றுக் கொண்டதாக பராந்தகன் நெடுஞ்செழியனிடம் முறையிடுகிறான்.
- ♣ அம்முறையீட்டைக் கேட்ட பாண்டிய மன்னன் களப்பிர அரசனைத் தோற்கடித்து, வேள்விக்குடியை மீட்டு நற்சிங்கனிடம் பிரம்மதேயமாக ஒப்படைக்கிறார்.
- ♣ சதாசிவப் பண்டாரத்தார் எழுதியுள்ள **பாண்டியர் வரலாறு (1958)** என்ற புத்தகத்தில் இச்செப்பேடு இடம் பெற்றுள்ளது.
- ♣ **களப்பிரர் பற்றிய கோட்பாடுகள்:**

♣ **பெயர்க் காரணம்:**

♣ சங்கம் என்ற சொல்லைப் போன்றே களப்பிரர் என்ற சொல்லும் சமஸ்கிருதச் சொல்லாகும்.

♣ கள்வர், களவர் அகிய சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றனவெயன்றி களப்பிரர் என்ற சொல் சங்க இலக்கியத்தில் கையாளப்படவில்லை.

♣ புத்ததத்தரின் விநயவிநீச்சம் என்ற பாலி மொழியில் எழுதப்பட்ட நூலில் களப்பக்குலம் என்ற குறிப்பு தெளிவாக உள்ளது.

♣ குறிப்பாக, களப்பிரன் என்ற கவியரசன் என்ற சொற்றொடர் வேள்விக்குடி செப்பேட்டில் தெளிவாகச் குறிப்பிடப்பட்டுள்ளது.

♣ செந்தலைக் கல்வெட்டு இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையாரை கல்வரக் காவலன் என்று குறிப்பிடுகிறது.

♣ சுருங்கக்கூறின், **'களப்ரா'** என்ற வடசொல்லே கள்வரா-களப்பிரர் என்று மருவி வந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

♣ **காலவரன்முறை:**

♣ இன்றைய நிலையில் கிடைக்கக்கூடிய சான்றுகளைக் கொண்டு களப்பிரர் கால வரலாற்று வரன்முறை (Chronology) செய்வது இயலாத காரியம்.

♣ புத்ததேவர் வாழ்ந்த காலம் பொ.ஆ. 450 என்று கூறப்படுகிறது.

♣ களப்பிரரின் அழிவுக்குக் காரணமாகக் கருதப்படும் பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணு வாழ்ந்த காலம் பொ. ஆ. 560-580 என்றும், பாண்டிய மன்னன் கமுங்கோனின் ஆட்சிக் காலம் பொ. ஆ. 575-600 என்றும் கூறப்படுகிறது.

♣ எனவே, சங்க காலம் முடிவுற்றபின் பொ. ஆ. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பொ. ஆ. ஆறாம் நூற்றாண்டு வரையிலான மூன்றாம் நூற்றாண்டுகளைக் களப்பிரர் காலம் எனக் கருதலாம்.

♣

♣ **களப்பிரர் யார்?**

♣ களப்பிரர் வெளி நாட்டவர் என்பதற்கான எந்தக் குறிப்பும் கிடைக்காமையால் இவர்கள் உள்நாட்டவரா? அல்லது அண்டை நாட்டவரா? ஏன்பதைக் கண்டறிய வேண்டியுள்ளது.

♣ இதுபற்றி ஆய்வு செய்தவர்கள் களப்பிரர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று ஒர சாராரும், அண்டை நாட்டவர் என்று மற்றொரு சாராரும் கருதுகின்றனர்.

♣ **முத்துரையர்கள்:**

♣ பல்லவர்களிடையேயும், பாண்டியர்களிடையேயும் பணியாற்றிய முத்தரையர் மரபினரே களப்பிரர்கள் என்று கூறப்படுகிறது.

♣ கொடும்பாளுர் முத்தரையரே களப்பிரர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றனர். இக்கோட்பாட்டிற்கு இவர்கள் கூறும் காரணம் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் **'கள்வன் காவலன்', 'களப்பிரர் காவலன்'** என்ற பட்டப்பெயர் பெற்றிருந்தார் என்பதாகும்.

♣ எனினும், களப்பிரரில் ஒரு பிரிவினரே முத்தரையர் என்பதை ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்தியுள்ளார் எம். எஸ். கோவிந்த சாமி.

♣ **கொள்ளைக் கூட்டத்தார்:**

♣ தமிழ் நாவலர் சரிதை களப்பிரரை கொள்ளைக் கூட்டத்தாராக சித்திரிக்கிறது. இவர்களது தலைவன் களப்பாளன் மூவேந்தரைத் தோற்கடித்து. சிறைப்பிடித்து, தன்னைப் புகழ்ந்து பாடச் செல்லியதாகவும, அவ்வாறே அவர்கள் பாடியதாகவும், அதன்பின் தில்லை நடராசர் களப்பாளனுக்கு முடி சூட்டியதாகவும் புராணச் செய்தி கூறுகின்றது.

♣ **கங்கர்கள்:**

♣ களப்பிரர், கங்கர்களே (Gangas) என்றும் கூறப்படுகிறது. இவர்கள் பொ. ஆ. நான்காம் நூற்றாண்டில் மைசூரின் பெரும் பகுதியை உள்ளடக்கிய கங்க நாட்டைத் தோற்றுவித்தனர்.

♣ தண்டிகா என்ற கொங்கணவர்மன் இந்நாட்டை உருவாக்கினார். தமிழ் நாட்டைத் தாக்கிக் கைப்பற்றியவர்கள் கங்கர்களே என்று கூறப்படுகிறது.

♣ இக்கூற்றுக்குக் காரணமாக கங்கரும், களப்பிரரும் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தனர்.

♣ **குறவர்கள்:**

♣ தமிழ்நாட்டுக் குறவர்கள் வேங்கட மலைக்குக் குடியேறி, யானைகளைப் பிடித்துப் பழக்கி, மலைப் பாம்புகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். இவர்களே களப்பிரர் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். **'குறயா'** என்பதன் மருவலே களப்பிரர் என்பர்.

♣ **கர்நாடகத்தவர்:**

♣ கர்நாடகக் கல்வெட்டுகளில் கலிகுலன், கலிதேவன் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. மேலும் கர்நாடக மன்னன் ஒருவன் பாண்டியந ாட்டை ஆட்சி செய்ததாகவும் அவரது ஆட்சிக் காலத்தில் சைவம் அழிந்து சமணம் செழித்தது என்றும் பெரிய புராணத்தில் குறிப்பு உள்ளது. எனவே, களப்பிரர்கள் கர்நாடகப் பகுதியிலிருந்து தமிழ்நாட்டுக்குக் குடி பெயர்ந்தவர்களே என்று கூறப்படுகிறது.

♣ **களப்பிரர் ஆட்சி:**

♣ **அச்சுதவிக்கிரமன்:**

♣ களப்பிரரில் சிந்தனைத் தெளிவும், செயல் விவேகமும் மிக்கவர் அச்சுத் விக்கரமன், தமிழ்நாட்டை ஆட்சி செய்த சேர, சோழ, ஆட்சிக் குடையின் கீழ்க் கொண்டு வந்தார்.

♣ முப்பெரும் மன்னர்கள், பல குறுநில மன்னர்களின் கீழ் பிரிவு பட்டு, சிதறிக்கிடந்த தமிழகத்தை ஒரு ஆட்சிக்கு உட்படுத்தினார்.

♣ தமிழ் மன்னர்களின் சின்னங்களான வில், புலி, கயல் ஆகியவற்றை தனது கொடியில் பொறித்துக் கொண்டார்.

♣ அச்சுத விக்கிரமன் ஒன்றுபடுத்தப்பட்ட தமிழகத்தின் தனிப் பெரும் தலைவராகத் திகழ்ந்தார்.

♣ **புத்தமதப் புரவலர்:**

♣ அச்சுத விக்கிரமன் பத்ததத்தரின் புரவலர். புத்ததத்தர் உரகபுரா என்ற ஊரில் வாழ்ந்தவர். தெரவாடின் பத்த சமயத்தின் தன்னிகரற்ற தத்துவர், உரையாசிரியர், சோழ நாட்டில் புத்த மங்களகாமம் என்ற இடத்தில் அமைந்திருந்த புத்த மடத்தில் தங்கி அவரது நூல்களை எழுதினார்.

♣ இவர் வினய விளிச்சயா, உத்தர வினிச்சயா, அபிதம்ம யாத்திரை, ரூபரூப விபகா, மதுரவிலாசம். ஜீவியலங்காரம் ஆகிய நூல்களைப் பாலி மொழியில் எழுதினர்.

♣ புத்தகோசர் என்ற மற்றொரு புத்த மேதை தமிழகத்தில் வாழ்ந்த புத்ததத்தரின் சமகாலத்தவர் என்று கூறப்படுகிறது. புத்ததத்தரின் அபிதம்மயாத்திரை என்ற நூல் அச்சுத் விக்கிரமனின் அவைக்களத்தில் அரங்கேற்றப்பட்டது.

♣ **சமண மத்தின் செல்வாக்கு:**

♣ அச்சுத் விக்கிரமனின் ஆட்சிக் காலத்தில் புத்த, சமண சமயங்கள் தமிழ் நாட்டில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றன.

♣ அச்சுதவிக்கிரமன் பாலி மொழியை ஆதரித்ததைப் போன்று தமிழ் இலக்கியத்தையும் ஊக்குவித்தார்.

♣ **பொருளாதார நிலை:**

♣ அந்தணர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வந்த, இறையிலி நிலங்கள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டு உழவர்களிடம் ஒப்படைக்கப்ட்டன.

♣ தனிநபர் இறையிலியாக இருந்து வேள்விக்குடி கிராமம் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

♣ இதேபோன்று தேவதான கிராமங்களும் முறைகேடாகக் கையகப்படுத்தப்பட்ட கிராமங்களும் மீட்கப்பட்டன. இவற்றின் விளைவாக நில உரிமையில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டது.

♣ வேளாண்மைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

♣ இதே போன்று தலைநகர் காவிரிப்பூம்பட்டினம் வர்த்தக, வணிக மையமாகத் திகழ்ந்தது. அதேபோன்று மதுரை, வஞ்சி, காஞ்சி ஆகிய நகரங்களும் செல்வச் செழிப்புடன் இருந்தன.

♣ **சமுதயா நிலை:**

♣ களப்பிரர் காலத்தில் தமிழ் நாட்டில் சாதிய அநீதிகளும், களையப்பட்டன. உயர்சாதி-கீழ்ச்சாதி என்ற சாதிப்பாகுபாடு அடியோடு அகற்றப்பட்டது.

♣ புத்த, சமணத் துறவிகள் அடித்தட்டு மக்களோடு பழகி, அவர்கள் பேசிய மொழி மூலம் தொடர்பு கோண்டு, சமத்துவ சமுதாயம் ஏற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

♣ சாதி வேற்றுமைகளைக் களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

♣ திருமூலர் போன்ற சித்தர்கள் இச்சமூக சீர்திருத்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்தனர்.

♣ **சமய நிலை:**

♣ வேத- வைதீக சமயம் செல்வாக்கு இழந்தது. அதற்குப் பதிலாக புத்த, சமண சமயங்கள் செல்வாக்கு பெற்றன.

♣ புத்த, சமணத் துறவிகள் தமிழ் நாடெங்கு சமயப் பிரச்சாரம் மேற்கொண்டனர், பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இப்புறச் சமயங்களைத் தழுவினர்.

♣ சுருங்கக்கூறின், தமிழ் நாட்டில் அரசாங்க ஆதரவுடன் புத்த சமண, நாத்திகவாதிகளின் கை மேலோங்கியது. பல கடவுளர்க்குப் பதில், '**ஒன்றே குலம் ஒருவனே கடவுள்**' என்ற ஒரு கடவுள் கொள்கை செல்வாக்கு பெற்றது.

♣ **கல்வி நிலை:**

♣ நூற்றுக்கணக்கான புத்த, சமணப் பள்ளிகள் திறக்கப்பட்டன. இப்பள்ளிகளை புத்த, சமணத் துறுவிகள் நடத்தினர். **கடிகாக்கள்** என்று அழைக்கப்பட்ட இக்கடிகைப் பள்ளிகளில் சாதி, சமய, நிற, குல வேறுபாடுகளின்றி அனைத்துப் பிரிவு மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

♣ திருப்பாதிரிப்புலியூரில் செயல்பட்ட சமணப் பள்ளி இப்புரட்சியின் நிலைக்களமாகத் திகழ்ந்தது.

♣ புத்த, தத்தர், புத்தகோசர், போதிதர்மர், தர்மபாலர், தின்னகர், சர்வநந்தி, வஜ்ரநந்தி போன்ற பிரபல சமணத் துறவிகள் இக்கல்விப் புரட்சியின் தூண்களாகத் திகழ்ந்தனர்.

♣ காஞ்சியில் பிறந்த போதிதர்மருக்குச் சீனாவிலும், ஜப்பானினும் நினைவுக் கோயில்கள் எழுப்பப்பட்டன.

♣ **தின்னகர்** பெரும் புகழ் பெற்ற தர்க்க நிபுணராவார், இவருடைய நூல்கள் நாளந்தா பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களாகப் பயன்பட்டன.

♣ **மொழி நிலை:**

♣ தமிழ் பயிற்று மொழியாக இருந்ததைப் போன்று பிராகிருதம் இலக்கிய மொழியாக இருந்தது.

♣ பிராகிருத மொழிக்கு இணையாகப் பாலி மொழியம் பிரபலமடைந்தது. அதேபோன்று சமஸ்கிருதமும் இலக்கிய மொழியாயிற்று

♣ களப்பிரர் காலத்தில் இயற்றப்பட்ட கீழ்க்கணக்கு நூல்களும், பிற அற நூல்களும் தமிழ் மொழியிலேயே இயற்றப்பட்டன.

♣ **இலக்கியம்:**

♣ களப்பிரர் காலம் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு நூல்களும், கூறலாம். புதினென் கீழ்கணக்கு நூல்களில் மிகப் பெரும்பான்மையானவை களப்பிரர் காலத்தில் இயற்றப்பட்டவை.



AKM IAS & NEET ACADEMY

♣ **பிறமொழி இலக்கியம்:**

♣ களப்பிரர் காலத்தில் **பிராகிருதம், சமஸ்கிருதம்** மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தன.

♣ திருப்பாதிர்புலியூரிலிருந்து **சர்வநந்தி** எனும் சமணர் லோக வியாபகம் என்ற நூலை சமஸ்திருதத்தில் மொழி பெயர்த்தார்.

♣ திருப்பருத்திக்குன்றத்தில் வாழ்ந்த சமணத் துறவி சமண சமயப் பணிக்காக மதுரையில் மதுரை திராவிட (திரமிள) சங்கத்தைத் தோற்றுவித்தார்.

♣ **சித்தர்கள்:**

♣ களப்பிரர் காலத்தில் சித்தர்கள் விளங்கினர்.

♣ குன்றுகளே அவர்கள் வாழ்ந்த ஞானக்கோயில்கள். மருத்துவ ஆராய்ச்சியே அவர்களது பிரதானத் தொழிலாக இருந்தது.

♣ இவர்களது மருத்துவ முறையே பின்னர் சமுதாய சமய சீர்திருத்தத்தின் முன்னோடிகள். குறிப்பாக இவர்கள் சாதி முறைக்கு எதிரானவர்கள்.

♣ களப்பிரர் காலச் சித்தர்களுள் முன்னிலை வகிப்பவர் திருமூலர் என்று கருதப்படுகிறார். ஆயினும் இவர் வாழ்ந்த காலத்தைப் பற்றிய கருத்து வேறுபாடு உள்ளது.

♣ ஆரோக்கியமானது உடலும், மனமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை என்பது திருமூலரின் அசைக்க முடியாத வாதம்.

♣ காற்று (வாதம்), நெருப்பு (பித்தம்), நீர் (சிலேத்துமம்) ஆகியவற்றை சரிவிகிதத்தில் பொருத்தி அனைத்து நோய்களையும் உடலை நெருங்காமல் தடுக்க இயலும் என்றார். **'உடம்மை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே'** என்பது திருமூலரின் தீர்க்கமான முடிவு.

♣ **முக்கிய சித்தர்கள்:**

♣ **1. சிவ வாக்கியார்:**

♣ 'சிவ வாக்கியார்' காரணப் பெயர். இவர் தனது பல பாடல்களில் சிவாயமே என்ற சொல்லை இறுதிச் சீராகப் பாடியுள்ளமையால் சிவ வாக்கியர் என்ற பெயரைப் பெற்றார்.

♣ இவர் சித்தர்களில் மூத்தவர். ஆதி சித்தர், சித்தர்களுக்கு எல்லாம் சித்தர், பெரியார்களுக்குப் பெரியார், பகுத்தறிவாளர், சமூக நீதிக்காகப் போராடியவர்.

♣ **2. அழுகுணி சித்தர்:**

♣ இவரும் அழுது பிறரையும் அழ வைப்பதால் இவருக்கு இப்பெயர் வரவில்லை. மாறாக பிறரது கண்ணீரைத் துடைப்பதற்காகப் பாடியவர். இவரது பாடல்களின் சிறப்பு ஒவ்வொரு கண்ணி முடிவிலும் **"கண்ணம்மா"** என்று அழைத்துப்பாடுகிறார்.

♣ தன்னை சிவமாகக் கற்பித்துக் கொண்டு பராசக்தியைக் காலிப்பதாகப் பாடுகிறார். மனித வாழ்வின் நிலையாமையை நினைவூட்டுகிறார்.

♣ **3. கடுவெளிச் சித்தர்:**

♣ இவர் பரந்த வெளியில் தியானம் செய்து சித்தி பெற்றவர். இவரது பாடல்கள் நீதியை மையமாகக் கொண்டு பாடப்படுள்ளன. மனிதன் மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமென்கிறார். 'ஆனந்தக் களிப்பு' பாடல்களைப் பாடியவர்.

♣ **4. குதம்பைச் சித்தர்:**

♣ **'குதம்பை'** என்பது சிறுமியர் அணிந்து கொள்ளும் ஒரு காதணி. இவரது பாடல்களில் 'குதம்பாய்' என்ற சொல் வருவதால் குதம்பைச் சித்தர் என்று பெயர் பெற்றார். இச்சித்தரின் பாடல்களில் பெரும்பாலானவை புரட்சிப் பாடல்களாகும். இவர் ஒரு புரட்சிக் கவிஞர். சமூக நீதிக் கலைஞர், பகுத்தறிவுப் பெரியார்.

♣ **5. பத்திரகிரியார்:**

♣ பத்திரகிரியார் மன்னர், உஜ்ஜயினி அரசர். இமயமலைப் பகுதியின் பெயரான **பத்ரி, பதகிரி** என்று இருந்து பின்னர் **பத்திரகிரி** என்று மருவி இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

♣ பத்திரிகிரியார் பாடல்கள் அனைத்தும் **எக்காலம்** என்ற கேள்வியில் முடிவதைக் காணலாம்.

♣ **6. பாம்பாட்டிச் சித்தர்:**

♣ இச்சித்தர் மக்களைப் பாம்பைப் போல் ஆட்டுவித்தலால் இப்பெயர் வந்திருக்கக் கூடும். இவர் பாம்பைப் பற்றிப் பாடியதாலும் இப்பெயர் வந்திருக்கலாம். பாம்பு இல்லாமல் இரவது பாடல்கள் இல்லை.

♣ பரம்பொருளைப் பற்றிய தெளிவும், நினைவும், அன்பும் நல்ல தொடர்புக்கு வழியாகும் என்பது பாம்பாட்டிச் சித்தரின் வழிகாட்டலாகும்.

♣ **7. காக புசுண்டர்:**

♣ புஜங்கம் என்ற பாம்பின் பெயர் புசண்டம் என்று திரிந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இவர் காகம் போல் மாற்று உருவம் எடுத்ததாகக் கூறுவதால் **காக புகண்டர்** என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

♣ **8. பட்டினத்தார்:**

♣ பட்டினத்தார் மற்றொரு பெயர் பட்டனத்தடிகள், பட்டினத்துப் பிள்ளையார் என்றும், திருவெண்காட்டு அடிகள் என்றும் அழைக்கப்படுகிறார்.

♣ இவரது புகார்ப் பட்டினம் பெரியபட்டணம். ஆதலால் இவரைப் பட்டினத்தார் என்றும் அழைப்பது வழக்கமாயிற்று. இவரது இயற்பெயர் திருவெண்காடர்.

♣ பட்டினத்தாரல் படைக்கப்பட்ட புகழ்பெற்ற 5 நூல்களாவன.

♣ 1. கோயில் நான்மணிமாலை

♣ 2. திருக்கழுமல மும்மணிக்கோவை

♣ 3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

♣ 4. திருஏகம்பமுடையார் திருவந்தாதி

♣ 5. திருவொற்றியூர் ஒருபா ஒருப.்.து.

♣ பட்டினத்தார் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகத் தொழில் செய்து பெருஞ்செல்வரானார்.

♣ பின்னர் பொருளின் நிலையாமையை உணர்ந்து இல்லறம் துறந்து துறவறம் பூண்டார்.

♣ இவரது துறவறம் கௌதம புத்தரது துறவறத்துக்கு இணையாகக் கருதப்படுகிறது.

♣ பட்டினத்தார் பிற்காலத்தவர், பதினெண் சித்தர்கள்காலத்தில் வாழ்ந்தவரல்லர். இவர் சோழர் காலத்தில் பொ. ஆ. 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

♣ அனைத்தையும் துறந்தவரால் தாய்ப்பாசத்தைத் துறக்க முடியவில்லை. இவரது தாயார் இறந்த போது அவரது உடலுக்குத் தீ முட்டுமன் இவர் மனம் உருகிப் பாடிய பாட்டைக் கேட்பவர் கண்ணீர் உகுப்பர்.

♣ **களப்பிரர் வீழ்ச்சி:**

♣ களப்பிரர்களது வீழ்ச்சியும், அவர்களது எழுச்சியைப் போன்றே தங்க சான்றுகளுடன் விளக்க முடியாது விளைவாக உள்ளது.

♣ களப்பிர மன்னர்கள் சமய மறுப்பாளர்கள் (Heritics) இவர்கள் நாத்திக சமயங்களான புத்த, சமண சமயங்களை ஆதரித்து, பாதுகாப்பளித்து, முன்னிலைப் படுத்தியது மக்களுக்குப் பிடிக்கவில்லை.

♣ சமயம் சார்ந்த யதேச்சாதிகார வல்லாட்சி, ஆலமரத்தின் கீழ் சுதந்திர சுயாட்சியானது நகர, கிராம மன்றங்கள் என்ற செடிகள் வளர முடியாமல் போயிற்று. இயல்பாகவே தன்னாட்சி நாட்டமுடைய மக்கள் புல்லிதழ் ஜனநாயகம் பட்டுப்போவதை விரும்பவில்லை.

♣ பிரம்மதேய கிராமங்களைப் பறித்துக் கொண்டதன் மூலம் அவர்களுடைய தீராப் பகையைக் களப்பிரர்கள் தேடிக் கொண்டனர்.

♣ பாண்டிய மன்னன் கடுங்கோன் களப்பிரருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த போது மக்கள் அவருக்கு முழு ஆதரவையும் அளித்தனர்.

♣ அதே போன்று பல்லவ மன்னர் சிம்ம விஷ்ணு தொண்டை மண்டலத்தையும் விடுவிக்க முற்பட்ட போதுஇரு மண்லங்களின் மக்களும் அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்தனர்.

♣ மக்களின் பேராதரவு தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. களப்பிரர் முற்கால தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு அத்தியாயமாயினர்.

♣ **களப்பிரர் காலம்- இருண்ட காலம்:**

♣ களப்பிரர் காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்காக, சரிபார்த்து ஒப்பிட்டு உறுதி செய்து கொள்வதற்கான போதிய சான்றுகள் கிடைக்வில்லையாதலால் இக்காலம் இருண்ட காலமாக உள்ளது.

♣ களப்பிரர் மன்னர்கள், சில வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்டிருந்த இறையிலி நிலங்களைப் பற்றிக் கொண்டு. வேத வைதீக சமயத்தையும், சமயச் சடங்குகளையும் தடை செய்தனர். இந்நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டோருக்கு களப்பிரர் காலம் இருண்ட காலமாகக் காட்சியளித்தது.

♣ களப்பிரர் பற்றி எழுதியவர்கள் திட்டமிட்டே இவர்களைப் பற்றிய தகவல்களை இருட்டடிப்பு செய்தனர். ஆவணங்களிலிருந்து இவர்களது சாதனைகள் பற்றிய தகவல்கள் நீக்கப்பட்டுவிட்டன (Expunged). இதனால் களப்பிரரைப் பற்றிய விவரங்கள் வரலாற்றின் இருண்ட அத்தியாயத்துக்குள் புதைந்து விட்டன.

♣ **பல்லவர் காலப் பண்பாடு:**

♣ தொடக்ககால அறிஞர்கள் சிலர் பார்த்தியர் எனும் அரச மரபின் மற்றொரு பெயரான **பஹ்லவ** என்ற சொல்லின் திரிபே பல்லவ ஆகும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

♣ பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில் சாகர், சாதவாகனர்க்கிடையே போர்கள் நடைபெறுகையில் பகுதிகளுக்குப் பார்த்தியர் குடி பெயர்ந்தனர்.

♣ இன்றைய அறிஞர் பலர் பார்த்தியரைத் தென்னிந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் அல்லது வட இந்தியரோடு ரத்தக்கலப்பு கொண்டவர்கள் என்றும் கருதுகின்றனர்.

♣ பல்லவர்கள் வடபெண்ணை ஆற்றுக்கும், வட வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பான தொண்டை மண்டலத்தோடு தொடர்புடையவராவர்.

♣ சிம்மவர்மனின் மகனான சிம்மவிஷ்ணு காவேரி வரை முன்னேறி சோழர்களுக்குச் சொந்தமான பகுதிகளைக் கைப்பற்றி, தன் தந்தை தொடங்கிய பல்லவ வம்ச ஆட்சியை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டார்.

♣ களப்பிரர்களை முற்றிலும் அழித்தொழித்து காவேரி வரை முன்னேறி அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றியபோது பாண்டியர்களோடு மோத வேண்டியதாயிற்று.

♣ சிம்மவிஷ்ணுவைத் தொடர்ந்து அவரது மகன் முதலம் மகேந்திரவர்மன் (பொ.ஆ.590-630) அரியணை ஏறினார்.

♣ சமண மதத்தைப் பின்பற்றிய இவரை அப்பர் சைவராக மாற்றினார். குலைகளை ஆதரித்த மகேந்திரவர்மன் கவிஞனும் இசை வித்தகனுமாவார்.

♣ மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலத்தில் இரண்டாம் புலிகேசி, பல்லவ அரசினுடைய வடபகுதிகளைக் கைப்பற்றித் தலைநகர் காஞ்சிபுரம் வரை முன்னேறினார்.

♣ இதனைத் தொடர்ந்து முதலாம் நரசிம்மவர்மனின் ஆட்சிக்காலத்தில் (630- 688) பதிலடி கொடுக்கும் விதத்தில் பல்லவர்கள் சாளுக்கியர்களுக்கு எதிராகப் பல வெற்றிகளை ஈட்டினர்.

♣ இப்போர்களில் பல்லவர்களுக்கு மானவர்மன் எனும் இலங்கை இளவரசர் உதவினர். இவ்விளவரசரே பின்னர் இலங்கையின் அரசராகப் பதவியேற்றனர்.

♣ இப்போர்களின் உச்சகட்டமாக நரசிம்மவர்மன் சாளுக்கிய அரசின் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றினார்.

♣ இரண்டாம் புலிகேசி இப்போரில் கொல்லப்பட்டார். நரசிம்மவர்மன் சேர சோழர்களையும் களப்பிரர்களையும் குடைவரைக் கோயில்களை எழுப்பினார்.

♣ பல்லவ அரசன் முதலாம் பரமேஸ்வரவர்மனின் ஆட்சியின்போது (670-700) சாளுக்கிய அரசர் விக்கிரமாதித்யன் பல்லவ நாட்டின் மீது படையெடுத்தார்

♣ முதலாம் பரமேஸ்வரவர்மன் கங்கர் பாண்டியர் ஆகியோரின் உதவியோடு விக்கரமாதித்தனை எதிர்த்துப் போரிட்டார்.

♣ தண்டிவர்ம பல்லவனின் ஆட்சியின்போது காஞ்சிபுரம் ராஷ்ட்டிரகூட அரசர் மூன்றாம் கோவிந்தனின் தாக்குதலுக்கு உள்ளானது.

♣ தண்டிவர்மனின் மகன் மூன்றாம் நந்திவர்மன், மேலைக் கங்கர் சோழர் ஆகியோரின் ஆதரவோடு பாண்டியரையும் ஸ்ரீபிரம்பியம் அல்லது திரும்புறம்பியம் போரில் தோற்கடித்தான்.

♣ மூன்றாம் நந்திவர்மனின் பேரனான அபராஜிதன் தொண்டை மண்டலப்பகுதியின் மீது படையெடுத்து வந்த முதலாம் ஆதித்த சோழனோடு போர்புரிந்து மடிந்தான்.

♣ இத்துடன் பல்லவரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் தொண்டை மண்டலம் சோழர்களின் கட்டுப்பாட்டில் கீழ் வந்தது.

♣ **பல்லவ நிர்வாகம்:**

♣ பல்லவர் காலத்தில் அரச பதவியானது தெய்வீக உரிமையென்றும், அவ்வுரிமையானது வம்சாவளியாகத் தொடர்வது என்றும் கருதப்பட்டது.

♣ பல்லவ அரசர்கள் பெரும் பட்டங்களைச் சூட்டிக்கொண்டனர். அவற்றுள் 'மகாராஜாதிராஜளா' என்பன போன்ற சில வடஇந்திய மரபிலிருந்து பெறப்பட்டவை.

♣ ஒருசில அமைச்சர்கள் ஓரளவுக்கு உயர்ந்த பட்டங்களைச் சூடிக் கொண்டனர். இவ்வமைச்சர்களில் பல நிலவுடைமையாளர்களிலிருந்து நியமிக்கப்பட்டனர்.

♣ அமத்யா என்பவருக்கும் (மந்திரி) என்பவருக்குமிடையே சில வேறுபாடுகளிருந்தன. மந்திரி என்றால் பொதுவாக ராஜதந்திரி எனப் புரிந்துகொள்ளப்படுகிறது.

♣ அமத்யா என்பவர் ஆலோசகராவார்.

♣ மந்திரி மண்டலம் என்பது அமைச்சர் சுழுவாகும். ரகஸ்யதிகிராதா என்பவர் அரசரின்அந்தரங்கச் செயலாளர்.

♣ மாணிக்கப் பண்டாரம் காப்பான் என்னும் அதிகாரி கருவூலத்தைக் காப்பவராவார்.

♣ மாணிக்கம் -விலைமதிப்பில்லாத; பண்டாரம்- கருவூலம்; காப்பான்- காவல் புரிபவர்.

♣ கொடுக்காப்பிள்ளை என்பவர் நன்கொழடகளுக்கான அதிகாரிகளாவார். ஆவர்கள் பல்லவ அரசர்களின் கீழ் மைய அதிகாரிகைளாகப் பணிாற்றிய அதிகாரிகளாவர்.

♣ கோச- அதீயஷா என்பவர் மாணிக்கப் பண்டாரம் காப்பாளர்களை மேற்பார்வை செய்பவர்.

♣ நீதிமன்றங்ளை அதிகர்ண மண்டபம் என்றுமு, நீதிபதிகள் தர்மாதிகாரி என்றும் அழைக்கப்பட்டனர்.

♣ நந்திவர்ம பல்லவனின் **காசாக்குடி செப்பேடுகளில்** அபராதங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

♣ மேல்நிலை நீதிமன்றங்களில் விதிக்கப்படும் அபராதங்கள் கர்ணதண்டம் ஆகும்.

♣ **நிலமானியங்கள்:**



AKM IAS & NEET ACADEMY

♣ நிலவுடைமை உரிமை அனைத்தும் அரசரிடமே இருந்தது. அவர் அதிகாரிகளுக்கு வருவாய் மானியங்கைளயும் பிராமணர்களுக்கு நில மானியங்களையும் வழங்கினார்.

♣ நிலப்பிரபுக்கள், சிறு விசாயிகள் மூலம் நிலத்தை சாகுபடி செய் வைத்தார்.

♣ அரசருக்குச் சொந்தமான நிலங்கள் குடியானவர்களுக்குக் குத்தைக்கு விடப்பட்டன. குத்தகைக்கான கால அளவைப் பொறுத்து கிராமங்களின் தகுதி நிலைகள் மாறுபாடும்.

♣ பிரம்மதேய கிராமங்கள் ஒரு பிராமணருக்கோ அல்லது சில பிராமணர்களைக் கொண்ட ஒரு கழுவுக்கோ கொடையாக வழங்கப்பட்டன.

♣ வரி செலுத்தும் வேண்டியதில்லை என்பதால் இக்கதிராமங்கள் ஏனைய கிராமங்களைக் காட்டிலும் செழிப்பாக இருந்தன.

♣ கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட கிராமங்கள் தேவதான கிராமங்களாகும். இவற்றின் வருவனாய கோயில் நிர்வாகிகள் பெற்றுக்கொண்டனரேயன்றி அரசு பெறவில்லை.

♣ 1879 இல் புதுச்சேரிக்கு அருகே உருவாக்காட்டுக்கோட்டம் என்னுமிடத்தில் இருபுறமும் இணைக்கப்பட்டடு லிங்கம், நந்தி ஆகியன (பல்லவர்களின் முத்திரை) பொறிக்கப்பட்ட செப்பு வளையத்தில் கோர்க்கப்பட்ட பதினோரு செப்புப்பட்டயங்கள் கண்டறியப்பட்டன.

♣ அரசன் நந்திவர்மனின் இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில், மானியமாகத் தரப்பட்ட ஒரு கிராமமம் குறித்த செய்திகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

♣ இதன் உள்ளடக்கம் அரசரைப் பற்றிள சமஸ்கிருத் மொழியில் புகழ்வதில் தொடங்கி மானியத்தைப் பற்றிய விவரங்களைத் தமிழில் கூறி இறுதியில் சமஸ்கிருத செய்யுளோடு முடிவடைகிறது.

♣ **கிராம வாழ்க்கை**

♣ கிராமத்தில் அடிப்படையான அமைப்பு 'சபை' ஆகும். அறக்கட்டளைகள், நிலம், நீரப்பாசனம், வேளாண்மை, குற்றங்களுக்கான தண்டனை, மக்கள் தொகை உள்ளிட்ட தேவைப்படும் ஏனைய ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியன போன்ற கிராமத்தோடு தொடர்புடைய அனைத்து செயல்பாடுகளிகளும் சபை அக்கறை செலுத்தியது.

♣ கிராமத்தவர் அனைவரும் பங்கேற்கும் நிர்வாகமுறை சாராத மக்கள் மன்றமான 'ஊரார்' என்ற அமைப்போடு இது இணைந்து செயல்பட்டது.

♣ இதற்கு மேலான மாவட்ட குழு 'நாடு' அல்லது மாவட்ட நிர்வாகத்தோடு இணைந்து செயல்பட்டது.

♣ பிராமணர்கள் மட்டும் வாழ்ந்த அல்லது பிராமணர்கள் அதிகமாக வாழ்ந்த கிராமங்கள் இவ்வமைப்புகளின் செயல்பாடுகள் தொடர்பான ஆவணங்களைப் பாதுகாத்தன.

♣ கிராம அளவிலான இவ்வமைப்புகளுக்கும் அரசு நிர்வாகத்திற்கமிடையே பாலமாக செயல்பட்டவர் கிராமத்தலைவர் ஆவார்.

♣ **ஏரி நீர்ப்பாசனம்:**

♣ ஏரிப்பட்டி அல்லது ஏரிநிலம் எனும் சிறப்புவகை நிலத்தை தென்னிந்தியாவில் மட்டுமே அறிகிறோம்.

♣ தனிப்பட்ட மனிதர்கள் கொடையாகக் கொடுத்த இந்நிலங்களிலிருந்து பெறப்படும் வரி கிராமத்து ஏரிகைளப் பராமரிப்பதற்காகத் தனியாக ஒதுக்கி வைக்கப்படும்.

♣ ஏரிகள் அனைத்தும் கிராம மக்களின் கூட்டுழைப்பில் கற்காளலும் செங்கற்களாலும் கட்டப்பட்டன. ஏரி நீரை அனைத்து விவசாயிகளும் பகிர்ந்து கொண்டனர்.

♣ கிராமம் தொடர்பான செய்திகளைப் பேசுகிற பல்லவர் காலக் கல்வெட்டுகள் அனைத்தும் ஏரிப் பராமரிப்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

♣ எரிகளுக்கு அடுத்த நிலையில் கிணறுகள் முக்கியமானவை. வாய்க்கால்கள் வழியாக நீர் விநியோகிக்கப்பட்டது.

♣ நீர் பகிர்வினை முறைப்படுத்தவும், அளவுக்கு அதிகமாகச் சேர்ந்து நீரை வெளியேற்றவும் மதகுகள் அமைக்கப்பட்டிருந்தன.

♣ கிராமத்தாரால் நியமிக்கப்பட்ட ஏரிக்குழு எனும் அமைப்பு நீர் பகிர்வை மேற்பார்வையிட்டது.

♣ **வருவாயும் வரிவிதிப்பும்:**

♣ கிராமங்களின் மீது இருவகைப்பட்ட வரிகள் விதிக்கப்பட்டன. வேளாண் மக்கள் விளைச்சலில் ஆறில் ஒரு பங்களில் தொடங்கி பத்தில் ஒரு பங்கு வரை வரியாக அரசுக்குச் செலுத்தினர்.

♣ இவ்வரியை கிராமமே வசூல்செய்து அரசின் வசூல் அதிகாரியிடம் கட்டியது.

♣ இரண்டாவது வகைப்பட்ட வரிகள் உள்ளூர் அளவில் வசூலிக்கப்பட்ட வரிகாளகும். ஆனால் இவ்வரிகள் அந்தக் கிராமத்தின் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

♣ இவ்வரிப் பணம் நீர்ப்பாசன அமைப்புகளைப் பழுதுபார்த்தல், கோயில்களுக்கு விளக்கேற்றுதல் போன்றவற்றிற்கே செலவிடப்பட்டன.

♣ போர்களின்போது சூறையாடப்பட்ட பொருள்களும் படைவீரர்களால் கைப்பற்றப்பட்ட செல்வமும் அரசு வருவாயோடு சேர்க்கப்பட்டன.

♣ காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோயிலில் நந்திவர்மன் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள், குறிப்பாகப் பல்லவப் படைகள் ஒரு கோட்டையைத் தாக்குவது போன்ற போர்க்களக் காட்சிகள், தொடர் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

♣ அக்கோட்டை உயரான மதிற் சுவர்களை கொண்தாயும், வீரர்கள் அதைத் தாக்குவது போலவும் அருகில் யானைகள் நிற்பது போலவும் அக்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

♣ **பல்லவப் படைகள்:**

♣ படைகள் காலாட்படை, குதிரைப்படை, சிறிய அளவிலான யானைப்படை ஆகியவற்றைக் கொண்டிருந்தன.

♣ பெரும்பாலுமான போர்கள் குன்றுகள் நிறைந்த நிலப்பரப்புகளில் நடைபெற்றதால் தேர்ப்படைகளால் பயனுள்ள வகையில் செயல்பட இயலவில்லை.

♣ பல்லவர்களிடம் கப்பல்படையும் இருந்தது. அவர்கள் மாமல்லபுரத்திலும், நாகப்பட்டினத்திலும் கப்பல் தளங்களைக் கட்டினர்.

♣ இருந்தபோதிலும் பின்வந்த சோழர்களின் கப்பற்படை வலிமையோடு ஒப்பிட்டால் பல்லவர்களின் கப்பற்படை சிறியதேயாகும்.

♣ **வணிகம்:**

♣ பல்லவர் காலத்தில் காஞ்சிபுரம் முக்கியமான வணிக மையாக இருந்தது. வணிகர்கள் தங்கள் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு அரசிடம் உரிமம் பெற வேண்டும்.

♣ பல்லவர்கள் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை வெளியிட்டனர். வணிகர்கள் தங்களுக்கென 'மணிக்கிராமம்' போன்ற அமைப்புகளைக் கொண்டிருந்தனர்.

♣ மாமல்லபுரம் ஒரு முக்கியத் துறைமுகமாக விளங்களிது.

♣ வணிகர்கள் தங்களுக்கெனத் தனிக்குழுக்களை (Guild) சுதேசி, நானாதேசிகர், ஐநூற்றுவர் என்ற பெயர்களில் அமைத்துக் கொண்டனர்.

♣ அவர்களில் முக்கிய அமைப்பு ஐஹொல் நகரினை மையமாகக் கொண்டு செயல்பட்டது.

♣ இவ்வமைப்பு மையப்பகுதியில் காளையின் வடித்தைக் கொண்ட தனிக் கொடியைக் கொண்டிருந்தது. வீர சாசனம் என்ற பிரகடனங்களை வெளியிடும் உரிமையையும் பெற்றிருந்தது.

AKM IAS & NEET ACADEMY

♣ நானாதேசியின் செயல்பாடுகள் தென்கிழுக்கு ஆசிய நாடுகள் முழுவதும் விரிந்து பரந்திருந்தது. இதன் தலைவா் பட்டன்சாமி, பட்டணக்கிழாா், தண்டநாயகன் என்ற பெயா்களில் கல்வெட்டுகளில் ஐஹொல் பரமேஸ்வரியாா் என்றழைக்கப்பட்டனா்.

♣ **கடல்வழி வாணிபம்:**

♣ தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு கடல் கடந்து வணிகத்தில் பல்லவா் ஈடுபட்டிருந்தனா்.

♣ அப்பகுதியில் இக்காலத்தில் காம்போஜா (கம்போடியா்), சம்பா (ஆனம்), ஸ்ரீவிஜயா (தெற்கு மலேசிய தீபகற்பமும் சுமத்ராவும்) மூன்று முக்கிய அரசுகள் இருந்தன.

♣ மேலை நாடுகளுடானான செயத்தித் தொடா்பு நேரடியாக இல்லாமல் அரேபியாவின் வழியாக அமைந்தது அத்தொடா்புகளும் வணிகத்தோடு மட்டுமே நின்றுவிட்டன.

♣ **சமூகம்:**

♣ இலக்கியம், வானியல், சட்டம் முதலான குறைகளில் கற்றறிந்த அறிஞா்களாய் இருந்ததால் பிராமணா்கள் அரசின் ஆலோசா்களாகச் செயல்பட்டனா்.

♣ வரி கொடுப்பதிலிருந்தும், மரண தண்டனையிலிருந்து அவா்களுக்கு விலக்கு வழங்கப்பட்டிருந்தது.

♣ அடுத்த முக்கியத்துவம் வாய்ந்த சமூகப்பிரிவினா் நாட்டையாண்ட சத்திரியா்களாவா், அனைத்துச் சத்திரயா்களுக்கு போா் செய்பவா்களாக இல்லை.

♣ வணிகா்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வீரா்களைப் பாமரித்தனா். வணிகக் குழுக்களையும் உருவாக்கிக் கொண்டனா்.

♣ பல்லவா் காலத்தில் ஆரியமயமாதலும் வடஇந்திய கருத்துப் போக்குகளின் செல்வாக்கும் தென்னிந்தியாவில் மிகுந்தது என்று பெரும்பாலான அறிஞா்கள் எற்றுக்கொள்கிறாா்கள்.

♣ சாதியமைப்பு வலுவான நிறுவப்பட்டது. சமஸ்கிருதம் பெயரும் முக்கியத்துவம் பெற்றது.

♣ காஞ்சிபுரம் முக்கியம் வாய்ந்த கல்வி மையமாயிற்று. வேத மதங்களைப் பின்பற்றுவோா் சிவனை வழிபட்டனா்.

♣ மகோந்திரவா்மனே முதன்முதலாக தனது ஆட்சிக் கலத்தில் இடைப்பகுதியில் சமண மதத்திலிருந்து விலகி சைவத்தைக் தழுவினாா்.

♣ யுவான் சுவாங் காஞ்சிபுரத்தில் ஆயிரம் பௌத்த மடாலயங்கைளயும் மகாயான பௌத்தைச் சோ்ந்த 10,000 குருமாா்களையும் தான் கண்டதாகப் பதிவ செய்துள்ளாா்.

♣ **பிராமணியத்தின் வளாந்து வந்த செல்வாக்கு:**

♣ தென்னிந்தியப் பகுதிகளில் ஆரியப் பண்பாடு செல்வாக்குப் பெற்றுவிட்டத்தைத் தெளிவாகக் காட்டும் அடையாளம் பிராமணா்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒப்புயா்வற்ற இடமாகும்.

♣ இக்காலகட்டத்தின் தொடக்கத்தில் கல்வி பௌத்தா்கள் மற்றும் சமணா்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்தது.

♣ ஆனால் படிப்படியாக பிராமணா்கள் அவா்களைப் புறந்தள்ளி விட்டு அவ்விடத்தை கைப்பற்றிக் கொண்டனா்.

♣ சமஸ்சிருத, பிராகிருத மொழிகளில் எழுதப்பட்ட மத நூல்களைக் கொண்டு வந்த சமணா்கள் நாளடைவில் தமிழைப் பயன்படுத்தத் தொடங்கினா்.

♣ மகேந்திரவா்மனும் சமண மதத்தின் மீது கொண்டிருந்த பற்றை இழந்து வைச மதத்தைப் பின்பற்றத் தொடங்கினாா். அதனால் சமணா்கள் அரச ஆதரவை இழந்தனா்.

♣ காஞ்சியிலும், மதுரையிலும் சமணா்கள் சில கல்வி நிலயங்களையும் கா்நாடகாவிலுள்ள சரவணபெலகொலாவில் உள்ளதைப் போன்று சமணமத மையங்களையும் நிறுவினா்.

♣ **மடங்களும் மடாலயங்களும்:**



AKM IAS & NEET ACADEMY

♣ காஞ்சிப் பகுதியிலும் கிருஷ்ணா கோதாவரி நதிகளுக்குகிடைப்பட்ட பகுதிகளிலும் பௌத்தத் துறவி மடாலயங்கள் அமைந்திருந்தன.

♣ இக்காலகட்டத்தில் வேத வைதீகப் பிரிவினருக்கும், அவைதிக பிரிவுகளுக்குமிடையே தீவிர மோதல்கள் நடந்து கொண்டிருந்ததால் பௌத்த மையங்கள் பௌத்த மதத்தைக் கற்பதில் அக்கரைக்காட்டின.

♣ நாளந்தா பல்கலைக்கழகத்திற்கு இணையான புகழைப் பெற்றிருந்த காஞ்சி பல்கலைக்கழகத்தைத் தவிர வேறு சில சமஸ்கிருதக் கல்லூரிகளும் செயல்பட்டு வந்தன.

♣ சமஸ்கிருதம் அங்கீகரிக்கப்பட்ட ஊடக மொழியாகவும் அரசசபையின் அலுவலக மொழியாகவும் இருந்ததால் இலக்கிய வட்டாரங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

♣ **சமஸ்கிருத மொழி பிரபலமாதல்:**

♣ இக்காலத்தில் சமஸ்கிருத மொழிக்குப் பெரும் அரச ஆதரவு இருந்தது. முதலாம் மகேந்திரவர்மன் **மத்தவிலாச பிகாசனம்** என்ற நூலை சமஸ்கிருதத்தில் எழுதினார்.

♣ இரு நூல்கள் சமஸ்கிருத இலக்கியத்திற்கான தர அளவுகளை உருவாக்கின. அவை பாரவியின் கீர்த்தர்ஜீன்யா, தண்டியின் தசகுமாரசரிதா ஆகிய நூல்களாகும்.

♣ மிகச் சிறந்த அணி இலக்கணமாகிய **காவிய தர்சா** என்னும் நூலை இயற்றிய தண்டி பல்லவ அரசவையை சில ஆண்டுகள் அலங்கரித்ததாகத் தெரிகிறது.

♣ **பல்லவரின் குடைவரைக் கோயில்கள்:**

♣ பல்லவர் பகுதிகளில் குடவரைக் கோயில்களை அறிமுகம் செய்த பெருமை முதலாம் மகேந்திரவர்மனைச் சேரும்.

♣ பிரம்மா, ஈஸ்வரா, விஷ்ணு ஆகியோர்க்குத் தான் கட்டிய கோயில்கள், கோயில் கட்டுவதற்குப் பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் செங்கல், மரம், உலோகம், சாந்து ஆகியன கொண்டு கட்டப்படவில்லை என முதலாம் மகேந்திரவர்மன் தனது மண்டகப்பட்டுக் கல்வெட்டில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

♣ மகேந்திரவர்மனின் குடைவரைக் கோயில்கள் வழக்கமாக மண்டப பாணியில் தூண்களைக் கொண்ட ஒரு மண்டபத்தைக் கொண்டிருக்கும் அல்லது முதலில் ஒரு மண்பத்தையும் அதற்குப் பின்புறமோ, பக்கவாட்டிலோ ஒரு கருவறையைக் கொண்டிருக்கும்.

♣ **மாமல்லபுரம்:**

♣ பல்லவர்களின் அடையாளமாகக் கருதப்படும் மாமல்லபுரம் (மகாபலிபுரம்) கடற்கரைக் கோயில் ராஜசிம்மனின் (700-728) ஆட்சிக் காலத்தில் எழும்பியதாகும்.

♣ இக்கோயில் மூன்று கருவறைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் முக்கியமானவை சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் படைத்தளிக்கப்பட்டுள்ளன.

♣ தென்னந்தியாவில் கட்டுமானக் கோயில்களில் இது முதன்மையானதாகும்.

♣ இப்பகுதியிலுள்ள ஏனைய கோயில் கட்டடங்களைப் போலின்றி இக்கடற்கரைக் கோயில் பாறையில் செதுக்கப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்ட கோவிலாகும். ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமாணங்கள் மாமல்லபுர பல்லவர் கோயில்களின் சிறப்புப் பண்பாகும்.

♣ இங்குள்ள ஒற்றைக்கல் தேர்கள் பஞ்சபாண்டவர் ரதம் என அறியப்படுகின்றன. அர்ச்சுன ரதத்தில் கலை நுணுக்கத்தோடு செதுககப்பட்ட சிவன், விஷ்ணு, மிதுனா, துவாரபாலக சிலைகள் உள்ளன.

♣ இவ்வைந்து ரதங்களில் மிக நேர்த்தியானது **தர்மராஜ ரதமாகும்.** இது சதுர வடிவிலான அடித்தளத்தையும் மூன்றடுக்கு விமானத்தையும் கொண்டுள்ளது.

♣ பீம தரம் செவ்வக வடிவ அடித்தளத்தையும் அழகான ஹரிஹரர், பிரம்மா, விஷ்ணு, ஸ்கந்தர், சிவன், அர்த்தநாரிஸ்வரர், கங்காதரர் ஆகியோரின் சிற்பங்களையும் கொண்டுள்ளது.

♣ மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டுள்ள கலை வெளிப்பாட்டில் மிக முக்கயிமானது கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கிவரும் ஆகாய கங்கை காட்சியாகும்.

♣ இது பாகீரதன் தவம், அர்ஜுனன் தவம் என்றும் அறியப்படுகிறது.

♣ புராண உருவங்களை பிரபலமான உள்ளூர் கதைகளோடு இணைந்து சிற்பங்களாகக் காட்சிப்படுத்துவது மனித மற்றும் விலங்குகளின் வாழ்க்கைக் கூறுகளை சீராகக் கலக்கும் கலைஞனின் திறமையைப் பறைசாற்றுகிறது.

♣ **சோழர்காலப் பண்பாடு:**

♣ காவிரிப் பகுதியில் நெல் மிகுதியகா விளைந்த நாடு சோழ நாடெனப்பட்டது.

♣ **'சோழ நாடு சோறுடைத்து"** என்பது முதுமொழி.

♣ எனவே, சோறுடைத்த நாடு பின் சோழ நாடாகியது.

♣ பொ. ஆ. 9-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வலிமை பெற்று விளங்கிய சோழமன்னர்கள் பிற்காலச் சோழர்கள் எனப்படுகின்றனர்.

♣ இவர்களுடைய எல்லை வடக்கே ஒடிசா வரையிலும், கிழக்கில் ஜாவா, சுமத்ரா, மலேசியா வரையிலும் தெற்கோ மாலத்தீவுகள் வரையிலும் பரந்து விரிந்திருந்தது.

♣ கடல் தாண்டி கடற்கடை மூலம் வெற்றிகொண்டவர்கள் பிற்காலச் சோழர்களேயாவர்.

♣ இவர்களது கொடியில் புலிச்சின்னம் இடம் பெற்றிருந்தது.

♣ **சான்றுகள்:**

♣ பிற்காலச் சோழர்களின் வரலாற்றை அறிந்துகொள்வதற்கு வரலாற்றாசிரியர்கள் வெங்கையா, உல்ச், கிருஷ்ணசாஸ்திரி ஆகியோர்கள் தொகுத்த கல்வெட்டுகளும், அன்பில் பட்டயங்கள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள், கரந்தை செப்பேடுகள், ஆனைமங்கலம் செப்பேடுகள், லெய்டன் செப்பேடுகள் போன்றவையும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

♣ **மெய்கீர்த்திகள்:**

♣ மெய்க்கீர்த்திகள் என்பது, அரசனின் புகழுக்குரிய சாதனைகளை விளக்கிக் கூறும் ஆவணமாகும்.

♣ இவை முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் முக்கியத்துவம் பெற்றன. இவருக்குப் பின் வந்த சோழ மன்னர்கள் தங்கள் சாதனைகளைக் குறிப்பிடும் அரச ஆவணமாக இவற்றை உருவாக்கினர்.

♣ **ஆட்சிப் பிரிவுகள்:**

♣ சோழப் பேரரசு, ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

♣ சோழப்பேரரசின் சிறிய பிரிவு கிராமம் ஆகும். பல கிராமங்கள் கொண்டது நாடு எனவும் பல நாடு கொண்டது வளநாடு எனவும் பல வளநாடுகள் கொண்டது ஒரு மண்டலம் எனவும் அழைக்கப்பட்டன.

♣ **சோழர் காலத்து மண்டலங்கள்:**

♣ சோழர் காலத்துப் பேரரசு ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது.

♣ சோழ மண்டலம்- திருச்சி, தஞ்சை பகுதிகள்.

♣ இராஜராஜ பாண்டி மண்டலம்- பாண்டிய நாடு

♣ ஜெயங்கொண்ட சோழ மண்டலம்- தொண்டை நாடு

♣ மும்முடி சோழ மண்டலம்- இலங்கை

♣ முடிகொண்ட சோழ மண்டலம்- கங்கப்பாடி

♣ நிகரிலி சோழ மண்டலம்- நுளாம்பாடி

♣ அதிராஜராஜ சோழ மண்டலம்- கொங்கு நாடு

♣ மலை மண்டலம்- கேரளம்

♣ வேங்கை மண்டலம்- கீழை சாளுக்கிய நாடு

♣ **சோழர் ஆட்நி முறை:**

♣ சோழர்கள் முடியாட்சி முறையைப் பின்பற்றினார்கள். மன்னர்கள் தங்களுக்குப் பிறகு புதல்வர்களில் மூத்தோருக்கு இளவரசர் பட்டம் சூட்டினர்.

♣ முடிசூட்டி அரச உரிமைபெறும் நன்னாளில் சக்கரவர்த்திகள், திரிபுவன சக்கரவர்த்திகள், இராஜகேசரி வர்மன், பரகேசரி வர்மன், இராஜாதி ராஜன், போன்ற பட்டங்களைச் சூட்டிக் கொண்டனர்.

♣ மன்னரின் கீழ்செயல்பட்ட அதிகாரிகள் சிறுதனம் மற்றும் பெருந்தனம் என அழைக்கப்பட்டனர்.

♣ **திருவாய் கேள்வி-** அரசனின் ஆணைகளை வெளியிபவர்

♣ **திருமந்தி ஓலை நாயகம்** - அரசின் ஆணைகளை ஓலையில் எழுதுபவர்

♣ **கரும விதிகள் -** ஆணைகளை நாட்டின் பல இடங்களுக்குக் கொண்டு செல்பவர்.

♣ **புரவுவரி திணைக் களத்தார் -** நிலவரிக் கழகம்

♣ **வரிப்பொத்தகக் கணக்கு-** தணிக்கை அதிகாரி.

♣ **திருமகக் கணக்கு-** அரண்மணைக் கணக்காளர்

♣ **நாடு காவல் அதிகாரி-** நாட்டில் அமைதியை நிலைநாட்டுபவர்

♣ **கிராம ஆட்சி முறை:**

♣ கோழர் காலத்தில் கிராம ஆட்சி முறை சிறப்புப் பெற்றிருந்தது. கிராம சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, அதன் செயல்பாடுகள் குறித்து உத்திரமேரூர் கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.

♣ **குடலோலை முறை:**

♣ முதலாம் பராந்தகன் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் குடவோலை முறையின் மூலம் சபை உறுப்பினர்கள் தோந்தெடுக்கப்பட்ட முறைகள் பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

♣ **சபை உறுப்பினராவதற்குத் தகுதிகள்:**

♣ உறுப்பினராவதற்கக் கால்வேலி நிலம் சொந்தமாக இருக்க வேண்டும்.

♣ சொந்த நிலத்தில் வீடு இருக்க வேண்டும்.

♣ 35 வயது முதல் 70 வயதிற்குள் நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

♣ ஒரு முறை உறுபிபினராய் இருந்தோர், அடுத்த ஐந்து ஆண்டுக்குப் பிறகே உறுப்பினராக முடியும்.

♣ **தேர்ந்தெடுக்கும் முறை:**

♣ ஊர் பல குடும்புகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு குடும்பிலும் தகுதியுடையவர்களின் பெயர்களைப் பனை ஓலையில் எழுதி அதனைக் குடத்தில் இடுவார்கள்.

♣ தேர்தல் நாளன்று அக்குடத்தைச் சபையோர் மூலம் நன்றாகக் குலுக்கிய பின், 5 வயதுக்குட்பட்ட சிறுவனைக் குடத்திலுள்ள ஓர் ஓலையை எடுக்கச் செய்வர்.

♣ **படைகள்:**

♣ சோழப் பேரரசில் ஆற்றல்மிக்க தரைப்படை, யானைப்படை, கப்பற்படை ஆகியன இருந்தன.

♣ முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலத்தில் **'மூன்று கை மகாசேனை'** என்ற சிறப்புப் படை இருந்தது.

♣ **சமுதாய வாழ்க்கை:**

♣ சோழர்காலத்தில் அந்தணர், வணிகர், வெள்ளாளர், படைவீரர் தவிர அவரவர் செய்யும் தொழிலின் அடிப்படையில் தனித்தனி காதிகளாகப் பிரிக்கப்பட்டனர்.

- ♣ சோழமன்னர்கள் அந்தணர்களுக்கு பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் போன்ற இறையிலி நிலங்களைக் கொடுத்துக் கோயில்களில் பணியமர்த்தினர்.
- ♣ இவர்கள் பெற்ற நிலங்கள் **இறையிலி நிலங்கள்** எனப்பட்டன.
- ♣ மக்களுக்கு வேதங்களை விளக்கி உரைப்போருக்கு வேதவிருத்தி, பாரதக்கதை கூறுவோர்க்கு பாரதவிருத்தி, புராணங்களை உரைப்போருக்கு புராண விருத்தி போன்ற நிலங்கள் தானமாக வழங்கப்பட்டன.
- ♣ கோயில் பணிகளும் அவற்றின் அறக்கட்டளைகளும் நடத்துபவர்களுக்கு **மூலப்பருடையோர்** என்று பெயர்.
- ♣ **பெண்கள் நிலை:**
- ♣ ஒருவனுக்கு ஒருத்தி என்ற நியதி நடைமுறையில் இருந்தது.
- ♣ கணவரை இழந்த பெண் பிரிவாற்றாமல் உடன்கட்டை ஏறுவதைப்பற்றிச் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.
- ♣ முதலாம் பராந்தகன் ஆட்சிக் காலத்தில் வீரச்சோழ கங்காதேவியார் தீக்குளித்த செய்தியும், இராசராச பேரரசனின் தாயாரும் சுந்தர சோழனின் மனைவியுமான வானவன் மாதேவியார் உடன்கட்டை ஏறிய செய்தியும் திருவாலங்காட்டு செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ♣ **பொருளாதார நிலை:**
- ♣ வேளாண்மை செய்வோர் சமுதாயத்தின் முக்கிய நபராகக் கருதப்பட்டனர். இவர்களைச் சித்திரதேழிய பெரிய நாட்டார் என்று குறிப்பிட்டனர்.
- ♣ வணிகம் செய்வோர் **வாணியர்** என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் காலத்தில் நகரத்தார், மணிக்கிராமத்தார், வலஞ்சியர், நானாதேசிகள், திசையாயிரத்து ஐந்நூற்றாவர் என்று பல வணிக குழுக்கள் இருந்தன.
- ♣ **கல்வி:**
- ♣ சோழர்காலத்தில் தமிழ் மற்றும் சமஸ்கிருத் மொழியல் கல்வி போதிக்கப்பட்டன. கோயில்கள் கல்விக் கூடங்களாகத் திகழ்ந்தன.
- ♣ முதலாம் பராந்தகன் வேத பாட சாலை நடத்துவதற்காக, மானியம் அளித்துள்ள செய்தியைக் **காமப்புல்லூர் கல்வெட்டு** பகர்கின்றது.
- ♣ முதலாம் இராசராசன் காலத்தில் வேதங்களையும், இலக்கணங்களையும் கற்பிக்கும் ஆசிரியரின் தகுதிகளை **அணியூர் கல்வெட்டு** குறிப்பிடுகிறது.
- ♣ இராசேந்திரன் காலத்தில் வேதங்களைப் போதிக்கும் கல்விக் கூடங்கள் திரிபுவனம், எண்ணாயிரம், திருவொற்றியூர், வேம்பந்தூர் போன்ற இடங்களில் இருந்தன.
- ♣ பிறகாலச் சோழர்கள் காலத்தில் தமிழிலக்கியம் அதன் உச்சத்தை அடைந்தது.
- ♣ இறவாப் புகழ் பெற்ற தமிழிலக்கியங்கள் இவர்கள் காலத்தில் இயற்றப்பட்டன.
- ♣ **இலக்கியம்:**
- ♣ **ஔவையார்-** ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை.
- ♣ **சேக்கிழார்-** பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணம்
- ♣ **கம்பர்-** கம்பராமாயணம், ஏரெழுபது, சடகோபரந்தாதி, சரஸ்வதி அந்திாதி, இலக்குமி அந்தாதி, சிலை எழுபது.
- ♣ **புகழேந்திப்புலவர்-** நாளவெண்பா
- ♣ **ஒட்டக்கூத்தா-** மூவருலா, பிள்ளைத் தமிழ் (குலோத்துங்கச் சோழன்)
- ♣ **ஜெயங்கொண்டார்-** கலிங்கத்துப் பரணி
- ♣ **கச்சியப்ப சிவாச்சாரியார்**- கந்த புராணம்

♣ **மூவருலா:**

♣ ஊல என்ற சிற்றிலக்கிய வகையைப் பின்பற்றி ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட நூல் மூவருலா ஆகும். இரண்டாம் இராசராசசோழன் ஆகிய மூன்று சோழ மன்னர்களைப் புகழந்து பாடியதால், இந்நூல் மூருருலா எனப்பட்டது.

♣ நம்பியாண்டார் நம்பி என்பவர் சைவத் திருமுறைகளைத் தொகுத்தார்.

♣ மேலும், சைவ சாத்திரங்கள் பதினான்கு நூல்களும் சேக்கிழார் காலத்தைத் தொடர்ந்து இயற்றப் பட்டுள்ளன.

♣ வாகீச முனிவரின் ஞானாமிர்தம், திருவிய்யலூர் உய்யவந்த தேவநாயனார் எழுதிய திருவுந்தியார், அருள்நந்தி சிவாச்சாரியார் எழுதிய சிவஞானசித்தியார், உமாபதி சிவாச்சாரியாரின் எட்டு நூல்கள் சோழர்காலத்தில் இயற்றப்பட்டன.

♣ **சமயம்:**

♣ சோழர் சைவசமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் காலத்தில் சைவசமயம் உயர்ந்த நிலையிலிருந்தது

♣ வைணவமும் சிறப்புப் பெற்றிருந்தது. சைவ, வைணவ மடங்களும் கொயில்களும் அமைக்கப்பட்டன.

♣ **தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் :**

♣ இக்கோயில் முதலாம் இராசராச கோழனால் பொ. ஆ. 1003-ஆம் ஆண்ல் தொடங்கி, பொ. ஆ. 1010-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

♣ சோழர் கால கட்டடக்கலையின் முதிர்ச்சியை இக்கோயில் வெளிப்படுத்துகிறது. சோழர்கால கட்டடக் கலையின் மணிமகுடமாக இக்கோயில் திகழ்கிறது.

♣ 90 அடி அகலம் 90 அடி நீளமுடைய கருவறைக்குமேல் நிலத்திலிருந்து 216 அடி உயரமுடைய விமானத்தைக் கொண்டது.

♣ இதனை இராசராசன் தட்சிணமேரு என்பர். இதன் பொருள் தென்னகத்தின் இமயமலை என்றும் இராசராசஸ்வரம் என்றும் அழைக்கப்படுகிறது.

♣ தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்பதன் வடமொழியாக்கமே பிரகதீஸ்வரர் கோயில்.

♣ இக்கோயில் தொடக்கக்காலத்தில் இராஜராஜேஸ்வரன் என்றும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்றும் மராட்டிய மன்னர்கள் காலத்தில் பிரகதீஸ்வரம் என்றும் அழைக்கப்பட்டது.

♣ இக்கோயிலின் நந்தி ஒரே கல்லால் ஆனது. தஞ்சைப் பெரிய கோயிலில் ஆயிரமாவது ஆண்டுவிழா 2010 செப்டம்பர் 25-ஆம் நாள் சிறப்பாக நடைபெற்றது.

♣ **கங்கைகொண்ட சோழபுரம்:**

♣ முதலாம் இராஜேந்திர சோழன் தனது கங்கை வெற்றியின் நினைவாக உருவாக்கிய கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயில், கங்கைகொண்ட சோழீஜ்வர கோயில் என்று அழைக்கப்படுகிறது.

♣ இக்கோயிலின் விமானம் 150 அடி உயரமுடையது.

♣ இவ்வூரின் இவர் ஏற்படுத்திய ஏரி, சோழ கங்கம் எனப்பட்டது.

♣ **தாராசுரம்- ஜராவதீஸ்வரர் கோயில்:**

♣ இக்கோயில் இரண்டாம் இராசராசன் காலத்தில் கட்டப்பட்ட கோயிலாகும். இதில் சக்கரங்களை அமைத்துத் தேரை இழுத்துச் செல்வது போன்ற கல்தேர் அமைக்கப்பட்டுள்ளது.

♣ இக்கட்டத்தை உற்று நோக்கினால் நாகரம், திராவிடம், வேசரம் ஆகிய மூன்று கலைபாணிகளை உள்ளடக்கியுள்ளதைக் காணலாம்.

♣ இக்கோயிலின் விமான சுவர்களில் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றுச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

♣ **திரிபுவனம்- கம்பகரேசுவார் கோயில்:**

♣ மூன்றாம் குலோத்துங்கன் பாண்டியரை வென்று, மதுரையில் திரிபுவன வீரத்தேவன் என்ற பட்டம் சூட்டியதன் விளைவாக இக்கோயிலை கட்டினான்.

♣ **சிற்பக்கலை:**

♣ சோழர்காலச் சிற்பங்கள், கோயில் சுவர்களிலும் தூண்களிலும் காணப்படுகின்றன.

♣ பொதுவாகச் சிவன் கோயிலகளில் கருவறையின் மேற்குப் பகுதியில் லிங்கோத்பவர், றெகுப் பகுதியில் தட்சிணாமூர்த்தி வடக்கே பிரம்மா ஆகியோரின் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

♣ **பழுமக்கலை:**

♣ கல்லில் சிலை வடித்ததைப் போன்று உலோகங்களினால் வார்ப்புச் சிலைகள் உண்டாக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது.

♣ நடராசர் சிலை, சோழர் காலச் செப்புத் திருமேனிகளில் தலை சிறந்ததும் உலகப் புகழ் பெற்றதுமாகும்.

♣ **ஓவியக்கலை:**

♣ சோழர்கள் காலத்தில் தஞ்சைகோயிலின் கருவறைச் சுவரில் காணப்படும் ஓவியங்கள் மிகச் சிறப்புடையனவாகும்.

♣ அவற்றில் தடுத்தாட்கொண்ட சுந்தரர் வரலாறும் சிவபெருமான் புலித்தோல்மிது அமர்ந்து செல்லும் காட்சியும் மிகவும் சிறப்பானதாகும்.

♣ **நடனக்கலை:**

♣ சிதம்பரம், தஞ்சை, காஞ்சி போன்ற கோயில்களில் காணப்படும் நடன மாந்தர்களின் சிற்பங்களும், பெரியபுராணம், கம்பராமாயணம் காட்டும் நடனக்கலையும் சோழர்கால நடனக் கலைக்குச் சான்றாகும்.

♣ சோழர் கால நடனக் கலைஞர்களுக்கு மாணிக்கம், காவிதி, தலைக்கோலி, ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

♣ **இசைக்கலை:**

♣ கோழர்கால இசைக்கலையில் ஆய்ச்சியர் குரவை குறிப்பிடத்தக்கது.

♣ ஏழுபண்களை மாறிமாறிப்பாடி இசை எழுப்புபவர். நுமசிவாயா என்பதை மாற்றி உச்சரித்து ஓசைநயம் காட்டிப்பாடுவர். இதுவே ஆய்ச்சியர் குரவை எனப்பெறும்.

♣ **இந்தியப் பண்பாட்டிற்குச் சோழர்களின் கொடை:**

♣ கிராமசபை உறுப்பினர்களைக் குடவோலைமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல முறையானது, இந்தியப் பண்பாட்டிற்குச் சோழர்கள் நல்கிய சிறந்த கொடையாகும்.

♣ சோழர்காலத்தில் கொண்டு வரப்பட்ட குடும்புகள் முறை, கற்கால கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு அடிப்படையானது.

♣ முதலாம் இராசராச சோழன் நிலம் அளந்து தரம் பிரித்ததால் **உலகளந்த சோழன்** என்று புகழப்பட்டார்.

♣ ஐம்பெரு மற்றும் ஐஞ்சிறு காப்பியங்கள், இலக்கண நூல்கள், நிகண்டுகள் போன்றவை தமிழ் இலக்கியப் படைப்பிற்கும் இந்தியப் பண்பாட்டிற்கும் சிறந்த கொடைகாளகும்.

♣ நாதமுனிகள் தொகுத்தளித்த நாலாயிரத் திவ்விய பிரபந்தம், சோழர் காலத்தில் வழங்கப்பட்ட சிறந்த இலக்கியக் கொடைகளாகும்.

♣ குலோத்துங்க சோழப் பேரரேரி, இராசேந்திர சோழப் பேரரேரி போன்றவை சோழர் காலத்தில் வெட்டப்பட்ட ஏரிகளாகும்.

♣ **பாண்டியர்காலப் பண்பாடு:**

♣ பிற்காலப் பாண்டியர்கள் பொ. ஆ. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் முதலாம் சடையவர்மனின் தலைமையில் எழுச்சி பெற்றனர்.

♣ கோப்பெருஞ்சிங்கனின் வயலூர் கல்வெட்டு, பிற்காலப் பாண்டியர்களைப் பற்றி அறிய உதவும் சான்றாக உள்ளது.

♣ கல்வெட்டுச் சான்றுகள் மதுரோதய வளநாடு, ஸ்ரீவல்லப வளநாடு, பராந்தக வளநாடு, சுமிதரணவளநாடு ஆகிய வளநாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

♣ மன்னனுக்கு ஆட்சியில் உதவுவதற்கு **மகாசாமந்தன்** எனவும் அழைக்கப்படனர்.

♣ மேலும், பல அரண்மனைப் பணிகளைக் கண்காணித்தவர்கள் அகப்பரிவர முதலி, திருவாசல் முதலி என்றழைக்கப்பட்டனர்.

♣ வரிவசூல் செய்வதற்குப் புரவுவரித் திணைக்களத்து முகவெட்டி என்ற வருவாய் அதிகாரி நியமிக்கப்பட்டார்.

♣ தலைமை அதிகாரி திணைக்களநாயகம் என்றழைக்கப்பட்டார்.

♣ வரி நிர்ணயம் செய்வோர் நாடு வகை செய்வோர் எனவும், வரித்தண்டல் செய்த அதிகாரி முதலி என்வும் அழைக்கப்பட்டனர்.

♣ **படைப்பிரிவுகள்:**

♣ பிற்காலப் பாண்டியர்கள் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய நான்கு படைப்பிரிவுகளைப் பெற்றிருந்தனர்.

♣ இவற்றைத் தவிர அவசர காலத்தில் பயன்படும் முனையெதிர்மோகர், தென்னவான் உதவிகள் என்ற படைப்பிரிவுகளும் இருந்தன.

♣ புடைப்பாசறையைக் கண்காணிக்கும் அதிகாரி ஆராய்ச்சி நாயகம் எனப்பட்டார்.

♣ **நீதித்துறை:**

♣ பிற்காலப் பாண்டியர்களின் நீதித்துறை **தருமாசனம்** என்றழைக்கப்பட்டது.

♣ அதற்கு அரசரே தலைவராக இருந்தார். உள்ளாட்சி அமைப்புகள் (ஊரவை) குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்தன.

♣ **ஊராட்சி முறை (உள்ளாட்சி முறை)**

♣ பாண்டியர்களின் ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகள் வலிமை பெற்றுத் திகழ்ந்தன. இதில் மூன்று வகை சபைகளிருந்தன.

♣ பிராமணர்கள் இருந்து பிரம்மதேய சபை.

♣ வணிகர்கள் வாழந்த நகரசபை.

♣ மேற்காணும் சபைகளைப் பற்றி, மானூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

♣ சபை உறுப்பினர்கள் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தகுதிக்கேற்ப வாரியப் பணிகளில் நிமிக்கப்பட்டனர்.

♣ **சமூக நிலை**

♣ பாண்டியர்கள் காலத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு பிரிவு மக்கள் வாழ்ந்தனர்.

♣ மறவர், தச்சர், ஆயர், கொல்லர், மருத்துவர், நெசவாளர், முத்துக்குளிப்போர் போன்ற பிறபிரிவு மக்களும் வாழ்ந்து வந்தனர்.

♣ முதலாம் மறாவர்மன் காலத்தில் அந்தணர்களுக்கென **அக்ரஹாரங்கள்** என்ற குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டு அதற்கு அவனி வேந்த சதுர்தேவி மங்கலம் என்று பெயரிடப்பட்டது.

- பிறகாலப் பாண்டியர்கள் காலத்தில் முக்துக்குளித்தல் முக்கயி தொழிலாக இருந்தது. கடலில் மூழ்கி முத்துக் குளிப்போர் மிகுதியாயிருந்தனர்.
- வணிகர்கள் வாழ்ந்த பகுதிகள் நானாதேசிகப்பெருந்தெரு, ஐந்நூற்றவர்பெருந்தெரு என்றழைக்கப்பட்டன.
- வேளாளர்கள் வேளாண்மைத் தொழிலைச் செய்தனர். இவர்கள் தங்களை **பூமிபுத்திரர்கள்** என்றும், நாட்டு மக்கள் என்றும் அழைத்துக் கொண்டனர்.
- நிலக்கிழார்களும் வேளாளர்களும் இணைந்த சமூகப் பரிவு சித்திரமேழி பெரிய நாட்டார் எனப்பட்டது.
- ஏர் உழவர்கள் மேழிச் செல்வம் எனப்பட்டனர். பதிநெட்டு வகையான தொழில்களைச் செய்வோர் இரதகாரர்கள் எனப்பட்டனர்.
- **மார்க்கோபோலோ** மற்றும் **வாசப்** ஆகிய அயல்நாட்டுப்பணிகள் பின்வரும் செய்திகளைத் தங்கள் குறிப்புகளில் பதிவு செய்துள்ளனர்.
- பாண்டிய நாட்டில் வாழும் மக்கள் பசுக்களைப் போற்றி வணங்கவர்.
- உயர்வு- தாழ்வின்றி அனைவரும் தரையிலேயே அமர்ந்தனர்.
- மது அருந்துதல் பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. அவ்வாறு மது அருந்திவிட்டுப் பேசுவேரின் வாக்கினைப் புறக்கிணத்தல் சமூக மரபாயிற்று.
- அரசகுலப் பெண்கள் கோயில்களுக்காக நிலங்களைத் தானமாக வழங்கினர்.
- பெண் வீட்டார் மணமகனுக்குச் சீதனம் தந்து திருமணம் செய்யும் வழக்கம் இருந்தது.
- பதின்மூன்று வயதுடைய ஆண்மகன், தன் தாய்க்கும் தன் உழைப்பில் பொருளீட்டி உணவளித்தான், தந்தையின் உழைப்பில் அவன் வாழவில்லை.
- **கல்வி:**
- பிற்கால பாண்டியர் காலத்தில் வேதபாடசாலைகள் இருந்தன. இப்பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு **பட்டவிருத்தி** என்ற விருதும் **சாலபோகம்** என்ற மானியமும் வழங்கப்பட்டன.
- அந்தணர்கள் நடத்திய பாடசாலைகள் கடிகை, வித்யாஸ்தானம் என்றழைக்கப்பட்டன.
- இங்குக் கணிதம், வேதம், தத்துவம். சுமயம் போன்றவை போதிக்கப்பட்டன.
- சைவ சித்தாந்த வல்லுநர்கள் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் மடத்தில் தங்கிப் பாடம் கற்பித்தனர்
- ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை என்ற உயர்கல்விக் கூடம் கன்னியாகுமரியிலும், காந்தளுர் சாலையிலும் (திருவனந்தபுரம்) நிறுவப்பட்டன.
- நூலகற்கள் சரஸ்வதி பண்டாரங்கள் என அழைக்கப்பட்டன.
- சிதம்பரம், சேரன்மாதேவி போன்ற இடங்களிலும் நூலகங்கள் இருந்தன.
- **பொருளாதார நிலை:**
- நெசவாளர்கள் தங்கள் வருமாத்திற்கேற்றார்போல் தறியிறை, பஞ்சுபீலி அகிய வரிகளைச் செலுத்தினர்.
- நானாதேசிகன், மணிக்கிராமம், திசையாயிரத்து ஐந்நூற்றுவர், நகரத்தார்சபை, அஞ்சுவண்ணத்தார் ஆகிய வாணிகச்சங்கங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.
- சீனா, இலங்கை, நேபாளம். சுமத்ரா, அரேபியா, ஏடன் பொன்ற நாடுகளுடன் பிற்காலப் பாண்டியந ாட்டு வணிகர்கள் வாணிகம் செய்தனர்.
- **அஞ்சுவண்ணத்தார்** என்ற இஸ்லாமிய வணிகக் குழுவினர் நாகப்பட்டினத்தில் தங்கி வாணிகம் செய்தனர்.
- இவர்கள் மூலமாகவே அரேபிய நாட்டிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன.
- பாண்டிய நாட்டில் குதிரை வியாபாரம் மிகச் சிறப்பாக நடைபெற்றதாக மார்க்கோபோலோ, வாசப் ஆகிய அயல்நாட்டுப்பயணிகள் தமது குறிப்புகளில் பதிவுசெய்துள்ளனர்.

AKM IAS & NEET ACADEMY

♣ நிலவரியே நாட்டின் முக்கிய வருவாய் ஆகும். மொத்த வருவாயில் ஆறில் ஒரு பங்கு, வரியாகப் பெறப்பட்டது.

♣ இளஞ்சினைப் பேறு, உழுதுக்குடி, பாடிகாவல், தட்டாரப்பாட்டம், இடைவெளி, பொன்வரி, தறிக்கிறை, செக்கிறை, போன்ற வரிகளும் பாண்டியர்கள் காலத்தில் வசூலிக்கப்பட்டன.

♣ **ஐந்து வண்ணத்தார்:**

♣ ஐந்து வகை வண்ணப்பொருள்களைவ ிற்பனை செய்த இஸ்லாமிய வணிகர், ஐந்து வண்ணத்தார் என அழைக்கப்பட்டனர்.

♣ இவர்கள் பாண்டியந ாட்டின் தீதாண்டதான புறத்திலும், சோழ நாட்டிலுள்ள நாகப்பட்டினத்திலும் தங்கி வாணிபம் செய்தனர்.

♣ நிலங்கள் முறையாக அளக்கப்பட்டன. நிலங்களை அளப்பதற்குக் குடிதாங்கி, அருள்நீதி ஊர்க்கோல் என்ற அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன.

♣ நிலவரி கடமை, காணிக்கடன் ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டது.

♣ இவர்கள் காலத்தில் புதுக்களிகைப் பணம், அன்றாட நற்புதுக்காக, தனபாலைன்குளிகை ஆகிய நாணயங்கள் வாணிகத்தில் பயன்படுத்தப்பட்டன.

♣ மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் சீன அரசன் குப்ளாய்கானுடன் நாட்புறவு கொண்டிருந்தார்.

♣ அதன் காரணமாக அவர் பொ. ஆ. 1281- இல் ஒரு தூதுக் குழுவைச் சீனாவிற்கு அனுப்பினார்.

♣ **சமயநிலை:**

♣ சைவம், வைணவம் போன்ற சமயங்கள் மக்களால் பின்பற்றப்பட்டன.

♣ இக்காலத்தில்தான் மெய்கண்டதேவார், சீவஞானபோதம் என்ற நூலை எழுதினார்.

♣ பொ. ஆ. 13 ஆம் நூற்றாண்டில் சைவ சித்தாந்த மடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

♣ திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் சைவ சித்தாந்த நூல்களை ஓதுவதற்காகப் பதிநொரு துறவி ஓதுவார்கள் (தபஸ்விகள்) அமர்த்தப்பட்டனர் என்று இரண்டாம் மாறவர்ன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு கூறுகிறது. இத்துறவிகள்

♣ தேவசந்தானமடம்

♣ பட்டவீர சந்தானமடம்

♣ திருவாரூர் மடம்

♣ பிட்சா மடம்

♣ மதுரை மடம்

♣ அழகிய நாயக சந்தான மடம் (நெல்லை) ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாவர்

♣ பாண்டிய மன்னர்கள் காலத்தில் வைணவ சமயமும் சிறப்புப் பெற்றிருந்தது. இவர்களில் சுந்தரபாண்டியன் வைணவ சமயத்தை ஆதரித்தார்.

♣ இரவது கோயில் திருப்பணிகளை விளக்கும் வகையில் கோயீலொழுகு என்ற நூலும் வெளியிடப்பட்டது.

♣ திருவை குண்டம் என்ற இடத்தில் உள்ள பெருமாள் கோயில் கோபுரத்தைச் சுந்தரபாண்டியன் கட்டினார்

♣ இவரே திருப்பதியிலுள்ள ஏழுமயைான் கோயிலுக்குப் பொன்னாலான கலசத்தைச் செய்வித்தார்.

♣ அகோபில மடம், வானமாமலை மடம் போன்ற வைணவ மடங்கள் சிறப்புப் பெற்றன.

♣ தர்மகீர்த்தி என்பவர், பற்காலப் பாண்டியர்கள் காலத்தில் வாழ்ந்த பௌத்த சமய அறிஞராவார்.

♣ **கட்டடக்கலை:**

♣ பிற்காலப் பாண்டியர் காலத்தில், கோயில் கட்டடக்கலையினை விரிவாக்கும் புதிய அமைப்பு முறைகள் தொடங்கின.

♣ வெளிப்புறத்தில் உயர்ந்த அளவிலான கோபுரங்கள், கருவறை, அர்த்த மண்டபம், மாகமண்டபம், சுற்றுப்புறப் பிரகாரங்கள், பல தூண்களைக் கொண்ட மண்டபங்கள் போன்றவை எழுப்பப்பட்டன.

♣ சிரம்பரம், ஸ்ரீரங்கம் போன்ற இடங்களிலுள்ள கோயில்களில் துணைக் கோயில்களையும், மண்டபங்களையும் பொபுரங்களையும் கட்டினர்.

♣ மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், தென்காசி அழகர் கோயில் போன்றவை குலசேகரப் பாண்டியர் காலத்தில் சிறப்புடைந்தன.

♣ இவற்றில் அர்த்த மண்டபம், மணிமண்டபம், சன்னதி, முன்கோபுரம் போன்றவை கட்டப்பட்டன.

♣ **சிற்பக்கலை:**

♣ திருப்பரங்குன்றத்தில் காணப்படும் சோமாஸ்கந்தர், திருமால், துர்க்கை, கணபதி ஆகியோரின் சிற்பங்களும், நரசிம்மர், வராகர், நடராசர் போன்றோரின் சிற்பங்களும் முக்கியத்துவம் பெற்றன.

♣ மதுரை, திருநெல்வேலி, தென்காசி, சிதம்பரம் போன்ற இடங்களில் உள்ள சிற்பங்களும் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காகட்டுகளாகத் திகழ்ந்தன.

♣ பிற்காலப் பாண்டியர்களின் இறுதி காலச் சிற்பங்கள் விஜயநகர அரசு காலச் சிற்பங்களுடன் ஒத்திருந்தன.

♣ **வார்ப்புக்கலை:**

♣ உற்சவ மூர்த்திகள் மற்றும் ஆழ்வார்கள், நாயன்மார்களின் செப்புப்படிமங்கள், சிதம்பரம் நடராசரின் சிலை போன்றவை வார்ப்புக்கலை வளர்ப்புக்கலை வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

♣ **நடனக் கலை:**

♣ சிதம்பரம் மற்றும் திருப்பரங்குன்றதில் உள்ள நடராசரின் சதுரத்தாண்டவத் திருக்கோவில் நடனக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

♣ **இசைக்கலை:**

♣ வீரமத்தளம், மத்தளம், திபிலை, சேமக்கலம், திருச்சின்னம் போன்ற இசைக்கருவிகள் யாவும் கோயிற்சிற்பங்களில் காண்ப்படுவதின் மூலம் பாண்டியர் இசையைப் போற்றி வளர்த்தனர் என்பதை அறிய முடிகிறது.

♣ **நாடகக்கலை:**

♣ அழகிய பாண்டியன் கூடம் என்று நாடக அரங்கம் அழைக்கப்பட்டது.

♣ நாடகத்தில் நடிப்போருக்குக் கூத்துக்காணி வழங்கப்பட்டன. ஆடல் மகளிருக்கு தலைக்கோல் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

♣ சாந்திக்கூத்து, வினோதக்கூத்து என இருவகைக் கூத்துகள் இருந்தன என்று ஆத்தூர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

♣ **1.23. தமிழர் கலைகள்:**

♣ மணிமேகலைக் காப்பியம், கலைகளை அறுபத்து நான்கு எனக் குறிப்பிட்டுள்ளது.

♣ கலைகள் ஒரு நாட்டின் பன்முகப்பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன.

♣ மக்களின் பழக்கவழக்கம், வாழ்வியல் முறை மற்றும் பொருளாதார நிலையை வெளிப்படுத்தும் விதமாகக் கலைகள் அமைகின்றன.

♣ தமிழகத்தில் அறுபத்துநான்கு **முதன்மைக் கலைகள்** இருந்தன.

♣ இதை **ஆய கலைகள் அறுபத்து நான்கனையும் ஏய உணர்விக்கும் என அம்மை** என்ற கம்பரின் கூற்று தெரிவிக்கின்றது.

♣ இவைபொதுக் கலைகள், அழகுக் கலைகள் என இரண்டு வகைப்படும்.

- காட்சி இன்பம், கேள்வி இன்பம் தருவன அழகுக்கலைகள்.
- கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என அழகுக்கலைகளை ஐந்தாகப் வகைப்படுத்தித் தமிழறிஞர் **மயிலை சினி, வேங்கடசாமி** கூறியுள்ளார்.
- **கட்டடக்கலை (Architecture):**
- சங்ககாலம் தொட்டே முறையாகக் கட்டடங்களை அழுகுற அமைப்பதற்கான **'மனை நூல்கள்'** இருந்தன. இதனை **நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம்** என்ற இளங்கோவடிகள் கூறுகின்றார்.
- **மரக்கட்டடங்கள்:**
- பழங்காலத்தில் கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டன. இதற்குச் சான்றாகச் சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ள சபாநாயகர் மண்டபத்தை இன்றும் காணலாம்.
- இதன் மேற்பகுதி விரைவில் பழுதாகிவிடும், இதனால் இவை செம்பு, வெள்ளி, பொன் தகடுகளால் வேயப்பட்டன.
- மரக்கட்டடங்களோடு களிமஞ் கட்டடங்களும் தோன்றின.
- **சிதம்பரம் நடராஜர் கோயில் பொன் கூரை செங்கல் கட்டடங்கள்:**
- சங்க காலத்தில் இருந்தே சுட்ட செங்கற்களால் ஆன கட்டடங்களைத் தமிழகத்தில் காணலாம்.
- பொ. ஆ. ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கோயில்கள் எல்லாம் செங்கல் கட்டடங்களாகவே இரந்தன. இவை மன்னர்களால் அவ்வப்போது செப்பனிடப்பட்டன.
- உதராணம்: அரியலூர் செங்கற்கோயில்
- **குடைவரைக் கோயில்கள்:**
- பேரிய பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டவை குடைவரைக் கோயில்கள் ஆகும்.
- விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு என்னுமிடத்தில் பொ. ஆ. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவா்ம பல்லவன், முதல் குடைவரைக் கோயிலை அமைத்தான்.
- முதற்காலப் பாண்டியர்கள் அமைந்த முதல் குடைவரைக் கோயில் **பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில்** ஆகும்.
- குடைவரைக் கோயில்கள் நீண்ட மண்டபம் பொன்ற அமைப்பைப் பெற்றிருந்தன.
- எனவே மண்டபக் கோயில்கள் என்றும் பாறைகளைக் குடைந்து அமைத்ததால் பாறைக் கோயில்கள் என்றும் அழைக்கப்பட்டன.
- மண்டகப்பட்டு, பல்லாவரம், மாமண்டூர், வல்லம், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சி ஆகிய பகுதிகளில் பழைமையான பல்லவர் காலத்துக் கோயில்கள் உள்ளன.
- சாளுவன் குப்பத்தில் உள்ள குகைக்கோயிலில் வெளிமுகப்பு முழுவதும் யாளியின் முகம் செதுக்கப்படுள்ளது.
- இது குகைக்கோயில்களின் அமைப்பிலேயே வியக்கத்தகு வடிவை உடையது. இப்பகுதி, தற்காலத்தில் புலிக்குகை என்று அழைக்கப்படுகிறது.
- பல்லவர்கள் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்கள் அமைத்ததோடு அன்றிக் கட்டடக் கோயில்களையும் எழுப்பியுள்ளனா். இவற்றுள், அழகும் தொன்மையம் வாய்ந்தது காஞ்சி கைலாசநாதர் கோயில், இது ராசசிம்மனால் கட்டப்பட்டது.
- **பாண்டியா் காலக் கோயில்கள்:**
- பல்லவர்கள், தமிழகத்தின் வட பகுதியை ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் தென் பகுதியைப் பாண்டியா்கள் ஆட்சி புரிந்து வந்தனர்.

AKM IAS & NEET ACADEMY

♣ செழியன்சேந்தன் காலம்முதல் வீரபாண்டியன் காலம்வரை அவர்கள் தோற்றுவித்த குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்றளிகள், கட்டடக் கோயில்கள் அகியன பாண்டியர்கள் காலக் கட்டடக் கலைக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

♣ பிள்ளையார்பட்டி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், குன்றக்குடி, திருமயம், குடுமியான்மலை, சித்தன்னவாசல், பிரான்மலை, அழகிய பாண்டியபுரம், போன்ற ஊர்களில் பாணடியர்கள்காலக் குடவரைக் கோயில்களைக் காணலாம்.

♣ கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயில் பாண்டியரது ஒற்றைக் கற்றளிக்குச் சான்றாகும்.

♣ இது '**தென்னகத்து எல்லோரா**' என்று அழைக்கப்படுகிறது.

♣ திருப்பத்தூர் திருக்கற்றளிநாதர் கோயில் பாண்டியர் காலக் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

♣ **சோழர்காலக் கோயில்கள்:**

♣ தமிழகக் கட்டடக்கலை வரலாற்றில் பிற்காலச் சோழர் காலம் பொற்காலமாகும்.

♣ விஜயாலயசோழன் முதல் மூன்றாம் இராஜராஜசோழன் வரையிலான மன்னர்கள், அழகு வாய்ந்த எண்ணற்ற கோயில்களை எழுப்பினர்.

♣ விஜயாலய சோழனால் கட்டப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலைக் கோயில் தனித்தன்மை வாய்ந்தது.

♣ இக்கோயிலின் வெளிச்சுவர் சதுர வடிவிலும் உட்சுவர் வட்ட வடிவிலும் உள்ளது.

♣ **ஆதித்தசோழன்** காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஏராளமான கற்கோயில்களைக் கட்டினார்.

♣ **பராந்தகசோழன்** எழுப்பிய பிரம்மபுரீசுவரர் கோயில் ஆகியன சோழல் காலக் கட்டடக்கலையின் எழிலையும் எளிமையையும் விளக்குவன.

♣ சோழர் காலக் கட்டடக்கலையில் **செம்பியன்மாதேவியின்** பங்கு குறிப்பிடத்தக்கது.

♣ இராஜராஜசோழன் எழுப்பிய தஞ்சைப் பெரியகோயில் **தென்னகத்தின் மேரு** என அழைக்கப்படும் சிறப்பைப் பெற்றது.

♣ இக்கோயிலே தமிழகக் கட்டடக் கலையின் மணிமகுடமாக விளங்குகின்றது.

♣ தஞ்சையின் சுற்று வட்டாரப் பகுதிகளில் கருங்கற்களே இல்லாத நிலையில் முற்றிலும் கருங்கற்களைக் கொண்டே 13 அடுக்குகளையும் கொண்ட விமானத்தை அமைத்து **இராஜராஜஜேசுவரம்** எனப் பெயரிட்டார் இராஜராஜன்.

♣ இக்கோயிலின் உச்சியில் உள்ள எண்கோண வடிவிலான சிகரம் 80 டன் எடை கொண்டது.

♣ இதனை, 1987 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பு (The United Nations Educational, Scientific and Cultural Organization- UNESCO) உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவித்தது.

♣ **மிக உயரமான விமாத்தை உடைய தமிழகக் கோயில்கள்:**

♣ தஞ்சை பெரிய கோயில்- 216 அடி உயரம் முதலாம் இராஜராஜ சோழன்

♣ கங்கை கொண்ட சோழபுரம்- 170 அடிஉயரம்- முதலாம் இராஜேந்திர சோழன்

♣ திரிபுவனம் கம்பகரேசுவரர் கோயில்- 120 அடி உயரம்- மூன்றாம் குலோத்துங்க சோழன்

♣ இராஜேந்திரசோழன் தனது கங்கைப் படையெடுப்பு வெற்றியின் சின்னமாகக் கங்கை கொண்ட சோழபுரம் கோயிலை அமைத்தார். இது 170 அடி உயரம் கொண்டது. இக்கோயில் சிற்பக் களஞ்சியமாக விளற்குகிறது.

♣ **விஜயநகரம் பேரரசர் காலம் மற்றும் நாயக்கர் காலம்:**

♣ சோழர், பாண்டியர் காலக் கட்டடக்கலையின் தொடர்ச்சியாகவே விஜயநகரப் பேரரசுக் காலக் கட்டடக்கலை விளங்குகிறது.

- ஆனால் நுட்பமான அலங்கார வேலைப்பாடுகள் இக்காலக் கட்டடக்கலையின் சிறப்புக் கூறுகளாகும்.
- இக்கோயில்களில், விமானங்கள் சிறியதாகவும் கோபுரங்கள் உயரமாகவும் உள்ளன.
- திருவண்ணாமலை, மதுரை, இராஆசுவரம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில் கோபுரங்கள் இக்காலத்தவையாகும்.
- நாயக்கர் காலக் கட்டடக்கலை விஜயநகரக் காலக் கட்டடக்கலையைப் பின்பற்றியே எழுந்தது.
- நூறுகால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் எழுப்புதல் இவர்களின் தனிச் சிறப்பு
- திருமலை நாயக்கர் மகால், இராமேசுவரம் இராமநாதசாமி கோயில், ஆயிரங்கால் மண்டபம், மதுரை மீனாட்சியம்மன் கோயில் புது மண்டபம், திருச்சி மலைமீது கட்டப்பட்டுள்ள தாயுமானவர் கோயில் ஆகியன இவர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.
- தமிழகத்தில் ஆயிரங்கால் மண்டபங்கள் அமைந்துய்ய கோயில்களில் குறிப்பிடத்தக்கவை.
- மதுரை மீனாட்சிஅம்மன் கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், இராமேஸ்வரம் இராமநாக சுவாமி கோயில்.
- **சங்ககாலம்:**
- நடுகற்கள், சிற்பக்கலையின் தோற்றுவாயாகக் கருதப்படுகின்றன.
- தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு முதலானவற்றில் நடுக்கல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.
- **நடுகல்** என்பது போரில் வீரமரணமடைந்த அல்லது மக்களுக்காக உயிர் துறந்த வீரனின் பெயருரம் பெருமையும் எழுதி நட்டுவைத்து வழிபடும் கல் ஆகும்.
- இது **வீரக்கல் அல்லது நினைவுக்கல்** என்று அழைக்கப்படும்.
- தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த நடுகல் வழிபடும் முறை, பிற்காலத்தில் வீரர்களின் உருவத்தைச் செதுக்கி வழிபடும முறையாக வளர்ந்தது.
- தெய்வங்களுக்குச் சுதை உருவங்கள் செய்து வழிபட்டனர். இதுவே, கல்லில் சிற்பம் செய்யும் கலையாக வளர்ச்சி பெற்றது.
- விழாக்காலங்களில் களிமண்ணால் விலங்குகள் மற்றும் மனிதர்களின் உருவங்களைச் செய்து வைத்து வழிபடுவது, குதிரை எழுப்பு, உருவாரம் எனப்படும்.
- கல்லினால் செய்யப்படுவது கற்சிற்பங்கள் எனவும் உலோகத்தினால் செய்யப்படுவது படிம உருவங்கள் எனவும் அழைக்கப்படும்.
- சங்க காலத்தில் மரச்சிற்பங்கள் அமைக்கப்பட்டதைப் **பரிபாடல்** மூலம் அறியலாம்.
- கொற்கை, அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் அக்காலச் சுடுமஒ் ஓடுகளும் சிற்பங்களும் கிடைத்துள்ளன.
- காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த கதைச்சிற்பங்களை இந்திர விழாவில் கூடிய மக்கள் கண்டு மகிழ்ந்தனர் என மணிமேகலை காப்பியம் எடுத்துரைக்கின்றது.
- சிற்பக் கலைஞர்களை மண்ணீட்டாளர் என அழைக்கும் வழக்கம் இருந்ததை மணிமேகலையின் (28:37) மூலம் அறியலாம்.
- பொ. ஆ. மூன்றாம் நற்றாண்டு முதல் பொ. ஆ. பத்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்த சமண சமயங்கள் பரவி இருந்தன.
- தொடக்க காலத்தில் பௌத்தர்கள் பாதபீடிகை, தருமச்சக்கரம் முதலியவற்றை வைத்து வணங்கினர்.
- சமண சமயத்தில் அருகப்பெருமானின் உருவத்தையும் தீர்த்தங்காரர்களின் உருவங்களையும் வணங்கினர்.

♣ "சுரை என்பது சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு முதலியவற்றைக் கலந்து அரைத்து வச்சிரம் போல் செய்து அதைக் கொண்டு உருவங்கள் செய்வது" என **அ. தட்சிணாமூர்த்தி** குறிப்பிடுகிறார்.

♣ **சிற்பங்கள்:**

♣ இயற்கை உருவங்களையும் கற்பனை உருவங்களையும் வடிப்பது சிற்பக்கலை எனப்படும்.

♣ கல், சுதை (சுண்ணாம்புக் காரை), மரம், மெழுகு, அரக்கு, தந்தம், உலோகம் ஆகியவற்றால் சிறபங்கள் வடிக்கப்படுகின்றன.

♣ இவற்றைப் புடைப்புச்சிற்பங்கள், தனிச்சிற்பங்கள் என வகைப்படுத்துவர்.

♣ குல், மரம், சுவர், பலகை போன்றவற்றில் புடைப்பாக உருவத்தின் முன்புறம் மட்டும் தெரியும்படி அமைக்கப்படும் சிற்பம் புடைப்புச்சிற்பம் எனப்படும்.

♣ ஓர் உருவத்தின் முன்புறமும் பின்புறமும் முழுவடிவமகா வடித்தல் தனிச்சிற்பம் எனப்படும்.

♣ தமிழகத்தில் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலையைப் பயிற்றுவிக்கும் அரசு கல்லூரி மாமல்லபுரத்தில் உள்ளது.

♣ தமிழ்நாட்டுச் சிற்பக்கலை, கொயில்களை அடிப்படையாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டது.

♣ எடுத்துக்காட்டாக சுந்தர வரதராஜப்பெருமாள் கோயிலில் உள்ள கடவுள் உருவங்கள் மரத்தால் செய்யப்பட்டவையாக உள்ளன.

♣ திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள், காஞ்சி பாண்டவதூதப் பொருமாள் முதலிய உருவங்கள் சுதையினால் செய்யப்பட்டவை

♣ **பிரதிமைகள்:**

♣ தனிப்பட்ட ஒருவரின் உருவ அமைப்பை உள்ளது உள்ளவாறே அமைப்பது பிரதிமைகள் எனப்படும். பிரதிமை உருவங்களின் பழைமையானது பல்லவ அரசர் உருவங்கள் ஆகும்.

♣ உலோகங்களினால் பிரதிமைகள் அமைக்கும் வழக்கம் சோழர் காலத்தில் தோன்றியது.

♣ **பல்லவர் காலம்:**

♣ பல்லவர் காலம், கோயில் சிற்பக்கலையின் தொடக்க காலம் எனலாம்

♣ பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்துக் கோயில்களில் உள்ள **துவாரபாலகர்கள்** என்று அழைக்கப்படும் வாயிற்காவலர்களின் உருவங்கள் புடைப்புச்சிற்பங்களாக உள்ளன.

♣ இவையே தமிழகத்தில் காணப்படும் முதல் கற்சிற்பங்காளகும்.

♣ இவர் காலத்தில் வாயிற்காவலர்களின் சிற்பங்கள் மட்டுமே கற்களால் உருவாக்கப்பட்டவை.

♣ கருவறையில் உள்ள சிற்பங்கள் மரத்தாலோ சுதையாலோ செய்யப்பட்டிருந்தன.

♣ பல்லவர் காலத்தில் கடவுள் போலவே அரசன் அரசு உருவங்களையும் உயரமாகச் செதுக்கும் வழக்கம் இருந்தது.

♣ மாமல்லபுரத்தில் கோவர்த்தன மலை மண்டபத்தின் அருகில் 96 அடி அகலமும் 43 அடி உயரமும் கொண்ட பாறை உள்ளது.

♣ இப்பாறையின் இடையில் இயற்கையாகவே கீழ் நோக்கிய பள்ளம் காணப்படுகிறது. சிற்பிகள் இந்த இயற்கையான வடிவமைப்பைப் பயன்படுத்தித் தம் கற்பனையையும் கலந்து பகீரதன் தவம் என்ற சிற்பத்தொகுதியாக வடிவமைத்துள்ளனர்.

♣ கங்கை பூமிக்கு வர பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவமிருக்கும் காட்சியும், அந்தத் தவத்தின் பயனாகக் கங்கை பூமிக்கு வரும் நிகழ்வையும் அப்பாறைப் பகுதியில் வடிவமைத்துள்ளனா.

♣ நாமக்கல்லில் உள்ள மலைக்கோட்டையின் இருபுறமும் மகேந்திரவர்மன் காலத்துக் குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன.

♣ மலையின் கிழக்குப் பகுதியில் பள்ளி கொண்ட பெருமாள் கோயிலும் மேற்குப் பகுதியில் நரசிம்மப் பெருமாள் கோயிலும் உள்ளன.

♣ ஒரே மலையில் இரண்டு குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பு அம்சமாகும்.

♣ இங்குத் திருமாலின் பத்து அவதாரங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

♣ பல்லவர்கள் காலத்து ஒற்றைக்கல் இரதங்கள், கோயில் சிற்பங்கள் போன்றவை தினத்துவமானவையாக உள்ளன.

♣ அந்திராவில் உள்ள அனந்தப்பூர் மாவட்டத்தில் **லெபாஷி** என்ற ஊரிலுள்ள நந்தி சிற்பம் ஒரே கல்லால் வடிக்கப்பட்டது. இதுவே உலகின் மிகப்பெரிய நந்தியாகும்.

♣ **சோழர்காலம்:**

♣ பல்லவர் காலத்தில் தாழ்ந்த புடைப்புச்சிற்பங்களாக அமைக்கப்பட்டிருந்தவை, சோழர் காலத்தில் உயர்ந்த புடைப்புச்சிற்பங்களாகவும் முழு உருவச்சிற்பங்களாகவும் அமைக்கப்பட்டன.

♣ இக்காலக்கட்டத்தில் தமிழகத்தில் மட்டுமன்றி கஜீராகோ, உதயபுரி, புவனேஷ்வர் ஆகிய பகுதிகளிலும் சிற்பக்கலை வளர்ந்த நிலையில் இருந்தது.

♣ உயரமான மகுடங்கள், மெல்லிய நெடிய உடலமைப்பு போன்றவை சோழர் காலச் சிற்பங்களின் சிறப்பாகும்.

♣ பிற்காலச் சோழர்களின் சிற்பங்களில் அணிகலன்களும் அலங்காரங்களும் மிகுந்து காணப்பட்டன.

♣ இராஜஇராஜ சோழன் எழுப்பிய தஞ்சை பிரகதீசுவரர் கோயிலின் தெற்கு நோக்கிய வாயிலின் கீழ்ப்புறம் புத்தரின் சிற்பமும் உருவங்களும் உண்டு.

♣ இக்கோயிலின் நந்தி சிற்பம் இந்தியாவில் உள்ள நந்திச் சிற்பங்களல் இரண்டாவது பெரிய சிற்பமாகும்.

♣ இதன் உயரம் 12 அடி, நீளம் 19.5 அடி, அகலம் 8.25 அடியாகும்.

♣ இரண்டாம் இராஜராஜன் கட்டிய தாராசுரம் கோயிலில் நாயன்மார்களின் வாழ்க்கையைக் குறிக்கும் 90 சிற்பங்கள் உள்ளன.

♣ **செப்புத் திருஅனிகள்:**

♣ சங்க காலத்தில் உலோகச் சிற்பங்கள் இருந்திருக்கலாம் என்ற செய்தியை மதுரைக்காஞ்சி, குறுந்தொகை, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்களின் வாயிலாக அறியலாம்.

♣ இருப்பினும் சொழர் காலமே உலோகச் சிற்பங்கள் அல்லது செப்புத் திருமேனிகளின் பொற்காலம்.

♣ விஜயபாலன், பராந்தகன், செம்பியன் மாதேவி, முதலாம் இராஜராஜன் ஆகியயோரது காலத்தில் செப்புத்திருமெனிகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

♣ சோழர் காலச் செப்புத் திருமேனிகளுள் நடராஜர் சிலை உலகப்புகழ் வாய்ந்தது.

♣ சோழ அரசர்களும் அவர்களது குடும்பத்தாரும் கோயில்களுக்குச் செப்புத் திருமேனிகளைக் கொடையாகக் கொடுத்த செய்திகளைக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணலாம்.

♣ பிற்காலப் பாண்டியர்களின் சிற்பக்கலை என்பது, சோழர் காலச் சிற்பக்கலையின் தொடர்ச்சியாகவே இருந்தது.

♣ இவர்கள் கோயில்களின் வெளிப்புறச் சுவர்களையும் சிற்பங்களையும் செம்மைப்படுத்துவதிலும் கவனம் செலுத்தினர்.

♣ **விஜயநகர மற்றும் நாயக்கர் காலம்:**

♣ கோபுரங்களிலும், கோயில் விமானங்களிலும் எராளமான சிற்பங்களை அமைத்தனர்.



AKM IAS & NEET ACADEMY

- உயர்ந்த தூண்களையுடைய மண்டபங்கள் அமைத்தல், மண்டபங்களின் தூண்களில் யாளி, குதிரை, மனித உருவங்கள், புராணத் தொன்மங்களை விளக்கும் சிற்பங்கள் போன்றவை விஜயநகர நாயக்கர் காலச்சிற்பங்களின் தனித்தன்மை.
- இவர்கள் காலச் சிற்பங்கள் இரும்பில் வார்த்து போன்ற உறுதி உடையவை.
- விசயநகரச் சிற்பங்கள் மூக்குக் கூர்மையானதாகவும் வயிறு வட்டமானதாகவும் இருக்கும்.
- வேட்டையாடுதல், கோலாட்டம், பாம்பாட்டி நடனம் போன்ற சிற்பங்களைக் கோயில்களில் இடம்பெறச் செய்தல் இவர்கள் கால வழக்கமாக இருந்தது.
- இத்தகைய சிற்பங்களை மதுரை மீனாட்சியம்மன் கோயில், இராமேசுவரம் இராமநாதசுவாமி போன்ற இடங்களில் காணலாம்.
- **ஓவியக்கலை:**
- ஓவியக்கலை தொன்மையான வரலாற்றினை உடையது. இயற்கையோடு கலந்து வாழ்ந்த மக்கள், தாங்கள் கண்ட காட்சியினையும் வேட்டைக் காட்சிகளையும் வரைந்து மகிழ்ந்தனர்.
- தொல்பொருள் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களின் மேல், எழுத்துகளும் பல உருவங்களும் காணப்படுகின்றன.
- தொடக்க காலத்தில் ஓவிய எழுத்துகளே வழக்கில் இருந்தன.
- ஒவ்வு என்ற வினைச்சொல்லில் இருந்து தோன்றியதே ஓவியம்.
- ஒவ்வு என்பதற்கு ஒன்றைப் பற்றுஅல்லது ஒன்றைப் போலவே இருத்தல் என்று பொருள்.
- இச்சொல்லிருந்து தோன்றிய ஓவு, ஒவ்வு போன்ற சொற்கள் ஓவியத்தைக் குறிக்கின்றன.
- தான் கண்ட காட்சியை அப்படியே வரைவது காட்சி ஓவியம். முனத்தில் கற்பனை செய்ததை வரைதல் கற்பனை ஓவியம் ஆகும்.
- தொல் பழங்கால மனிதர் சொற்களை அறியும் மன்பே தம் எண்ணங்களைக் காட்சிகளாக உணர்த்தக் கற்றுக்கொண்டனர்.
- தமக்கு மகிழ்வளித்த வேட்டைக் காட்சிகளையும் பிறவற்றயையும் ஓவியங்களாகக் குகைகளில் தீட்டியுள்ளனர்.
- பச்சிலைச்சாறு, செம்மண், விலங்குகளின் கொழுப்பு ஆகியனவற்றைக் கொண்டு ஆவவோவியற்களுக்கு வண்ணம் தீட்டினர்.
- ஓவியத்தை வட்டிகைச் செய்தி, சித்திரச் செய்தி என்றும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.
- பழங்காலத்தில் சுவர் ஓவியங்களே பெரிதும் காணப்பட்டன. அதனால்தான் **"சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை", "சுவரை வைத்தல்லவா சித்திரம் வரைய வேண்டும்"** என்ற பழமொழிகள் தோன்றின.
- வளைந்தகோடு, கோணக்கோடு, நேர்கோடு ஆகியவற்றைக் கொண்டு ஓவியங்கள் எழுதப்பட்டன.
- இவ்வாறான கோட்டோவியங்களுக்குப் **புனையா ஓவியம்** என்று பெயர்.
- இதனை **வரி வடிவ ஓவியம்** என்றும் அழைப்பர்.
- மடலேறுதலின் பொழுது பனை ஓலையில் வரைந்த கோடுகளால் ஆன ஓவியம் வரிவடிவ ஓவியமாகும்.
- நெடுநல்வாடையில் முதன்முதலாக வரிவடிவ ஓவியம் பற்றிய செய்தி கிடைக்கின்றது.
- புனையா ஓவியத்தில் பலவித வண்ணங்களைப் புனைந்து அமைக்கும் ஓவியம், **முழுஓவியம்** எனப்படும்.
- ஓவியம் வரைவோரை ஓவியன், கண்ணுள்வினைஞர், கைவினைஞர், ஓவியவல்லோன், ஓவியப்புலவன் என்றும் அழைப்பர்.

AKM IAS & NEET ACADEMY

♣ காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, காஞ்சிபுரம், செங்கம் முதலிய பகுதிகளில் நடந்த அகழாய்வுகளில் கிடைத்த காசுகள், ஓடுகள் முதலியவற்றின் மீது காணப்படும் புடைப்பு ஓவியங்களைக் கொண்டு தொன்மைக்கால மக்களின் ஓவியத் திறனை உணரலாம்.

♣ கீழடியில் நடத்தப்பட்ட அகழாய்வில் கருப்பு சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட பானைகள் கிடைத்துள்ளன.

♣ மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் பிரதிமை என அழைக்கப்படுகின்றன.

♣ தெய்வ வடிவங்களைக் காட்டும் ஓவியங்கள் **படிமை** எனப்படுகின்றன.

♣ வெண்மையான சுதை பூசப்பட்ட சுவர்களில் சிவப்பு அல்லது கருப்பு வண்ணத்தால் கோட்டோவியங்கள் வரையப்பட்டன.

♣ தொல்காப்பியத்தில் ஓவியம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

♣ போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு நடுகல் வைக்கப்பட்டது. நடுகல்லில் அவ்வீரனின் உருவத்தைச் செதுக்கும் முன்பே ஓவியமாக வரைந்து கொள்வர், அவ்வோவியத்தைப் பார்த்துக் கல்லில் செதுக்குவர்.

♣ எழுத்து என்ற சொல்லுக்கு **ஓவியம்** என்றே பொருள் கொள்வர்

♣ பண்டைய தமிழ் மன்னர்கள் ஓவியம் தீட்டுவதற்காகத் தங்கள்அரண்மனைகளிலும் கோயில்களிலும் **ஓவியமாடம்** என்ற தனிப்பகுதியை அமைத்தனர்.

♣ தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெழுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்ததை நெடுநல்வாடையில் நக்கீரர் குறிப்பிடுகின்றார்.

♣ பனமலை, காஞ்சிபுரம், திருமலைபுரம் ஆகிய இடங்களில் காணப்பட்ட ஓவியங்கள் பல்லவர் காலக் கலைத் திறனைக் காட்டுவனவாக அமைந்தள்ளன.

♣ தஞ்சையில் வரையப்பட்டுள்ள சிவபெருமான, நாட்டியமாடும் பெண்கள், சேரமான், பெருமாள் நாயனார், இராசராசன் கருவூர்த்தேவர் ஓவியங்கள் சோழர் காலத்தவை ஆகும்.

♣ விசயநகர நாயக்கர் காலத்து ஓவியங்களைத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் காண முடிகின்றது.

♣ **பாறை ஓவியங்கள்:**

♣ மலைப்பாறைகளைக் குடைந்து அமைத்த குகைச்சுவர்களின் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன.

♣ இக்குகைகளின் சுவர்கள் கரடு முரடாக இருந்தபடியால் உமி, சாம், களிமண் முதலான பொருள்களைக் கொண்டு பதப்படுத்திய கதையைச் சுவர்களின் மேல் பூசினார்கள்.

♣ பின்னர் அச்சுதைப் பூச்சிகள் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன.

♣ பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் பல குகைக் கோயில்களை அமைத்தான்.

♣ அக்குகைக்கோயில் சுவர்களில் சித்திரங்களை எழுதுவித்தான்.

♣ அவனே ஓவியக் கலையைப் பயின்றவன் என்பதை **சித்திரக்காரப்புலி** என்ற அவன் பட்டப்பெயரின் மூலம் அறியலாம்.

♣ தருமபுரி மாவட்டத்தைச் சோந்த மல்லபாடியில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட பாறைஓவியம் முக்கியமான ஒரு கண்டுபிடிப்பாக அமைந்தது.

♣ **சித்தன்னவாசல் குகை ஓவியங்கள்:**

♣ தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசல் அமைந்துள்ள குகை ஓவியங்கள் பகழ் வாய்ந்தவை

♣ இவை பொ. ஆ. 7 மற்றும் 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மன்னர் காலத்து ஓவியங்கள்.

♣ இவ்வோவியங்கள் மூலிகைகளால் ஆன வண்ணங்களைக் கொண்டவை.

♣ சித்தன்னவாசலின் ஏழடிப்பட்டம் பகுதியின் மேல்கூரைப் பகுதியிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன.

AKM IAS & NEET ACADEMY

♣ **சுவர் ஓவியங்கள்:**

♣ உதயணனின் பள்ளியறைச் சுவர் ஓவியம் பற்றியும், கோப்பெருந்தேவியின் பள்ளியறைச் சுவர் ஓவியங்கள் பற்றியும் இலக்கியங்களில் காணலாம்.

♣ பாண்டியன் நன்மாறன், தனது சித்திர மாடத்தில் இருந்த பொழுது உயிர் துறந்தமையால் "**பாண்டியன் சித்திர மாடத்துக்குஞ்சிய நன்மாறன்**" என அழைக்கப்பட்டதைப் புறநானூற்றில் மாங்குடி மருதனார் குறிப்பிடுகின்றார்.

♣ நக்கீரரும் தமது நெடுநல்வாடையில் பாண்டியனின் சித்திரமாடத்தைப் பற்றிக் கூறுகிறார்.

♣ திருப்பரங்குன்ற கோயில் மண்டபத்தில் "**எழுதொழில் அம்பலம்**" என்ற பெயரில் ஓவியச்சாலை இருந்த செய்தியினைப் பரிபாடலின் மூலம் அறியலாம்.

♣ இங்கு ரதி, காமன், பூனை வடிவம் கொண்ட இந்திரன், அகலிகை. கௌதம முனவர் முதலான ஓவியங்கள் இங்குகக் காணப்பட்ட செய்தியினை இலக்கியங்களில் காணலாம். இந்த "**எழு தொழில் அம்பலம்**" பிற்காலத்தில் அழிந்தது.

♣ ஊதயணனின் பள்ளியறைச் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்த காட்சியைப் பெருங்கதையில் காணலாம்.

♣ திருச்சி மாவட்டத்தின் திருவெறும்பூர் கோயிலில் காணப்பட்ட சித்திரக்கூடம் பற்றிச் செப்பேடுகள் கூறுகின்றன.

♣ கோவலனின் தந்தை மாசாத்துவான் தவமியற்றிய சாலைகளிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்த செய்தியினை மணிமேகலை கூறுகின்றது.

♣ **துகிலோவியம்:**

♣ **படம்** என்ற சொல் **படாம்** என்ற சொல்லில் இருந்து தோன்றியது.

♣ **படாம்** என்பதற்குத் துணி என்று பொருள், பழங்காலத்தில் துணிகளில் ஓவியங்களை வரைந்தார்கள்.

♣ அவற்றிற்குச் சித்திரப்படாம், சித்திரத்திரை என்று பெயர்.

♣ சித்திரம் எழுதும் கோலுக்குத் **துகிலிகை** என்று பெயர்.

♣ மணிமேகலையில், சீத்தலைச் சாத்தனார் காவிரிப் பூம்பட்டினத்து உவவனம் என்னும் சோலையின் காட்சி சித்திரப்படாம் போன்று அழகுடன் காணப்பட்டது என்கிறார்.

♣ தக்க நாட்டிலே ஆங்காங்கே தாமரைப் பூக்களும் தாமரை இலைகளும் அடர்ந்த குளங்களும் காணப்படும் காட்சியினைத் திருத்தக்கதேவர் வருணிக்கும் பொழுது, துணியில் எழுதிய தாமரைக்குளத்தின் காட்சியைப் பொலக் காணப்படுகிறது என்கிறார்.

♣ இளங்கோவடிகள் ஓவியம் வரையப்பட்ட துணியை **ஓவியஎழினி** என்கிறார்.

♣ ஓவியம் வரையப்பட்ட பலகை வட்டிகைப்பலகை எனப்பட்டது.

♣ **தஞ்சாவூர் ஓவியங்கள்:**

♣ சோழர் காலத்தில் தஞ்சாவூர் ஓவியங்கள் தோற்றம் பெற்றன.

♣ முராட்டிய மன்னன் சரபோஜியின் காலத்தில் தஞ்சாவூரில் இது வளர்ச்சி பெற்றது.

♣ இவ்வோவியங்கள் தமிழகத்தின் புவிசார் குறியீடுகளில் ஒன்றாகும்.

♣ இவ்வகை ஓவியங்கள் பெரிய மரச்சட்டத்தின் நடுவே அமைந்திருக்கும். இச்சட்டமும் ஓவியத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுகிறது.

♣ கடவுளின் உருவங்கள் கித்தானின் பெரும் பகுதியை நிறைத்திருக்கும்.

♣ இதில காணப்படும் ஓவியங்களின் உருவங்கள் உருண்டையாகவும், பருமனான அமைப்புடனும் காணப்படுகின்றன.

♣ இதன் உருவ அமைப்புகளில் பெண்தன்மை மிகுந்து நளினத்துடன் காணப்படும்.

♣ இவ்வோவியங்கள் நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை ஆகிய வண்ணங்களில் மைய ஓவியம் அமைந்திருக்கும்.

♣ கரும்பச்சை, சிவப்பு, அடர்நீலம் போன்ற வண்ணங்களைப் பின்புலமாகக் கொண்டு காணப்படும்.

♣ பழங்கால மக்கள், அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் மீது ஓவியம் வரைந்து மகிழ்ந்திருந்தனர்.

♣ அன்றாடம் பயன்படுத்தும் பாத்திரங்கள், கேடயம், கட்டில், வாள் போன்றவற்றில் ஓவியங்களை வரைந்தனர். தமிழின் நாற்கவிகளில் சித்திரகவியும் ஒன்றாகும்.

♣ சித்திரகவி போலவே சித்திரநதி, சித்திரசபை, சித்திரதடாகம் எனப் பெயர் சூட்டியதில் இருந்து ஓவியத்திற்குத் தமிழர்கள் அளித்த முக்கியத்துவத்தை அறியலாம்.

♣ **இசைக்கலை:**

♣ இயற்றப்பட்ட செய்யுனை உரிய ஓசையோடு, இசைப்பதால் இதற்கு இசை என்று பெயர்.

♣ எனவே, இசை என்னும் சொல் காரணப்பெயர் ஆகும். இவ்விசைக்கு அடிப்படையானவை ஓசை என்று கூறுவர்.

♣ **'எழிசையேழ் நரம்பின் ஓசையை'** என்ற திருப்பதிகத்தொடர் மூலம் இசை ஏழு என்பதையும் இவை தனித்தனி நம்புகளில் இசைக்கப்பட்டன.

♣ குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன ஏழு இசைகள் ஆகும்.

♣ ஏழிசைகளுள் தாரம் என்னும் இசையே, இசை வளர்ச்சிக்கு ஆதாரமானது என்பர்.

♣ **மிடற்றினால் குரலும், நாவினால் துத்தமும்,**

♣ **அண்ணத்தால் கைக்கிளையும், சிரத்தால் உழையும்**

♣ **நெற்றியால் இளியும், நெஞ்சால் விளரியும்,**

♣ **மூக்கால் தாரமும் தோன்றும்**

♣ என இசை இலக்கண நூல்கள் கூறுகின்றன.
இவ்வினைகள் படிப்படியாக மேல் உயர்ந்து செல்லும் இசைநிரலை **ஆரோசை** எனவும் தாழ்ந்து செல்லும் இசைநிரலை **அமரோசை** எனவும் சேக்கிழார் கூறுகிறார்.

♣ ஆரோசை, அமரோசை ஆகியவற்றை இக்காலத்தில் ஆரோகணம், அவரோகணம் என்பர்.

♣ **இசைக்கருவிகள்:**

♣ இசைக்கு உரிய கருவிகளைத் தோல்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என வகைப்படுத்துவர்.

♣ பண்டைய நாளில் வாழ்ந்த இசைக் கலைஞர்கள் குழலையும் துளைக்கருவிகள், கொண்ட ஏழிசைத் திறங்களை இசைத்துள்ளனர்.

♣ **குழலினிது யாழினிது என்ப** என்ற வள்ளுவரின் தொடர் மூலம் அறியலாம்.

♣ இசைக் கலைஞர்கள் துளைக்கருவிகளில் தொன்மையானது குழலே ஆகும். இது புல் வகையாகிய மூங்கலில் செய்யப்பட்டதால் வேய்ங்குழல் என்றும் புல்லாங்குழல் என்றும் அழைக்கப்பட்டது.

♣ **வேய்ங்குழல்** முல்லை நிலத்தவரின் முதன்மை இசைக் கருவியாக விளங்கியது.

♣ வில் நாணின் ஓசையைக் கேட்டு, அதன் இசை நுட்பத்தை உணர்ந்து, நாணின் நீளத்தைக் கூட்டியும் குறைத்தும் பல்வேறு இசை ஒலிகளை உருவாக்கினர்.

♣ இவ்வாறு இசைகளைத் தரும் வில் பலவற்றை ஒன்றாக இணைத்து அமைக்கப்பட்ட நரம்புக்கருவியே, வில்யாழ் ஆகும்.

♣ ஆநிரைகளை மேய்க்கும் ஒருவன் குமிழமரக் கொம்புகளை வில்லகா வளைத்து அதில் மரல்நாரினை நரம்பாகக் கட்டி வில்யாழ் அமைத்துக் குறிஞ்சிப் பண்ணை வாசித்தான் என்று **பெரும்பாணாற்றுப்படை** குறிப்பிடுகிறது.

♣ இந்த வில்யாழை அடிப்படையாகக் கொண்டு பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் ஆகியவையும் பெருங்கலம் என்னும் ஆதியாழும் அமைக்கப்பெற்றன.

♣ தோல்காப்பியர் கூறும் தோல் இசைக் கருவிகளில் ஒன்று பறை. இது தோல் இசைக் கரவிகளின் தாயாகவும் கருதப்படுகிறது.

♣ பேரிகை, படகம்.இடக்கை, உடுக்கை, மத்தளம், சிறுபறை, பெரும்பறை, நாழிகைப்பறை எனத்தோல் கருவிகள் முப்பது உள்ளதாக அடியார்க்கு நல்லார் உரை கூறுகிறது.

♣ இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட தோல் கருமத்தளம் ஆகும்.

♣ இசைக்கும்போது மத்தளத்தை முதற்கருவியாகக் கொள்வர். இடையிடையே வாசிக்கச் **சலிகை** என்னும் கருவியைப் பயன்படுத்துவர். அதனால் , இக்கருவியை இடைக்கருவி என்றும் சொல்வர்.

♣ முதலாம் இராசராசசோழன் கட்டிய இராசராசேச்சுரக் கோயிலில் உடுக்கை வாசிப்பவரும் கெட்டிமேளம் வாசிப்பவரும் இருந்தனர் எனத் தென்னிந்தியக் கல்வெட்டுகள் கூறுகின்றனர்.

♣ **இசை நூல்கள்:**

♣ இறையனார் களவியல் உரை மூலம் முதுநாரை, மதுகுருகு ஆகிய நூல்கள் இருந்தன அறியமுடிகிறது.

♣ இந்நூலின் உரைப்பாயிரம் சிற்றிசை, பேரிசை ஆகிய நூல்களைப் பற்றியும் குறிப்பிடுகிறது.

♣ பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இந்திரகாளியம் முதலான நூல்களைப் பற்றி அடியார்க்கு நல்லார் கூறுகிறார்.

♣ இசை நுணுக்கம் என்னும் நூல் **சயந்தன்** என்னும் பாண்டிய இளவரசனால் இயற்றப்பட்டது என்று கூறியுள்ளார்.

♣ யாப்பருங்கலக்காரிகை உரைப்பாயிரத்தில், குரோத்துங்கன் இசைநூல் என்ற நூலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

♣ அறிவனார் இயற்றிய **பஞ்சமரபு** என்னும் நூல் தற்போது நமக்குக் கிடைத்துள்ளது. ப. சுந்தரேசனார் என்பவர் இந்நூலை உரையோடு வெளியிட்டுள்ளார்.

♣ **இசைத்தூண்கள்:**

♣ தமிழகத்தில் திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி, செண்பகநல்லூர், மதுரை, தாடிக்கொம்பு, அழகர் கோயில், கிருஷ்ணாபுரம், தென்காசி, குற்றாலம், சுசீந்திரம், களக்காடு போன்ற இடங்களில் இசைத்தூண்கள் காணப்படுகின்றன.

♣ **இசைக்கலைஞர்கள்:**

♣ பாணர், பாடினி அகியோர் வாய்ப்பாட்டிலும் இசைக்கருவகளை இசைப்பதிலும் வல்லவர்களாக விளங்கினர்.

♣ பாணர் என்பவர், ஆண் இசைக்கலைஞர்; பாடினி என்பவள், பெண் இசைக்கலைஞர் ஆவர்; மண்டைப்பாணர் என வகைப்படுத்தப்பட்டனர்.

♣ துளைக்கருவி வாசிப்போர், தோல்கருவிவாசிப்போர், நரம்புக்கருவி இசைப்போர், கண்டத்தார் பாடுவோர் எனவும் வகைப்படுத்தப்பட்டனர்.

♣ இந்திரவிழாவூரெடுத்த காதை கூறுகிறது.

♣ இசைப்பாணர்கள் வாய்ப்பாட்டுப் பாடுவதில் வல்லவர்களாக இருந்தனர். யாழ் என்னும் இசைக் கருவிகளை மீட்டுவதில் வல்லவர்களை 'யாழ்ப்பாணர்' என அழைத்தனர்.

♣ சிறுபாணற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய இலக்கியங்களில் யாழ்ப்பாணர் பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன.

♣ மண்டை ஓட்டினைக் கையில் ஏந்திப் பாடியவர்கள், மண்டைப்பாணர் என அழைக்கப்பட்டனர்.

♣ இசைக்கலைஞர்கள் திருவிழாக்களிலும் அவைக்களத்திலும் பாடிப் பிறரை மகிழ்வித்தனர். தலைமக்களுக்கு இடையே தூதுவர்களாகவும் இருந்துள்ளனர்.

♣ **சங்க இலக்கியமும் இசையும்:**

♣ குறிஞ்சி நிலத்திற்குக் குறிஞ்சிப்பண், முல்லை நிலத்திற்குச் சாதாரி. பாலைக்குப் பஞ்சுரப்பண, நெய்தலுக்குச் செவ்வழிப்பண், மருதத்திற்கு மருதப்பண் என ஐவகைப் பண்கள் இசைக்கப்பட்டன.

♣ மலைச்சாரல் பகுதியில் விளைந்திருந்த தினைப்பயிரை உண்ணவந்த காட்டுயானை, அப்பயரைக் காவல் காத்த பெண் இசைத்த குறிஞ்சிப்பண்ணைக்கேட்டுப் பயிரை உண்ணாமல் இசையில் மெய் மறந்து நின்றதை அகநானூறு கூறுகின்றது.

♣ போரில் புண்பட்ட வீரரைப் பேய்களிடமிருந்து காப்பாற்ற **காஞ்சிப்பண்** பாடப்பட்டதாகப் புறநானூறு கூறுகிறது.

♣ யாழ் என்னும் இசைக் கருவிகளால் கலைஞர்கள் மருதப்பண்ணைப் பாடிப் பொழுது விடிந்ததாக மதுரைக்காஞ்சி கூறுகிறது.

♣ மேலும் அது ஆகுளி, முழவு என்னும் கருவிகளைக் கொண்டு செவ்வழிப்பணணை மாலைநேரத்தில் இசைத்தனர் என்பதை சுட்டுகிறது.

♣ நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பண்களைத் தவிர காமரம், நைவளம் போன்ற பண்களும் சங்க காலத்தில் இருந்துள்ளன.

♣ வண்டின் ஓசைபோல் இருப்பது காமரம் என்று அழைக்கப்பட்டமைக்கான குறிப்புகளும் கிடைக்கின்றன.

♣ ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பாடலை இசைப்பதற்குரிய பண்ணும் இசை வகுத்த இசைக் கருவிகள் போன்ற தகவல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

♣ **சிலம்பும் இசையும்:**

♣ இசை ஆசிரியன், மத்தளம் இசைக்கும் தண்ணுமை ஆசிரியன், வேய்ங்குழல் ஊதுவோன், யாழ் ஆசிரியன் எனப் பலரும் மாதவி நாடக அரங்கில் ஆடும் ஆடலுக்குத் துணை நின்றார்கள் எனச் சிலம்பு கூறுகிறது.

♣ அவை, மந்த நடையாகத் தாழ்ந்து செல்லும் முறையில் இசைக்கப்படுவது முதல்நடை

♣ முடுகிச் செல்லும் விரைந்த நடை உடையது திரள், இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இசை உடையது வாரம்.

♣ சொற்செறிவும் இசைச் செறிவும் உடையது கூடை ஆகும்.

♣ யாழ் அமைப்பு, யாழ் இசையின் அமைப்பு முதலியனவும் கூறப்பட்டள்ளன.

♣ பெருங்கதை போன்ற காப்பியங்களிலும் இசை பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

♣ **பக்தி இயக்கமும் இசையும்:**

♣ செய்யுளைப் பண் அமைப்போடு, படைப்பாளனே படைப்பது ஒருவகை, செய்யுளை எழுதிப் பின் வேறொருவர் பண்ணிசைப்பது மற்றொரு வகை.

♣ தேவாரம் முதல்வகையைச் சேர்ந்தது என்பர். மாணிக்கவாசகர் தேவாரங்களைப் **பண் சுமந்த பாடல்** என்று கூறுகிறார்.

♣ ஆநிரைகளை மேயக்கும் பணியை மேற்கொண்ட பொழுது ஆநிரைகளும் எருமைகளும் வந்துவிட்டன, ஓர் எருமை மட்டும் காணவில்லை.

- ♣ அவ்வெருமையின் கனைப்பொலி மட்டும் கேட்கிறது. கனைப்பொலியைக் கேட்ட அவர், தன்கையில் இருந்த வேய்ங்குழலைக் எடுத்து ஊதி இசையை எழுப்பினார்.
- ♣ அவ்விசையைக் கேட்ட அந்த எருமை இசை எழுப்பப்பட்ட இடத்திற்கு வந்து, மற்ற மாடுகளோடு சேர்ந்து வீடு அடைந்ததாகத் திருஞானசம்பந்தர் பாடுகிறார்.
- ♣ திருநாவுக்கரசர் திருவதிகை என்னும் ஊருக்குச் சென்று இறைத்தொண்டு புரிந்து வந்தார்.
- ♣ அவ்வூரில் உள்ள சிவபெருமானை வணங்கச் சுந்தரர் ஒருமுறை செல்கிறார். திருநாவுக்கரசர் வந்துசென்ற அவ்வூரைத் தாம் காலால் மிதிக்கக்கூடாது என எண்ணிய சுந்தரர் ஊருக்குள் போகாமல் ஊருக்கு வெளியே உள்ள ‘சித்தவடமடத்தில்’ தங்கி உறங்குகிறார்.
- ♣ அப்போது சுந்தரர் தலைமீது சிவபெருமான் தன் பாதங்களை வைத்து அருள்புரிந்தார்.
- ♣ இப்பதிகம் கொல்லிக் கௌவாணம் பன்னும் பண்ணில் அமைந்ததாகும்.
- ♣ பின்னோரு தருணத்தில் திருவாரூரில் உள்ள சவபெருமானைப் பற்றிப் பாடிய பதிகம்கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும்.
- ♣ கௌவாணம், கொல்லிப்பண் அகிய இவ்விரு பண்களும் நள்ளிரவில் பாடப்பட்டதாகச் சேக்கிழார் கூறுகிறார்.
- ♣ திருமுறைகண்ட சோழன் யாழ்ப்பாணர் மரபில் வந்த பாடினியைக் கொண்டு பாடல்களின் படைய பண் அமைப்புகளுக்குப் பத்துயீர் அளித்தான். சில புதிய பண்களும் தோற்றுவிக்கப்பட்டன.
- ♣ இச்செய்தியைத் திருமுறைகண்ட புராணம் கூறுகிறது.
- ♣ இப்பண்களைக் கோவிலில் பாட **ஓதுவார்** என்னும் இசைக் கலைஞர்களையும் நியமித்தவனும் இம்மன்னனே.
- ♣ முதலாம் மகேந்திரவர்மன்னனால் பொறிக்கப்பட்ட குடுமியான்மலைக் கல்வெட்டின் முடிவில் **எட்டிற்கும் எழிற்கும் இவைபுரிய** என்ற தொடர் உள்ளது.
- ♣ இத்தொடர் **சங்கீரணம்** என்னும் இசையைப் பற்றிக் குறிப்பதாகும்.
- ♣ தேவாரங்களில் காணப்படாத **சாளரபாணி** என்ற பண் தருவிசைப்பாவில் உள்ளது.
- ♣ ஆனால், தேவாரங்களுக்குப் பண் வகுக்கப்பட்ட காலத்தில் நிலவிய இசையும் **சேக்கிழார்** காலத்தில் நிலவிய இசையும் சாரங்கதேவர் குறிக்கும் தேவாரப் பண்களின் இசையும் இடைக்காலத்தில் தோன்றிய இசைமரபு என்கிறார் வெள்ளைவாரணர்.
- ♣ கீர்த்தனைகள் என்ற இசைப்பாடல் வடிவம் பிற்காலத்தில் தோன்றின.
- ♣ கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாச்சலம் கவிராயர் முதலியோரால் எழுதப்பட்ட கீர்த்தனைகள் குறிப்பிடத்தகுந்தவையாகும்.
- ♣ சங்க காலத்துப் பாணர்களும், பாடினிகளும், விறலியரும் இசையை வளர்த்து வந்தள்ளனர்.
- ♣ ஐவகை நிலப்பிரிவிற்கு யாழ், பண், பறை முதலியன அமைந்திருந்தன.
- ♣ சங்கம் மருவிய காலத்துத் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் களப்பிரர்கள், களப்பிரர்கள் சமண சமயத்தைத் தழுவினர்.
- ♣ ஆற இலக்கியங்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றின. இவை பெரும்பான்மையும் **வெண்பா** யாப்பிலேயே அமைந்தன.
- ♣ ஆனால் சங்க காலத்தில் வெண்பா யாப்பு வழக்கில் இல்லை.
- ♣ பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை முதலியவற்றில் இசைக்கருவிகள் பற்றிச் செய்திகள் காணக்கிடைக்கின்றன.
- ♣ **நடனக்கலை :**
- ♣ நடனக்கலை, ஆடல்கலை கூத்துக்கலை என்றும் அழைக்கப்படுகிறது.
- ♣ பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சில கூத்து வகைகள் கூறப்பட்டுள்ளன.

AKM IAS & NEET ACADEMY

♣ வேலன் ஆடும் வெறிக் கூத்து, வீரர்கள் ஆடும் கருங்கூத்து, பெண்கள் ஆடும்வள்ளிக் கூத்து, இளையவீரனின் வெற்றியைப் பாராட்டி இரு பாலரும் ஆடும் கழனிலைக் கூத்து போன்றவையாகும்.

♣ சுங்க காலத்தில் கூத்துக்கலையை வளர்த்தவர்கள் கூத்தர்கள் எனப்பட்டனர். கூத்தர் இனப் பெண்கள் விறலி, ஆடுமகள், ஆடுகளமகள் என்றும் கூத்தர் இன ஆண்கள் கூத்தன், ஆடுமகன், ஆடுகளமகன் என்றும் அழைக்கப்பட்டனர்.

♣ அரசர்கள் விறலியர்க்குப் பரிசளித்த செய்தியினைக் கோவூர்க்கிழார், மாங்குடி மருதனார் போன்ற புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர்.

♣ சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறும் நாடக மகளிர் என்னும் தொடர் நடன மகளில், கூத்து மகளிர், விறலியர் என்னும் பொருளையே அளிப்பதாக **மா. இராசமாணிக்கனார்.**

♣ நடனம் கற்றும் பெண் தனது 7 ஆம் வயது முதல் 12 ஆம் வளது வரை ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் நடனக்கலைப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

♣ நடனக்கலையைக் கற்பிக்கும் ஆசிரியர் **தலைக்கோல் ஆசான்** என்று அழைக்கப்பட்டார்.

♣ அடியார்க்குநல்லார் கருத்துப்படி கூத்து நான்கு வகைப்படும். அவை, சொக்கம், மெய்க்கூத்து, அபிநயம், நாடகம் என்பன.

♣ இதில் சொக்கம் என்பது இசையுடன் கூடிய தூய நடனம், மெய்க்கூத்து என்பது இசையுடன் கூடிய அகம் சார்ந்த நடனம், அபிநயம் என்பது இசையுடன் கலந்த பாடலுக்கு ஏற்ற நடனம், நாடகம் என்பத இசையுடன் கதை தழுவி வரம் பாட்டிற்கான நடனம்.

♣ ஆடல் என்பது எல்லா வகைக் கூத்துகளையம் குறிக்கும் என்கிறார் அடியார்க்குநல்லார்.

♣ **பதினோராடல்கள்**

♣ நின்றாடல் — வீழ்ந்தாடல்

♣ 1. அல்லியம் — 1. துடி

♣ 2. கொடுகொட்டி — 2. கடையம்

♣ 3. குடைக்கூத்து — 3. பேடு

♣ 4. குடக்கூத்து — 4. மரக்கால்

♣ 5. பாண்டரங்கம் — 5. பாவை

♣ 6. மல்லியம்

♣ சிலப்பதிகாரத்தில் மாதவி பதினோரு வகை ஆடல்களை ஆடினாள்.

| | |
|---|---|
| 1. அல்லியம் | கண்ணன் யானையின் தந்தத்தை ஒடித்ததைக் காட்டும் ஆடல் |
| 2. கொடுகொட்டி | சிவபெருமான முப்புரத்தை எரித்த பொழுது வெற்றியில் கைகொட்டி ஆடிய ஆடல் |
| 3. குடைக்கூத்து | முருகன் அவுணரை வென்ற போது ஆடிய ஆடல் |
| 4. குடக்கூத்து | கண்ணன் தன் பேரனான அநிருத்தனை அரசுரரிடமிருந்து மீட்பதற்காகக் குடத்தை வைத்துக் கொண்டு ஆடிய ஆடல் |
| 5. பாண்டரங்கம் | சிவபெருமான முப்புரத்தை எரித்த பின்னர் நான்முகன் காணும்படி ஆடிய ஆடல் |
| 6. மல்லியம் | கண்ணன் வாணன் என்னும் அசுருடன் போர் செய்ததைக் காட்டும் கூத்து |
| 7. துடி | சூரபதுமனை வென்ற பிறகு கடலினை மேடையாகக் கொண்டு முருகன் ஆடியதைக் கூறும் கூத்து |
| 8. கடையம் | இந்திரன் மனைவி அயிராணி உழத்தி உருவத்தோடு ஆடியது. இது உழுத்திக்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது |
| 9. பேடு | காமன் தன்மகனான அநிருந்தனை சிறை மீட்பதற்காக வாணனுடைய சோ என்னும் நகரத்தில் பேடியுருவம் கொண்டு ஆடியது. |

| | |
|---|---|
| 10. மரக்கால் | கொற்றவை தன்னை எதிர்த்து பாம்பு, தேளாக வந்த அசுரரைக் கொல்வதற்காக ஆடிய ஆடல் |
| 11. பாவை | அசுரரை வெல்ல திருமகள் ஆடிய ஆடல் |

- ♣ இவை தெய்வங்களால் ஆடப்பெறுவதால் தெய்வவிருத்தி என்று அழைக்கப்படுகின்றன.
- ♣ **முத்திரைகள்:**
- ♣ அகக்கூத்து, புறக்கூத்து எனக் கூத்து இரண்டு வகைப்படும். இருவகைக் கூத்துகளுமே ஆடல் என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார்.
- ♣ நடனத்தின் பொது ஒரு கையினால் காட்டப்படும் முத்திரைகளும் இரு கைகளினால் காட்டப்படும் முத்திரைகளும் கூறப்பட்டுள்ளன.
- ♣ பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை எனப்பகுக்கப்பட்டுள்ளன.
- ♣ பிண்டி, பிணையல் இரண்டும் புறக்கூத்தில் காட்டப்படுவன.
- ♣ ஏழிற்கை, தொழிற்கை இரண்டும் அகக்கூத்தில் காட்டப்படுவன.
- ♣ இவற்றில் பிண்டி ஒரு கையால் காட்டப்படும் முத்திரை. இது 24வகையாக அமையும்.
- ♣ பிணையல் இரண்டு கைகளாலும் காட்டப்படுவது. இது 31 வகையாக உள்ளது.
- ♣ **நடன நூல்கள்**
- ♣ நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து **'வந்த முறையின் வழிமுறை வழாமல்'** என்று சிலப்பதிகாரம் கூறுதிலிருந்து தெளிவாகின்றது.
- ♣ பதினோரு வகையான ஆடல்களும் அவற்றின் உறுப்புகளும் கூறப்பட்டுள்ளன.
- ♣ பரதம், அகத்தியம், முறுவர், சயந்தம், குணநூல், செயிற்றியம், இசைநுணுக்கம், இந்திகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், கூத்தநூல் ஆகியன கூத்து பற்றிய நூல்கள் ஆகும்.
- ♣ இவற்றில் பரதமும் அகத்தியமும் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே மறைந்தன.
- ♣ **குரவைக்கூத்து:**
- ♣ மகளிரால் ஆடப்படுவது குரவைக்கூத்து, ஏழு முதல் ஒன்பது பேர் வட்டமாக நின்று கைகோத்து ஆடுவது.
- ♣ இது குன்றக்குரலை, ஆய்ச்சியர் குரவை என இரு வகைப்படும்.
- ♣ குன்றக்குரவை என்பது குறிஞ்சி நிலத்தில் வாழும் மகளிர் முருகனுக்காக ஆடும் ஆடல், ஆய்ச்சியர் குரவை முல்லை நிலத்தில் வாழும்மகளிர் திருமாலுக்காக ஆடும் ஆடல்.
- ♣ **பல்லவர் காலம் :**
- ♣ முதலாம் மகேந்திரவர்மன் **மத்தவிலாசப் பிரகசனம்** என்ற தனது நூலில் சிவபெருமானின் தாண்டவங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
- ♣ ராசசிம்மன் கட்டிய காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சிவபெருமான் ஆடியதாகக் கூறப்படும் தாண்டவம், ஆனந்த தாண்டவம் ஆகியன சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.
- ♣ காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் கூத்தன், கூத்தியர் உருவங்கள் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன.
- ♣ பல்லவர் காலத்தவரான சுந்தரர், நடன மாதரான பரவை நாச்சியாரை மணந்துகொண்ட செய்தியை இலக்கியங்களில் காணலாம்.
- ♣ தில்லையில் உள்ள சிவபெருமான், கூத்தப்பெருமான் என நாயன்மார்களால் பாடப்பட்டார்.
- ♣ பல்லவர் காலத்தில் நடனமாதர் மாணிக்கத்தார், கணிகையர் எனப்பட்டனர்.

AKM IAS & NEET ACADEMY

♣ அக்காலத்தில் காஞ்சிபுரம் முக்தீச்சுரர் கோயிலில் மட்டும் 42 நடன மாதர் இருந்தனர் என்ற செய்தியினை ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

♣ **சோழர் காலம்:**

♣ சோழர் காலம் கலைகளின் வளர்ச்சியால் பொற்காலமாகத் திகழ்ந்தது.

♣ கோயில்களில் நடனம் உட்பட அனைத்துக் கலைகளும் வளர்க்கப்பட்டன.

♣ கோயில் கருவறைகளின் அடிப்பகுதியில்கூட, நடன வகைகள் செதுக்கப்பட்டிருந்தன. இதற்கு சிதம்பரம், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், திருவண்ணாமலை ஆகிய கோயில்கள் சான்று.

♣ தஞ்சாவூர்ப் பெரிய கோவில் கருவறையின் புறச்சுவரில் நடன மாதர்களின் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

♣ இவ்வோவியத்தில் நடனப் பெண்களின் கூந்தல் ஒப்பனை, உடை, இசைக்கருவிகள், முகப்பொலிவு, உருவ அமைப்பு ஆகியன நடனப் பெண்கள் பெற்றிருந்த சிறப்பைக் காட்டுகின்றன.

♣ இராஜராஜ சோழன், தஞ்சைப் பெரிய கோயிலில் ஆடல் நிகழ்த்துவதற்காகப் பதியிலார் எனப்படும் நடனத்தில் சிறந்த பெண்களை நாடெங்கிலும் இருந்து தேர்ந்தெடுத்து வரச் செய்தான்.

♣ இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் அளித்தான். இச்செய்தியினைத் தஞ்சைக் கல்வெட்டில் காணலாம்.

♣ திருவிடை மருதூருக்கு அருகில் உள்ள காமரசவள்ளி என்னும் ஊரில் சிறப்பாகச் சாக்கைக் கூத்தாடும் ஒரவருக்கு **சாக்கை மாராயன்** என இராசேந்திரன் பட்டம் வழங்கிய செய்தியனைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

♣ **பிற்காலம்:**

♣ நாயக்கர் காலத்தில் கர்நாடக இசைவடிவம் தமிழகத்தில் வளரத் தொடங்கியது. இக்காலத்தில் வடமொழி நடன நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டன.

♣ மகாபாரத சூடாமணி, அபிநயதர்ப்பணம், அபிநயதர்ப்பண விலாசம், பரவராக தாளம், சுத்தானந்தப் பிரகாசம், ஆதிமூல பாரதம், பரத சாத்திரம், பரத சேனாபதியம் முதலிய மொழிபெயர்க்கப்பட்ட நடன நூல்களை மா. இராசாணிக்கனார் பட்டியலிடுக்கின்றனார்.

♣ **பரத நாட்டியம்:**

♣ தமிழர்களால் தொன்றுதொட்டு வளர்க்கப்பட்டு வரும் கலை பரதநாட்டியம், இசைப்பாட்டிற்கேற்ப அபிநயம் காட்டிப் பாவகம் தோன்ற ஆடப்படுவது இதற்குக் கைக்குறியீடுகள் இன்றியமையாதன.

♣ இவை, இளங்கோவடிகள் கூறுவதைப் போன்றே ஒரு கை முத்திரை, இருகை முத்திரை என இரண்டு வகைப்படுகின்றது.

♣ ஒருகை முத்திரை இணையா வினைக்கை என்றும், பிண்டிக்கை என்றும் அழைக்கப்டுகின்றது. இருகை முத்திரை இணைக்கை, இரம்டைக்கை, பிணைக்கை என்றும் அழைக்கப்படுகிறது.

♣ **தமிழக விளயைாட்டுகள்:**

♣ விளையாட்டு என்பது விரும்பியாடும் ஆட்டு. விளை-விருப்பம், ஆட்டு- ஆட்டம், தமிழர் மரபில் சிறப்பிடம் பெறுபவை விளையாட்டுகள்.

♣ கெடவரல், பண்ணை ஆகிய இரண்டு வகையான விளையாட்டுகள் பற்றி

♣ **“கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு”**

♣ **(தொல், உரி 21)**

♣ எனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

♣ சிறுமிகளை விலங்குகளிடம் இருந்து காப்பது போல நடித்து விளையாடுவது கெடவரல் என்றும் உழவர்கள் பயிர் செய்வது போல நடித்து விளையாடுவது பண்ணை விளையாட்டு என்றும் தேவநேயப்பாவாணர் கூறுகின்றார்.



AKM IAS & NEET ACADEMY

- மகிழ்தலை நோக்கமாகக் கொண்டது விளையாட்டு, எண்வகை மெய்ப்பாட்டில் ஒன்றான உவகை, நான்கு வழிகளில் தோன்றும் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார்.
- **செல்வம் புலனே புணர்விளை யாட்டென**
- **அல்லல் நீத்த உவகை நான்சே**
- **(தொல், மெய்ப்பாட்டியல்- 255)**
- தமிழக விளையாட்டுகள் அனைத்துமே இரண்டு குழுவாகப் பிரிந்து விளையாடும் பொதுத் தன்மையைப் பெற்று இருக்கும்.
- விளையாட்டின் வெற்றி தோல்வியின் காரணமாக யாரும் பிறருக்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது.
- விளையாட்டில் பிறருக்கு ஏற்படும் துன்பத்தையும், எதிர் அணியாக இருப்பினும் தம் துன்பம்போல் கருதுதல் வேண்டும்.
- இது தமிழக விளையாட்டுகளுக்கான பொது விதியாகும்.
- பிள்ளைத்தமிழ், குழந்தைகளுக்கான பத்துப் பருவங்களைக் கூறுகின்றது. பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை.
- இறுதி மூன்று பருவங்கள் விளையாட்டுகள் பற்றிக் கூறுகின்றது.
- சிற்றில், ஊசல் என்பன பெண்கள் விளையாடும் விளையாட்டுகள் ஆகும். சிறார்கள் சிறு வீடு கட்டி விளையாடுவது **சிற்றில்;** தெருவில் பறையடித்து விளையாடுவது **சிறுபறை;** சிறு தேர் செய்து விளையாடுவது **சிறுதேர்** ஆகும்.
- பெண்கள் இல்லத்தில் அமர்ந்து விளையாடும் விளையாட்டுகள் மட்டுமே பெண்பாற் பிள்ளைத் தமிழில் கூறப்பட்டுள்ளன.
- அம்மானை என்பது, சிறமிகள் வட்டமாக அமர்ந்து பாடல் பாடி விளையாடுவது.
- கழங்கு என்பது, சிறுமிகள் கல் வைத்து விளையாடும் விளையாட்டாகும்.
- ஊசல் என்பது சிறுமிகள் பாடல் பாடிக் கொண்டு ஊஞ்சல் ஆடுவதாகும்.
- பிள்ளைத் தமிழ் கூறுவதைப் போலவே தமிழக நாட்டுப்புற விளையாட்டுகளையும் ஆண்கள் விளையாட்டு, பெண்கள் விளையாட்டு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.
- பெரும்பாலும் ஆண்கள் விளையாடுவன வீர விளையாட்டுகளாகவே உள்ளன.
- **வீர விளையாட்டுகள்:**
- விளையாட்டு என்பதை உவகைச் சுவையல் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறுகிறார். எனவே, விளையாட்டு என்பது, மகிழ்ச்சியைத் தரும் செயல் ஆகும்.
- நாட்டுப்புற விளையாட்டாக ஏறுதழுவுதல், சிலம்பாட்டம், சடுகுடு, இளவட்டக்கல், உரிமரம் ஏறுதல் எனப் பல விளையாட்டுகளைச் சுட்டலாம்.
- இவ்வகை விளைாட்டுகள் மனிதனுக்கும் விலங்கிற்கும் இடையில், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் என இரண்டாகப் பிரிப்பர்.
- முதல் வகைக்கு ஏறுதழுவலையும் பாரிவேட்டையும் சான்றாகச் சுட்டலாம்.
- சிலம்பாட்டம், புலிவேடம் முதலியவை இரண்டாம் வகைக்குச் சான்றுகளாகும்.
- மன எழுச்சி, குறிக்கோளை அடைதல், தன்னிலை நிறுத்துதல், குழு மனப்பாங்கு, நட்புறவு, உடல் நலம் பேணுதல் போன்ற பண்புகளை விளையாட்டுகள் வளர்க்கின்றன.
- **ஏறுதழுவுதல்:**
- மஞ்சள்விரட்டு அல்லது ஏறுதழுவுதல் என்பது தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று.

♣ முல்லைக்கலியில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் காணப்படகின்றன. அதனால் இவ்விளையாட்டு, பண்டைக் காலம்முதல் உள்ளது என்பதை அறியலாம்.

♣ காளையின் கொட்டேறி என்னும் திமிலைப் பிடித்து இடக்குவது சங்க கால முறை.

♣ கொம்பைப் பிடித்து முறுக்கி அடக்குவது உண்டு.

♣ நாணயங்கள் அடங்கிய பையைக் காளையின் கொம்பில் வைத்துக் கட்டிவிடும் பழக்கம் பிற்காலத்தில் தோன்றியது.

♣ வேலி மஞ்சுவிரட்டு, வாடிவாசல் மஞ்சுவிரட்டு, வடம் மஞ்சுவிரட்டு என வட்டாரத்திற்கு ஏற்றாற்போல் நடத்தப்படுகின்றது.

♣ அம்மை, வைசூரி போன்ற கொடிய நோய்கள், மழையின்மை முதலிய குறைகள் நீக்கப்பட்டால் பொங்கல் நாளன்று சல்லிக்கட்டு விடுகிறோம் என்ற வேண்டுதலின் அடிப்படையிலும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது.

♣ இவ்விளையாட்டில் கலந்துகொள்ளும் காளையைச் சல்லிமாடு என்றழைப்பர்.

♣ இக்காளையைக் கன்றுப்பருவத்திலிருந்தே சிறு துண்டினைக் காட்டிப் பாய்ச்சலுக்குப் பழக்குவர், இச்செயல் உர்ரி காட்டுதல் என்று அழைக்கப்படுகிறது.

♣ ஏறுதழுவல் விளையாட்டுக்குக் காளையைப் பலவகைகளில்ஒப்பனை செய்வர்.

♣ கால், கழுத்து முதலிய பகுதிகளில் சலங்கைகள் கட்டப்படும்.

♣ நெற்றியில் காசுமாலையும் கொம்பில் சிறுவளையமும் அணியப்படும்.

♣ திமில் பகுதியில் வண்ணப்பொட்டு குறித்த ஒரு சொல்லாக செய்யப்படும்.

♣ **சிலம்பாட்டம்:**

♣ சிலம்பு என்னும் சொல் பலபொருள் குறித்த ஒரு சொல்லாக உள்ளது.

♣ இங்கு இச்சொல் கம்புகளைக் குறித்து நிற்கிறது. கம்புகளை அடித்து ஒலியெழுப்பும் விளையாட்டுக்குச் சிலம்பு என்று பெயர்.

♣ உடற்பயிற்சி, தற்காப்பு, போராட்டம் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்டது சிலம்பாட்டம்.

♣ நடசாரி என்று கூறப்படும் ஓலைப் பட்டயச் செய்தியில் சிலம்பாட்டத்தில் தோற்றம் பற்றிக் கதையாகக் கூறப்பட்டுள்ளது.

♣ உடலிலுள்ள வர்ம நாடிகளை நோக்கி அடிக்கும் சுவடுமுறைக்கு **தட்டுவர்மச் சுவடு** என்று பெயர்.

♣ இதில் அடிச்சுப்பிரிவு, பூட்டுப்பிரிவு ஆகிய விளையாட்டு முறைகளும் உள்ளன.

♣ ஒருவர் இடம் பார்த்து அடிப்பதும் அவ்வடியை இன்னொருவர் தடுப்பதும் அடிச்சுப்பிரிவு ஆகும்.

♣ ஒருவர் கைகொண்டு அடுத்தவரைப் பூட்டிப் பிடிப்பதும் அப்பூட்டிலிருந்து பிடிபட்டவர் தம்மை விடுவித்துக்கொள்வதும் பூட்டுப்பிரிவாகும்.

♣ குமரி மாவட்டத்தில் சிலம்பாட்டம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விழாக்களில் சிலம்பாட்டம் ஆடி மகிழ்வர். அப்பகுதியில் சிலம்படி ஆசான்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

♣ **சடுகுடு:**

♣ பசுவைக் கவர்ந்து வருவதும் கவர்ந்து வந்த பசுக்களை மீட்டு வருவதுமான வெட்சி, கரந்தை ஆகிய திணைகளில் வரும் போர் முறையின் தொடர்ச்சியாகச் சடுகுடுவைக் குறிப்பர்.

♣ மூச்சுப் பிடித்துக் கொண்டு பாடிச் சென்று மீள்வதும் பாடி வருபவரைப் பலரும் சூழ்ந்து பிடிப்பதும் பிடிப்பட்டவர் தம்மை விடுவித்துக்கொள்வதும் இவ்விளையாட்டின் திறம் ஆகும்.

♣ மூச்சுப்பிடிப்பதைப் **பாட்டம்** என்று அழைப்பர். பாடிச் செல்பவரைக் கொம்பு சுற்றிப் பாடுபவன் என்று சொல்வது உண்டு.

♣ பாடிச் செல்லும்போது தனி வீரமும் பிடிக்கும்போது கூட்டு வீரமும் உடையது இவ்விளையாட்டு. கபடி என்று இக்காலத்தில் அழைக்கப்படுகிறது.

♣ இவ்விளையாட்டில் இடைக்கோடு மட்டும் போட்டு விளையாடும் பழக்கம் பாண்டிய நாட்டில் உள்ளது.

♣ பின்கோடு, பக்கக்கோடு, நடுகோடு முதலான அரங்க அமைப்பில் விளையாடும் பழக்கம் கொங்கு நாட்டில் காணப்படுகிறது.

♣ **இளவட்டக்கல்:**

♣ பண்டைய மனிதன் குகைகளில் வாழந்தபோது கல்லைத் தூக்குதல், நகர்த்துதல் முதலிய பழக்கங்கள் நாளடைவில் வாழ்க்கையோடு இணைந்து பழக்கங்களாக மாறியிருக்கலாம்.

♣ பின் நாகரிக வளர்ச்சியில் உடல்திறனை வெளிப்படுத்தும் விளையாட்டாக அவை மாறியிருக்கலாம் என்பர்.

♣ இவ்விளையாட்டு, தான் விரும்பிய பெண்ணை மணப்பதற்காக ஆடப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் வீரத்தை வெளிப்படுத்தும் ஆட்டமாக மாறியிருக்கிறது. திருவிழாக்களின்போது ஊர்ப்பொது இடத்தில் இடு நடத்தப்படும்.

♣ மணமகனாக வருபவருக்குப் பொன், பொருள் போன்ற ஆடம்பரப் பொருள்களைவிட உடல் திறன் இன்றியமையாதது என்பதை இவ்விளையாட்டு வெளிப்படுத்துகிறது எனலாம்.

♣ **உரிமரம் ஏறுதல்:**

♣ பட்டை உரிக்கப்பட்ட மரத்தையே உரிமரம் என்பர். இவ்வுரிமரத்தில் ஏறி விளையாடுவதே உரிமரம் ஏறுதல் என்று அழைக்கப்படுகிறது.

♣ கைப்பிடிக்கு அடங்காது பருத்திருக்கும் உரிமரத்தை மட்டுமே பயன்படுத்துவர்.

♣ பட்டை உரிக்கப்பட்ட மரம் வழுவழுப்பாக இருக்கும். அம்மரத்தில் விளக்கெண்ணெய் தடவப்பட்டு மேலும் வழுவழுப்பானதாக மாற்றப்படும்.

♣ இவ்வாறு மாற்றப்பட்ட மரத்தின் உச்சியில் பரிசுப் பொருளையும் கட்டி நட்டுவிடுவர்.

♣ இம்மரத்தில் ஏறி உச்சியில் இருக்கும் பரிசப் பொருளைக் கைப்பற்றுபவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர்.

♣ செங்குத்தான பாறைகள்மீது ஏறுதல், வழக்குப்பாறைமேல் ஏறுதல் முதலிய பயிற்சிகளை உடையவர்கள், மலைவாழ் மக்கள் ஆவர்.

♣ இவர்கள் சமவெளிப் பகுதியில் வாழ நேர்ந்தபோது இப்பயிற்சிகள் அவசியமில்லாமல் போகவே விழாக்காலங்களில் உடல்திறனை வெளிப்படுத்தும் வீரவிளையாட்டாக இது மாறியது.

♣ **கில்லி:**

♣ இவ்விளையாட்டு தமிழக நாட்டுப்புற விளையாட்டில் ஒன்றாகும். இதைச் சிறுவர்களும், ஆடவர்களும் விளையாடுவர்.

♣ இது கில்லி, புல்லுக்குச்சி, கில்லிதண்டு, சில்லாங்குச்சி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

♣ சிறிய குச்சி **கில்லி** எனவும பெரிய குச்சி **தாண்டல் எனவும் கூறப்படும்.**

♣ ஒரு முழும் நீளத்தில் ஒரு குச்சியும் ஒரு சாண் நீளத்தில் மற்றொரு குச்சியும் இருக்கும்.

♣ சிறிய குச்சியின் இரண்டு முனையும் கூர்மையாக்கப்ட்டிருக்கும், பெரிய குச்சியின் ஒரு முனை மட்டும் கூர்மையாக்கப்பட்டிருக்கும்.

♣ நிலத்தில் இரண்டு விரல் இடை அளவிற்குச் சிறய பள்ளம் பறிக்கப்படும். அப்பள்ளத்தின் நடுவில் குறுக்காகக் கில்லை வைக்கப்படும். இவ்வாறு வைத்த குச்சியைப் பெரிய குச்சியைக் கொண்டு தள்ளிவிடுவர்.

♣ **பச்சைக்குதிரை:**

♣ இவ்விளையாட்டு, சிறுவர்கள் ஒத்த பருவத்தினரோடு நிலா வெளிச்சத்தில் விளையாடும் விளையாட்டாகும்.

♣ இதன் முதல்படி பிறருமைய காலைத் தாண்டுவதில் தொடங்கும். அதனால், இந்த விளையாட்டைக் கால்தாண்டி விளையாட்டு என்று அழைப்பர்.

♣ குனிந்து இருப்பவர் படிப்படியாகத் தம்நிலையை உயர்த்துவதால், தாண்ட வேண்டியஉ யரம் கூடிக் கொண்டே இருக்கும்.

♣ **பண்ணாங்குழி:**

♣ எல் குத்தும் பண்ணைபோல் வட்டமான பள்ளம் அல்லகு குழி வெட்டி, அதில் கற்களை இட்டு ஆடும் ஆட்டம், பண்ணாங்குழி. பண்ணாங்குழி என்பதைப் பல்லாங்குழி, பள்ளாங்குழி, பன்னாங்குழி என்னும் பெயர்களால் வழங்குகின்றனா. பெரும்பாலும் பதினான்கு குழிகளை வைத்து ஆடுவதால் பதினாங்குழி, பன்னாங்குழி எனத் திரிந்ததாகக் கூறுவர்.

♣ **பன்னாடு** என்பதே இலக்கிய வழக்காக இருப்பதனால், பண்ணாங்குழி அல்லது பள்ளாங்குழி என்பதே திருந்திய வடிவமாகும்.

♣ இவ்விளையாட்டை இருவர் ஆடுவர். நிலத்தில் சமமான இரு படுக்கை வரிசையாகத் தோண்டப்பட்ட குழிகளுள் சுழற்சிக்காய் மற்றும் புளியங்கொட்டை அல்லது கூழாங்கற்கள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை ஐந்தைந்தாய் இட்டு விளையாடுவர்.

♣ **திருவிழாக்கள்:**

♣ திருவிழா என்பது, மக்கள் ஒன்றுகூடிக் கொண்டாடும் நிகழ்வே ஆகும். திருவிழாக்கள் பல்வேறு காரணங்களுக்காகக் கொண்டாடப்பட்டாலும் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குவதே முதல் நோக்கமாகும்.

♣ இவ்விழாக்களை இயற்கை சார்ந்தவை, இனம் சார்ந்தவை, சமயம் சார்ந்தவை என வகைப்படுத்தலாம்.

♣ மக்கள், பருவகால மாறுபாடுகளுக்கு ஏற்ப விழாக்களைக் கொண்டாடினர். இவ்விழாக்கள் இயற்கை சார்ந்தவை, ஓர் இனத்தின் அடையாளம் மற்றும் வழிபாட்டு நெறிமுறைகளுடன் கொண்டாடப்படும் விழாக்கள், இனம் சார்ந்தவை.

♣ **ஐந்திணை விழாக்கள்:**

♣ சுங்ககாலத்தில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது.

♣ ஓவ்வொரு நிலத்திற்கும் வழிபடு செய்வங்களும் திருவிழாக்களும் சிறப்பான முறையில் அமைந்திருந்தன என அறிகிறோம்.

♣ **மாயோன் மேய காடுறை உலகமும்**

♣ **சேயோன் மேய மைவரை உலகமும்**

♣ **வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

♣ **வருணன் மேய பெருமணல் உலகமும்**

♣ **(தெல். பொருள். அகம்)**

♣ எனத் தொல்காப்பியர் பாலை நிலம் தவிர நால்வகை நிலத்திற்குரிய தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

♣ ஆனால், பாலைநில மக்கள் 'கொற்றவையைத்' தெய்வமாக வழிபடுகின்றனர்.

♣ **குறிஞ்சி நில விழா:**

♣ மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம் ஆகும். குறிஞ்சி நிலக் கடவுள் சேயோன், முருகன், வேலன் எனப் பல பெயர்களில் அறியப்படுகிறார்.

♣ இந்நிலப்பகுதியில் **வேலன்வெறியாட்டு விழா** நடைபெற்ற செய்தியினைத் திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூறு, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்கள் வழி அறிகின்றோம்.

♣ வேலன்வெறியாட்டின் பொழுது குறிஞ்சி நிலத்தவா் பல வகை மலா்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்துகொண்டு கையில் வேலை ஏந்தி தன்மீது முருகக் கடவுள் ஏறியது போலஆடுவா். இவ்விழா நடைபெறும் இடம் **வெறியாடுகளம்** எனப்படும்.

♣ அங்குச் சேவல் கொடி நடப்பட்டிருக்கும் பல வகையான நறுமணப்புகைகள் காணப்படும்.

♣ பலவகையான இலசக்கருவிகள் இசைக்கப்படும் என இவ்விழாவைப் பற்றிப் பரிபாடல் கூறுகின்றது.

♣ இவ்விழாவின் போது, குறிஞ்சி நில மக்கள் தொண்டகப்பறை இசைக்க நடனமாடுவா். இதுவே, குன்றக் குரவைக் கூத்து எனப்பட்டது.

♣ **முல்லை நில விழா:**

♣ காடும் காடு சாா்ந்த நிலப்பகுதியும் முல்லை நிலம் ஆகும். முல்லை நிலக்கடவுள் **மாயோன்** ஆவாா்.

♣ முல்லைநில மக்கள் பால் சுரக்கும் மரமான வேப்ப மரத்தைத் தாயத்தெய்வமாக உருவகித்து வழிபட்டதை அகநானூறு (309) கூறியுள்ளது.

♣ கால்நடைகளை எயினா்களிடமிருந்தும் வேடா்களிடமிருந்தும் வழிதவறாமலும் காப்பவா் கருப்பசாமி, இருண்ட கானகத்திற்கு உரியா், கரிய நிறம உடையவா் என்ற பொருளில் இப்பெயா் அழைக்கப்பட்டாா்.

♣ இதையே **மாயோன் மேய காடுறை உலகம்** என்று தொல்காப்பியம் கூறுகின்றது. ஆயா் குல மக்களுக்கும் ஆநிரைகளுக்கும் துன்பம் நேராமல் காக்கும்படி திருமாலைக் (மாயோனை) குரவைக் கூத்தாடி வழிபட்டனா். இவ்வழிபாடே ஆய்ச்சியா் குரவை ஆகும்.

♣ **மருத நில விழா (இந்திர விழா):**

♣ மருத நிலத்தில் கொண்டாடப்படும் மிகப்பெரிய விழா **'இந்திவிழா'.** பசி, பிணி, பகை போக்குவதற்காக இந்திரனை மக்கள் வழிபட்டனா்.

♣ இவ்விழா சாந்திப் பெருவிழா, தீவகச்சாந்தி என்றும் அழைக்கப்பட்டது.

♣ சிலப்பதிகாரத்தில் இந்திவிழவூரெடுத்த காதையிலும் மணிமேகலையில் விழாவறைகாதையிலும் இந்திவிழா நடைபெற்றமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

♣ இவ்விழா 28 நாள்கள் நடைபெற்றது. சமயக்கணக்கா், காலம் கணிப்போா், சான்றோா்கள் ஐம்பெரும்குழுவினா் எண்போராயத்தினா் ஆகியோா் ஒன்றுகூடி இந்திரவிழா நடக்கும் நாளை முடிவு செய்வா்.

♣ புகாா் நகரில் இந்திர விழா நடைபெற்ற செய்தியினைத் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

♣ மதுரையிலும் இந்திரவிழா நடைபெற்றதாகச் சின்னமனூா்ச் செப்பேடு தெரிவிக்கின்றது.

♣ தொடித்தோட்செம்பியனால் எடுக்கப்பட்ட காமன் விழாவினை இந்திரவிழா, விருந்தாட்டுவிழா ஆகிய பெயா்களில் மணிமேகலை குறிப்பிடுகின்றது.

♣ மருதநில மக்கள் போருக்குச் செல்லும் போது, தங்கள் அரசனை வாழ்த்தி விழாக் கொண்டாடுவா். இவ்விழாவில், தங்கள் வாளை உயா்த்திப் பிடித்துத் 'தண்ணுமை' என்னும் போா்ப்பறை ஒலிக்க ஆடியும் பாடியும் குரவை நிகழ்த்துவா்.

♣ **நெய்தல் விழா:**

♣ கடலும் கடல் சாா்ந்த பகுதியும் நெய்தல் ஆகும். இந்நிலத்துக்கு உரிய கடவுள் 'வருணன்'. இந்நில மக்களால் கொண்டாடப்படும் விழா, முந்நீா் விழா, நாவாய் விழா என சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

♣ பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியன் இவ்விழாவினைக் கொண்டாடிய செய்தியினையும் கரிகாலனின் முன்னோா் நாவாய்த் திருவிழா கொண்டாடிய செய்தியினையும் புறநானூற்று உரையின் மூலம் அறிய முடிகிறது.

♣ **பாலை நில விழா:**

♣ குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்த நிலம் பாலை எனப்பட்டது.

♣ கொற்றம் என்றால் வெற்றி, இந்நிலமக்கள், வெற்றியைத் தருபவள் என்ற பொருளில் கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை வழிபட்டனர்.

♣ சிலப்பதிகாரத்தில் சாலினி என்ற தெய்வம் ஏறப்பட்ட பெண்ணிற்குக் கொற்றவையின் கோலம் புனையப்பட்டது.

♣ இவ்வாறு கொற்றவையைப் போல அலங்கரிக்கப்பட்ட சாலினியை, மான்மீது அமரச்செய்து உலாவரச் செய்தனர்.

♣ வழிப்பறியின் போது கொட்டும் பறை, சூறையாடும்போது ஊதப்படும் கொம்பு, புல்லாங்குழல் போன்றவை அச்சமயத்தில் இசைக்கப்பட்டன.

♣ இவ்வாறு பாலை நில மக்கள் தங்கள் நிலக்கடவுளான கொற்றவைக்கு விழா எடுத்தனர்.

♣ **நடுகல் வழிபாடு:**

♣ போர்களத்தில் விழுப்புண்பட்டு வீரமரணம் அடைந்த வீரனது உடலை அடக்கம் செய்யும் முன், அவன் பயன்படுத்திய போர்க்கருவிகளையும் பொருள்களையும் புதை குழியிலிட்டு அடக்கம் செய்தனர்.

♣ பிறகு அவ்விடத்தில், ஒரு கல்லை நட்டனர், இது நடுகல் எனப்பட்டது. அக்கல்லின் மீது அவ்வீரனது உருவம், பெயர், வீரம், புகழ், தியாகம் போன்றவற்றைப் பொறித்தனர்.

♣ அவனது வீரத்தைப் போற்றுகின்ற வகையில் ஆண்டுதோறும் விழா எடுத்து வழிபட்டனர்.

♣ **பத்தினி வழிபாடு:**

♣ சிலப்பதிகாரத்தில் நாடுகாண்காதையில் (224-225) கண்ணகிக்காகப் பத்தினிக் கோட்டம் அமைக்கப்பட்டதை,

♣ **"மேலோர் விளையும் நூல்நெறிமாக்கள்**

♣ **பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்"**

♣ என்று குறிப்பிடப்படுவதிலிருந்து பத்தினி வழிபாடு என்பது கண்ணகி வழிபாட்டையே குறிப்பிடுகிறது.

♣ இவ்வழிபாடு இலங்கையில் வாழும் தமழர்களால் இன்றும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

♣ கண்ணகி, தன் கற்பின்வலிமையால் மதுரை நாகரையே எரித்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

♣ கண்ணகி சோழ நாட்டில் பிறந்தநாள், பாண்டியந ாட்டில் வீரத்தை நிலை நாட்டினாள். சேரநாட்டில் பத்தினித் தெய்வமாகப் போற்றப்பட்டு வழிபடப்படுகிறாள்.

♣ **பாலை நோன்பு:**

♣ மார்கழி மாதத்தில் பெண்கள் பாவை நோன்பு நோற்பர். இது 'மார்கழி நோன்ப' என்றழைக்கப்படும்.

♣ பாவை நோன்புக் காலத்தில் ஆண்டாள் இயற்றிய 'திருப்பாவை' யையும், மாணிக்கவாசகர் அருளிய 'திருவெம்பாவை' யையும் பாடி இறைவனை வழிபடுவர்.

♣ கன்னிப்பெண்கள், நல்ல கணவன் கிடைக்க வேண்டுமெனவும், மணமான பெண்கள் தங்கள் கணவனுக்கு நீண்ட ஆயற் வேண்டுமெனவும் விரதம் மேற்கொள்வார்கள்.

♣ இந்நிலையில் ஆண்டாளும் மாணிக்கவாசகப் பெருமானும் பாடிய பாடல்களைப் பாடுவார்கள்.

♣ பாலை நோன்பு குறித்து திருப்பாவை இரண்டாம் பாடல் கூறுகிறது.

♣ **பொங்கல் திருவிழா:**

♣ பொங்கல்விழா, உலகில் வாழும் தமிழ்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

♣ இப்பண்டிகை போகி, பொங்கள் திருநாள், மாட்டுப் பொற்கல், காணும் பொங்களல் எனக் கொண்டாடப்பட்டு வருகிறது.

♣ **போகிப்பண்டிகை:**

AKM IAS & NEET ACADEMY

- இப்பண்டிகை, ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது.
- பயனற்ற பழைய பொருள்களையும் மனித மனத்தில் உள்ள தேவையற்ற எண்ணங்களையும் போக்குவதே போகிப்பண்டிகையின் நோக்கமாகும்.
- மலைப் பொழுதில் வாசற்கூரையில் வேப்பிலை, பூளைப்பூ, ஆவாரம்பூ ஆகியவற்றைக் கொண்டு காப்புக் கடடுவர்.
- வீட்டு வாசலில் பொங்கலிடும் இடத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகிக் கோலமிடுவார்கள். அன்றலர்ந்த மலர்களையே வழிபாட்டிற்குப் பயன்படுத்துவார்கள்.
- பொங்கல் வைக்கும் பானையை மஞ்சள் குங்குமம், இஞ்சி, மஞ்சள் கொத்து ஆகியவற்றால் அலங்கரிப்பர். புதிதாக ஆறுவடை செய்த நெல்லின் பச்சரிசியுடன் வெல்லம், கற்கண்டு, நெய், பால், முந்திரி, திராட்சை முதலியவற்றைக் கொண்டு பொங்கல் இடுவர். தங்கள் விளைநிலங்களில் விளைந்த செங்கரும்பு, வாழை, மஞ்சள், இஞ்சி, கருணைக்கிழங்கு போன்றவற்றையும் சேர்த்துக் கதிரவனுக்கு வைத்து வழிபடுவார்கள்.
- **மாட்டுப்பொங்கள்:**
- உழவுக்கும் உழவனுக்கும் உறுதுணையான இருக்கும் காளைகளுக்கும் பசுக்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாக மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.
- இதனைத்தொடர்ந்து, மாலையில் மஞ்சுவிரட்டு எனப்படும் **'ஜல்லிகட்டு விழா'** நடைபெறும். அப்பொழுது, இளைஞர்கள் காளைகளை அடக்கித் தமது வீரத்தை வெளிப்படுத்துவர்.
- **'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
- **புல்லாளே ஆயமகள்'**
- என்ற சங்க இலக்கியப் பாடல் மூலம் இவ்வீரவிளையாட்டின் தொன்மையை அறியலாம்.
- பழங்காலத்தில் கால்நடைகளே நமது செல்வத்தின் அடையாளமாகத் திகழ்ந்தன. ஆயிரம் பசுவுடைய கோ நாயகர் என்ற பட்டப் பெயர்களெல்லாம் புழக்கத்தில் இருந்தன.
- **'ஏரின் பின்னால் தான் உலகமே சுழல்கின்றது'** என்கிறார் வள்ளவர். ஆந்த எர் முனையை முன்னேந்திச் செல்பவை மாடுகளே.
- இதன் மூலம் மாடுகளே உழவர்களை உயிர்ப்போடு வைத்துள்ளன என்று கூறினாலும் மிகயாகாது.
- **காணும் பொங்கள்:**
- காணும் பொங்கல், பகைமையை மறந்து உறவுகளைப் புதுப்பிக்கும் நாளாகும்.
- அன்றைய தினம் மக்கள் தமது உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று அங்குள்ள பெரியவர்களை வணங்கி வாழ்த்துபெறும் நாளாகும்.
- சைவமும் வைணவமும் இணைந்து கொண்டாடும் தமிழகத்தின் மிகப்பெரிய திருவிழா மதுரை சித்திரத் திருவிழா.
- சைவ சமய விழாவான மீனாட்சி சுந்தரேசுவரர் திருமணமும், வைணவ சமய விழாவான கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழாவும் ஒன்றாக நடைபெறுவது.
- திருமலை நாயக்கர் காலத்தில் இவ்விரு சமய விழாக்களும் ஒன்றாக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டன.
- சித்திரை மாதம் வளர்பிறை ஐந்தாம் நாள் இவ்விழா தொடங்கித் தொடாந்து பத்து நாள்கள்
- நடைபெறுகிறது.
- **ஆடிப்பெருக்கு:**
- ஆடி மாத்தில் பெய்யும் தென்மேற்குப் பருவமழையினால் ஆறுகளில் புதுப்புனல் பொங்கி வரும்.
- இதனையே **'ஆடிப்பெருக்கு'** என்று கூறுவர். காவிரியாற்றை அன்னையாகவும் தெய்வமாகவும் நினைத்து வழிபடுவர்.

♣ அதற்காக வற்றாத நிதிகளைத் தங்கள் கடவுளாகப் போற்றி மகிழ்ந்து, வழிபட்டு உழவு வேலையைத் தொடங்குவார்கள்.

♣ இதன் அடிப்படையிலேயே **'ஆடிப்பட்டம் தேடி விதை'** என்ற பழமொழி உருவானது. இப்பகுதிகளில், ஆடி மாதம் பதினெட்டாம் நாளன்று **'ஆடிப்பெருக்கு'** கொண்டாடப்படுகிறது.

♣ **மகா மகத்திருவிழா:**

♣ மாசி மாதத்தில் குரு, சிம்ம ராசியில் இருக்கும்போது, மக நட்சத்திரமும் பௌர்ணமியும் சேர்ந்து வரும் நாளே மாசிமகம் ஆகும்.

♣ நவக்கிரகங்களில் குரு ஓர் இராசியல் இருந்து மற்றோர் இராசிக்கு இடம்பெயர ஒரு வருடம் ஆகிறது. இதன் காரணமாக ஒவ்வோர் ஆண்டம் குரு பெயர்ச்சி விழாவும், மாசிமக விழாவும் நடைபெறுகிறது.

♣ இதுபோலவே, பன்னிரண்டு இராசிகளையும் கரு கடந்து வர பன்னிரண்டு ஆண்டகள் ஆகும்.

♣ ஆகவேதான், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மாசிமகம், 'மகாமகம்' என்று அழைக்கப்படுகிறது.

♣ வடநாட்டில் நடைபெறும் 'கும்பமேளா' வைப் போன்று இதனை, 'தென்னகத்தின் கும்பமேளா' என்றும் அழைப்பர்.

♣ **சைவ திருவிழாக்கள்:**

♣ சிவனை முழுமுதற் கடவுளாக வணங்குபவர்கள் சைவர்களாவர். சிவனை வழிபடும் திருவிழாக்கள் சைவத் திருவிழாக்கள் ஆகும்.

♣ **மகாசிவராத்திரி:**

♣ மகாசிவராத்திரி விழா ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. திருநாளில் இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருந்து சிவனை வழிபடுவர்.

♣ மாசி மாதத்தில் வரும் சிவராத்திரியே மகா சிவராத்திரியாகும்.

♣ ஆண்டுதோறும் ஆவணி மாத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவை ஆலயங்களிலும் ஆலயமில்லாத இடங்களிலும் வீடுகளிலும் கொண்டாடுவர்.

♣ ஆலயமில்லாத இடங்களிலும் தற்காலிகமாகக் களிமண்ணால் விநாயகர் உருவம் செய்து வழிபடுவர். இவ்விழாவை வடஇந்தியாவில் **கணேஷ் சதுர்த்தி** என்று பெயரில் கொண்டாடுகின்றனர்.

♣ **தீபத்திருவிழா:**

♣ கார்த்திகை மாதம் முழுநிலவு நாளில் வீடுகளிலும் கோயில்களிலும் விளக்கு எற்றி வழிபடுவார்கள். இதுவெ கார்த்திகைத் திருவிழாவாகும்.

♣ அன்றைய தினம் திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்றி இறைவனை ஒளி வடிவில் வழிபடுவர்.

♣ நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய இயற்கைப் பொருள்களைப் பெரும் ஆற்றலாகக் கருதி மக்கள் வழிபட்டு வந்ததன் தொடர்ச்சியாகவே இவ்விழா கொண்டாடப்படுகிறது.

♣ **ஆதிரைத் திருவிழா:**

♣ திருவாதிரை என்பது, ஆண்டுதோறும் மார்கழி மாத முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழாவாகும்.

♣ இவ்விழாவினைப் பற்றி மாணிக்கவாசகர் திருவாசகத்திலும் சம்பந்தர், நாவுக்கரசர் தேவாரத்திலம் பாடியுள்ளனர். சிதம்பரம், மதுரை, திருவாலங்காடு, உத்திரகோசமங்கை, திருக்கழுக்குன்றம், திருமுல்லைவாயில் போன்ற புகழ்பெற்ற சிவத்தலங்களில் திருவாதிரை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

♣ திருவாதிரையன்று சிவபெருமானுக்குக் களியைப் படைத்துப் பக்தர்களுக்கும் வழங்கபவர். இதனால், **திருவாதிரைக் களி** என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. மேலும், சிதம்பரம் கோயிலில் இறைவனை ஆடல் கோலத்தில் கண்டு வழிபடுபவர்.

♣ **சிவபெருமானுக்குரிய ஐந்து சபைகள்**

AKM IAS & NEET ACADEMY

- 1. பொற்சபை- நடராசர் கோயில்- சிதம்பரம்
- 2. வெள்ளிசபை- மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் - மதுரை
- 3. இரத்தினசபை- வடராண்யேசுவரர் கோயில்- திருவாலங்காடு
- 4. தாமிரசபை- நெல்லையப்பர் கோயில்- திருநெல்வேலி
- 5. சித்திரசபை- குற்றாலநாதர் கோயில்- குற்றாலம்.
- **வைணவத் திருவிழாக்கள்:**
- திருமாலை முழுமுதற் கடவுளாக வணங்குபவர்கள் வைணவர்களாவர். திருமாலை வழிபடும் திருவிழாக்கள் வைணவத் திருவிழாக்கள் ஆகும்.
- மார்கழி மாதம் வளர்பிறை பதினோராம் நாள் **வைகுண்ட ஏகாதசி** ஆகும்.
- வைகுண்ட ஏகாதசி அன்று விரதம் இருப்பவர்களுக்கு ஆண்டு முழுவதும் ஏகாசதி விரதம் இருந்தால் பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும்.
- திருவரங்கம் அரங்கநாதர் ஆயத்தில் வைகுண்ட ஏகாதசி சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- **திருவோணம்:**
- திருமாலின் பிறந்தநாளான ஆவணி மாதம் முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழா திருவோணம் ஆகும்.
- இது, திருமாலுக்கு உகந்த நாளாகக் கருதப்படுவதால் அந்நாளில் மக்கள் பல கோயில்களுக்கும் சென்று திருமாலை வழிபடுவர்.
- இந்நாளில், மகாபலி மன்னர் வருவதாகக் கருதி மக்கள் வீதிகளிலும் வீட்டின் மற்றத்திலும் பல வண்ணப்பூக்களால் பெரிய கோலங்களைப் போட்டு அவரை வரவேற்பர். இதை **'அத்தப்பூ'** என்றழைப்பர்.
- **தீபாவளி:**
- ஒவ்வோர் ஆண்டம் ஐப்பசி மாதம் தேய்பிறை நாளில் அமாவாசைக்கு முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகையே தீபாவளியாகும்.
- தீபாவளி என்றால் **'தீபங்களின் வரிசை'** என்பது பொருள். இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் திருநாளே தீபாவளித் திருநாளாகும்.
- முன்பொரு காலத்தில் நரகாசுரன் தேவர்களையும் மக்களையும் கொடுமை செய்ததாகவும், அவனது கொடுமையை மக்களும் தேவர்களும் பொறுக்க முடியாமல் திருமாலிடம் முறையிட்டதாகவும், திருமால் சக்கராயுதத்தால் நரகாசுரனை வதம் செய்து மக்களையும் தேவர்களையும் காத்ததாகவும் கூறுவர்.
- நரகாரசுரன் இறக்கும் தறுவாயில் தனது நினைவு நாளை அனைவரும் மகிழ்வுடன் கொண்டாட வேண்டமெனக் கேட்டுக்கொண்டதாகவும் கூறுவர்.
- அந்நாளே, தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா, தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுவதும் மிகச் சிறப்பாகச் கொண்டாடப்படுகிறது.
- வடஇந்தியாவில் இத்திருநாளைத் தீபஒளித் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.
- **நவராத்திரி விழா:**
- வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைத் தரும் முப்பெரும் கடவுளாக முறையே மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகியோரைப் போற்றி வணங்கும் விழாவே நவராத்திரி திருவிழாவாகும்.
- நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவுகள் என்பது பொருளாகும். இவ்விழா புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்குப் பின்வரும் ஒன்பது நாள்களும் கொண்டாடப்படுகிறது.
- ஒன்பதாவத நாள் நடக்கும் வழிபாடு கலைமகளுக்க உரியதாகக் கருதி புத்தகங்கள், இசைக்கருவிகள் மற்றும் பல தொழில் சார்ந்த கருவிகளையும் வைத்து வழிபடுவர். செய்யும் தொழிலே தெய்வம் என்ற கருத்தில் மக்கள் தமது தொழிலைப் போற்றிக் கொண்டாடுவதே இவ்விழாவின் நோக்கமாகும்.

♣ பத்தாம் நாள் விழாவாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது.

♣ 'விஜயதசமி' என்றால் வெற்றியைத் தருகின்ற நாள் என்பது பொருள்.

♣ அன்று குழந்தைகளுக்குக் கல்வியைத் தொடங்கினால் வாழ்வு சிறக்கும் என்பது நம்பிக்கையாகும். வடநாட்டிலும் தென்னாட்டிலும் உள்ள எல்லா ஆலயங்களிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

♣ **அம்மன் திருவிழா:**

♣ அம்மன் வழிபாடானது, ஊர்தோறும் நடைபெறும் முக்கிய வழிபாடாகும்.

♣ மாரி என்றால் மழை என்று பொருள்.

♣ கோடைக்காலத்தில் வெப்பத்தின் காரணமாக மக்களுக்கு அம்மை போன்ற பல்வேறு நோய்கள் எற்படுகின்றன.

♣ இந்நோய்கள் வராமல் தடுப்பதற்காக மழைதர வேண்டி மாரியம்மனுக்கு விழா எடுத்து வழிபடுகின்றனர்.

♣ பல நோய்களுக்கு மருந்தாக உள்ள வேப்பமரமே மாரியம்மனுக்கான தல விருட்சமாகும்.

♣ இவ்விழா, காப்புக்கட்டுதல் தொடங்கி ஏழு நாள்முதல் பதினைந்து நாள்வரை நடைபெறும், பூவோடு எடுத்தல், பூவாரி கொட்டுதல், அலகு குத்துதல், சாட்டை அடித்தல், மொட்டை அடித்தல், மாவிளக்கு எடுத்தல், தீமிதித்தல் போன்றவை மாரியம்மன் திருவிழாவின் முக்கிய நிகழ்வுகள் ஆகும்.

♣ ஈரோடு மாவட்டத்தில் உள்ள பண்ணாரியம்மன் கோயில் தீமிதித் திருவிழா குறிப்பிடத்தக்கதாகும்.

♣ **ஆடிப்பூரம்:**

♣ அம்மனுக்கு உகந்த திருநாள்களில் ஆடிமாதம் பூர நட்சத்திரத்தில் கொண்டாடப்படும் ஆடிப்பூரத்திருநாள் மிகவும் சிறப்புடையது.

♣ சிவ தலங்களில் அம்மனுக்கும், திருவில்லிப்புத்தூரில் ஆண்டாளுக்கும் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

♣ இந்நாளில், அம்மனுக்கு வளையல்களால் அலங்காரம் செய்து ஆடிக்கூழ் படைத்த இவ்விழாவை மக்கள் கொண்டாடுகின்றனர்.

♣ **நாட்டார் திருவிழாக்கள்:**

♣ நாட்டார் தெய்வங்கள் கிராம மக்களால் வணங்கப்படுபவை ஆகும். இவை சிறுதெய்வங்கள் கிராம தேவதைகள் என்றும் அழைக்கப்டுகின்றனர்.

♣ நாட்டார் தெய்வ வழிபாடுகள் கிராம மக்களின் பண்பாட்டுடனும் பழக்க வழக்கங்களுடனும் ஒன்றிணைந்தவையாக உள்ளன.

♣ பான்னியம்மன், போத்திராஜா, அண்ணமார், அய்யனார், காத்தவராயன், நாடியம்மன், கருப்பசாமி, சுடலைமாடன், இசக்கியம்மன் போன்ற பல்வேறு நட்டார் தெய்வங்களை மக்கள் தங்கள் முன்னோர்களாகவே கருதுவர்.

♣ தமிழ்க் கடவுளான முருகனை வணங்கும் விழாவே கந்த விரத விழா ஆகும்.

♣ ஐப்பசி மாதம் வளர்பிறை ஆறாம் நாள் சஷ்டிய '**கந்த சஷ்டி'** விழாவாகும். முருகப் பெருமான் அரக்கனை ஒடுக்கப்போர் புரிந்த நிகழ்வையே **'கந்த சஷ்டி'** என்கிறோம்.

♣ வைகாசி மாதம் முழுநிலவு நாளில் வைகாசி விசாகம் கொண்டாடப்படுகிறது. முருகன் ஆலயங்களில் இவ்விழா நடைபெறுகிறது.

♣ பங்குனி உத்திரம் என்பது, பங்குனி மாதத்தில் முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழாவாகும். இது முருகனின் திருமணநாளாகக் கருதப்படுகிறது.

♣ ஆடி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தை முருகனுக்குரிய நாளாகக் கருதி வழிபடுவர். இந்நாளன்று, அறுபடை வீடுகளுள் ஒன்றான திருத்தணியில் **ஆடிக்கிருத்திகை விழா** சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

♣ முருகனுக்குரிய அறுபடை வீடுகள்:



AKM IAS & NEET ACADEMY

- 1. திருப்பரங்குன்றம்.
- 2. திருச்செந்தூர் அல்லது திருச்சீரலைவாய்.
- 3. திருவாவினன்குடி (எ) பழனி
- 4. திருவேரகம் (எ) சுவாமிமலை
- 5. திருத்தணி அல்லது குன்றுதோறாடல்
- 6. பழமுதிர்சோலை
- **தேர்த்திருவிழாக்கள்:**
- துமிழகத்தில் உள்ள கோயில்கள் தோறும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களில் தெய்வங்களைத் தேரில் அமர வைத்து ஊர்வலமாக அழைத்த வருவது முக்கிய நிகழ்வாகும்.
- ஓவ்வொரு கோயில் திருவிழாவிலும் தேர்த்திருவிழா குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். பத்துநாள்கள் நடைபெறும், திருவிழாவின் இறுதி நாளில் மஞ்சள் நீராட்டிற்கு முதல் நாள் தேரோட்டம் நடைபெறும்.
- தேரில் பெரிய கயிறுகள் இணைக்கப்படும், அவற்றை வடம் என்று கூறுவர்.
- இவ்வடத்தைப் பற்றி இழுத்துச் செல்வதை 'வடம் பிடித்தல்' என்பர்
- திருவாரூரில் தியாகராசப் பொருமாள் கோயில் கொண்டுள்ளார். இக்கோயிலின் தேர் ஆசியாவிலயே மிக உயரமான தேர் என்ற பெருமைக்கு உரியது. இத்தேர் 96 அடி உயரமும் 360 டன் எடையும் கொண்டது. நான்கு நிலைகளைக் கொண்டாதாக உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் இக்கோயிலின் தேர்த் திருவிழா கொண்டாடப்படுகிறது.
- கீழை நாடுகளின் **லூர்து நகர்** என அழைக்கப்படுவது வேளாங்கண்ணி ஆகும். வேளாங்கண்ணிமாதா தேர்த்திருவிழா அனைத்து சமய மக்களும் கலந்துகொள்ளும் ஒரு விழாவாகும்.
- இராமாயண, மகாபாரதம் போன்ற புராணக்கதைகளையம் சமுதாயத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளையும் சிற்பங்களாகச் செதுக்கித் தேரை அழகுபடுத்துவர். எனவே, தேர் என்பது நடமாடும் கலைக்கருவூலமாகத் திகழ்கிறது.
- **பழந்தமிழர் வாழ்வியல்:**
- உலகின் மிகப்பழமையான செவ்வியல்மொழி இலக்கியங்களின் தொன்மைக்கும் செறிவிற்கும் சற்றும் குறைவில்லாத வளமுடையவை சங்க இலக்கியங்கள்.
- சங்ககாலச் சமுதாயம் இயற்கை சார்ந்த சமுதாயமாக விளங்கியது.
- காடுகள், மலைகள், கழினகள், கடற்கரைப் பகுதிகள் மக்கள் வாழிடங்களாக இருந்துன. இதனால், சங்ககாலத்தில் திணைநிலைச்சமூகம் நிலைபெற்றிருந்ததை அறியலாம்.
- சங்க இலக்கியங்கள் பொதுமைச்சிறப்பும் புதுமைச்சிறப்பும் மிக்கவை.
- பொருட்சிறப்பும், கருத்துச் செறிவும், சொல்லினிமையும் வாய்ந்தவை.
- இவை அகத்திணை, புறத்திணை எனப் பகுக்கப்பெற்று, பெரும்பாலும் காதல், வீரம் குறித்துப் பேசின.
- இருப்பினும் இயற்கை, பிரிவாற்றாமை, விருந்தோம்பல், கொடை, அரசியல், கையறுநிலை, வணிகம், வேளாண்மை, விளையாட்டு போன்றவற்றையும் புலப்படுத்தத் தவறவில்லை.
- **இயற்கை:**
- முானிட வாழ்வே சங்க இலக்கியத்தின் மையம். ஐம்புலன்களுக்கும் விருந்தாக அமையும் இயற்கையை மக்களின் காதல், வீரம் இன்னபிறவாழ்வியல் கூறுகளோடு இணைத்துப் பாடுவது சங்க இலக்கிய மரபு. எனவே சங்க இலக்கியக் காலத்தை இயற்கை நெறிக்காலம் எனலாம்.
- **பைந்தினை யுணங்கல் செம்பூழ் கவரும்**
- **வன்புல நாடற் றரீஇய வலனேர்**

- **பங்க ணிருவிசும் பதிர வேறொரு**
- **பெயறொ டங்கின்றே வானங்**
- **காண்குவம் வம்மோ பூங்க ணோயே**
- **- ஐங்குறுநூறு**
- ஆசிரியர்- பேயனார்
- திணை- முல்லை
- கூற்று- தோழி கூற்று
- **பாடல் பொருள்:** காய்ந்துகொண்டிருக்கும் பசிய தினையைச் செப்பூழ்ப் பறவைகள் கவர்ந்து செல்லும் கடினமான நிலப்பகுதியைக் கொண்ட நாட்டினை உடையவன் நம் தலைவன். அவனை நம்மிடம் கொண்டுவந்து சேர்ப்பதற்காக, வலப்பக்கமாய் உயர்ந்து அழகிய பரப்பைக் கொண்ட பெரிய வானம் அதிரும்படியாக, மேகங்கள் இடியுடன் மழையைத் தொடங்கிவிட்டன. ஆதலால் பூப்போன்ற அழகிய கண்ணை உடையவளே, காண்போம்! வா! எனத் தோழி தலைவியை அழைக்கிறாள்.
- **காதல்:**
- பண்டைத் தமிழ்மக்களின் அன்புள்ளத்தோடு கலந்து ஓர் அகவுறுப்பாகவே புறவியற்கை விளங்கிற்று
- **யானை ஈண்டையேனே என் நலனே**
- **ஏனல் காவலர் கவண் ஒரி வெரீஇக்**
- **கான யானை கை விடு பசும் கழை**
- **மீன் எறி தூண்டிலின் நிவக்கும்**
- **கானக நாடமெனாடு ஆண்டு ஒழிந்தன்றே!**
- **- குறுந்தொகை**
- ஆசிரியர்- மீனெறிதூண்டிலார்
- திணை- பாலை
- கூற்று- தலைவி கூற்று
- **பாடல் பொருள்-** வினைமேற்சென்ற தலைவனின் பிரிவாற்றாத தலைவி "காட்டு யானையானது தான் வனைத்த மூங்கிலைத் தினைப்புனம் காக்கும் காவலர்களின் கவண் ஒலிக்குப் பயந்து விட்டுவிடுகின்றனது. அந்த மூங்கிலானது தூண்டில் போட்டு மீன் பிடிப்பவன், மீன் சிக்கியவுடன் தூண்டிலை விரைந்து மேலே தூக்கினாற்போலச் சட்டென்று மேலே போகின்றது. இத்தகைய காட்சியையுடைய மலைநாடனொடு நான் நட்பு கொண்டதால் இன்று நலிவடைகிறேன். ஆவன் என்னை வரையாது காலம் தாழ்த்துவதால், இங்கு நானும் என்னுடைய நலன் அங்கமாக இருக்கும் நிலை நொந்துவிட்டது" எனத் தன்தோழியிடம் கூறுவதாக அமைந்த மீனெறிதூண்லாரின் குறுந்தொகைப் பாடல்வழி களவு வாழ்வின் பிரிவாற்றாமையை உணரலாம்.
- **விளையாட்டு:**
- தொல்காப்பியர் கூறும் உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகைக் களங்களுள் ஒன்று விளையாட்டு.
- **விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது**
- **அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம் என**
- **குறுநுரை சுமந்து நறுமலர் உந்தி**
- **பொங்கி வரு புது நீர் நெஞ்சு உண ஆடுகம்**
- **வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே**

- **செல்க என விடுநள்மன்கொல்லோ எல் உமிழ்ந்து**
- **உரவு உரும் உரறும அரை இருள் நடு நாள்**
- **கொடி நுடங்கு இலங்கின மின்னி**
- **ஆடு மழை இறுத்தன்று அவர் கோடு உயர் குன்றே**
- **- நற்றிணை**
- ஆசிரியர்- பிரான்சாத்தனார்
- திணை- குறிஞ்சி
- கூற்று- தோழி கூற்று
- **பாடல் பொருள்:** தலைவனின் உச்சி குன்றில் ஒளியை உமிழ்ந்து வலியே இடி முழங்கும் பாதி இரவாகிய நடுயாமத்தில், கொடிபோல் வளைந்தனவாய் விளங்கும் மின்னலோடு அசைகின்ற மேகங்கள் தங்கியிருத்தலின், அம்மலையிலிருந்து புதுநீர் பொங்கி பெருகி வரும். அந்நீரில் விளையாட்டுத் தொழியருடன் ஓரை என்னும் ஆட்டத்தை ஆடாமல் இளமங்கையர் தமது வீடுகளில் அடைந்துகிடத்தல் அறநெறி ஆகாது வீட்டின் செல்வமும் குன்றும். அதனால் சிறிய நுரைகளைச் சுமந்துகொண்டு நறிய மலர்களை வீசிக்கொண்டு பொங்கி வருகின்ற புதுநீரில மன மகிழ ஆடுவோம். இதனை விரைந்து சென்று அன்னையிடம் சொன்னால் சொல்லுங்கள் என்று அனுப்பிவிடுவாளோ? இவ்வாறு தோழியானவள், தலைவி இற்செறிக்கப்பட்டதைத் தலைவனுக்கு உணர்த்துகிறாள்.
- **கோடை:**
- சங்ககாலத்தில் பொருள் உடையவர்கள் அதன் தேவைகருதிவேண்டி வருவோருக்குப் பயன் கருதாது வாரி வழங்கும் கொடைத்தன்மையுடையோராய் விளங்கினர்.
- இரப்போர்க்கு வரையாது கொடுப்பதே பிறவிடப்பயனாகக் கருதி வாழ்ந்தனர்.
- **ஈற்றா விருப்பிற் போற்றுபு நோக்கிநும்**
- **கையது கேளா அளவை ஒப்யெனப்**
- **பாசி வேரின் மாசோடு குறைந்த**
- **துன்னற் சிதாஅர் நீக்கித் தூய**
- **கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்**
- **பெலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்**
- **பூக்கமழ் நேறல் வாக்குபு தரத்தர**
- **வைகல் வைகல் கைகவி பருகி**
- **எரியகைந் தன்ன வேடில் தாமரை**
- **சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி**
- **நூலின் வலவா நுணங்கரில் மாலை**
- **வுாலொளி முத்தமொடு பாடினி யணியம்**
- **கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்**
- **ஊட்டுளை துயல்வர வோரி நுடங்க**
- **பால்புரை பரவி நால்குடன் பூட்டிக்**
- **காலி னேழடிப் பின்சென்று கோலின்**
- **தாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு**
- **பேரியாழ் முறையழிக் கழிப்பி நீர்வாய்த்**
- **தண்பணை தழீஇய தளரா விருக்கை**

- **நன்பல் லூர நாட்டொடு நன்பல்**
- **வெருஉப்பறை நுவலும் பருஉப்பெருந் தடக்கை**
- **வெருவரு செலவின் வெகுளிபேழம்**
- **தரவிடைத் தங்கலோ விலனே வரவிடைப்**
- **பெற்றவை பிறர்பிர்க் கார்த்தித் தெற்றெனச்**
- **செலவுகடைக் கூட்டுதி ராயிற் பலபுலந்து**
- **நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்**
- **செல்கென விடுக்குவ னல்லன்**
- **- பொருநராற்றுப்படை**
- **பாடல் பொருள்:** பொருநர்களே! கரிகால் பெருவளத்தானை நீங்கள் நாடிச்சென்றால் பசு தன் கன்றை அன்போடு அரவணைத்தல் போல, உங்களை விரும்பிப் போற்றுவான். நீங்கள் கைதொழுவதற்கு முன்பாகவே பட்டாலான புத்தாடை தந்து மாற்றிக் கொள்ளச் செய்வான். நீங்கள் புத்தாடை புனைந்தபின் கிண்ணத்தில் தேறல் ஊற்றி வேண்டிய அளவு பருகத் தருவான். பின்னர் விருதாக உங்கள் தலையில் பொன்னாலான தாமரையைச் சூட்டுவான். ஆரில்மாலையையம், முத்துமாலையையும் பாடினி அணியத் தருவான்.
- **அரசியல்:**
- இயற்கை அல்லது செயற்கைக் காரணங்களால் மக்களுக்குத் தீங்கு நேரினும் மன்னனே அதற்குப் பொறுப்பேற்றான்.
- தன் குடிகளையும் படைக்களையம் காத்து நிற்க வேண்டியது அரசனது கடமை.
- **யாண்டுபல வாக நரையில ஆகுதல்**
- **யாங்கு ஆகியர் எனவினவுதிர் ஆயின்**
- **மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிம்பினர்**
- **யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்.**
- **அல்லவை செய்யான் காக்குமா அதன் தலை**
- **அன்றுஅவிந்து அடங்கிய கொள்கைச்**
- **சான்றோர் பல்யான் வாழும ஊரே**
- **- புறநானூறு**
- ஆசிரியர்- பிசிராந்தையார்
- திணை- பொதுவியல்
- கூற்று- பொருண்மொழிக் காஞ்சி
- **பாடல் பொருள்-** "தங்களுக்கு இவ்வளவு வயதாகியும் தாங்கள் எப்படி நரையில்லதமல் இருக்கிறீர்கள்"? என்று கேட்பீரானால், சொல்கிறேன். நற்குணத்தளாகிய என மனைவியோடு, என்னுடைய மக்களும் அறிவு நிரம்பப் பெற்றவர்கள். என்னிடம் பணி பரிபவர்களும் நான் நினைப்பதையே தாங்களும் நினைத்துச் செயல்களைச் செய்து முடிப்பர். என் வேந்தன் முறையல்லாதவற்றைச் செய்யாமல் நாட்டைக் காப்பவனாக விளங்குகின்றான்.
- **கையறுநிலை:**
- தம் மன்னன் இறந்ததற்கு குடிமக்களும் சான்றோரும் வீரர்களும் வருந்திப் பாடுவது கையறுநிலை என்னும் துறையாகும். ஏந்த இழப்பையும் எண்ணி வருந்துவது கையறுநிலைத் துறைக்குரியது.
- **இளையோர் சூடார் வளையோர் கொய்யார்**
- **நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்**

- **பாணன் சூடான் பாடினி அணியாள்**
- **ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த**
- **வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை**
- **முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே**
- **- புறநானூறு**
- ஆசிரியர்- குடவாயிற் கீர்த்தனார்
- திணை- பொதுவியல்
- கூற்று- கையறுநிலை.
- **பாடல் பொருள்-** ஒல்லையூர் நாட்டை ஆண்ட அரசன் பெருஞ்சாத்தான், அவன் இறந்த பின்னர் அந்நாட்டில் பூத்துக்கிடந்த முல்லைப் பூ யாருமே சூடவில்லையாம். இளைய வீரர் சூடவில்லை, வளையல் அணிந்த மகளிர் சூடுவதற்காகப் பறிக்கவில்லை, பாணர்தம் வளைந்த யாழைப் பயன்படுத்திக் கீழே இழுத்துப் பறித்துத் தலையில் சூட்டிக்கொள்வில்லை. பாடினியும் அணிந்துகொள்ளவில்லை. அப்படி இருக்கும்போது, மல்லைப்பூவே! ஒல்லையூர் நாட்டில் எதற்காகப் பூக்கிறாய்?
- **வணிகம்:**
- சங்கத்தமிழ்க் கவிதைகள் பழந்தமிழர்தம் வணிகச் சிறப்பைப் பறைசாற்றி நிற்கின்றன. தமிழர் கடல்கடந்து, அயல்நாடுகளிலும் வணிகம் செய்தனர் என்ற செய்திகளைச் சங்கப்பாடல்கள் வழி அறிகின்றோம்.
- **நெடு நுகத்துப் பகல் போல**
- **நடுவு நின்ற நல் நெஞ்சினோர்**
- **வடு அஞ்சி வாய் மொழிந்து**
- **தமவும் பிறவும் ஒப்ப நாடி**
- **கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது**
- **பல் பண்டம் பகர்ந்து வீசும்**
- **தொல் கொண்டி துவன்ற இருக்கை...**
- **- பட்டினப்பாலை**
- **பாடல் பொருள்:** நீண்ட நுகத்தடியில் தைத்த பகலாணி போல, நடுவுநிலையென்னும் குணம் நிலைபெற்ற நல்ல நெஞ்சினராய் வணிகர்கள் இருந்தனர். தம் குடிக்குப் பழிச்சொல் வருமென அஞ்சி, பொய்மை தவிர்த்து வாய்மையுடையோராய் இருந்தனர். தம்முடையவற்றையும் பிறருமையவற்றையும் ஒன்றாக எண்ணினர். தூம் கொள்னவனவற்றைக் குறைவாகக் கொடுக்காமல், பல பண்டங்களயைும் விலைசொல்லிக் கொடுக்கும், பழந்தொழிலால் வரும் உணவினைக் கொள்ளும், நெருங்கின குடியிருப்புகள் கொண்ட பட்டினமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம்
- **வேளாண்மை:**
- பழந்தமிழர் இயற்கைச் சூழல், பருவகாலம் ஆகியவற்றிற்கு ஏற்ப நிலத்தை நன்கு உழவு செய்யும் பாங்கு, விதைகளைத் தேர்வு செய்வதில் உள்ள அனுபவம், பயிர்நுட்ப அறிவு, நீர்ப்பாசன நுட்பம், வேளாண்மைக் காவல் பணி எனத் திணைகளின் அடிப்படையில் வேளாண்மையை முறைப்படுத்தி அதன் முழுப் பயனையும் தெரிந்து வைத்திருந்தனர்.
- **குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்**
- **நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டி**
- **பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சதில்**
- **உடுப்பு முபமுழுக் கொழு மூழ்க ஊன்றி**

- **தொடுப்பு எறிந்துஉழுத துள்படு துடவை**
- **அரிபுகு பொழுதின் இரியல் போகி**
- **வண்ணக் கடம்பின் நறுமலர் அன்ன**
- **வளர்இளம் பிள்ளை தழீஇ குறுங்கால்**
- **கறை அணற் குறும்பூழ் கட்சிக் சேக்கும்**
- **வன்புலம் இறந்த பின்றை**
- **-- பெரும்பாணாற்றுப்படை**
- **பாடல் பொருள்-** செம்மையான உழவு செய்கின்ற மருதநில உழவர்களின் வீட்டில் உணவுப்பொருள்கள் நிறைந்திருக்கும் உழவில் பழக்கிய எருதுகளை ஏரில் பூட்டி யானையின் வாயை ஒத்த கலப்பையின் கொழு நிலத்தில் அழுந்தமாறு பலமுறை உழுது பயிரிடுவர். மீண்டும் உழுது களையேடுத்து புன்செய், நிலத்தில் அறுவடை காலத்தின்போது அவர்கள் ஒலி எழுப்புவர். அவ்வொலிக்கு அஞ்சி நடுங்கும் வெண்மையான கடம்ப மலர்களை ஒத்த வளரும் இளைய குஞ்சுகளைக் கூட்டிக்கொண்டு, சிறிய கால்களையும், கரிய கழுத்துகளையும் கொண்ட காடைப்பறவைகள் பாதுகாப்பான இடம்நோக்கிச் செல்லும். இப்பாடல் சங்கத்தமிழர் வேளாண்நுட்பத்தை அறிந்திருந்ததைப் பறைசாற்றுகிறது.
- **வீரம்:**
- சங்க காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப்பெற்றது. ஆடவரும், மகளிரும் இயற்கையிலேயே மறப்பண்பு மிக்கவராய் விளங்கியதால் எண்ணற்ற போர்கள் நடைபெற்றன.
- ஒரு சமுதாயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசனுக்கு இருந்தது. தன் நாட்டுமக்களின் வாழ்க்கை வளமாக அமைவதற்குப் பிறநாட்டுடன் போர் மேற்கொண்டான்.
- **நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
- **வளிதொழில் ஆண்ட உரவோன் மருக**
- **களிஇயல் யானைக் கரிகால் வளவ**
- **சென்று அமர்க்கடந்த நின்ஆற்றல் தோன்ற**
- **வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே**
- **கலகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை**
- **மிகப் பகழ் உலகம் எய்திப்**
- **புறப்பண் நாணி வடக்கிருந்த தோனே.**
- **- புறநானூறு**
- ஆசிரியர்- வெண்ணிக்குயத்தியார்.
- திணை- வாகை
- கூற்று- அரசவாகை
- **பாடல் பொருள்:** களிநடை போடும் யானைமேல் தோன்றும் கரிகால் வளவ கடலில் நாவாய் ஓட்டிக் காற்றையே ஆண்ட வலிமையாளர் வழி வந்தவன் நீ. போரில் வென்றாய், அதனால் நீ நல்லவன். எனினும் வெண்ணிப்பறந்தலைப் போரில் உன் வலிமைமிக்கத் தாக்குதலால் புறப்புண்பட்டு அதற்காக நாணி அப்போர்க் களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்து பெருஞ்செரலாதன் உன்னைக்காட்டிலும் நல்லவன் அல்லனோ?
- சங்க இலக்கியப் பாடல்கள் பாடும்பொருள்களாலும், திணை, துறை, மரபு முதலியவற்றாலும் சிறப்புற்று விளங்குகனின்றன. ஐந்திணையொழுக்கம், இயற்கையைப் போற்றும் பாங்கு, மனிதநெறி கூறும் பான்மை போன்றன தமிழிலக்கியங்களில் விரவியுள்ளன. உவமை, வருவகம், உள்ளுறை, இறைச்சி உள்ளிட்ட உத்திகளை சங்கப்புலவர்கள் கையாண்டுள்ள விதமும் போற்றத்தக்கது.

♣ **சீன நாட்டில் தமிழ்க் கல்வெட்டு!**

♣ சீன நாட்டில் "**காண்டன்"** நகருக்கு 500 கல் வடக்கே **சூவன்செள** என்னும் துறைமுக நகர் உள்ளது. பண்டைய காலத்திலும் இது சிறந்த துறைமகமாக விளங்கிற்று. அந்தக் காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர்.

♣ அதன் காரணமாக சீனாவில் சிவன் கோவில் ஒன்று கட்டப்பட்டது. அது சீனப் பேரரசரான **குப்லாய்கானின்** ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் தமிழ்க் கல்வெட்டு இன்றும் இக்கோயிலில் உள்ளது. இக்கோயிலில் **சோழர்காலச் சிற்பங்கள்** அமைக்கப்பட்டுள்ளன.

AKM IAS & NEET ACADEMY